தம்பிரான் தோழர்

பேராசிரியர்
டாக்டர் ந. சுப்புரெட்டியார்

தம்பிரான் தோழர்



பேராசிரியர்
டாக்டர் ந. சுப்புரெட்டியார்

தம்பிரான் தோழர்

.....

"தோழமையாக உனக்குநம்மைத் தந்தனம்
நாம்முன்பு தொண்டு கொண்ட
வேள்வியில் அன்றுநீ கொண்டகோலம்
என்றும் புனைந்துநின் வேட்கைதீர
வாழிமண் மேல்விளை யாடுவாய்" என்
றாரூரர்கேட்க எழுந்த தன்றே.

.....

அன்றுமுதல் அடியார்க ளெல்லாம்
'தம்பிரான் தோழர்' என்றே அறைந்தார்[1].

—சேக்கிழார்

---

1. பெ. பு. : தடுத்தாட். 127,129

தம்பிரான் தோழர்

(தமிழ்த்துறை – வெள்ளிவிழா வெளியீடு)

பேராசிரியர் **ந. சுப்புரெட்டியார்** பிஎச்.டி.
தமிழ்த்துறை நிறுவிய முதல் பேராசிரியர் (ஓய்வு)
திருவேங்கடவன் பல்கலைக் கழகம்
திருப்பதி - 517 502.

விற்பனை உரிமை :

பாரி நிலையம்
184. பிராட்வே. சென்னை. 600108

முதற்பதிப்பு - திசம்பர் 1985.
(நூலாசிரியரின் 69 - வது அகவை வெளியீடு)

© Dr. S. Ramalingam D. Litt.
Author's First Son
'Venkatam'
AD-13 (Plot No. 3354)
Anna Nagar, Madras-600 040.

விலை : ரூ. 20-00

VENKATAM PUBLICATIONS
(AD-13) Anna Nagar, Madras - 600 040)

Printed by Novel Arts Printers,
137. Jani Jankhan Road,
Madras-600014
Ph : 82731

'உழவர் தோழர்'
எனும்

முத்தர்

புலவர் கா. செ. குப்புசாமி ரெட்டியார்

பிறப்பு :
1 - 5 - 1920

சிவப்பேறு :
5 - 8 - 1985

தம்பிரான் தோழர் 'உழவர் தோழருக்கு'

அன்புப்படையல்

பண்ணியல் தமிழை நலமுறக் கற்றோர்;
பயன்தரு தொண்டுகள் புரிந்தோர்;
திண்ணிய உளத்தோர்; தோன்றிய சமூகம்
சிறப்புற ஒளிவழங் கறிஞர்;
கண்ணென வளர்ந்த புதல்வியை எனது
கான்முளைக் கனித்தசம் பந்தர்;
நன்னரும் புகழ்சால் குப்புசா மிப்பேர்
நம்பர்க்குப் படையல் இந்நூல்.

சுந்தரரின் தேன்தமிழ்

தேன்படிக்கும் அமுதாம்உன்
திருப்பாட்டைத் தினந்தோறும்
நான்படிக்கும் போதென்னை
நானறியேன்; நாஒன்றே?
ஊன்படிக்கும் உளம்படிக்கும்
உயிர்படிக்கும் உளம்படிக்கும்
தான்படிக்கும் அநுபவங்காண்
தனிக்கருணைப் பெருந்தகையே![2]

—இராமலிங்க அடிகள்

---

2. ஆளுடைய நம்பிகள் அருள்மாலை-7 (ஐந்தாம் திருமுறை).

சிறப்புப் பாயிரம்

பேராசிரியர் கு. பெருமாள் முதல்வர் (ஓய்வு), அரசினர் கலைக் கல்லூரிகள், தமிழ்நாடு.

பயணநூல்கள் நமக்களித்தார் யார்?

1. கல்லாரே மிக்குள்ள இக்காலம் தன்னில்
கல்லாரை முன்னேற்றும் கருத்தாற்றல் உள்ள
நல்லாரும் பாராட்ட, நன்றாக நாடி,
நல்லுலகை உருவாக்கும் நல்லெண்ணத் தோடு
சொல்லாலும் பொருளாலும் சுவையாலும் மிக்க
தொகைநூலும் அறநூலும் ஆன்மிக நூலும்
வல்லாரை உருவாக்கும் அறிவியல் நூலும்
வகுத்தாய்ந்து பயன்நூல்கள் நமக்களித்தார் யாரே?

அவர்தாம் 'அருங்கலைக்கோன்' ரெட்டியார்

2. பேரன்பால் உலகனைத்தும் படைத்தழித்துக் காக்கும்
பெருமாளின் அழகெல்லாம் பெருந்தமிழில் பாடி,
ஆராத உள்ளுணர்வால் ஆழங்கால் பட்ட
ஆழ்வார்கள் அருள்செய்த பிரபந்தம் தம்மைச்
சீராக ஆராய்ந்து தெளிந்துணர்ந்த உண்மைத்
திறமெல்லாம் மறவாமல் கட்டுரைகள் தீட்டி,
ஊரெல்லாம் உலகெல்லாம் உணர்ந்தோ ஙிவாழ
உயிரனைய நன்னூல்கள் உவந்தெழுதித் தந்து
தீராத உள்ளன்பால் தமிழணங்கைப் போற்றித்
திகழ்கின்ற சுப்புரெட்டி அவரென்பேன் அம்மா!

அவர்தாம் புலவர்க்குத் தோழர்

3. பத்தியால் உலகை ஊட்டிப்
பரமனுக் கின்பம் செய்யும்
வித்தகர் நாயன் மார்கள்
விளம்பிய பதிகம் ஓதி
உத்தம ராகி இந்த
உலகெலாம் உயர்ந்து வாழப்
புத்திநூல் அளித்தார் எல்லாப்
புலவர்க்கும் தோழர் அம்மா!

அவர்தாம் கோதில்லார்

4. படிப்பவர் உயர்தற் கேற்ற
படிப்பினை நல்க வல்ல
அடிப்படை நூல்கள் ஆக்கி
அறிவியல் நூல்கள் ஆக்கி
குடிச்செயல் வகைகள் காட்டும்!
குணநல நூல்கள் ஆக்கிக்
கொடுத்தநம் டாக்டர் சுப்பு
ரெட்டியார் கோதில் லாதார்.

அவர் மனைவிமகள் மகிழ்வுற வாழுகின்றார்

5. அருந்தமிழ்ப் புலமை மிக்கார்;
ஆங்கில மொழியில் வல்லார்;
இருமொழிக் கண்ணும் நூல்கள்
இயற்றிடும் ஏற்றம் உள்ளார்;
திருவினை முயற்சி யாலே
திருவெலாம் நிரம்பப் பெற்றார்
மருவிய மனைவி மக்கள்
மகிழ்வுற வாழு கின்றார்.

6. இளமையில் வறுமை யுற்றார்;
இன்னல்கள் பலவும் பட்டார்;
வளமிகு தமிழைக் கற்றார்;
வறுமையை வென்றார்; சான்றோர்
உளம்புகழ்ந் துவந்து போற்ற
உயர்நிலைப் பள்ளிக் கல்விக்
களங்களில் கழகம் தம்மில்
கற்பித்தார்; உயர்ந்தார்; மூத்தார்.

7. மூப்பினை அடைந்தா ரேனும்,
மூப்பிலா தோங்கி, ஞாலம்
காப்பதோர் ஆற்றல் பெற்ற
கருத்தெலாம் விளக்க வல்ல
நாப்பத மொழிகள் பேசி,
நற்கலை ஆய்வு நூல்கள்
பூப்பதற் குதவி, இன்பம்
பூத்துளம் மகிழு கின்றார்.

8. நகைத்திளம் முகத்தர் ஆனார்:
நற்றமிழ் நூல்கள் காட்டும்
அகத்திணைக் கொள்கை தந்தார்;
அம்புலிப் பயணம் தந்தார்;
பகைத்திறம் அழிக்க வல்ல
பத்திநன் னெறிகள் ஆய்ந்து
வகைப்படச் சமய நூல்கள்
வழங்கினார்; வள்ளல் ஆனார்.

9. அன்பினால் இன்பம் காணும்
ஆண்டவன் அருளில் மூழ்கி,
அன்பினால் தொண்டு செய்த
அடியவர் தம்மைப் போற்றி,

அன்பினால் டாக்டர் சுப்பு
ரெட்டியார் ஆக்கி யுள்ள
'தம்பிரான் தோழர்' என்னும்
தகவுசால் நூலைப் பார்த்தேன்.

10. திருமகள் கேள்வன் தாளைத்
திருமனத் தேந்தி, நாளும்
அருந்தமிழ் மகிழ, நூல்கள்
ஆக்குமோர் கடமை செய்து
வருபவர், நண்பர் டாக்டர்
வன்றொண்டர் தம்மேல் செய்த
பொருவிலாத் தோழர் நூலின்
பொற்புணர்ந் துவகை கொண்டேன்.

11. ஆண்டவன் அருளைக் காட்டும்
ஆயிரம் ஆடல் தம்முள்
ஆண்டவன் தோழர் ஆரூர்
அடியவர் பொருட்டுச் செய்த
நீண்டதோர் ஆடல் காட்டும்
நீதியை உலகம் காண
வேண்டுமென் றாய்ந்து தந்த
விளக்கினை விளங்கிக் கொண்டேன்,

12. தூய்மையே உருவ மான
சுந்தரர் பரவை யோடும்
வாய்மையே உருவ மான
சங்கிலி வனிதை யோடும்
தோய்ந்நல் இன்ப வாழ்வும்
தொடர்ந்தவர் துன்ப வாழ்வும்
ஆய்ந்துள ரெட்டி யாரின்
ஆற்றலும் அறிவும் கண்டேன்.

13. தண்டனை வழங்கி, நல்ல
தகுதியை வளர்த்துக் கொள்ளும்
தொண்டராய் உயர்த்தி, ஞானத்
தொண்டினைச் செய்ய வைத்தல்
அண்டமும் அனைத்தும் காக்கும்
ஆண்டவன் அருளென் றெண்ணிக்
கொண்டுளம் தெளியு மாறு
கொடுத்ததிந் நூலென் றோர்ந்தேன்.

14. இறைவனுக் கின்பம் தொண்டர்
இடர்களைந் தருள்தல் என்னும்
மறையினை எடுத்துக் காட்ட,
மலரடி வருந்தத் தூது
முறையினால் நடந்த தென்று,
முற்றிய பத்தர் எண்ணிக்
கறையிலா இன்பம் எய்தும்
காட்சியும் கருத்தும் தேர்ந்தேன்.

15. முத்தமிழ் நாட்டி லுள்ள
முக்கணன் கோயில் தோறும்
பத்தியால் பாடி ஆடிப்
பழவினை அறுத்த ஞான
வித்தகர் நாவ லூரார்
விமலரின் தோழர் ஆகிப்
'பித்தரே' என்று பாடிப்
பிழையறுத் துயர்ந்த தாய்ந்தோன்.

16. உழைப்பினால் உயர்ந்த மு.வ
உதவியை உயர்ந்து போற்றித்
தழைத்துள டாக்டர் சுப்பு
ரெட்டியார் தகுதி யாலே

இழைத்துள நூல்கள் எல்லாம்
இலக்கிய நயங்கள் காட்டிப்
பிழைப்பதற் கறிஞ்கள் காட்டிப்
பிறங்குதல் ஆய்ந்து தேர்ந்தேன்

17. தம்பிரான் தோழர் கோயில்
தலந்தொறும் சென்று போற்றிச்
செந்தமிழ்ப் பதிகம் பாடிச்
சேவைசெய் திறங்கள் எல்லாம்
நம்மூளம் கொள்ளு மாறு
நன்கெடுத் தியம்பும் டாக்டர்
தம்மறி வாற்றல் முற்றும்
தமிழ்க்களித் துவத்தல் கண்டேன்.

பாராட்டு

18. வடித்தெடுத்த அமிழ்தனைய தமிழ்மொழியில் ஈசன்
வன்றொண்டர்க் கருள்செய்த வரலாற்றைத் தீட்டி
அடிக்குறிப்பும் மேற்கோளும் அழகாகக் காட்டி
அவர்பணிந்த தலமெல்லாம் தெளிந்துநிலை நாட்டி
பிடித்தலைக்கும் பேராசைப் பேயனைத்தும் ஓட்டி
பிழையறுக்கும் மனையறத்தில் பேரின்பம் கண்டு
குடிப்பெருமை தனையுய்த்தும் குணத்தழகர் தம்மைக்
குன்றாத பேரன்பால் பாராட்டு கின்றேன்.

19. ஆதாரம் பலகாட்டி அகச்சான்றால் புறச்சான்றால்
ஆருரர் வரலாற்றை ஆராய்ந்து தெளிந்தோதிக்
காதர்க் கேட்போரும் கருத்தார்ப் படிப்போரும்
களித்துவக்கும் படியிருக்கும் திருக்காதல் மலரன்பைப்
போதாரம் எனச்சூட்டி பொருளில்லாச் சடங்கென்னும்
பொலிவில்லாப் பொருட்செலவும் பொய்ப்பூசைத்
தீதாரம் எனநீக்கித் தேவாரம் புகழ்ந்தேத்தும்
திருவடியில் முடிவைத்துத் திகழ்வோர்க்குப்

பல்லாண்டு

20. எம்பெருமான் திருவடியை
எப்போதும் பணிந்தேத்திச்
செந்தமிழில் பாட்டிசைத்துச்
சேவித்த வன்றொண்டர்
தம்முடைய வரலாற்றின்
தகவனைத்தும் ஆய்ந்துரைத்து
நம்முடைய உளங்கவர்ந்த
நல்லார்க்குப் பல்லாண்டு.

21. யாருக்கும் தீங்கறியாப்
பூஞ்சிரிப்பர்; தம்மறிவைப்
பாருக்குத் தந்துவக்கும்
பாங்காளர் பண்பாட்டின்
வேருக்கு நீருற்றும்
வித்தகர்தம் சத்தான
சீருக்கும் பல்லாண்டு
தீந்தமிழ்க்கும் பல்லாண்டு.

வாழ்த்து

22. தற்பரன் திருத்தாள் பற்றித்
தமிழமிழ் தூட்டி அன்பால்
அற்புதம் நிகழ்த்தி ஞாலம்
அமைதியாய் வாழ்தற் கேற்ற
கற்பினைக் காத்துத் தூய
காதலால் இன்பம் துய்த்து
நற்றவம் செய்த ஆரூர்
நம்பியும் நாடும் வாழ்க.

23. அவருயர் வாழ்வு பற்றி
அறிவன அனைத்தும் ஆய்ந்து
தவறிலா நடையில் நல்ல
தமிழினில் எழுதிக் கற்றார்

எவருமே புகழும் வண்ணம்
எடுத்துரைத் துலகிற் கீந்த
கவரிலா மனத்தர் சுப்பு
ரெட்டியார் கலைகள் வாழ்க.

24. அறிவியற் கலைகள் பற்றி
அறநெறி வாழ்வு பற்றி
குறிகுணம் இல்லா ஈசன்
குரைகழல் நற்றாள் பற்றி
நெறியுடன் வாழ்ந்தோர் ஆன்ம
நேயநன் நெறிகள் பற்றி
அறிவறி ஆய்வால் தந்த
அவர்திரு நூல்கள் வாழ்க.

25. அறிவுக்கு விருந்தும் நல்ல
அறிவியல் விருந்தும் வாழ்க்கை
நெறிகளுக் குதவும் காதல்
நிறைநல நூலும், காம
வெறிகளுக் கெரிகள் ஊட்டி,
வெம்பகை நீக்கி, ஐந்து
பொறிகளுக் கொழுக்கம் ஊட்டிப்
புகழ்பெறு நூலும் வாழ்க.

29. சொல்வகைக் கெட்டா ஞானச்
சுடர்திரு வேங்க டத்தான்
பல்கலைக் கழகந் தன்னில்
பயன்தமிழ் ஆசா னாகி
நல்வகைப் பணிகள் செய்து,
நல்லுல கமைக்க வல்ல
கல்வியை வளர்த்த சுப்பு
ரெட்டியார் களித்து வாழ்க.

27. சிந்தனைத் தெளிவு பெற்றுச்
சிறந்தவர் எவரும் போற்றும்
சுந்தரர் தம்மை அன்புத்
தோழராய் ஏற்றுக் கொண்ட
செந்தழல் மேனி யானின்,
செந்தமிழ்க் காதலானின்,
அந்தமில் இன்பத் தானின்
அடிஅவர் முடிமேல் வாழ்க.

28. எழுபதில் ஒன்று போக
எஞ்சிய அகவைக் குள்ளே
எழுபதின் மேலாம் நூல்கள்
எழுதிய எழுத்தின் வேந்தர்
பழுதிலாப் பண்பர், அன்பர்
பரிசுகள் பெற்ற நூலோர்,
விழுமிய மனைவி மக்கள்
விழுதெனப் பெற்றோர் வாழ்க.

29. உலகெலாம் படைத்துக் காக்கும்
ஒப்பிலான் அருளில் மூழ்கிப்
புலங்களைத் திருத்திக் காத்துப்
புவிசுமை நீக்கி, இன்ப
நலமெலாம் பெருக்க வல்ல
நல்லநூல் இன்னும் ஆக்கி
இலகுநற் சான்றோர் வாழ்த்தை
ஏற்றிவர் இனிது வாழ்க,

30. இளமையில் பெற்ற துன்பம்
யாவையும் வென்ற வீரர்,
வளமொழித் தமிழைக் கற்று
வறுமையை வென்ற சூரர்,

உளம்நிறை இறைவன் அன்பில்
ஊறிய திரர், கல்விக்
களங்களில் கழகம் தம்மில்
கற்றவர் புகழ வாழ்க.

31. கடலெனக் கல்வி கேள்விக்
கரையெலாம் கடந்த ஞானச்
சுடரொளிச் செல்வர், தோழர்,
சுந்தரர் அருளால் சூதில்
படலறி யாத பண்பர்,
பல்கலை வல்லார், வாழ்வில்
இடரறுத் துயர்த்தும் நூல்கள்
எண்ணில இயற்றி வாழ்க.

க.பெருமான்

20,புருடேத்தமன் தெரு
(வள்ளுவர் கோட்டம் பின்புறம்)
நுங்கம்பாக்கம்
சென்னை-600 034

அணிந்துரை

(திரு. தே. க. சோமசுந்தரம், தலைமையாசிரியர் (ஓய்வு) தமிழக அரசினர் உயர்நிலைப் பள்ளிகள்)

தலையாய சைவ சமய குரவர்கள் நால்வருள் ஒருவர் சுந்தரமூர்த்தி சுவாமிகள். இப்பெரியார் எட்டாம் நூற்றாண்டில் வாழ்ந்தவர். சுந்தரர் பாடிய திருத்தொண்ட தொகையையும், அவருக்குப் பிற்காலத்தே வாழ்ந்த நம்பி யாண்டார் நம்பியருளிய திருவந்தாதியையும் அடிப்படை யாகக் கொண்டு சேக்கிழார் சுவாமிகள் சுந்தரரின் வரலாற்றை விரித்துரைக்கின்றார். பேராசிரியர் ந. சுப்பு ரெட்டியார், இந்தநூல்களையும், சுந்தரர் பாடிய திருப்பதிகங் களையும் நன்கு ஆராய்ந்து, இவ்வரலாற்றை எழுதியுள்ளார்.

திருக்கைலாயத்தில் ஆலாலசுந்தரர் என்பவர் சிவபெரு மானுக்கு அணுக்கத் தொண்டராயிருந்தார். கமலினி, அனிந்திதை என்னும் இரு பெண்களும் உமையம்மை யாருக்குத் தொண்டு புரியும் சேடியர்கள். ஆலால சுந்தரரின் மனம் ஒருநாள் இவ்விரு பெண்கள்பாலும் சென்றது, "தென்னாட்டிலே பிறந்து அவ்விருவரோடும் இன்பம் நுகரு வாயாக" என்பது இறைவனது ஆணை. இவ்வாணையைக் கேட்டதும் ஆலால சுந்தரர் மயங்கினார். உரிய காலத்தில் தடுத்தாட் கொள்வதாகவும் இறைவன் அருள் செய்தார். சிவபெருமான் ஆணைப்படி ஆலாலசுந்தரர் தமிழ் கூறும் நல்லுலகில், திருமுனைப்பாடி நாட்டில் திருநாவலூரிலும் கமலினி அனிந்திதையார் முறையே திருவாரூரில் பரவை நாச்சியாராகவும், திருவொற்றியூரிலே சங்கிலி நாச்சியாராக வும் பிறந்தனர்.

ஆலாலசுந்தரர் திருமுனைப்பாடி நாட்டில் சடையனார் என்பவருக்கும் அவர் மனைவியார் இசைஞானியாருக்கும் புதல்வராய்ப் பிறந்தார். இவருக்குப் பெற்றோர்களால் இடப்பட்ட பெயர் நம்பியாரூரர் என்பதே. சிறுவயதி லிருந்தே நரசிங்கமுனையர் என்னும் அரசரால் வளர்க்கப் பட்டார். திருமணத்திற்குரிய வயது வந்தது. புத்தூரில் வாழ்ந்த சடங்கவி சிவாச்சாரியாரின் மகளைத் திருமணம் செய்வதாக முடிவாயிற்று. சிவபெருமான் அந்தணர்க்கோலம் தாங்கி, திருமணப்பந்தரில் நுழைந்து, நம்பியாரூரரைப் பார்த்து "நீ என் அடிமை" என்று வாதாடி, திருமணத்தைத் தடுத்து, கருணைநோக்கம் செய்தருளினார் என்பது வரலாறு.

அந்தணர்க் கோலம் தாங்கி வந்த சிவபெருமானுக்கும், நம்பியாரூரருக்கும் நடந்த வாக்குவாதத்தில், "நீ ஒரு பித்தனா" என்று இறைவனைப் பழித்தார். அண்மையிலிருக் கும் திருவெண்ணெய் நல்லூரில் இறைவன் உமாதேவி யாருடன் காட்சி தந்து மறைந்தார். "பித்தன்" என்று இறைவனைப் பழித்ததால், "'பித்தா பிறைசூடி' என்றே பாடுக" என்பது இறைவன் கட்டளை. இறைவன் ஆணைப் படியே "பித்தா பிறைசூடி" என்றெடுத்து முதற்பதிகத்தைப் பாடினார். இறைவனோடு வன்மை பேசியதால் "வன் றொண்டன்" என்ற பெயரும் அவருக்கு வழங்கலாயிற்று.

திருஞானசம்பந்தராலும், திருநாவுக்கரசராலும், சுந்தர ராலும் பாடப்பட்ட சிவத்தலங்கள் 275. சுந்தரர் பல சிவத் தலங்களில் ஒவ்வொரு தலத்திற்கு ஒரு பதிகமும், சில சிவத் தலங்களில் ஒவ்வொரு சிவத்தலத்திற்கு ஒன்றுக்கு மேற்பட்ட பதிகங்களும் பாடியுள்ளாரென்றும் அறிகின்றோம்.

பேராசிரியர் ரெட்டியார் வன்றொண்டர் பாடிய அருட் பதிகங்களிலிருந்து ஒவ்வொரு தலத்திற்கும் உரிய ஓரிரண்டு பாடல்களையும் காட்டியுள்ளது படித்து இன்புறுவதற் குரியது. வன்றொண்டர் பலதலங்களுக்குச் சென்று வழி

பட்டாரென்றும், அத்தலங்களுக்குரிய பதிகங்கள் மறைந்து போயின என்றும், "சிவபெருமான் அமர்ந்தருளும் பொருத்த மாம் இடம் பலவும் புக்கிறைஞ்சி" என்ற சேக்கிழார் வாக் கால் காட்டுவதிலிருந்து அறிகின்றோம்.

திரு ஆமாத்தூர் கல்வெட்டு ஒன்றால் பதினாறு குருடர் கள் திருப்பதிகம் பாடுவதற்கும், அவர்களுக்கு வழித்துணை யாயிருந்து நடத்திச் செல்ல இருவர் நியமிக்கப்பட்டிருந்தன ரென்றும் பேராசிரியர் குறிப்பிட்டுள்ளார். இஃது அக்கால ஆட்சியின் சிறப்பினையும், மக்களின் ஆழ்ந்த இறைப் பற்றினையும் உயர்வாய பண்புகளையும் எடுத்துக் காட்ட வல்ல சான்றாகும்.

பல சிவத்தலங்துளுக்குச் சென்று வழிபட்டுப் பதிகங்கள் பாடிய வன்றொண்டர் திருத்துறையூருக்கு வந்தார். அங்கே இறைவனை நோக்கித் தவநெறி வேண்டினார். திருநாவுக் கரசர் உழவாரத் தொண்டு செய்த தலம் திருவதிகை. அத்தலத்தை மிதியாமல் வன்றொண்டர் சித்தவட மடத்தில் தங்கினார். உறக்கம் வந்தது. இறைவன் கிழவேதியராய் வந்து அங்கே திருவடி தீக்கைசெய்தருளினார்.

தில்லையிலே கூத்தப் பெருமானை வழிபட்டார். ஞானத்தால் தொழும் ஞானிகள் இறைவனை வழிபடும் பொழுது அவர்களது ஐந்து பேரறிவும், கரணங்கள் நான்கும் குணம் ஒரு மூன்றும் எவ்வாறு இயங்கும் என்பதைப் பேரா சிரியர் காட்டி விளக்குவது (பக் 44 -47) சிந்தித்து மகிழ்வதற் குரியதாகும் "திருவாரூருக்கு வா" என்ற வானொலி எழுந்தது. மூன்று வயதில் ஞானப்பால் உண்ட திருஞான சம்பந்தர் பிறந்த இடம் சீகாழி; அதை மிதியாது எல்லைப் புறத்தில் தங்கியிருந்தபொழுது வன்றொண்டருக்கு இறைவன் காட்சி தந்தருளினர். பல தலங்களில் வணங்கிய பிறகு திரு வாரூரை அடைந்தார். கோயிலில் தேவாசிரிய மண்டபத்தில்

தியாகேசப் பெருமான் அவர் முன்னே தோன்றி அவரது வழித்தொண்டை அறிவித்து' ''தில்லைவாழ் அந்தணர்தம் அடியார்க்கும் அடியேன்'' என்று அடி எடுத்துக் கொடுத்தார். இறைவன் எடுத்துக் கொடுத்த இவ்வடியே வன்றொண்டர் பாடிய திருத்தொண்டத் தொகைக்கு முதலடியாகும். ''என்றும் திருமணக் கோலத்தோடு வேட்கை தீர இவ் வுலகில் வாழ்வாயாக'' என்ற வானொலியும் எழுந்தது. தன் தோழமையையுந் தந்து இறைவன் மறைந்தருளினார்.

பண்டை நல்வினை கூட்ட, கோயிலில் திருப்பணி செய்யும் கணிகையர் குலத்தில் தோன்றிய பரவையாரைக் கண்ணுற்றார். இருவரும் சிவநேயத்தில் திளைத்தவர்களா தலால், பரவையாரைப் பார்த்ததும், இவள் ''அற்புதமோ, சிவனருளோ அறியேன்'' என்று வன்றொண்டர் அதிசயித் தார். இவரைக் கண்ட பரவையாரும் ''முன்னே வந்து எதிர் தோன்றும் முருகனோ?'' என நினைந்தார். இறைவன் பணித்தபடி இருவருக்கும் திருமணம் நடந்தது. ''பண்மயத்த மொழிப்பரவை சங்கிலிக்கும்!எனக்கும் பற்றாய பெருமானே'' என்பது நம்பியாரூரர் வாக்கு. இப்பெரியார் பெண்ணின் பெருமையை இவ்வாக்காற் கொண்டாடுவது, நாம் மறவாது போற்றி மகிழ்வதற்குரியதாகும். இந்நிகழ்ச்சியைப் பேரா சிரியர் நன்கு விளக்கியுள்ளார் திருவாரூரில் ''நமது தோழமையை உனக்குத் தந்தோம்'' என்ற அசரீரி வாக்கு இறைவன் அருளால் எழுந்ததால், அன்று முதல் வன் றொண்டர் ''தம்பிரான் தோழர்'' என்றும் அழைக்கப் பட்டார்.

குண்டையூர் என்னும் ஊரில் ஒரு பெரியார் இருந்தார். அவர் பரவையாரிடத்தில் பேரன்புடையவர். அவர் வேண்டு கோளின்படி சிவபெருமான் நெல்லை மலையாகக் குவித்துத் திருவாரூரில் பூதகணங்களைக் கொண்டு எங்கும் பரப்பியது ஒரு திருவருள் நிகழ்ச்சியாகும். கோட்புலியார் என்ற பெரியாரின் வேண்டுகோளுக்கிணங்கி வன்றொண்டர்

திருநாட்டியத்தான் குடிக்குச் சென்றார். வனப்பகை, சிங்கடி என்ற தம் இரு பெண்களையும் ஆட்கொண்டருள வேண்டினார். இவ்விரு பெண்களையும் வன்றொண்டர் தம் புதல்விகளாக ஏற்றருளினார். இஃது அவர் பெருங் கருணையைக் காட்டுகின்றது. தம்மைச் ''சிங்கடியப்பன்'', ''வனப்பகையப்பன்'' என்று திருப்பதிகத்தில் அமைத்துப் பாடினார். கோட்புலியார் அறுபத்துமூன்று சைவ சமய நாயன்மார்களில் ஒருவர்.

பல தலங்களுக்குச் சென்று இறைவனை வழிபட்ட வன்றொண்டர், தில்லைச் சிற்றம்பலவன்பாலும், திருவாரூர் தியாகேசப் பெருமான்பாலும் இடையறாத ஈடுபாடு கொண்டிருந்ததால், அவர் இவ்விரு தலங்களுக்கும் அடிக்கடி வந்து போனதாகவும் தெரிகின்றது.

நாம் அற்புதங்கள் என்று நினைக்கக் கூடிய நிகழ்ச்சிகள் வன்றொண்டர் வாழ்வில் நிகழக் காண்கின்றோம். திருப்புகலூரில் பொன்னை வேண்டிய பொழுது, தலையணையாக வைத்திருந்த செங்கற்கள் பொற்கட்டிகளாக மாறின.

''தம்மையே புகழ்ந்திச்சை பேசினும்
சார்வினும் தொண்டர் தருகிலாப்
பொய்மையாளரைப் பாடாதே எந்தை
புகலூர் பாடுமின் புலவீர்காள்''

என்று பாடினார். பிறகு திருப்பனையூரில் இறைவன் திருக் கூத்துக் காட்சி வழங்கியதும், திருவாலம் பொழிலில் அவர் கனவில் தோன்றி ''மழபாடியை மறந்தாயோ'' என்று கேட்டதும், திருப்பேரூரில் திருச்சிற்றம்பலத்திலே ஆடும் திருக்கூத்தைக் காட்டியதும், வேதியராய்த் தோன்றி ''கூடலையாற்றூருக்குப் போகும் வழி'' என்று சொல்லி மறைந்ததும், திருமுதுகுன்றத்தில் பன்னீராயிரம் பொன் பெற்று மணிமுத்தா நதியிலிட்டுத் திருவாரூர்த் திருக்குளத்தில்

எடுத்ததும், திருக்குருகாவூரில் வேதியராய் வந்து தம்பிரான் தோழரின் பசி தாகத்தைத் தீர்த்தருளியதும், திருக்கச்சூர் ஆலக்கோயிலில் இறைவன் மறையவராய் வந்து சோறு இரந்து கொண்டு வந்து அவரது பசியைத் தீர்த்ததும் வன் றொண்டரின் பதிகங்களிலிருந்தே அகச்சான்றுகளாகக் காண்கின்றோம்.

திருக்காளத்திக்கு வந்து அன்பே பிழம்பாய்த் திகழ்ந்த கண்ணப்பரைத் தொழுது, காளத்தியப்பரை வணங்கினார். அங்கிருந்தே திருப்பருப்பதம், திருக்கேதாரம், திருக்கைலாயம் முதலிய தலங்களைப் பணிந்து பாடினார்.

திருவொற்றியூரை அடைந்தார். இங்கும் ஓர் அரிய நிகழ்ச்சி நடக்க விருக்கின்றது. கைலாயத்தில் உமாதேவி யாருக்குத் தொண்டு செய்து வந்த அனிந்திதையார், ஞாயிறு கிழவர் என்பவருக்கு மகளாகப் பிறந்து, சங்கிலியார் என்னும் பெயர் சூட்டப்பெற்று, இறைவனை வழிபட்டுவந்தார். பண்டை நற்றவத்தால் தோன்றிய சங்கிலியாரைத் திரு வொற்றியூர்க் கோயிலில் வன்றொண்டர் காணலுற்றார். ''மின்னுக் கொடிபோல்வாள் என்னை உள்ளந்தவிர்ந்தாள் யார்கொல்'' என நினைந்தார். இறைவனை வேண்டினார். சிவபெருமான் வேதியராய் சங்கிலியாரின் முன்தோன்றி வன் றொண்டரை ''மணத்தால் அணைவாய்'' என்றருளினார்.

வன்றொண்டர், திருவாரூரில் தியாகேசர்பாலும் பரவை யார்பாலும் பெரிதும் ஈடுபாடுடையவராதலால், 'திரு வொற்றியூரை விட்டு விலகிச் செல்லேன்' என்று சபதம் செய்து கொடுக்க வேண்டுமென்று சங்கிலியார் வேண்டினார். வன்றொண்டரும் இசைந்தார். அவ்வேளையில் இறைவன் மகிழின்கீழ் எழுந்தருள வேண்டுமென்று வன்றொண்டர் வேண்டினார். இறைவனும் அதற்கிசைந்தார். ஆனால் சபதம் செய்ய வந்தபொழுது, சங்கிலியாரின் தோழிகள்

இறைவன் முன் சபதம் செய்து கொடுத்தல் தகாதென்றும், மகிழின்கீழ்ச் சபதம் செய்து தரவேண்டுமென்றும் சொல்ல வன்றொண்டரும் இசைந்து சபதம் செய்தார்.

வன்றொண்டர் ''திருக்கோயிலில் நம் திருமுன்பு சூளுரைக்க வந்தால், நீ அதற்கு உடன்படாது, மகிழமரத்து அடியில் செய்து தருமாறு வற்புறுத்துக'' என்று சங்கிலிக்குக் கூறிய இறைவனின் திருவுள்ளக் குறிப்பை நம்மால் அறிந்து கொள்ளஇயலவில்லை'' என்றுகுறிப்பிட்டுள்ளார் பேராசிரியர் இஃது ஒரு முரண்பாடுடைய செயலாகத்தான் தோன்றுகிறது. இருப்பினும் இறைவனின் திருவுள்ளக் கருத்தை யாரால் ஆழ்ந்து அலசிப் பார்க்க இயலும்? திருமணம் நடைபெற்றது. வன்றொண்டரும் சங்கிலியாரும் ''ஊழியாம் ஒரு கணந்தான் அவ்வூழி ஒரு கணமாம்'' எனும்படி இன்ப வாழ்வு வாழ்ந்தனர்.

தியாகேசப் பெருமானை மறந்திருக்க முடியவில்லை. திருவாரூர் செல்ல ஒற்றியூரை விட்டு நீங்கினார். சபதம் தவறினார். அவரது இருகண்களின் ஒளியும் மறைந்தது.

''நகுதற் பொருட்டன்று நட்டன் மிகுதிக்கண்
மேற்சென் றிடித்தற் பொருட்டு''

என்பது வள்ளுவர் வாக்கு. நடுநிலையிலிருந்து உயிர்கள் அனைத்தையும் படைத்தும், காத்தும், துடைத்தும் மறைத்தும், அருளும் இறைவன் வன்றொண்டர் சிறந்த தோழரேயானாலும், அவருக்குரிய தண்டனையைத் தாராமலிருப்பனோ!

சிவபெருமானை நினைந்து நினைந்து உருகிய வன்றொண்டருக்குத் திருவெண்பாக்கத்தில் ஊன்றுகோல் கொடுத்ததருளினார். திருவாலங்காட்டை யடைந்தார். காரைக்கால் அம்மையார் தலையாலே நடந்து செய்த பெருமையை உடையது அத்தலம். அங்கே இறவாத இன்ப

அன்பை இறைவன்பால் வேண்டிய அம்மையாரைப் போற்றினார். திருப்பதிகம் பாடினார். பிறகு காஞ்சியில் திருவேகம்பர் அருளால் இடக்கண் பார்வையையும், திருவாரூரில் தியாகேசப் பெருமானருளால் வலக்கண்பார்வையையும் பெற்றார். இடையே திருத்துருத்தி மேயானை வழிபட்டு உடலில் பீடிக்கப்பட்டிருந்த பிணியினின்றும் விடுபட்டார்.

வன்றொண்டர் சங்கிலியாரை மணந்த செய்தியைக் கேள்வியுற்றுப் பரவையார் பெரிதும் சீற்றங் கொண்டார். அவரது ஊடலின் தன்மையை, வள்ளுவனார் வகுத்த பல குறட்பாக்களால் பேராசிரியர் எடுத்துக் காட்டுவது நகைச் சுவைததும்பும் மகிழ்ச்சிக்குரிய இடமாகும். வன்றொண்டரின் வேண்டுகோளின்படி சிவபெருமான் நள்ளிரவிலும் பரவையார்பால் தூது சென்று அவரது ஊடலைத் தீர்த்து, தன் தோழரின் இடரையும் களைந்தருளினார்.

இறைவனையே தூதுவிடுத்த செய்தியைக் கேள்வியுற்ற ஏயர்கோன் கலிக்காம நாயனார் வன்றொண்டரை வெறுத்தார். அதனால் சூலைநோய் தந்து அந்நோயையும் வன்றொண்டராலேயே இறைவன் தீர்த்தருளினார். ஏயர்கோன் கலிக்காமர் அறுபான்மும்மை நாயன்மார்களுள் ஒருவர். இவ்விரு பெரியோர்களும் சிறந்த நட்புரிமை பூண்டு அளவளாவினர். பிறகு வன்றொண்டர் திருநாகைக் காரோணத்தை யடைந்து தமிழ்பாடி இறைவன் அருளால் பொன், மணி முதலியவற்றைப் பெற்றார்.

மலைநாட்டு மன்னரும் மிகச் சிறந்த சிவநேயச் செல்வருமான சேரமான் பெருமாள் நாயனார், வன்றொண்டரின் பெருமையைக் கேள்வியுற்று, திருவாரூர் வந்து இருவரும் ஒருவராயினர் என்ற முறையில் தோழமை பூண்டு, பல தலங்களுக்குச் சென்று வழிபட்டனர். சேரமான் பெருமானாரே கழறிற்றறிவார் நாயனார் என்ற பெயரையும் உடையவர்.

அறுபத்து மூவரில் ஒருவர். வன்றொண்டருக்குச் "சேரமான் தோழர்" என்ற பெயரும் உண்டு. இவ்விரு பெரியோர்களும் பாண்டிநாடு போந்து பல தலங்களில் இறைவனை வழி பட்டனர். திருச்சுழியலில் வன்றொண்டர் கனவில் இறைவன் தோன்றி "நாம் இருப்பது கானப்பேர்" என்றருளி மறைந் தார். இருவரும் திருக்கானப்பேர் சென்று இறைவனை வழி பட்டனர். வேறு பல தலங்களிலும் இறைவனைப்பாடி திருவாரூர் திரும்பினர்.

சேரமானாரின் அன்பான வரவேற்பினையேற்று வன் றொண்டர் மலைநாட்டுக்குச் செல்ல இசைந்தார். வழியில் திருவையாற்றில் இறைவனை வழிபட விழைந்தனர். காவிரி பெருக்கெடுத்து ஓடிக் கொண்டிருந்தது.

"விதிர்த்து மேகம் மழைபொழிய
வெள்ளம் பரந்து நுரை சிதறி
அதிர்க்கும் திரைக்கா விரிக்கோட்டத்
தையா றுடைய அடிகளோ

என்று வன்றொண்டர் பாட, இவ்விரு பெரியோர்களும் திருக் கூட்டத்தினரும் கடந்து செல்லக் காவிரிப் பாவையும் நடுவே வழிவிட்டுக் காட்டினாள்.

மலைநாடு சேர்ந்தனர். வன்றொண்டரை அளவற்ற அன்பால் வரவேற்று மலைநாட்டு மன்னர் வழிபாடுகள் செய்தார் திருவஞ்சைக்களத்துப் பெருமானை வழிபட்டனர். சில நாட்களுக்குப் பிறகு வன்றொண்டர் சேரமானாரிடம் பிரியாவிடை பெற்று, அவர் தந்த அன்பளிப்புகளை ஏற்றுக் கொண்டு திருவாரூர் திரும்பினார். வழியில் கொங்கு நாட்டில் திருமுருகன் பூண்டிக்கு அண்மையில் இறைவன் ஆணையால் பூதகணங்கள் வெஞ்சிலை வேடராய் மாறி, சேரமானார் பொருள்களைப் பறித்துச் சென்றன. வன் றொண்டருக்கு எவ்வித ஊறும் செய்யவில்லை. திருமுருகன்

பூண்டியில் சிவபெருமானை வழிபட்டு, இழந்த பொருள்கள் அனைத்தையும் மீட்டு திருவாரூரை நோக்கிச் சென்றார் வன்றொண்டர்.

திருவாரூரில் இறைவனை வழிபட்டு வந்த நாளில் வன்றொண்டரின் மனம் மலைநாட்டு மன்னர் பெருமான் மீதேயிருந்தது. மலைநாடு நோக்கினார். கொங்குநாட்டில் அவிநாசியில் ஓர் அரிய செயல் நிகழ்ந்தது. ஒரு வீட்டில் மங்கல ஒலியும் மற்றோர் வீட்டில் அழுகையொலியும் கேட்டன. இரு சிறுவர்கள் குளத்தில் நீராடச் சென்றனர். ஒருவன் முதலையால் விழுங்கப்பட்டான். அவனை நினைந்து அவன் பெற்றோர் அழுதனர். தப்பிய சிறுவனின் உபநயனத்தின் பொருட்டு அவன் வீட்டில் மங்கல ஒலியெழுந்ததையும் வன்றொண்டர் அறிந்தார். அவர் வருகையைக் கேள்வியுற்ற பெற்றோர்கள், இறந்த சிறுவனை மறந்து, பேருவகையுடன் வன்றொண்டரை வரவேற்றுமகிழ்ந்தனர். அவர்கள் அன்பின் திறத்தை வியந்து, ''கரைக்கால் முதலையைப் பிள்ளை தரச்சொல்லு காலனையே'' என்று பாட, முதலையும் கரைக்கு வந்து பிள்ளையை உமிழ்ந்து சென்றது. இல்வற்புதச் செயல் மலைநாட்டை வியப்பில் ஆழ்த்தியது. சேரமானார் வன்றொண்டரை எதிர்கொண்டு, அவரைத் தழுவி வணங்கினார். மன்னருடன் மகிழ்ந்துறைகின்ற நாட்கள் பல கடந்தன.

வன்றொண்டர் வாழ்ந்த காலம் இந்நிலவுலகில் முடிவுறுகின்றது. கைலாயத்தினின்றும் வெள்ளை யானை வந்தது. வன்றொண்டர் அதன் மீதமர்ந்து மண்ணுலகை நீத்து மேலே சென்றார். இதை அறிந்த சேரமானாரும் ஒரு குதிரையின் காதிலே அஞ்செழுத்தோதி அதன்மீது அமர, அஃது வன்றொண்டரின் வெள்ளை யானையை வலம் வந்து, அதனையும் கடந்து சென்றது.

''தா னெனை முன்படைத்தான்''

என்று பாடி கைலையை யடைந்து, உள்ளே சென்று சிவபரம் பொருளைக் கண்டு உருகினார் நம்பியாரூரர். சிவபெருமான் ''ஆரூரனே வந்தனையோ'' என்றார். தன்பிழையெலாம் பொறுத்துத் தன்னைத்தடுத்தாட் கொண்டு கயிலைப் பேற்றை மறுபடியும் அருளிய பெருமான் கருணையைப் போற்றி நின்றார் ஆரூரர். வாயிலில் தடைப்பட்டு நின்ற சேரமானாரை, இறைவன் கட்டளைப்படி நந்தியம் பெருமான் அழைத்துச் சென்றார். இறைவனை வணங்கிப் போற்றிய சேரமானார் வேண்டுகோளின்படி, அவர் பாடிய நெரு 'ஞான உலாவை'' இறைவன் கேட்டருளினார்.

மண்ணுலகில் பரவையாரும் சங்கிலியாருமாய்ப் பிறந்து, இறைவனை இடையறாது போற்றி, வன்றொண்டப் பெருமானை மணந்து பேரின்பத்தைத் துய்த்து வாழ்ந்த இவ்விரு சிவநேயச் செல்வியரும், கைலாயத்தில் முன்பு போல் கமலினி அனிந்திதையாராய் மாறித் தங்கள் பழைய தொண்டுகளைச் செய்து வரலாயினர். வன்றொண்டர் அருளிய பதிகங்களை வருணன் திருவஞ்சைக் களத்திலும், சேரமான் அருளிய ''திருஉலாவை'' மாசாத்தனார் திருப்பிடவூரிலும வெளியிட்டனர்.

சுந்தரரின் பிறப்பைக் குறிப்பிட்ட சேக்கிழார் பெருமான் மற்றசைவ சமய நாயன்மார்களின் முற்பிறப்பைக் கூறவில்லையென்றும் சுந்தரரின் முற்பிறப்பு மட்டும்குறிப்பிடப்பட்டுள்ளதென்றும் எடுத்துக் காட்டியுள்ளார் பேராசிரியர். காலஞ் சென்ற பேரறிஞர் உயர்திரு. மறைமலையடிகளார், பெரிய புராணத்தில் ''திருமலைச் சருக்கம்'' இடைச் செருகலாயிருக்குமென்றும் கூறியுள்ளார். காலஞ்சென்ற அறிஞர்கள் திரு வி க., சிவக்கவிமணி உயர்திரு. C. K. சுப்பிரமணிய முதலியார் போன்றவர்கள் இவ்வித ஐயப்பாட்டையெழுப்ப

வில்லை. ஆகையால் இதன் உண்மையை இறைப்பற்றும் பெரும் புலமையுமுடைய பெரியோர்கள் ஆராய்ந்து தெளிவார்களாக.

சுந்தரர் 100 பதிகங்களே பாடியுள்ளார். இவற்றுள் தலப் பதிகங்கள் 96; பொதுப்பதிகங்கள் 4. மூவர் தேவாரப் பதிகங்கள் இரண்டற இசையோடியைந்தனவாகும். அருள்மிகு விபுலாநந்த அடிகள், தாம் இயற்றிய அரிய யாழ் நூலில் ''தேவாரவியல்'' என்ற தலைப்பில் தேவாரப் பாடல்களின் யாப்பமைதியினையும் இசையமைதியினையும் எண்பது பக்கங்களில் ஆராய்ந்துள்ளார். அடிகளார் மேலும் அவ்வரிய நூலில் எழுதுவது: ''பாட்டுக் குருகுந் தமிழ்ச் சொக்கநாதர் கூடலம் பதியிலே பாணபத்திரர் பொருட்டால் விறகாளாகி இசை பரப்பிய ஞான்று, அவ்விசை வலையிற்பட்ட விடவாய் நாகமும், பல்பொறி மஞ்ஞையும், யானையும், சிங்கமும், மானும், புலியும் என்றின்னவை தம்மியல்பாகிய பகைமையினை மறந்து ஒன்று கூடி நின்றனவெனப் புராணங்கூறும். ''திரு நீலகண்டப் பெரும்பாணருக்குப் பொற்பலகையளித்து, ஞானசம்பந்தருக்குப் பெற்றாள மீந்து, இசை வளர்த்த பேரருளாளன் இசையே உருவாக நின்றான் என்னும் உண்மை, ''பண்ணும் பதமேழும் விண்ணும் முழுதானான்'' என்னும் ஆளுடைய பிள்ளையார் திருவாக்கினாலும், 'ஏழிசையாய் இசைப்பயனாய் இன்னமுதாய் என்னுடைய தோழனுமாய்' எனக்கூறிய ஆளுடைய நம்பியின் திருவாக்கினாலும், 'ஓசை ஒலியெலாம் ஆனாய் நீயே' எனக்கூறிய ஆளுடைய அரசர் திருவாக்கினாலும் அறியப்படுகின்றது.

''''முன் நல் யாழ் பயில் நூல் நரம்பின் முதிர் சுவையே' எனக் கன்னலும் அமிழ்தும் போன்ற கார்முக வண்ணனைப் பாடிய திருக்குருகைப் பிரான் அவ்வண்ணல் யாழ் நரம்பின் முதிர் சுவையாகி நின்றான் என்னும் உண்மையினைத் தெளிவு

develop devotion, it is enough to show that Jnana and Bhakti are one and the same''.

பேராசிரியர் ஐந்தெழுத்தின் பெருமையைக் குறிப்பிட்டுள்ளார். ஐந்தெழுத்தின் பெருமையைப் பன்னிரு திருமுறை நூல்களிலும், சைவசித்தாந்த சாத்திரங்களிலும் பரக்கக் காணலாம். ஐந்தெழுத்து இறைவனின் திருப்பெயராய்த் திகழும் பெருமையுடையது. சுந்தரர் பெருமான்,

''நற்றவாவுனை நான் மறக்கினும் சொல்லு நா
நமச்சிவாயவே'',

என்கின்றார். பேராசிரியர் கோயில்களின் பெருமையையும் இன்றியமையாமையையும் குறிப்பிட்டுள்ளார். ''கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்'' என்பது அவ்வையார் அருள்வாக்கு. சிவஞானபோதம் பன்னிரண்டாம் சூத்திரம்,

''செம்மலர் நோன்றாள் சேரலொட்டா
அம்மலங்கழீஇ யன்பரொடு மரீஇ
மாலற நேய மலிந்தவர் வேடமும்
ஆலயந்தானும் ஆனெனத்தொழுமே''

என்று கூறுகிறது. ஆலயவழிபாட்டின் இன்றியமையாமையைப் பழங்காலந்தொட்டே தமிழகமும், இந்திய நாடும் உணர்ந்துள்ளன. பேராசிரியர் தேவாரத் திருத்தலங்கள் தோன்றிய முறை யினையும் வரலாற்றினையும் கூறி, அறுபத்து மூன்று நாயன்மார்களில் ஒருவராய கோச்செங்கட் சோழரின் சிறந்த சிவபக்தியையும், அப்பெரியார் கட்டிய எழுபது மாடக் கோயில்களையும், அமைப்பையும் விளக்கியுள்ளார்.

தேவாரத் தலங்களிருக்கும் பண்டைத் தமிழ் நாட்டின் பல பகுதிகளையும், இந்தியத் துணைக் கண்டத்தின் வடபகுதி யிலிருக்கும் தேவாரத்தலங்களையும், தெற்கே ஈழ நாட்டிலிருக்கும் இரு தேவாரத் தலங்களையும் குறிப்பிட்டு, பல

தலங்களின் பெயர்க் காரணங்களையும் பல தலங்களிலுள்ள கோயில்களின் பெயர்க் காரணங்களையும் விளக்கி, தம்பிரான் தோழர் வழிபட்ட திருத்தலங்களின் பட்டியலையும் இணைத்து, அத்தலங்கள் இருக்கும் இடங்களையும் ஆங்காங்கே குறிப்பிட்டு, அட்டவீரத்தலங்கள், சப்தவிடங்கத் தலங்கள், சப்ததானத் தலங்கள் என்று கருதப்படும் சிறப்புத் தலங்களையும் குறிப்பிட்டு, தம்பிரான் தோழரின் வரலாற்றை முடிக்கின்றார் பேராசிரியர்.

தம்பிரான் தோழரின் பாடல்கள் ''யான்'', ''எனது'' என்னும் அகப்பற்று, புறப்பற்றுக்களை அறவே நீக்கி, இறைவன் திருவருளிலேயே மாண்டமனமுடையோர்களுக்குப் பலகோலங்களில் இறைவன் காட்சி தந்து, அவர்கள் வேண்டியதை வேண்டியவாறே ஈந்து, அவர்கள் இடுக்கண் களையும் நீக்கி ஆட்கொள்வான் என்பதும், அப் பண்ணார்ந்த பாடல்கள் பெரிதும் மனவெழுச்சித் தந்து, நீர்க்குமிழி போன்ற நிலையற்ற உலக வாழ்வின் நிலைஎட்டி நன்னெறி காட்ட வல்லனவென்பதும் வெளிப்படை.

இச்சிறந்த சைவப் பெரியாரின் வாழ்வை விரிவாயெழுதி முடித்து, என்பாலுள்ள அன்பின் அடிப்படையில் ''அணிந்துரை'' தருமாறு கேட்ட பேராசிரியர் ந. சுப்பு ரெட்டியார் அவர்களுக்கு எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இவர் மேன்மேலும் பல தரமான நூல்களை எழுதித் தமிழுக்கும் சமயத்திற்கும் தொண்டாற்ற வேண்டும் எனக் கருணைக் கடலான இறைவனை வணங்கி வாழ்த்துகின்றேன்.

தே. கு. சோமசுந்தரம்

42, இலக்குமிபுரம் விரிவு
போரூர் (சென்னையருகில்)
பின் காட் 602104

நூல்முகம்

ஒருமணத்தைச் சிதைவுசெய்து வல்வழக்கிட்
டாட்கொண்ட உவணைக் கொண்டே
இருமணத்தைக் கொண்டருளிப் பணிகொண்ட
வல்லாளன் எல்லாம் உய்யப்
பெருமணச்சீர்த் திருத்தொண்டத் தொகைவிரித்த
பேரருளின் பெருமாள் என்றும்
திருமணக்கோ லப்பெருமாள் மறைப்பெருமாள்
எமதுகுலத் தெய்வ மாமால்.

—சிவஞானமுனிவர்

1960-ஆகஸ்டு முதல் (திருப்பதியில் பணியேற்ற நாள் முதல்) வைணவ சமயத்திலும் வைணவ இலக்கியங்களிலும் ஆழங்கால் பட்டுள்ளேன். இதன்காரணமாக 108 திவ்விய தேசங்களைச் சேசத்து அத்திவ்விய தேசத்து எம்பெருமான் களை வழிபட்டும் ஆழ்வார்கள் மங்களாசாசனம் செய்த பாசுரங்களில் ஆழங்கால்பட்டும் 6 திருத்தலப் பயண நூல் களை வெளியிட்டேன். நம்மாழ்வார் தத்துவத்தை ஆய்ந்து டாக்டர் (Ph.D) பட்டம்[2] பெற்றேன்; இது தவிர, சில நோக்கில் நாலாயிரம், கவியன் குரல் (அண்ணாமலைப் பல் கலைக் கழக வெளியீடு) வைணவ உரைவளம் என்ற நூல் களும் வெளிவந்துள்ளன.

இந்நிலையில் 1977 அக்டோபரில் ஓய்வு பெற்று, 1978 சனவரி 14:ஆம் நாள் சென்னையில் குடியேறியது முதல் சைவ சமயத்தையும் ஆயவேண்டும், சைவ இலக்கியங்களி

---

1. காஞ்சிப்புராணம்-காப்புப்பகுதி.
2. இந்நூல் ஆங்கிலத்திலானது; திருவேங்கடவன் பல்கலைக் கழகம் வெளியிட்டுள்ளது.

லும் ஈடுபட வேண்டும், சமய குரவர்களின் பாடல் பெற்ற திருத்தலங்களைச் சேவிக்க வேண்டும் என்ற எண்ணம் அடிக்கடி முகிழ்த்தும் அடங்கியும் மாறிமாறி இருந்து வந்தது. ஆயினும், சமய இலக்கியங்களையும் சாத்திரங்களையும் பயின்று சைவ சமய விளக்கு என்ற நூலை வெளியிட்டேன். இந்நிலையில் ஒருநாள் 'தம்பிரான் தோழரின் சுந்தரக் கவிகள்' என்ற தலைப்பில் அவரது திருநட்சத்திரத்தன்று (ஆடி, சுவாதி; 25.7-85) உரையாற்ற வேண்டும் என்று வானொலியிலிருந்து அழைப்பொன்று வந்தது. இதுவே தூண்டு கோலாக அமைந்து சைவ இலக்கிய ஈடுபாட்டில் கொண்டு செலுத்தியது. சைவ இலக்கிறங்களில் ஆழங்கால்பட்டு வருகின்றேன். திருத்தலப் பயணம் மேற்கொள்வதற்கு ஓய்வு ஊதியம் கூட பெறமுடியாத நிலையில் (40 ஆண்டு உழைப்பு) பொருளாதார வசதி இல்லை. அப்படி ஏற்பட்டாலும் பயணம் செய்வதற்கு உடல் நிலையும் சரிப்பட்டு வராது என்ற நிலையும் தோன்றியுள்ளது.

மூர்த்தி தலம் தீர்த்தம்
முறையால் தொடங்கினர்க்கோர்
வார்த்தை சொலச் சற்குருவும்
வாய்க்கும் பராபரமே![3]

என்ற தாயுமானவர் வாக்கும் நெஞ்சில் உந்திக் கொண்டே உள்ளது. பூசலார் நாயனார் மானசீகமாக எழுப்பிய திருக்கோயிலும் நினைவிற்கு வந்தது.

சேக்கிழார் பெருமான் பெரிய புராணத்தில் காட்டியுள்ள வழியைக் கடைப்பிடித்துக்கொண்டு அவருடன் மேற் கொண்ட கற்பனைப் பயணத்தின் விளைவாக இந்நூல் உரு

---

3. தாபா; பராபரக் கண்ணி-156

வாகியது. இதற்குப் பேராசிரியர் க. வெள்ளைவாரணனின் பன்னிருதிருமுறை வரலாறு (இரண்டுபகுதிகள்) பெருந்துணையாக இருந்தன. அப்பெருமானின் வாழ்க்கை வரலாற்றை[4] அறிந்துகொள்ளும் வாய்ப்பும் கிட்டியது. நூலின் அடிக்குறிப்புகளில் சுந்தரர் சேவித்த தலங்களைப்பற்றிய விவரங்களையும் நூலில் அவர் பாடியுள்ள பதிகங்களின் ஒவ்வொரு பாடலையும் தந்துள்ளேன். மேலும் அறிய வேண்டுவார் 'தேவார அடங்கன் முறை'யைப் படித்து அறிந்து கொள்ளலாம். இந்த நூலைக்கொண்டு சுந்தரர் வழிபட்ட திருத்தலங்களைச் சேவிக்கவும் அவர் பாடிய திருப்பதிகங்களை அநுபவித்து மகிழவும் இது துணையாக இருக்கும். படிப்போரின் மன நிலை, பக்தியில் வளர்ச்சி, இறைவனிடம் ஈடுபாடு இவற்றிற்கேற்பச் சிவாநுபவம் பெறத் துணைசெய்யும். இஃதெல்லாம் கைகூடுவதற்கு 'அவனருளாலே அவன்தாள் வணங்கும்' பேறும் பெற்றாக வேண்டும்.

'திருவருட் செல்வர்கள்'-என்ற வரிசையில் மூன்றாவதாக வர வேண்டிய நூல் இது. முதலில் எழுதப் பெற்றதால் முதலாவதாகவே வெளிவருகின்றது. இதனால் 'சிவத்தலங்கள்' பற்றிய கட்டுரையையும் இதில் சேர்த்தேன். இத்தனை தொடர்ந்து வெளிவர இருக்கும் நாவுக்கரசர், ஞானசம்

---

4. திருத்தொண்டர் புராணம் (ஆறுமுக நாவலரின் உரைநடை) தொடக்கத்தில் 'புராண வரலாறு' என்பதில் கண்ட குறிப்பு: ஆதிகாலத்தில் திருக்கைலாசபதியாகிய சிவபெருமான் தமது திருவுருவத்தைக் கண்ணாடியிலே பார்த்து அழைத்தருளலும், கோடி சூரியர்கள் ஒருங்கு திரண்டாற் போன்று திருமேனிப் பிரகாசத்தோடு தோன்றினார். அவர் பெயர் சுந்தரர். அவர் திருப்பாற் கடலினின்றும் தோன்றி விட்டுணு முதலிய தேவர்களெல்லாரையும் ஓடச் செய்த ஆலகால விஷத்தைச் சிவபெருமான் திருவமுது செய்தருளும் பொருட்டுத் தமது உள்ளங்கையினுள்ளே அடக்கிக் கொண்டு போய்க் கொடுத்தார். அதனால் அவருடைய பெயர் ஆலால சுந்தரர் என்றாயிற்று.

பந்தர் என்ற நூல்களையும் படித்த பிறகு இந்தக் கட்டுரையில் ஆழங்கால்பட்டு அநுபவிக்க வேண்டும்.

'செல்வர்க்கழகு செழுங்கிளை தாங்குதல்' என்பது ஆன்றோர் வாக்கு. இவ்வுலகில் செல்வச் சீமானாக இருப்பவன் ஏழுமலையான், செல்வ நாயகியைத் திருமார்பில் தாங்கிக் கொண்டிருப்பவன். அப்பெருமாட்டியும் 'அகலகில்லேன் இறையும்' என்று அவன் திருமார்பை விட்டு அகலாதிருப்பவள். இந்நிலையில் நாடோறும் அவனுடைய எண்ணற்ற பக்தர்கள் அவனது கருவூலத்தை நிரப்பிக் கொண்டிருக்கின்றனர். ஆகவே, இந்த உறுபெருஞ்வத்தைச் செழுங்கிளைச் சேர்ந்த பக்தர்கள் எழுதும் சமய வெளியீடுகளுக்கு வரையாது வழங்கும் நிதி உதவித் திட்டத்தில் இந்நூலும் நிதி உதவி பெற்று வெளி வருகின்றது. இந்த உதவி பெறாது போயின் 40 ஆண்டுகள் கல்வித் தொண்டாற்றி ஓய்வு ஊதியம் பெறாது தவிக்கும் அடியேனால் இந்த நூலை வெளியிட்டிருக்க முடியாது. இவன், மேலும் வெளிவர இருக்கும் நாவுக்கரசர், ஞானசம்பந்தர், தாயுமானஅடிகள், மாணிக்கவாசகர், வடலூர்வள்ளல் போன்ற பக்திப்பனுவல்கட்கும் உதவுவான் என்ற நம்பிக்கை என்பால் உண்டு. அவனது கருவியாக இயங்கிவரும் தேவஸ்தானத்தாருக்கும் குறிப்பாகத் திரு K. சுப்பாராவ், திரு N. S. இராமமூர்த்திக்கும் என் அன்பு கலந்த நன்றியைப் புலப்படுத்திக் கொள்கிறேன்.

இந்த நூலைச் செவ்விய முறையில் அழகுற அச்சிட்டு உதவிய நாவல் ஆர்ட் அச்சக உரிமையாளர் திரு. நாரா. நாச்சியப்பன் அவர்கட்கும், எழில் கொழிக்கும் முறையில் அட்டை ஓவியம் வரைதல், அச்சுக்கட்டை தயாரித்து மூவண்ணத்தில் அச்சிடும் வரையில் பொறுப்பேற்று உதவிய ஓவிய மன்னர் P. N. ஆனந்தன் அவர்கட்கும் லாமினேஷன் போட்டு உதவிய மாருதி லாமினேஷன் உரிமையாளர் பார்த்திபன் அவர்கட்கும், இவ்வளவும் ஆன நிலையில் அழகிய முறையில் கட்டமைத்துக் கற்போர் கையில் கவினுறத் தவழச்

செய்த கந்தன் அடிமை எஸ். பி. சண்முகம் பிள்ளை அவர் கட்கும் என் இதயம் கலந்த நன்றியை புலப்படுத்துகின்றேன்.

இந்த நூலுக்கு சிறப்புப்பாயிரம் நல்கிய பேராசிரியர் க. பெருமாள் (ஓய்வு பெற்ற அரசினர் கல்லூரிகளின் முதல்வர்) என் நெடுநாளைய நண்பர். பதவியிலிருந்தபோது செய்யாற்றில் பார்க்கும் பேறு கிடைத்தது. சிறந்த தமிழ் நேசராகக் காணப்பட்டார். அறிவியலைத் தமிழில் கற்பிக்கும் திட்டத்தில் உருப்படியான பணியில் ஈடுபட்டிருப்பதை நேரில் கண்டேன். நான் அறிவியலில் வேதியியல் துறையில் பட்டம் பெற்றவனாதலால், அந்த வகுப்பிற்கு (பி.எஸ் சி வகுப்பு) என்னை இட்டுச் சென்றார். அந்த வகுப்பில் ஆசிரியர் பாடத்தைத் தமிழில் நடத்திய பாங்கைக் கண்டு வியந்து போனேன்; அருந்தமிழில் அற்புதமாகக் கற்பித்தார். 1958-இல் இங்ஙனம் தாவர இயலைக் கற்பித்த அண்ணாமலைப் பல்கலைக் கழகப் பேராசிரியர் அரங்கசாமி அய்யங்கார் கற்பிததத்தை நேரில் கண்டபோது ஏற்பட்ட வியப்பைப் போலவே இப்போதும் ஏற்பட்டது. இப்படிப்பட்ட முதல்வர்களும் பேராசிரியர்களும் இத்திருப்பணியில் ஈடுபட்டால் தமிழ்ப் பாடமொழியாகும் திட்டம் அற்புதமாகச் செயற்படும் என்பதை நினைத்தேன்; இன்றும் நினைக்கின்றேன். இங்ஙனம் உண்மையாகப் பணியாற்றுவோர் எத்துணை பேர்? என்பது பெரிய கேள்வி. துறைதோறும் தமிழ் முழக்கம் கேட்கவேண்டும் என்ற துடிப்புள்ளவர் பேராசிரியர் க. பெருமாள்; சிறந்த தமிழ் நேசர். உடல் நன்கு செயற்படுவதற்கு அளவான நாடித்துடிப்பு வேண்டும். அத்தகைய துடிப்புதான் பேராசிரியரிடமும் அமைந்திருந்தது. வேளாண்மைக் குடும்பத்திலிருந்து வந்தவராதலால், பாலைவனம் போன்றிருந்த கல்லூரி வளாகத்தைச் சோலை வனமாக்கியுள்ளதைக் கண்டு வியந்தேன். மண்வெட்டியையும் கடப்

பாரையையும் தாங்கிய பேராசிரியரைக் கண்டபோது உழவாரப் படையைத் தாங்கிச் செல்லும் அப்பர் பெரு மானை நினைக்கச் செய்தது. முதல்வரே கையுழைப்பில் ஈடு படுவதைக் கண்டபோது இவரிடம் பயின்றவர்களும் இவர் தலைமையில் அடங்கிய மாணாக்கர்களும் ''தலைவனைப் பின்பற்று'' என்ற கட்சிப் போர்க்குரலுக்கு (Slogan) அடங்கிச் செயற்பட்டதை நேரில் கண்டு மகிழ்ந்தேன். இத்தகைய பேரன்பர் என் சம்பந்தி திரு குப்புசாமி ரெட்டியாருக்கும் நெருங்கிய நண்பர். இருவருமே டாக்டர் மு.வ. வுடன் நெருங்கிய தோழர்கள். சான்றோர்கள் நிறைந்த தொண்டை மண்டலத்தவர்கள். திரு குப்புசாமி ரெட்டியாருக்குப் படைக்கப்பெற்ற நூலுக்குப் பேராசிரியர் சிறப்புப்பாயிரம் நல்கிச் சிறப்பித்தமைக்குத் ''தலையலால் கைம்மாறு இலேன்''

தமிழ்நேசரை அடுத்து இந்நூலுக்கு 'அணிந்துரை' அருளியவர் சிவநேசர் திரு. தே.க. சோமசுந்தரம் அவர்கள். போர்த் துறை, வங்கித்துறை, இந்து அறநிலையத்துறை இவற்றிலெல்லாம் பணியாற்றி அமைதி காணாத நிலையில் பள்ளிக்கல்வித் துறையை நாடி வந்தவர்; பல்லாண்டுகள் இதில் தலைமை யாசிரியராகப் பணியாற்றி மாணாக்கர்கள், பெற்றோர்கள், பொது மக்கள் இவர்களிடம் நற்பெயரை ஈட்டிய நல்லாசான். ஓய்வு பெற்று அண்ணாநகரில் வாழ்ந்தபோது (இப்போது போரூரில் வாழ்பவர்) ஐந்தாண்டுகட்கு முன் இவர் நட்பு கிடைக்கும் பேறு பெற்றேன். இவர் என் சம்பந்தி திரு குப்பு சாமி ரெட்டியாரின் தோழரும் கூட. சிறந்த தமிழன்பர். இப்படிச் சொல்வதைவிட உயர்ந்த சிவநேசர் என்று சொல் வதே சிறப்பு. பாடல் பெற்ற 275 சிவத்தலங்களில் கிட்டத் தட்ட 209 தலங்களை நேரில் வழிபட்டுச் சிவபெருமானின் பேரருளுக்கு இலக்கானவர். தவிர, வைணவ தலங்கள், 108 இல் 58ஐச் சேவித்துத் திருமால் அருளுக்கும் பாத்திரரானவர்.

இத்தகைய பேரன்பர் இந்நூலுக்கு அணிந்துரை நல்கியது கிடைத்தற்கரிய பெரும் பேறாகக் கருதுகின்றேன். இந்தப் பேற்றை இந்த நூலும் பெறுகின்றது. அணிந்துரை அருளிய அன்பருக்கு என் இதயம் கலந்த நன்றி என்றும் உரியது.

புலவர் கா. சே. குப்புசாமி செட்டியார் வடார்க்காடு மாவட்டம் காட்டுக்கா நல்லூரைச் சேர்ந்தவர். 1942-இல் சென்னைப் பல்கலைக் கழகத்தில் வித்துவான் பட்டம்பெற்று வேலூர் திருவேங்கடவன் உயர்நிலைப் பள்ளியில் பல்லாண்டுகள் தமிழாசிரியராகப் பணியாற்றியவர். ஓய்வு பெறுவதற்கு முன்பே பணியிலிருந்து விலகிக் கொண்டு விட்டார். பணியிலிருந்த பொழுதே உழவர் சம உரிமைக்கழகத்தின் அமைப்பாளராக இருந்தார். இது தவிர தமிழ்நாடு சிறுதொழில் சங்கத்தில் (TANSSIA) இணை அமைப்பாளராகவும் பணியாற்றினார். 'உழவும் தொழிலும்' என்ற திங்கள் இதழின் ஆசிரியராகப் புகழுடன் பணியாற்றினார். பல்லாண்டுகள் வடார்க்காடு விவசாயச் சங்க தலைவராகவும் பணியாற்றி 'உழவர்களின் தோழராகத்' திகழ்ந்தவர். ஒழுக்கத்திற்கும் நேர்மைக்கும் எடுத்துக்காட்டாகத் திகழ்ந்தவர். திடீரென மாரடைப்பால் காலமாகி உற்றார், உறவினர் நண்பர்கள், எண்ணற்ற உழவர் பெருமக்கள் ஆகியோரைத் துக்கத்தில் ஆழ்த்தியவர்; 1976முதல் என் முதல் சம்பந்தியாக இருந்தவர்; முத்தர் உலகில் வாழ்ந்து அனைவர்க்கும் ஆறுதல் கூறிக் கொண்டிருப்பவர். இவர் நினைவாக, இப் பெருமகனார்க்குத் 'தம்பிரான் தோழர்' என்ற நூலை அன்புப் படையலாக்கி மகிழ்கின்றேன்.

இந்த நூலை யான் எழுதி வெளியிட என்னுளே தோன்றாத் துணையாக, அந்தர்யாமியாக, எழுந்தருளியிருக்கும் வேங்கடத்து எழில்கொள் சோதியை' மனம், மொழி மெய்களால் வணங்கி வாழ்த்திச் சரண் அடைகின்றேன். மற்றும் நாவலூர் அண்ணல் இணையடிகளையும் முடிமீது வைத்துக் கொள்கிறேன்.

அரவக ரல்கு லார்பால்
ஆசைநீத் தவர்க்கே வீடு
தருவமென் றளவில் வேதஞ்
சாற்றிய தலைவன் தன்னைப்
பரவைதன் புலவி தீர்ப்பான்
கழுதுகண் படுக்கும் பாணாள்
இரவினில் தூது கொண்டோன்
இணையடி முடிமேல் வைப்பாம்.[5]

'வேங்கடம்'
அண்ணாநகர்
சென்னை-600 040
31-12-1982

ந. சுப்புரெட்டியார்

---

5. திருவிளையாடற் புராணம்-பாயிரம், 20.

உள்ளுறை

	அன்புப் படையல்	v
	சிறப்புப் பாயிரம்	vii
	அணிந்துரை	xxvii
	நூல் முகம்	xxxii
		பக்கம்
1.	திருக்கயிலாயத்தில் ஒரு நாள்	1
2.	நம்பியாரூரரின் பிறப்பும் வளர்ப்பும்	4
3.	தடுத்தாட்கொள்ளப் பெற்ற வரலாறு	8
4.	நடுநாட்டுத் திருத்தல வழிபாடு	18
5.	பரவையாரின் திருமணமும் இல்வாழ்க்கையும்	30
6.	சோழநாட்டுத் திருத்தலப் பயணம்—(1)	43
7.	தொண்டைநாட்டுத் திருத்தலப் பயணம்	72
8.	சங்கிலியார் திருமணம்	91
9.	பரவையாரின் ஊடல் தீர்த்தல்	103
10.	ஏயர்கோன் கலிக்காம நாயனாருடன் நட்பு	119
11.	பாண்டியநாட்டுத் திருத்தல வழிபாடு	126
12	சோழநாட்டுத் திருத்தலப் பயணம்—(2)	138
13.	கொங்குநாட்டுத் திருத்தலப் பயணம்	168
14.	மலைநாட்டுத் திருத்தலப் பயணம்	179
15.	நால்வருள் இவர்தம் தனிச்சிறப்பு	193
16.	அருளிச் செயல்களால் அறிபவை	198
17.	தேவாரத் திருத்தலங்கள்	218
	பின்னிணைப்புகள்	
	I பயன்பட்ட நூல்கள்	233
	II தம்பிரான் தோழர் வழிபட்ட திருத்தலங்கள்	234
	III சிறப்புத்தலங்கள்	239
	பேராசிரியர் ரெட்டியாரின் நூல்கள்	241
	பிழை-திருத்தம்	245

1. திருக்கயிலாயத்தில்—ஒரு நாள்

சைவ சமய குரவர்கள் நால்வர். அவர்கள் திருஞான சம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தர மூர்த்தி, மாணிக்க வாசகர் என்பவர்களாவர். இவர்கள் நால்வரும் சுந்தர மூர்த்தியின் முற்பிறப்புபற்றியே நூல்களால் அறிய முடி கின்றது. அதனால் இவர்தம் வரலாறு ஏனையவர்களின் வரலாற்றைவிடச் சற்று விநோதமாகத் தோன்றும். இறைவனைத் தோழனாகக் கொண்டு இவர் ஆற்றுவித்த செயல் யாவும் அற்புதமானவை. தாயுமான அடிகளும்,

பித்தர்இறை என்றறிந்து
பேதைபால் தூதனுப்பு
வித்ததமிழ்ச் சமர்த்தர்.[1]

என்று போற்றுவர்.

திருக்கயிலாய மலையில் சிவபெருமானுக்கு அடிமைத் தொழில் புரியும் அடியார்களுள் ஒருவர் ஆலால சுந்தர் என்பவர். நாடோறும் இறைவனுக்கு அன்றலர்ந்த மலர் களைக் கொய்து மாலை தொடுத்தலும், திருநீற்றினை ஏந்தி நிற்றலுமாகிய அணுக்கத் தொண்டினை மேற்கொண்டு பணியாற்றுபவர். ஒருநாள் வழக்கம்போல் இறைவனுக்கு மலர் கொய்வதற்கு அவர் திருநந்தவனத்தைச் சார்கின்றார். அண்ணலுக்கு ஊழியம் செய்யும் இவரைப் போலவே, அன்னை உமையம்மைக்குத் தொண்டு புரியும் சேடியர்கள்,

1. தா. பா. எந்நாட்கண்ணி. 3.

அனிந்திதை, கமலினி என்பவர்கள். இவர்கள் இருவரும் மலர் கொய்வதற்கு அதே நந்தவனத்திற்கு வந்து சேர்கின்றனர். இறைவன் திருவருளால் ஆலாலசுந்தரர் அவ்விருவரையும் காண்கின்றார்; காதல் கொள்ளுகின்றார். அம்மங்கையர் இருவரும் அங்ஙனனே ஆலாலசுந்தரரது பேரழகில் தம் மனத்தைப் பறிகொடுத்துத் தம் உள்ளத்தை அவருக்கு ஈகின்றனர்;

கண்ணொடு கண்ணினை
நோக்கொக்கின் வாய்ச்சொற்கள்
என்ன பயனும் இல.[2]

என்பது பொய்யாமறையாதலின் அவர்தம் அரும்புபோன்ற தெய்வக் காதல் இறையருளால் மலர்ந்து காய்த்துப் பழமாகின்றது.

நந்தவனத்தில் மலர்பறிக்கும் பணியை முடித்துக் கொண்டு சிவபெருமான் சந்நியை அடைகின்றார் ஆலாலசுந்தரர். அங்ஙனமே, அம்மங்கையர் இருவரும் தம்பணியை முடித்துக் கொண்டு உமையம்மையின் திருமுன் செல்கின்றனர். எல்லா உயிர்கட்கும் உயிர்க்குயிராய் உள் நின்று அருள் சுரப்பவர் இறைவனாதலால், ஆலாலசுந்தரரது உள்ளக் குறிப்பினைத் தம் முற்றறிவினால் அவர் முன்னரே உணர்ந்திருந்தார், ஆகவே தம்மிடம் வந்தவரை நோக்கி, "சுந்தரா, நீ மாதர்பால் மனம் செலுத்தினை. ஆதலால் கர்ம பூமியாகிய பூவுலகில் தென்னாட்டுப் பகுதியில் பிறந்து இமல்லியலாராகிய அந்நங்கையர்பால் காதல் இன்பம்துய்த்து மீண்டு இங்கு வருவாயாக" என்று பணித்தருளுகின்றார்.

கண்ணுதலப்பனின் கனிந்த உள்ளக்குறிப்பினைக் கேட்ட ஆலாலசுந்தரர் உளங்கலங்குகின்றார். தம்கைகளைத் தலைமேல் கூப்பிய கையராய் இறைவனை இறைஞ்சி நின்று, "என் ஆருயிர்த் தலைவனாகிய பெருமானே, நின்னுடைய செந்தாமரைமலர் போன்ற திருவடிகளைப் பிரிந்து வருந்து

2. குறள்-1130 (குறிப்பறிதல்)

வதற்குத் காரணமாகிய காமத்தால் சிறுமையுற்றேன். எளியேன் மனிதப் பிறவி எடுத்து மதிமயங்குங் காலத்தில்' அடியேனைத் தடுத்தாட் கொண்டருளுதல் வேண்டும்'' என இரந்து நிற்கின்றார். வேண்டுவார் வேண்டுவதையே ஈந்தருளும் அம்மையப்பரும் அவர்தம் வேண்டுகோளுக்கு இசைந்தருளுகின்றார்.

இந்தப் பூவுலகில் பிறந்தாலும்,

'வழுக்கி வீழினுந் திருப்பெயர் அல்லால்
மற்று நான்அறி யேன்மறு மாற்றம்' (7 54 : 1)

'பெட்ட னாகிலும் திருவடிப் பிழையேன்
பிழைப்ப னாகிலும் திருவடிக் கடிமை' (7 54 : 2)

என்று சிவச் சிந்தனையிலும் சிவத்தொண்டிலும் காலங்கழிப் பதையும், சிவபெருமானையே தோழனாகக் கொண்டு உய்வதையும் இவர்தம் வரலாற்றால் அறியப்போகின்றோம்.

சைவசமயம் சங்கரன் தாள் அடையும் நெறிகளை சன்மார்க்கம், சகமார்க்கம், சற்புத்திர மார்க்கம், தாதமார்க்கம் என்று நான்காக வகுத்துப் பேசும்[3]. இவை முறையே நன்னெறி, தோழமை நெறி, மகன்மை நெறி, தொண்டு நெறி என்றும் வழங்கப்பெறும். இவற்றிற்கு முறையே மணிவாசகர், சுந்தரர், சம்பந்தர், நாவுக்கரசர் ஆகியோர் களை எடுத்துக்காட்டுகளாகக் கொள்வர் சைவநெறியொழு கும் பெரியார்கள். சுந்தரர் வாழ்க்கையில் தோழமை நெறி மேற்கொள்ளப்பெற்றிருத்தல் வரும் இயல்களெங்கும் பரக்கக் காணலாம்.

நம்பியாரூரரின் வரலாற்றை அறிந்து கொள்வதற்குப் பெரிய புராணத்திலுள்ள தடுத்தாட்கொண்ட புராணம் (5), ஏயர் கோன் கலிக்காம நாயனார் புராணம் (29), கழறிற்றறி வார் நாயனார் புராணம் (சேரமான் பெருமாள் நாயனார் புராணம்-37) வெள்ளானைச் சருக்கம் (13) (சுந்தர மூர்த்தி நாயனார்) என்ற பகுதிகள் துணை செய்கின்றன; அவர்பாடிய ஏழாம் திருமுறையால் சில அகச்சான்றுகள் அறியமுடிகின்றன.

3. சித்தியார் 8-18.

2. நம்பியாரூரரின் - பிறப்பும் வளர்ப்பும்

செந்தமிழ் நாட்டில் புண்ணியத்தின் விளைநிலமாகத் திகழ்வது திருமுனைப்பாடி நாடு.[1] திருக்கோவலூர் வழியாகச் சென்று திருப்பாதிரிப் புலியூருக்கு வடக்கில் கடலொடு கலக்கும் தென் பெண்ணையாறு, திருக்கோவலூருக்குக் கிழக்கிலிருந்து கடலொடு கலக்குங்காறும் பரந்தவெளியில் பாய்கின்றது. அதன் நீரைப் பெற்று வளங்கொழிக்கும் நலம் சிறந்த நாடுதான் பண்டைநாளில் 'திருமுனைப்பாடி நாடு' என்று வழங்கிற்று. இது தொண்டை நாட்டிற்கும் சோழ நாட்டிற்கும் இடையிலுள்ளமைபற்றி 'நடுநாடு' எனவும் சொல்லப்பெறும். இந்த நாட்டின் தலைநகர் திருநாவலூர்[2] என்பது. இந்நகரில் அம்மையப்பருக்கு வழிவழி அடிமைசெய்து வருபவர் ஆதிசைவ மறையவர் மரபில் தோன்றிப் புகழால் மேம்பட்டவர் சடையனார் என்பார். இவருடைய அருமைத் துணைவியார் இசைஞானியார் ஆவார். இவர்கள் இருவரும் செய்த தவப்பயனால் ஒரு நன்னாளில் ஓர் ஆண் மகவு பிறக்கின்றது. பெற்றோர்கள் சிவனருளால் தோன்றிய தம் குழந்தைக்கு நம்பியாரூர் என்று திருநாமம் இட்டு வழங்குகின்றனர். நம்பியாரூரர் என்பது, திருவாரூரில் திருக்கோயில் கொண்டுள்ள சிவபெருமானின் திருப்பெயராகும்.

சுந்தரர் தேவாரத்தில் திருநாவலூரன் (7.6:10) மறையார்தங் குரிசில் (7 25:10) சடையன்றன் காதலன் (7. 58;10)

1. தென்னார்க்காடு மாவட்டப் பகுதியாகும்.
2. நாவலூர் 4-வது கட்டுரை அடிக்குறிப்பு 1 காண்க.

இசைஞானி சிறுவன் (7.16;11) எனத் தம்மைக் குறிப்பிடுவதிலிருந்து இவர் திருநாவலூரில் வாழ்ந்த ஆதிசைவ வேதியர்க்கு அவர்தம் அருமை வாழ்க்கைத் துணைவியார் இசைஞானியார் திருவயிற்றில் மகவாகத் தோன்றியவர் என்பது நன்கு தெளிவாகும். தம்முடைய திருப்பதிகங்கள் பல இடங்களிலும் தம்மை ஆரூரன்[3] என்று குறிப்பிடுதலை நோக்குங்கால், இவருக்குப் பெற்றோர் இட்ட பிள்ளைத் திருநாமம் ஆரூரன் என்பது இனிது புலனாவதைக் காணலாம். இத் திருப்பெயரே இவர்தம் இயற்பெயராக வழங்கப் பெற்றது என்பதனை 'ஆரூரன், பேர் முடிவைத்த மன்னு புலவன்' (7.41:10) 'சீருரும திருவாரூர்ச் சிவன்பேர் சென்னியில் வைத்த ஆரூரன்' (7.67:10;7.89:11) எனவரும் சொற்றொடர்களால் நம்பியாரூரரே தெளிவாகக் குறிப்பிட்டுள்ளதைக் காணலாம். நம்பி என்பது, ஆண்மக்களுள் அழகு, அறிவு, இளமை, செல்வம், பக்தி முதலியவற்றால் யாவரும் விரும்பிப் போற்றத்தக்க சிறப்புடையாரை வழங்கும் பெயராகும்.[4] இம்மரபினையொட்டி தவப்பெரும் செல்வராகிய ஆரூரர்க்கு 'நம்பி' என்ற சிறப்புப் பெயரும் உரியதாகி நம்பியாரூரர் என்றே வழங்கப்பெறுகின்றார்

நம்பியாரூரர் நடை கற்கத் தொடங்கித் தெருவிலே சிறு தேர் உருட்டி விளையாடும் பருவத்தில் எதிர்பாராத நிகழ்ச்சியொன்று நடைபெறுகின்றது; திருமுனைப்பாடி நாட்டையாண்ட அரசர் நரசிங்கமுனையர் என்பார். இவர் தெருவில் நடை கற்கும் குழந்தையின் அறிவொளி திகழும் திருமகப்

3. தேவாரம் 7.1:10; 7.2:11; 7.3:10 முதலிய திருக்காப்புப் பாடல்களைக் காண்க.
4. வைணவப் பெரியார்களிடையே 'நம்பி' என்ற பெயர் பெருவழக்காகத் திகழ்வதைக் காணலாம். திருமலை நம்பி, பெரிய நம்பி, இளைய நம்பி, திருக்கோட்டியூர் நம்பி, திருக்கச்சி நம்பி—என்ற பெயர்களைக் காண்க.

2. நம்பியாரூரரின் - பிறப்பும் வளர்ப்பும்

செந்தமிழ் நாட்டில் புண்ணியத்தின் விளைநிலமாகத் திகழ்வது திருமுனைப்பாடி நாடு.[1] திருக்கோவலூர் வழியாகச் சென்று திருப்பாதிரிப் புலியூருக்கு வடக்கில் கடலொடு கலக்கும் தென் பெண்ணையாறு. திருக்கோவலூருக்குக் கிழக்கிலிருந்து கடலொடு கலக்குங்காறும் பரந்தவெளியில் பாய்கின்றது. அதன் நீரைப் பெற்று வளங்கொழிக்கும் நலம் சிறந்த நாடுதான் பண்டைநாளில் 'திருமுனைப்பாடி நாடு' என்று வழங்கிற்று. இது தொண்டை நாட்டிற்கும் சோழ நாட்டிற்கும் இடையிலுள்ளமைபற்றி 'நடுநாடு' எனவும் சொல்லப்பெறும். இந்த நாட்டின் தலைநகர் திருநாவலூர்[2] என்பது. இந்நகரில் அம்மையப்பருக்கு வழிவழி அடிமைசெய்து வருபவர் ஆதிசைவ மறையவர் மரபில் தோன்றிப் புகழால் மேம்பட்டவர் சடையனார் என்பார். இவருடைய அருமைத் துணைவியார் இசைஞானியார் ஆவார். இவர்கள் இருவரும் செய்த தவப்பயனால் ஒரு நன்னாளில் ஓர் ஆண் மகவு பிறக்கின்றது. பெற்றோர்கள் சிவனருளால் தோன்றிய தம் குழந்தைக்கு நம்பியாரூர் என்று திருநாமம் இட்டு வழங்குகின்றனர். நம்பியாரூரர் என்பது, திருவாரூரில் திருக்கோயில் கொண்டுள்ள சிவபெருமானின் திருப்பெயராகும்.

சுந்தரர் தேவாரத்தில் திருநாவலூரன் (7.6:10) மறையார்தங் குரிசில் (7.25:10) சடையன்றன் காதலன் (7. 58;10)

1. தென்னார்க்காடு மாவட்டப் பகுதியாகும்.
2. நாவலூர் 4-வது கட்டுரை அடிக்குறிப்பு 1 காண்க.

இசைஞானி சிறுவன் (7.16;11) எனத் தம்மைக் குறிப்பிடுவதிலிருந்து இவர் திருநாவலூரில் வாழ்ந்த ஆதிசைவ வேதியர்க்கு அவர்தம் அருமை வாழ்க்கைத் துணைவியார் இசைஞானியார் திருவயிற்றில் மகவாகத் தோன்றியவர் என்பது நன்கு தெளிவாகும். தம்முடைய திருப்பதிகங்கள் பல இடங்களிலும் தம்மை ஆரூரன்[3] என்று குறிப்பிடுதலை நோக்குங்கால், இவருக்குப் பெற்றோர் இட்ட பிள்ளைத் திருநாமம் ஆரூரன் என்பது இனிது புலனாவதைக் காணலாம். இத் திருப்பெயரே இவர்தம் இயற்பெயராக வழங்கப் பெற்றது என்பதனை 'ஆரூரன், பேர் முடிலைத்த மன்னு புலவன்' (7.41:10) 'சிருரும திருவாரூர்ச் சிவன்போர் சென்னியில் வைத்த ஆரூரன்' (7.37:10;7.89:11) எனவரும் சொற்றொடர்களால் நம்பியாரூரரே தெளிவாகக் குறிப்பிட்டுள்ளதைக் காணலாம். நம்பி என்பது, ஆண்மக்களுள் அழகு, அறிவு, இளமை, செல்வம், பக்தி முதலியவற்றால் யாவரும் விரும்பிப் போற்றத்தக்க சிறப்புடையாரை வழங்கும் பெயராகும்.[4] இம்மரபினையொட்டி தவப்பெரும் செல்வராகிய ஆரூரர்க்கு 'நம்பி' என்ற சிறப்புப் பெயரும் உரியதாகி நம்பியாரூரர் என்றே வழங்கப்பெறுகின்றார்

நம்பியாரூரர் நடை கற்கத் தொடங்கித் தெருவிலே சிறு தேர் உருட்டி விளையாடும் பருவத்தில் எதிர்பாராத நிகழ்ச்சியொன்று நடைபெறுகின்றது; திருமுனைப்பாடி நாட்டையாண்ட அரசர் நரசிங்கமுனையர் என்பார். இவர் தெருவில் நடை கற்கும் குழந்தையின் அறிவொளி திகழும் திருமகப்

3. தேவாரம் 7.1:10; 7.2:11; 7.3:10 முதலிய திருக்காப்புப் பாடல்களைக் காண்க.
4. வைணவப் பெரியார்களிடையே 'நம்பி' என்ற பெயர் பெருவழக்காகத் திகழ்வதைக் காணலாம். திருமலை நம்பி, பெரிய நம்பி, இளைய நம்பி, திருக்கோட்டியூர் நம்பி, திருக்கச்சி நம்பி—என்ற பெயர்களைக் காண்க.

பொலிவினைக் கண்டு அதனால் ஈர்க்கப்பெறுகின்றார். இதனால் இவர் இக்குழந்தையின் பெற்றோராகிய சடைய னாரைச் சந்தித்து நெருங்கிய நட்பின் மிகுதியால் அக் குழந்தையை வேண்டிப் பெற்றுத் தம் அரசபதவிக்குரிய "இளவரசன்" என்ற முறையில் அன்பினால் வளர்த்து வரு கின்றார். இச்செய்தி,

நாதனுக்கூர் நமக்கூர்
நரசிங்க முனையரையன்
ஆதரித் தீசனுக்காட்
செயுட் ஊர் அணிநாவலூரென்(று)
ஓத நன்றக்க
வன்றொண்டன் ஆரூரன் (7.17:1)

என்ற திருக்கடைக்காப்புச் செய்யுட்பகுதியால் தெளிவாகும்.

இந்த நரசிங்க முனையரையரைப்பற்றியும் நாம் சிறிது அறிந்து கொள்ள வேண்டும். முனையர் என்பது முனைப் பாடி நாட்டிற்கு அரசர் என்பது பொருளாகும். நாவலூருக்கு இரண்டு கல் தொலைவிலுள்ள சேந்தமங்கலம் என்ற ஊரில் பழைய அரசர்கள் ஆண்டமைக்கு அடையாளங்கள் உள்ளன. இடிந்து போன கோட்டை மிகவும் முக்கியமானது. இங்கிருந்துதான் நரசிங்க முனையரையர் (கோப்பெருஞ் சிங்கன் என்பது வரலாற்றில் காணப்பெறும் பெயர்) ஆட்சி செய்து வந்தார் என்று தெரிகின்றது. பாழடைந்த கோட்டை ஒருகாலத்தில் இராஜதானியாக இருந்திருக்க வேண்டும். காரணம், பாழடைந்த கோட்டையைச் சுற்றிலும் கொத்தளம், அகழி காணப்பெறுகின்றன. கோட்டை வாயிலைத் தாண்டி சற்றுச் உள்ளே சென்றால், சிதைவுற்ற கருவறையும் அதனுள் ஓர் இலிங்க மூர்த்தியும் இருப்பதைக் காணலாம். இந்த நிலையிலும் இலிங்கத்திற்கு விளக்கேற்றிக் கர்ப்பூர தீபம் காண்பிப்பதற்கு வசதி செய்யப் பெற்றுள்ளது. கோப்பெருஞ்சிங்கன் ஆண்ட இடம்தான் சேந்தமங்கலம்.

இவன் சிறந்த சிவபக்தன், சிதம்பரம், திருவண்ணாமலை, விருத்தாசலம் என்ற தலத்திலுள்ள கோயில்கட்குப் பல திருப் பணிகள் செய்தவன். இவன் இசை, நாட்டியம் முதலிய நுண்கலைகளிலும் வல்லவன் என்றும் சொல்லப்பெறு கின்றது.

நம்பியாரூரர் பெருஞ் சிறப்புடன் அரசரது பேரன்புக்கு உரிய பெருஞ் செல்லப்பிள்ளையாய் வளர்ந்து வந்த போதி லும், தாம் பிறந்த அந்தணர் மரபுக்கேற்ப முப்புரி நூலணிந்து நான்மறைகளையும் ஆறங்கங்களும் (7 2:11) முதலாகவுள்ள சாத்திர நூல்கள், கலை நூல்கள் முதலியவற்றையெல்லாம் கற்றுத் துறை போய வித்தகராகின்றார். இதனை, பொய்யாத தமிழ்மூரன்' (7.13:11), 'அருங்குலத் தருந்தமிழ்மூரன்' (7.72:11), 'நான்மறை அங்கம் ஓதிய நாவன்' (7.54:1), 'மன்னுபுலவன் வயல் நாவலர்கோன் செஞ்சொல் நாவன்' (7.41:10) என்று நம்பியாரூரர் தம்மைப்பற்றிக் கூறும் திருக் கடைக்காப்புப் பாடல்களின் தொடர்களால் அறியலாம். இளம்பருவத்திலேயே தாய்மொழியாகிய தமிழிலுள்ள தொன்னூல்களையும் முறையாகப் பயின்று புலமை மிக்க வராய்த் திகழ்கின்றார் நம்பியாரூரர்.

இளம்பருவத்தில் கலைமகள் திருமகள் இருவர். பேரருளையும் பெற்றுத் திகழ்ந்த நம்பியாரூரர் நரசிங்க முனையரது ஆட்சியில் இளவரசராயிருந்து பழகி நாட்டு மக்களுக்கு நலம் பல புரியும் நல்லரசராய் விளங்குகின்றார்.

நாடெ லாம்புகழ்
நாவலூராளி நம்பிவன்றொண்டன் (7.64:11)

என்ற குறிப்பினால் இச்செய்திநன்கு அறியப்படும். இன்னும்,

வேந்தராய் உலகாண்டு அறம்புரிந்து
வீற்றிருந்த இவ்வுடல் (7 64:6)

என்று தமது உடம்பைச் சுட்டும் மொழியினாலும் இது மேலும் தெளியப்படும்.

3. தடுத்தாட் கொள்ளப் பெற்ற வரலாறு

திருமுனைப் பாடி நாட்டு இளவரசராயத் திகழ்ந்த நம்பியாரூரருக்கு மணப்பருவம் எய்துகின்றது. பெற்றோர்கள் தம் மைந்தனுக்குத் திருமணம் புரிய வேண்டும் என்று சிந்திக்கின்றனர். தங்கள் குடும்பத்தோடு ஒத்த குடும்பத்தினராய்ப் புத்தூரில்[1] வாழும் சடங்கவி சிவாசாரியாரின் திருமகளை மணமகளாக உறுதி செய்கின்றனர்; அவரும் தம் மகளைத் தருவதற்கு ஒப்புக் கொள்ளுகின்றார். திருமணத்தைப் புத்தூரில் நிகழ்த்துவதற்கு ஏற்பாடுகள் நடைபெறுகின்றன.

திருமண நாளின் முதல் நாளன்று நம்பியாரூரருக்குக் காப்பணிதல் முதலிய மங்கலச் சடங்குகள் மறை முறைப்படி நடத்தப்பெறுகின்றன. மறுநாள் வைகறைப் பொழுதில் துயிலுணர்ந்தெழுந்த நம்பியாரூரர் தமக்குரிய நாட்கடன் கனை முடித்த பிறகு நீராடுகின்றார். தாம் பிறந்த இடத்து வைதிகத் திருவும் புகுந்த இடத்து மன்னவர் திருவும் பொலியத் திருமணக்கோலங் கொள்ளுகின்றார். கண்ணுதலப்பனின் கழலடிகளை தம் நெஞ்சத்து நிறுத்தித் திருவெண்ணீறு அணிந்து மங்கல வாத்திய ஒலிகள் முழங்கக் குதிரைமீது அமர்ந்து தண்பர்களும் உறவினர்களும் புடை

---

1. இந்த ஊர் முன்பு 'மணம் வந்த புத்தூர்' என்று வழங்கி வந்தது. இது திரிந்து 'மணம் தவிர்ந்த புத்தூர்' என்று மாறியது. இப்போது அப்பகுதி மக்கள் 'மணமந்த புத்தூர்' என்று வழங்குகின்றனர்.

சூழப் புத்தூரை அடைகின்றார். மணமகனை எதிர் கொள்ள வந்த காட்சியைச் சேக்கிழார் பெருமான்,

நிறைகுடம் தூபம் தீபம்
நெருங்குபா விசைகள் ஏந்தி
நறைமலர் அருகு சுண்ணம்
நறுப்பொரி பலவும் வீசி
உறைமலி கலைவைச் சாந்தின்
உறுபுனல் தெளித்து வீதி
மறையவர் மடவார் வள்ளல்
மணம்எதிர் கொள்ள வந்தார்

கண்கள்எண் ணிலாத வேண்டும்
காளையைக் காண என்பார்;
பெண்களில் உயர நோற்றாள்
சடங்கவி பேதை என்பார்;
மண்கவி கூட வந்த
மணம்கண்டு வாழ்ந்தோம் என்பார்;
பண்களில் நிறைந்த கீதம்
பாடுவார் ஆடு வார்கள்.[2]

என்று காட்டுவார். நம்பியாரூரரும் குதிரையை விட்டு இறங்கிப் போந்து திருமணப் பந்தரில் உள்ள மணத்தவிசில் அமர்ந்திருக்கின்றார்.[3]

தடுத்தாளல் : இந்த நிலையில் ஆலால சுந்தரரைத் தடுத்து ஆட்கொள்வதற்காகத் திருக்கயிலாயத்தில் முன்பு

---

2. பெ. பு: தடுத்தாட் 24, 25
3. கீழவேதியர் வந்து தடுத்த இடத்தைத் 'தடுத்தாட் கொண்ட ஊர்' என்று சொல்வர். இப்போது கிராமத் தவர்கள் 'தடுத்தாஊர்' என்கின்றனர். திருநாவலூரி லிருந்து திருவெண்ணெய்நல்லூருக்குச் செல்லும் வழியிலுள்ள ஒரு சிற்றூர் இது. இலிங்கம் வைத்த ஒரு குட்டிச்சுவர் மாத்திரம் இங்கு உள்ளது.

உறுதி கூறிய சிவபெருமான் முதுமை மிக்க வேதியராகத் திருமேனி கொள்ளுகின்றார். தளர்ந்த நடையினராய்த் தண்டுன்றித் திருமணப் பந்தருள் நுழைகின்றார். திருமண விழாவில் குழுமியிருந்த பெருமக்களைத் தம் கவனத்திற்கு ஈர்க்கின்றார். பின்னர் மணமகனாகிய நாவலூரரை நோக்கி, "தம்பி, எனக்கும் உனக்கும் உள்ள பெரு வழக்கைத் தீர்த்துக் கொண்ட பின்னரே நீ திருமணம் புரிந்து கொள்ளல் வேண்டும்" என்று கூறுகின்றார். நம்பியாரூரரும், 'முதியவரே, எனக்கும் உமக்கும் உண்மையாக வழக்கு, இருக்குமாயின், அதனைத் தீர்க்காமல் திருமணம் புரிந்து 'கொள்ளேன். வழக்கினைச் சொல்லியருள்க' என்று மறு மொழி பகர்கின்றார்.

தண்டுன்றி வந்த முதியவர் அங்குக் குழுமியுள்ளவர் களை நோக்கி, "மறைப் பெருமக்களே, இவ்வழக்கினைக் கேளுங்கள். நாவலூரானாகிய இவன், எனக்கு வழிவழி அடியவனாவன்" என்று கூறுகின்றார். இதனைச் செவி மடுத்த அங்கிருந்தோர் அதிர்ச்சியடைகின்றனர் சிலர் அம் முதியோரை இகழ்ந்து, நோக்குகின்றனர்; சிலர் வெகுண்டு நோக்குகின்றனர்; மற்றும் சிலர் வியப்பெய்துகின்றனர். மண மகனாகிய நாவலூரர், "பெரியோய், நும் மொழி நன்று நன்று" என்று கூறி நகைக்கின்றார். அது கேட்ட முதியவர் மணமகன் அருகில் சென்று, "சிறுவா, அக்காலத்தில் நின் பாட்டன் வரைந்து தந்த அடிமை யோலை என் கை யிலுள்ளது. இச்செயலை இகழ்ந்து சிரிப்பது ஏன்?" என்று வெகுண்டுரைக்கின்றார்.

சினம் கொண்ட நம்பியாரூரர், "ஐயனே, ஓர் அந்தணர் வேறோர் அந்தணர்க்கு அடிமையர்தல் என்பது எங்கும் கேட்கப்பெறாத விநோதச் செயலாக உள்ளது. நீர் சொல்லியே இன்று நான் கேட்கின்றேன். நீ பித்தனோ?" என்கின்றார் மணமகன்.

"பித்தனும் ஆகப் பின்னும்
பேயனும் ஆக நீயின் (று
எத்தனை தீங்கு சொன்னாய்
யாதுமற் றவற்றால் நாணேன்."[4]

வீண் பேச்சு எதற்கு? பணிசெய்வதே நின்கடன்" என்று கூறுகின்றார், முதியவேதியர். மேலும், 'நின் பேச்சால் நீ என்னை அறிந்து கொள்ளவில்லை என்பது புலனாகின்றது. நன்றாகச் சிந்தித்துப் பார்ப்பாயாக" என்கின்றார்.

நம்பியாரூரர் 'ஆளோலை உண்டு' என்று வேதியர் கூறுவதன் உண்மையை அறிந்து கொள்ள விழைகின்றார். அம்முதியவரை நோக்கி, 'ஓலையைக் காட்டுமின்' என்று கூறுகின்றார். முதியவர் சற்றுச் சினத்துடன் "சிறுவா, ஓலையைக் காண்பதற்கு உன்க்குத் தகுதி உண்டா? அதனை அவையினர் முன்னிலையிற் காட்டி நீ எனக்கு அடிமை என்பதை உறுதிப் படுத்துவேன்." என்கின்றார். அம்மொழியினைக் கேட்டு வெகுண்ட நாவலூரர் விரைந்தெழுந்து முதியவர் கையிலுள்ள ஓலையைப் பறிக்க ஓடுகின்றார். இந்நிலையில் முதியவராய் வந்த இறைவன் பயந்தவர்போல் பாசாங்கு செய்து விரைந்து ஓடுகின்றார். "மாலயன் தொடராதானை வலிந்து பின் தொடரலுற்றார்". இளையவர் அல்லவா? விரைந்து முதியவரை அடைந்து அவர் கையிலுள்ள ஓலையைப் பறித்து, "ஓர் அந்தணர் வேறோர் அந்தணர்க்கு அடிமையாதல் என்ன முறை? என்ன அநியாயம்?" எனறு சொல்லிக் கொண்டே அதனைக் கிழித்தெறிகின்றார்.

ஓலையைப்பறிகொடுத்த முதியவர், "பாருங்கள் இவனது அடாதசெயலை?" என்று அழுதரற்றுகின்றார். அப்பொழுது அருகிலுள்ள சிலர் அவர்களை விலக்குகின்றனர். அருமறை

4. பெ. பு : தடுத்தாட் 41

முறையிட்டின்னும் அறிவதற்கரி யானை'' நோக்கி, ''பெரியோய், உலகில் கேள்விப்படாத வழக்கினைக் கொண்டு பிணங்கி நிற்கும் நீவிர் வாழும் ஊர் எது?'' என வினவுகின்றார். முதியவர், ''யான் வாழும் ஊர் அண்மையிலுள்ள திருவெண்ணெய் நல்லூரே. நம்பியாரூரனாகிய இவன் என்னகையிலுள்ள ஓலையை வலிந்து பிடுங்கிக் கிழித்தெறிந்தமையால் எனக்கு அடிமைப்பட்டவன் என்பதை உறுதிப்படுத்தி விட்டான்'' என்று மறுமொழி பகர்கின்றார்.

முதியோரின் மொழியைக் கேட்ட திருநாவலூரர் 'இவர் பழைய மன்றாடி போலும்' என நினைந்து, அம்முதியவரை நோக்கி, 'உம்முடைய ஊர் திருவெண் நல்லூராயின்[5] உமது அநியாய வழக்கை அங்கேயே தீர்த்துக் கொள்ளலாம்' என்கின்றார். 'அதற்குத் தடை இல்லை; நீ வெண்ணெய் நல்லூர் வந்தாலும் அங்கு நான் மறையாளர் அவையில் உன் பாட்டன் வரைந்து அளித்த மூல ஓலையைக் காட்டி என் வழக்கை உறுதிப்படுத்துவேன்' என்று மறுமொழி பகர்கின்றார். தளர்ந்த நடையுடன் கோலை ஊன்றிக் கொண்டு

---

5. திருவெண்ணெய் நல்லூர்-விழுப்புரம் விருத்தாசலம் இருப்பூர்திப் பாதையில் திருவெண்ணெய் நல்லூர் ரோடு என்ற நிலையத்திலிருந்து ஊர் 4 கல் தொலைவிலுள்ளது. உமாதேவியார் வெண்ணெயினால் கோட்டை கட்டி அதனிடையே பஞ்சாக்கினியை வளர்த்து தவம் புரிந்த காரணத்தால் திருவெண்ணெய் நல்லூர் என்று பெயர் பெற்றதாக ஒரு கதை வழங்குகின்றது. நம்பியாரூரரின் திருமணத்தைத் தடுத்து ஆவணப் பழவோலை காட்டி ஆட்கொண்டஅற்புதத் தலம். மெய்கண்டார் சிவஞான போதம் அருளிச் செய்ததும், கம்பன் இராமாயணத்தைப் பாடியதும் இத்தலத்தில் நிகழ்ந்தவை. நம்பியாரூரரின் வழக்கை வென்ற இடம 'வழக்கு வென்ற திருவமபலம்' என்று குறிக்கப்பெற்றுள்ளது. இது கோபுர வாயிலுக்கு எதிரிலுள்ள 100 கால் மண்டபமாகும்.

மறையவர் முன்னே செல்ல, நம்பியாரூரர் அவரைத் தொடர்ந்து பின் செல்லுகின்றார். இவ்விருவரையும் தொடர்ந்து கலக்கமுற்ற மனத்துடன் உறவினர்களும் உடன் செல்லுகின்றனர்.

திருவெண்ணெய் நல்லூரை யடைந்த முதியோர் அவ்வூரின் அவையினரை நோக்கி, ''நாவலூர்ச் சிறுவன் எனக்கு அடியான். யான் காட்டிய அடிமையோலையை வலிந்து பற்றிக் கிழித்தெறிந்தான். வழக்கை விசாரித்து உண்மையை நிலை நாட்டுவீர்'' என்று வேண்டுகின்றார்.

அவையோர் முதியோரை நோக்கி, ''ஐயன்மீர், அந்தணர் அடிமையாதல் உலக வழக்கில் இல்லையே'' என்கின்றனர். முதுமறையோர், ''பெரியீர்காள், இச்சிறுவன் வலிதிற்பறித்துக் கிழித்தெறிந்த ஓலை இவன் பாட்டன் (தந்தையின் தந்தை) எழுதிக் கொடுத்ததாகும்'' என்று கூறுகின்றார். நம்பியாரூரை நோக்கி, ''உன்பாட்டனார் உளம் இசைந்து எழுதித் தந்த அடிமையோலையை நீ வலிந்து பறித்துக் கிழித்தெறிந்து விட்டால் உம் வழக்கு வெற்றியாகுமா?'' என்று கூறிய முதியோர் வழக்கினை பொருத்தமாக எடுத்துரைக்கின்றார்.

''உம்முடைய கருத்து யாது?'' என்று வினவுகின்றனர் அவைப் பெருமக்கள். ஆழ்ந்த சிந்தனையில் இருந்த நம்பியாரூரர், ''கற்றுணர்ந்த பெரியீர், யான் ஆதிசைவன். இம்முதியோர் தனக்கு யான் அடிமை என்று சாதிப்பது என் மனத்திற்கு எட்டாத மாயையாக உள்ளது. என் செய்வேன்? தெளிந்துணர இயலவில்லையே'' என்று மனம் உடைந்து மொழிகின்றார். அவையினர் கிழவரை நோக்கி, ''பெரியோய், நும் வழக்கினை ஆட்சி, ஆவணம், சாட்சி என்ற மூன்றனுள் ஏதாவது ஒன்றைக் கொண்டு இச்சபைமுன் நும் வழக்கினை உறுதிப்படுத்துதல் வேண்டும்'' என்று கட்டளை யிடுகின்றனர்.

கிழவர் மிகத் திறமையுடன் பேசத் தொடங்குகின்றார். "அவையிலுள்ள சான்றோர்களே, இச்சிறுவன், நாவலூரன், எனமிகுதியால் என் கையிலிருந்த ஓலையைப் பறித்துக் கிழித் தெறிந்தான். இது படியோலையே. மூல ஓலை என்னிடம் உள்ளது. நீவிர் இதனை இச்சிறுவன் கிழித்தெறியாதபடிக் காக்க வல்லீராயின், அதனைக் காட்டுவேன்" என்கின்றார் முதியவர். அவையோர் உறுதி கூற, கிழவர் மூல ஓலையை அவையின் முன் வைக்கின்றார். மூல ஓலையின் வாசகம் இது:

'அருமறை நாவல் ஆதி
சைவன்ஆ ரூரன் செய்கை
பெருமுனி வெண்ணெய் நல்லூர்ப்
பித்தனுக்கு யாளும் என்பால்
வருமுறை மரபு ளோரும்
வழித்தோண்டு செய்தற் கோலை
இருமையால் எழுதி நேர்ந்தேன்
இதற்கிவை என்ன ழுத்து[6].

இதனை அவையோர் பணித்த வண்ணம் கரணத்தான் குரல் விட்டுப் படித்துக் காட்டுகின்றான்.

அவையோர் ஓலையில் சான்றாளர்களாக கையெழுத் திட்டவர்களின் கையெழுத்துகளையும் ஒப்பு நோக்கி இவை ஏற்றுக் கொள்ளத் தக்கனவாகும் என்று கூறி ஒத்துக் கொள் கின்றனர். அங்ஙனமே, நம்பியாரூரரின் பாட்டனார் கையெழுத்தாகச் சேபிக்கப்பெற்று கைச்சாத்தொன்றைக் கொணரச் செய்து ஒப்பு நோக்கி, கையெழுத்துகள் இரண்டி லும் ஒத்திருப்பதை ஒப்புக் கொள்ளுகின்றனர் அவைப் பெரியோர்கள். இவர்கள் நம்பியாரூரரின் தோல்வியை அறிவிக்கின்றனர். நம்பியாரூரர் அவையின் முடிவை ஒப்புக் கொள்வதைத் தவிர வேறு வழி தோன்றாது தவிக்கின்றார்.

---

6. பெ. பு: தடுத்தாட் கொண்ட-59

அவையினர் கிழவரை இத்துடன் விடவில்லை. அவரை நோக்கி, "மறை முனிவரே, ஆவணத்தில் நும்மூர் திருவெண்ணெய் நல்லூர் எனக் குறிப்பிட்டிருப்பதைக் காண்கின்றோம். உமக்கு இவ்வூரில் தொன்றுதொட்டு நிலையாக வுள்ள இல்லமும் ஏனைய வாழ்க்கைச் செல்வமும் இருக்குமா யின் அவற்றை எங்கட்குக் காட்டுவீராக" என்று வற்புறுத்து கின்றனர். அவையினரை நோக்கிக் கிழவர், "அவையோர் களில் ஒருவரும் இதுகாறும் அறியாதிருப்பீராயின், என்னுடன் வருவீர்களாக" என்று கூறி நம்பியாரூரரும் அவையத்தாரும் தம்மைப் பின் தொடர்ந்து வர, வெண்ணெ யம் பதியிலுள்ள 'அருட்டுறை'[7] என்னும் திருக்கோயிலிற் புகுந்து மறைகின்றார். அனைவரும் செயலொன்றறியாது திகைத்து நிற்கின்றனர்.

உடன் சென்ற நம்பியாரூரர் கிழவரின் செயல் கண்டு வியப்புறுகின்றார். தனியே தொடர்ந்து சென்று கிழவரைக் கூவி அழைக்கின்றார். அப்போது மறையவராய் வந்து தடுத்தாட் கொண்டருளிய அருட்டுறை ஈசன், உமையம்மை யுடன் விடை மீதமர்ந்து விசும்பில் தோன்றி நாவலூரருக்குக் காட்சி தந்தருளுகின்றார். நம்பியாரூரை நோக்கி,

"முன்புநீ நமக்குத் தொண்டன்
முன்னிய வேட்கை கூரப்
பின்புநம் ஏவ லாலே
பிறந்தனை மண்ணின்மீது
துன்புறு வாழ்க்கை நின்னைத்
தொடர்வறத் தொடர்ந்து வந்து
நண்புல மறையோர் முன்னர்
நாம்தடுத் தாண்டோம்"[8]

என்று கூறுகின்றார்.

---

7. உமாதேவியின் அருள் பெற்றமையால் அருட்டுறை ஆயிற்று.
8. பெ. பு. தடுத்தாட் கொண்ட-67

இந்தத் திருவாக்கினைச் செவிமடுத்த நம்பியாரூரர் தாய்ப் பசுவின் கனைப்பினைக் கேட்டுக் கதறும் கன்றினைப் போலாகின்றார். மெய்ம்மயிர் சிலிர்க்கத் தம் இரு கைகளையும் தலைமேல் கூப்பி, ''மறையவனாக வந்து வலிய ஆட்கொண்ட இச்செயல் தில்லையம்பலக் கூத்தனாகிய நுமது திருவருட் செயலோ?'' என்று நெஞ்சம் நெக்குருகப் போற்றித் தொழுகின்றார். இந்நிலையில் அம்மையப்பர் அவரை நோக்கி 'நம்முடன் நீ வன்மொழிகளைப் பேசினமையால் வன்றொண்டன் என்ற பெயரைப் பெறுகின்றாய்; நீ அன்பினால் நமக்குத் தரத்தக்கது சுவை நிறைந்த திருப்பாட்டேயாகும்; அதுவே வழிபாட்டிற்குரிய சிறந்த மந்திரமும் ஆகும் ஆதலால் இவ்வுலகில் செந்தமிழ்த் திருப்பாடல்களால் நம்மைப் பாடிப் போற்றுவாயாக'' என்று பணித்தருளுகின்றார்.

அம்மையப்பரின் அருளுரையைக் கேட்ட வன்றொண்டர் ''வேதியன் ஆகி வந்து அடியேனை ஆட்கொண்ட கோதிலா அமுதே, அடிநாயேன் நின் திருவருட் பண்பாகிய பெருங்கடலுள் எதனையறிந்து எத்தகைய சொற்களால் பாடுவேன்?'' என்று இறைவனை நோக்கிப் பணிவன்புடன் உளங் கசிந்து வினவி நிற்கின்றார். ஆருரை நோக்கி அங்கணர், ''அன்பனே, யான் ஓலை காட்டி நின்னை ஆட்கொண்டபொழுது நீ என்னைப் 'பித்தன்' என்று மொழிந்தாயல்லவா? ஆதலால் என்பெயர் பித்தன் என்றே பாடுவாயாக'' என்று அருளிச் செய்கின்றார். இறைவனின் பெருங்கருணைத் திறத்தை நினைந்துருகிய ஆரூரர்,

பித்தாபிறை சூடிபெரு
மானேஅரு ளாளா
எத்தான்மற வாதேநினைக்
கின்றேன்மனத் துனனை

வைத்தாய்பெண்ணெய்த் தென்பால்வெண்ணெய்
நல்லூர்அருட் டுறையுள்
அத்தாஉனக் காளாய்இனி
அல்லேன்என லாமே. (7.1:1)

என வரும் செந்தமிழ்ப் பதிகத்தினை இன்னிசையுடன் பாடிப் போற்றுகின்றார். இதனைச் செவிமடுத்து உள்ளங்குளிர்ந்த அருட்டுறை ஈசன், "இங்ஙனமே, இவ்வுலகில் பல்லாற்றானும் நம் பொருள்சேர் புகழைப் பாடிப் போற்றுவாயாக" என்று ஆணையிட்டு மறைந்தருளுகின்றார்.

இந்த நிகழ்ச்சிகளையெல்லாம் ஆரூரன் வாய்மொழி களாக, அகச்சான்றுகளாக, அவருடைய திருப்பாடல் களாலேயே அறிந்து கொள்ளலாம்.[9] நாவலூர் நம்பியை நன் மணம் கொள்ள இருந்த நங்கை, புத்தூர்ச் சடங்கவிச் சிவாசாரியாரின் திருமகளார், தம் திருமணம் தவிர்ந்தமை யால் நாயகனாக வர இருந்த நம்பியாரூரரையே வழிபடு தெய்வமாகத் தம் திருவுள்ளத்தில் நிறுத்தித் தியானிக்கும் மெய்யறிவுடையராய்ச் சில காலம் வாழ்ந்து இவ்வுலக வாழ்வை நீத்து உயர்ந்த சிவலோக வாழ்வாகிய பேரின்பம் கைவரப்பெற்றுக் கைலை நாதன் கழலிணையடிகளைச் சேர்கின்றார்.[10]

---

9. சுந்த. தேவாரம்-7.17:1, 2, 3, 8, 10; 7.18:7; 7.63:5; 7.68:6,8 முதலியவை காண்க.
10. பெ.பு: தடுத்தாட்கொண்ட.77.

4. நடு நாட்டுத் திருத்தல வழிபாடு

நடு நாட்டுத் திருப்பதிகள் இருபத்திரண்டு. இவற்றுள் சுந்தரர் பாடல் பெற்றவை பதினொன்று. அவை: திருநெல்வாயில் அறத்துறை, திருக்கூடலையாற்றூர், திருத்தினைநகர், திருமாணிக்குழி, திருஅதிகை (திருவீரட்டானம்), திருநாவலூர், திருமுதுகுன்றம், திருஇடையாறு திருவெண்ணெய் நல்லூர் (திருஅருட்டுறை), திருத்துறையூர், திருவாமாத்தூர் என்பனவையாகும். இத்திருத்தலங்களின் வழிபாடு மூன்று நிலைகளில் நடைபெறுகின்றது.

முதல் நிலை: இவரைத் தடுத்தாட் கொண்டபொழுது திருவெண்ணெய் நல்லூர் அருட்டுறை இறைவனைப் 'பித்தா பிறைசூடி'' (7.1) என்ற திருப்பதிகத்தால் வழிபட்டதைக் கண்டு மகிழ்ந்தோம். அடுத்து சோழ நாட்டுத் திருத்தலப் பயணம் (2)ஐ மேற்கொண்டபோது நான்காம் நிலையில்(முடியும் தறுவாயில்) வன்றொண்டர் தம்மைவளிய ஆட்கொண்டு அருட்டுறை இறைவனை வணங்கித் தம்முடைய சொந்த ஊராகிய திருநாவலூரை[1] அடைகின்றார். அங்குக் கோயில்

1. நாவலூர் - (திருநாமநல்லூர்). விழுப்புரம்-விருத்தாசலம் இருப்பூர்திப் பாதையில் பரிக்கல் என்ற நிலையத்திலிருந்து 2 கல் தொலைவிலுள்ளது; பண்ணுருட்டிக்குச் செல்லும் வழியிலுள்ளது. நம்பியாரூரர் பிறந்து நரசிங்க முனையரால் வளர்க்கப் பெற்றதலம், இவ்வூர்த் திருக்கோயிலிலுள்ள நம்பியாரூரர், நரசிங்கமுனையர் எழுந்தருளும் திருமேனிகள் கவர்ச்சியுடையவை. பல்லாண்டுகளாக திருநாம

கொண்டு எழுந்தருளிய சிவபெருமானைப் பணிந்து கோவலனான் முகன் (7.17) என்றசெந்தமிழ்ப் பாமாலை பாடிப் பரவுகின்றார். இந்தப் பதிகத்தில் பெரும்பாலும் 'வெண்ணெய் நல்லூரில் வைத்து...ஆளுங்கொண்ட' நிகழ்ச்சி திரும்பத் திரும்பக் கூறப்பெறுகின்றது. எ.டு.

வாயாடி மாமறை யோதியோர்
வேதிய னாகி வந்து

....

வேயாடி யார்வெண்ணெய் நல்லூரில்
வைத்தென்னை ஆளுங் கொண்ட. (8)

என்ற திருப்பாடலைக் காண்க.

மேலும், இந்த நாவலூர்ப் பதிகத்தில், 'வன்றொண்டன்' என்று பெயர் பெற்ற நிகழ்ச்சியை,

தன்மையினால் அடியேனைத்
தாம்ஆட்கொண்ட நாள்சபைமுன்
வன்மைகள் பேசிட வன்றொண்டன்
என்பதோர் வாழ்வு தந்தார் (2)

என்ற திருப்பாடல் பகுதியில் புலப்படுத்துகின்றார். ஆவணங் காட்டி அடிமை கொண்ட வரலாற்றினை.

நல்லூர் என்று வழங்கி வந்த ஊர், திரு.வி.க. இந்த ஊரின்மீது அபிமானங்கொண்டு பிரசாரம் செய்தபின் பழைய பெயராகிய திருநாவலூர் என்ற பெயர் நிலைத்து வழக்கில் வந்து விட்டது.

இவ்வூர்க் கோயிலின் இறைவன் பெயர் பக்தஜனேசுவரர், காவலேசுவரர் என்பன. அம்பாள் பெயர் மனோன்மணி, சுந்தரகாம்பிகை. வெளிப்பிராகாரத்தில் அம்மனுக்குத் தனிக்கோயிலுண்டு. இங்குள்ள சுந்தரமூர்த்தியின் உற்சவத்திருமேனி அழகு மிக்கது. அவரது இருமனைவியரான பரவையும் சங்கிலியும் இருபக்கங்களிலும் ஒரே பீடத்திலமர்ந்திருக்கும் காட்சி ஒப்பற்றது. சேரமான் பெருமாள், சடையர், இசை ஞானியார், நரசிங்க முனையரையர் இவர்கட்கும் அழகான திருமேனிகள் உள்ளன.

மெல்லியலை,
ஆகங் கொண்டார் வெண்ணெய்நல்
லூரில்வைத்தென்னை ஆளுங்கொண்டார் (3)
அடக்கங்கொண் டாவணம் காட்டிநல்
வெண்ணெயூர் ஆளுங்கொண்டார் (10)

என்ற திருப்பாடல்களின் பகுதிகளால் அறியலாம்.

நாவலூர்ப் பெருமானிடம் விடைபெற்றுக் கொண்டு, இடையாறு[2] வருகின்றார். 'முந்தையூர்' (7.31) என்ற முதற் குறிப்புடைய திருப்பதிகம் பாடித் தலத்து இறைவனை வழுத்துகின்றார்.

முந்தையூர் முதுகுன்றம் குரங்கணில் முட்டம்
சிந்தையூர் நன்றுசென் றடைவான் திருவாரூர்
பந்தையூர் பழையாறு பழனம் பைஞ்ஞீலி
எந்தையூர் எய்தமான் இடையாறிடை மருதே (1)

என்பது இப்பதிகத்தின் முதற் பாடல்.

தவநெறி வேண்டுதல் : இடையாற்றுப் பெருமானிடம் விடைபெற்றுக் கொண்டு திருத்துறையூர்[3] வருகின்றார். இது சிவஞானசித்தியார் என்ற சாத்திர ஆசிரியர் அருணந்தி சிவாச்சார்யார் அவதரித்த தலம். நம்பியாரூரர் வாழ்ந்த காலத்தில் இத்தலம் பெண்ணையாற்றின் வடக்கே இருந்தது. இப்பழைய பெண்ணையாறு இப்போது மலட்டாறு என்று வழங்கப்பெறுகின்றது. இப்போதுள்ள பெண்ணையாறு தலத்தின் வடக்கேயுள்ளது. அதாலது, தலம் இரண்டிற்கும் நடுவே உள்ளது. இத்தலத்து எம்பெருமானை 'மலையார் அருவி' (7.13) என்ற திருப்பதிகத்தால் வழுத்துகின்றார். இதில்,

---

2. இடையாறு: திருவெண்ணெய் நல்லூர் ரோடு என்ற இருப்பூர்தி நிலையத்திலிருந்து 7 கல் தொலைவு.
3. துறையூர் : சென்னை எழும்பூர் – விழுப்புரம் மயிலாடுதுறை இருப்பூர் வழியில் திருத்துறையூர் என்ற நிலையத்திலிருந்து 1½ கல் தொலைவி லுள்ளது.

மலையார் அருவித் திரள்மா மணியுந்திக்
குலையாரக் கொணர்ந் தெற்றியோர்
பெண்ணைவடபால்
கலையார் அல்குல் கன்னியராடுந் துறையூர்த்
தலைவா உனைவேண்டிக் கொள்வேன் தவநெறியே.

என்பது முதல் பாடல். இப்பதிகத்தின் பாடல்தோறும்,

தலைவாவுனை வேண்டிக்
கொள்வேன் தவநெறியே.

என்று தவநெறியைத் தமக்கு அருளுமாறு வேண்டுகின்றார். பாடல்தோறும் ஒரு முறைக்குப் பத்துமுறை வேண்டுவது கண்டு மகிழத்தக்கது. மெய் வாய் கண் மூக்கு செவி என்னும் ஐம்பொறிகளை வழியாகவுடைய ஐந்து அவாவினையும் அடக்கித் தவநெறியில் செல்லும் பேராற்றல் இறைவனது திருவருள்வழி ஒழுகும் மெய்யடியார்க்கன்றி ஏனையோர்க்கு எய்தலரிது என்பதை உணர்ந்த நாவலூர் வேந்தர் திருத்துறையூர் இறைவனை நோக்கித் தமக்குத் தவநெறி தந்து அருளுமாறு போற்றினமையை இப்பதிகப் பாடல்களால் அறிய முடிகின்றது.

இறைவனின் திருவடிநீட்சை : திருத்துறையூர் இறைவனிடம் விடை பெற்றுக்கொண்டு சிவபெருமான் கோயில் கொண்டுள்ள பல திருத்தலங்களை வழிபடுகின்றார் சேக்கிழார் பெருமான். "சிவபெருமான் அமர்த்தருளும் பொருத்தமாம் இடம் பலவும் புக்கிறைஞ்சி"[4] என்று குறிப்பிடுகின்றாரே யன்றி தலங்களின் பெயர்களைச் சுட்டவில்லை. இப்பயணத்தை அடுத்து பெரும்பற்றப் புலியூர் என்னும் தில்லையில் பொன்னம்பலத்தில் ஆனந்தத் திருநடனம் புரியும் கூத்தப்பெருமானை வழிபட விழைகின்றார். உடனே புறப்படுகின்றார். பெண்ணையைக் கடந்து

4. பெ.பு. தடுத்தாட் கொண்ட-8

ஞாயிறு மறையும் மாலைப்பொழுதில் திருவதிகையின்[5] எல்லைப் பகுதியை அடைகின்றார். அப்பர் அடிகட்குச் சூலை நோய்நீக்கி ''நாவுக்கரசு'' என்ற பட்டம் அளித்தவர் அதிகை வீரட்டானத்திறைவரே.

நாவுக்கரசர் உழவாரப் படையைக் கையிலேந்திச் சிவ பெருமானுக்குத் தொண்டுபுரிந்த திருவதிகையைத் தம் கால்களால் மிதித்து உட்புக விரும்பாத நம்பியாரூர், அப்பதியின் புறத்தேயமைந்த சித்தவடமடத்தில்[6] அடியார்களுடன் தங்குகின்றார். இங்கிருந்தபடியே திருவீரட்டானத்து இறைவனுடைய திருவடிகளைச் சிந்தித்த வண்ணம் திருமடத்தில் துயில்கொள்ளுகின்றார் நம்பியாரூரர். அதிகை வீரட்டானத்து இறைவர் தளர்ந்த முதுவேதியர் வடிவுகொண்டு அப்பொது மடத்தில் புகுகின்றார்; வன்றொண்டர் அருகில் படுத்து உறங்கும் பாவனையில் அவர் திருமுடிமீது தம் திருவடிகள் பொருந்துமாறு படுக்கின்றார். விழித்துணர்ந்த வன்றொண்டர், மறையவரை நோக்கி ''பெரியோய், நும் திருவடியை என் சென்னியின்மீது வைத்தனையே'' என்று கூற, முதியவரும் ''இவ்வாறு திசையறியா வகை செய்தது என் தளர்ந்த முதுமை நிலையே'' என்று மறுமொழி தருகின்றார். வன்றொண்டர் வேறொரு பக்கம் தலைவைத்துத் துயில் கொள்ளத் தொடங்க, அங்கும் தம் திருவடியை நீட்டு

5. அதிகை வீரட்டானம் - விழுப்புரம் - கடலூர் இருப்பூர்தி வழியில் உள்ள பண்ணுருட்டி நிலையத்திலிருந்தது 2 கல் தொலைவிலுள்ளது. சிவத்தலங்களுள் அதிகப்பட்டது (மேம்பட்டது) அதிகா, அதிகை. அப்பர் அடிகட்குச் சூலைநோய் நீங்கிய தலம். அப்பரும் அவர்தமக்கையார் திலகவதியாரும் சரியைத் தொண்டு செய்ததலம். இத்தலத்தருகில் கெடிலநதி ஓடுகின்றது.

6. இந்தமடம் திருக்கோயிலின் தெற்கு வீதியிலுள்ளது. இஃது ஓர் வைப்புத்தலம்.

கின்றார் முது மறையவர். இதனை உணர்ந்த நம்பியாரூரர், ''இங்ஙனம் பல கால் என்னை மிதிக்கும் நீர் யார்?'' என்று வினவ, மறையவரும் ''நீ என்னை அறிந்திலையோ?'' என்று சொல்லியவண்ணம் மறைகின்றார்.

இந்நிலையில் தம் சென்னியின்மீது திருவடிசூட்டி மறைந்த மறையவர் திருவதிகை வீரட்டானப் பெருமானே எனத் தெளிகின்றார். நம்பியாரூரர். உடனே ''தம்மானையறியாத'' (7 38) என்று தொடங்கும் திருப்பதிகம் பாடித் திருவீரட்டானத்து இறைவனைப் போற்றுகின்றார். இப்பதிக முதல் திருப்பாடலின்,

தம்மான்றன் அடிகொண்டென் முடிமேல்வைத்
திடுமென்னும்
ஆசையால் வாழ்கின்ற அறிவிலா நாயேன்
எம்மானை யெறிகெடில வடவீரட் டானத்
துறைவானை இறைபோதும் இகழ்வன்போலியானே

என்ற பகுதியில் இந்நிகழ்ச்சி குறிப்பிடப்பெற்றிருத்தலைக் கண்டு மகிழலாம். திருவடி தீட்சைத்திருவிளையாடல் நிகழ்ந்த நிலையில் இப்பதிகம் தோன்றியது என்ற வரலாறு தெரிகின்றது.

திருவதிகை இறைவனால் திருவடிதீட்சை பெற்ற தம் பிரான் தோழர் இறைவன் திருவடிகளை நினைந்து பெரு மகிழ்ச்சியுடையவராய் [redacted]க்கெடிலநதியில் தீர்த்தமாடிச் சிவபெருமானை வழி[redacted] அந்நதியின் தென்கரையை அடைகின்றார். திருமா[redacted]ழி' (பதிகம் இல்லை) திருத்

7. மாணிக்குழி-கட[redacted] (புதிய நகரம்). இங்கிருந்து 3½ கல்தொலைவி[redacted]து. செல்லும் வழியில் திருவஹீந்திரபுரம் என்ற வைணவத்தலம் உள்ளது. திருமால் வாமனாவதாரத்தில் (=மாணி) பூசித்ததை ''நெடுமால் குறளனாகி மிகவும் சித்தமதொருக்கி வழிபாடு செய்கின்ற சிவலோகன் இடமாம்'' என்ற சம்பந்தர் தேவார அடிகளால் (3.7:4) அறியலாம்.

தினைநகர்[8] ஆகிய தலங்களை வழிபடுகின்றார். திருத்தினை நகர் பெருமான்மீது 'நீறுதாங்கிய இருந்துதலானை' (7.64) என்ற முதற்குறிப்பினையுடைய செந்தமிழ்த் திருப்பதிகம் பாடுகின்றார் (இது முதல் முறை வருகை). இதன் முதற் பாடல்,

நீறு தாங்கிய திருந்து தலானை
நெற்றிக் கண்ணனை நிரைவளை மடந்தை
கூறு தாங்கிய கொள்கையி னானை
குற்ற மில்லியைக் கற்றையஞ் சடைமேல்
ஆறு தாங்கிய அழகனை அமரர்க்
கரிய சோதியை வரிவரால் உகளும்
சேறு தாங்கிய திருத்தினை நகருள்
சிவக்கொ ழுந்தினை சென்றடை மனனே. (1)

என்பது.

இரண்டாம் நிலை : கொங்குநாட்டுத் திருத்தலமாகிய வெஞ்சமாக்கூடலை வழிபட்ட பிறகு நம்பியாரூரர் சோழ நாட்டில் சில தலங்களை வழிபடுகின்றார். அதன் பிறகு நடு நாட்டை அடைகின்றார். திருக்கூடலையாற்றூரை அணுகியவர் அங்குச் செல்லாமல் முதுகுன்றை நோக்கிச் செல்கின்றார்.[9] அப்பொழுது கூடலையாற்றூரில்[10] கோயில் கொண்ட

---

8. தினைநகர் (தீர்த்தனகிரி). சென்னை எழும்பூர் - விழுப்புரம் - மயிலாடுதுறை இருப்பூர்தி வழியில் உள்ள ஆலப்பாக்கம் நிலையத்திலிருந்து 5½ கல் தொலைவிலுள்ளது.
9. பெ. பு: ஏயர்கோன் - 101
10. கூடலையாற்றூர் - விருத்தாசலத்திலிருந்து 12 கல் தொலைவில் உள்ளது. விருத்தாசலத்திலிருந்து (அல்லது சிதம்பரத்திலிருந்து) புவனகிரி செல்லும் பேருந்தில் ஏறிச் சென்று வழியில் வளையமாதேவியில் இறங்கிச் செல்லவேண்டும். வெள்ளாறும் மணிமுத்தாறும் கூடும் இடமே கூடலையாற்றூர். நம்பி

ருளிய சிவபெருமான் மறையவர் வடிவுகொண்டு ஒருவழிப் போக்கர்போல் வன்றொண்டரை அணுகி நிற்கின்றார். வேதியரைக்கண்ட நம்பியாரூரர் அவரைப் பணிந்து, "ஐயன் மீர், யாம் இன்று திருமுதுகுன்றத்துக்குப் போதற்குரிய வழி யினைத் தெரிவித்தருள வேண்டும்" என்று வேண்டுகின்றார். அதனைக் கேட்ட வேதியர் (இறைவன்) "கூடலையாற்றூரை அடையச் செல்வது இவ்வழிதான்" எனக்கூறி அவருக்குத் துணையாய்த் தாமும் அவ்வூர்எல்லைவரை உடன் சென்று பின் மறைந்தருளுகின்றார். உடன் வந்த வேதியரைக் காணாத தம்பிரான் தோழர்தம்மை இட்டு வந்து மறைந்த மறையவர் சிவபெருமானே எனத் தெளிகின்றார் 'வடிவுடை மழுவேந்தி' (7.85) என்ற திருப்பதிகம் பாடுகின்றார்.

வடிவுடை மழுவேந்தி
மதகரி யுரிபோர்த்துப்
பொடியணி திருமேனிப்
புரிகுழல் உமையோடும்
கொடியணி நெடுமாடக்
கூடலை யாற்றூரில்
அடிகளிவ் வழிபோந்த
அதிசய மறியேனே. (1)

என்பது இதன் முதற்பாடல். பின்னர் கூடலையாற்றூர் கோயிலையடைந்து தமக்கு வழித்துணையாக வந்து மறைந்த பெருமானைப்போற்றித் திருமுதுகுன்றத்தை அடைகின்றார். இதனைச் சேக்கிழார் பெருமான்,

---

யாரூரருக்கு 'இவ்வழியாகத்தான் செல்லவேண்டும்' என்று சொல்லிய இறைவன் மறைந்து இத்தலப் பதிகம் பெற்றதைப் பாடல்தோறும் கண்டு மகிழலாம்.

கூடலை யாற்றூர் மேவும்
கொன்றைவார் சடையி னார்தம்
பீடுயர் கோயில் புக்குப்
பெருகிய ஆர்வம் பொங்க
ஆடகப் பொதுவில் ஆடும்
அறைகழல் வணங்கிப் போற்றி
நீடருள் பெற்றுப் போந்து
திருமுது குன்றில் நேர்ந்தார்[11]

என்று காட்டுவர். பின்னர் 'மெய்யில் வெண்பொடி என்ற'[12] செந்தமிழ்ப் பதிகத்தைப் பாடுகின்றார். முதுகுன்றப் பெருமான் தம்பிரான் தோழர்க்குப் பன்னீராயிரம் பொன்களைப் பரிசிலாகத் தந்தருளுகின்றார். அவற்றைப் பெற்ற தம்பியாரூரர் இறைவனைப் பணிந்து "தேவரீர் தந்தருளிய இப்பொன்கள் யாவும் அடியேற்குத் திருவாரூரிலுள்ளார் வியப்பெய்தும் வண்ணம் அங்கே கிடைக்கும்படி செய்தல் வேண்டும் என்று வேண்டுகின்றார். அப்பொழுது "இப்பொன்கள் எல்லாவற்றையும் மணிமுத்தாற்றில் இட்டுத் திருவாரூர்க் குளத்தில் பெற்றுக் கொள்க" என்றதோர் அருள்வாக்கு எழுகின்றது. இந்த அருள் மொழியினைக் கேட்ட தம்பிரான் தோழர், தாம் பெற்ற பொன்னின் மாற்றறிதற்கு மச்சம் வெட்டி எடுத்துக் கொண்டு பொன் முழுவதையும் மணிமுத்தாற்று நீரில் புகவிடுகின்றார் "அன்று என்னை வலிய ஆட்கொண்ட திருவருளை இதில் அறிவேன்" என்று சொல்லிய வண்ணம் 'நஞ்சியிடையின்று' (7.43) என்ற செந்தமிழ் மாலை பாடுகின்றார்.

---

11. பெ. பு. : ஏயர்கோன்-104
12. இம்முதற்குறிப்புடைய பதிகமோ பாடலோ இடைத்தினது. 'மெய்யை மூற்றப் பொடிபூசி' (7.63) என்ற பதிகத்தைக் கொள்ளல் பொருந்தும், முதுகுன்றப் பெருமானைப் பாடல் தோறும் 'நம்பி, நம்பி' என்று பன்முறை 'பன்னிப் பன்னிக் குறிப்பிடுவது கண்டு மகிழத்தக்கது. (எ-டு) :

ஆடிசைந் தடியாரும்
நீரும் அகந்தோறும்
பாடிப்படைத்த பொருளெலாம்
உமையா ளுக்கோ
மாடமதி லணிகோ
புரமணி மண்டபம்
மூடிமுகில் தவழ்சோலை
சூழ்முது குன்றரே (5)

என்பது இப்பதிகத்தின் ஐந்தாவது திருப்பாடல்.

மூன்றும் நிலை : சங்கிலியாரை மணந்த பின்னர் திருவாரூர் நினைவால் ஒற்றியூரிலிருந்து திரும்பிப் பல இன்னல்களை அநுபவித்துக் கொண்டு காஞ்சியில் சில நாட்நாட்கள் தங்கியிருக்கின்றார். பின்னர் காஞ்சியிலிருந்து புறப்பட்டுத் திருவாமாத்தூரை[18] அடைகின்றார். "கண்டனன் காண்டனன்" (7.45) என்ற திருப்பதிகம் பாடி. இந்த ஊரில் கோயில் கொண்டுள்ள இறைவனை வழிபடுகின்றார்.

திங்கள்நம்பி முடிமே லடியார்பால்
சிறந்தநம்பி பிறந்தஉயிர்க் கெல்லாம்
அங்கண்நம்பி அருண்மால் விசும்பாளும்
அமரர்நம்பி குமரன் முதற்றேவர்
தங்கள்நம்பி தவத்துக் கொருநம்பி
தாதையென்றுன் சரண்பணிந் தேத்தும்
எங்கள்நம்பி என்னை யாளுடைநம்பி
எழுபிறப்பும் எங்கள்நம்பி கண்டாயே(2)

என்ற இரண்டாம் பாடல் காண்க.

13. திருவாமாத்தூர் : இது விழுப்புரத்திலிருந்து 4 கல் தொலைவிலுள்ளது.

ஓர்ந்தனன் ஓர்ந்தனன் உள்ளத்துள்
ளேநின்ற ஒண்பொருள்
சேர்ந்தனன் சேர்ந்தனன் சென்றுதிரு
ஒற்றியூர் புக்குச்
சார்ந்தனன் சார்ந்தனன் சங்கிலி
தடமென்றோள் தடமுலை
ஆர்ந்தனன் ஆர்ந்தனன் ஆமாத்தூர்
ஐயன் அருளதே (4)

என்ற இப்பதிக நான்காம் பாடலால் சிவபெருமான் அருளால் சங்கிலியைப் அடைந்த வரலாற்றைக் குறிப்பிடுகின்றார்.

இத்திருக்கோயிலிலுள்ள கல்வெட்டு[14] ஒன்றால் இத் திருக்கோயிலில் பதினாறு குருடர்கள் திருப்பதிகம் விண்ணப் பிக்கவும் (தேவாரம் ஓதவும்) அவர்கட்குக் கண்காட்டுவார் இருவர் (விழிப்பார்வையுடைய வேறு இருவர்) வழித்துணை யாக அவர்களைக் கையில் பிடித்து நடத்திச் செல்லவும் திட்டம் செய்யப்பெற்றிருந்ததை அறிகின்றோம். 700 ஆண்டுகட்கு முன்னரே, திருக்கோயில்களில் குருடர்கள் இவ்வாறு ஆதரிக்கப்பெற்றமை இன்றைய இந்து அறநிலையத் துறை அமைச்சருக்கு வழிகாட்டியாக இருக்கட்டும்.

தேடுவன் தேடுவன் செம்மலர்ப்
பாதங்கள் நாடொறும்
நாடுவன் நாடுவன் நாபிக்கு
மேலேயோர் நால்விரல்
மாடுவன் மாடுவன் வண்கை
பிடித்து மகிழ்ந்துளே
ஆடுவன் ஆடுவன் ஆமாத்
தூர்எம்[8] அடிகட்கே (9)

---

14. தெ. இ. க. 8-749

என்று இப்பதிக ஒன்பதாவது பாடலால் தம்பிரான் தோழர் சகமார்க்கம் (தோழமை நெறி) ஆகிய யோக நெறியில் வழி படுவதைக் கூறுகின்றார்.

ஆமாத்தூர் இறைவனை வழிபட்ட நம்பியாரூரர் அருகிலுள்ள நெல் வாயில் அரத்துறையை[15] அடைகின்றார். அங்கு கோயில் கொண்டுள்ள இறைவனை 'கல்வாயகிலும்' (73) என்ற திருப்பதிகத்தால் போற்றுகின்றார்.

கல்வா யகிலும் கதிர்மா மணியும்
கலந்துநிதி வருந்நிவா வினகரைமேல்
நெல்வா யிலாத்துறை நீடுறை யுந்நீல
வெண்மதி சூடிய நின்மலனே
நல்வா யில்செய்தார் நடந்தார் உடுத்தார்
நரைத்தார் என்று நானிலத்தில்
சொல்லாய்க் கழிகின்ற தறிந்தடியேன் தொடர்ந்தேன்
உய்யப் போவதோர் சூழல்சொல்லே(1)

என்பது முதல் பாடல். இதன் பின்னர் சில சோழ நாட்டுத் திருப்பதிகளைச் சேவித்துக்கொண்டு திருவாரூர் வருகின்றார். இங்குப் புற்றிடங்கொண்ட பெருமானால் பரவையாரின் ஊடல் தீர்க்கப்பெற்று அவருடன் சேர்ந்து வாழ்கின்றார். இத்துடன் நடுநாட்டுத் திருத்தல வழிபாடு நிறைவெய்துகின்றது.

---

15. நெல்வாயில் அரத்துறை: விழுப்புரம்-விருத்தாசலம் திருச்சி இருப்பூர்தி வழியிலுள்ள பெண்ணாடத் திலிருந்து 4 கல் தொலைவிலுள்ளது. நிவா என்னும் வெள்ளாற்றங்கரையிலுள்ளது சம்பந்தப் பெரு மானுக்கு முத்துச் சிவிகை, குடை, சின்னங்கள் சிவ பெருமானால் தரப்பெற்ற அற்புதத்தலம்.

5. பரவையார் திருமணமும் இல்வாழ்க்கையும்

திருக்கயிலாய மலையில் உமையம்மையின் சேடியர் களாய் ஆலாலசுந்தரால் காதலிக்கப்பெற்ற மகளிர் இருவருள் ஒருவர் கமலினியார் என்பதை நாம் அறிவோம். இவர் திருவாரூரில் உருத்திரகணிகையர் குலத்தில் பிறந்து பரவையார் என்ற திருநாமம் பெற்று வளர்ந்து வருகின்றார். திருமகளையொத்த பேரழகுடைய இவர் மங்கைப் பருவம் அடைகின்றார். உமையம்மையாருடைய பாங்கியருள் ஒரு வராய்த் திருத்தொண்டு புரிந்த முன்னைய உணர்வு பரவை யாரின் உள்ளத்திலிருந்து உந்துதலால் இந்நங்கையார் பூங் கோயில் அமர்ந்த பெருமானை நாடோறும் வழிபட்டு வரும் கடமையை உடையவராய்த் திகழ்கின்றார்.

வழக்கம்போல் பரவையார் திருக்கோயில் வழிபாட்டிற் குச் சென்றுவரும் நாட்களில் ஒருநாள் நம்பியாரூரர் நல்லூ ராகிய இறைவனது திருவருளால் பரவையாரைக் காண நேர்கின்றது. பரவையாரும் அவ்வாறே 'பாலது ஆணையால்' நம்பியாரூரைக்கண்டு காதல் கொள்ளுகின்றார். அளவிறந்த காதலால் அவர்தம் உள்ளத்தே நிறைந்திருந்த மகளிர்க்குரிய நாணம் மடம் அச்சம் பயிர்ப்பு தான்கு குணங்களும் புனலொடுபுல் சாய்ந்தாற்போல ஒருபுடைச் சாய்கின்றன. ஆயினும், இறைவனைத் தொழும் அன்பே அவர் தம் உள்ளத்தை நிறைவுடையதாக்கியதால், அவர் இறைவன் திருமுன்னர் வந்து சேர்கின்றார்.

பரவையாரைப்பற்றி நம்பியாரூரர் சிந்தித்ததைப்பற்றிச் சேக்கிழார் பெருமான்,

கற்பகத்தின் பூங்கொம்போ?
காமன்தன் பெருவாழ்வோ?
பொற்புடைய புண்ணியத்தின்
புண்ணியமோ? புயல்சுமந்து
விற்குவளை பவளமலர்
மதிபூத்த விரைக்கொடியோ?
அற்புதமோ? சிவனருளோ?
அறியேன்என் றதிசயித்தார்[1]

ஓவியம்நான் முகன்எழுத
ஒண்ணாமை உள்ளத்தால்
மேவியதன் வருத்தமுற
விதித்ததொரு மணிவிளக்கோ?[2]

என்று எடுத்துக் காட்டுவர். இங்ஙனமே நம்பியாரூரைப் பற்றிப் பரவையார் கொண்ட சிந்தனையையும்,

முன்னைவந் தெதிர்தோன்றும்
முருகனோ? பெருகொளியால்
தன்னேரில் மாரனோ?
தார்மார்பின் விஞ்சையனோ?
மின்னேர்செஞ் சடையண்ணல்
மெய்யருள்பெற் றுடையவனோ?
என்னே! என் மனத்திருத்த
இவன் யாரோ?[3]

என்று சித்திரித்துக் காட்டுவர்.

---

1. பெ. பு : தடுத்தாட்கொண்ட-140.
2. ஷை. ஷை. 141
3. ஷை. ஷை. 144

பரவையாரது பேரழகில் ஈடுபட்ட நம்பியாரூரர் தம் அருகில் நின்றவர்களை நோக்கி, ''என் மனங்கவர்ந்த செங் கனிவாய் இளங்கொடி யார்?'' என்று வினவ, அவர்கள், ''அவர் நங்கை பரவையார்; வானோர்க்கும் தொடர்வரிய தூய்மையுடையார்'' எனக் கூறுகின்றனர். பரவையார்பால் எல்லையற்ற காதலுடையராகிய தம்பிரான் தோழர் 'என்னை ஆட்கொண்ட இறைவனை யடைந்து எனது கருத்திற்கு இசைவு பெறுவேன்'' என்று எண்ணம் கொண்டு புற்றிடங்கொண்ட பெருமான்முன்செல்கின்றார். அப்போது நங்கை பரவையாரும் இறைவனை வலம் வந்து பிறிதொரு பக்கமாகப்போகின்றார். நம்பிஆரூரர் தமக்குப் பரவையாரை வாழ்க்கைத் துணைவியாகத் தந்தருளும்படி ஆராத காத லுடன் பணிந்து வேண்டுகின்றார். ''இறைவன் பால் ஆழப் பதித்த என்னுள்ளத்தைச் சலனப்படுத்திய இந்நங்கை எவ்வழி ஏகினாள்?'' என்று கூறிக் கொண்டே பரவையைத் தேடிச் செல்லுகின்றார். எம்பெருமான் தம்மால் காதலிக்கப் பெற்ற பரவையாரைத் தமக்குத் தந்து தம் ஆவியை நல்குவர் என்னும் நம்பிக்கையுடன் தேவாசிரிய மண்டபத்தின் ஒரு பக்கமாக அமர்ந்திருக்கின்றார்.

தம்பிரான் தோழரின் நிலை இங்ஙனமாக, பூங்கோயில மர்ந்த பெருமானை வணங்கித் தம் இல்லம் மீண்ட பரவை யார் மலர்மனியில் அமர்ந்து தம் அருகிலிருந்த பாங்கியை நோக்கி, ''நாம் ஆரூர்ப் பெருமானை வழிபடச் சென்ற பொழுது நம் எதிரே வந்த இளைஞர் யார்?'' என்று வினவ, அவளும், ''மாலும் அயனும் காண்டற்கரிய சிவபெருமான் மறையவராகி வந்து தடுத்தாட்கொள்ளப் பெற்ற தம்பிரான் தோழர் நம்பியாரூரர் இவரே'' என விடை பகர்கின்றாள். இதனை அறிந்த அவளுடைய காதல் பெருகி வளர்கின்றது. படுக்கையில் வீழ்ந்து புரண்டு புரண்டு வெதுப்புற்று பலவாறு ஏங்கி வருந்துகின்றார்.

இவ்வாறு இருவரும் ஒருவர்மேல் மற்றவர் கொண்ட பெருங்காதலால் உறக்கமின்றி நள்ளிரவில் வருந்துதலைக் கண்ட புற்றிடங்கொண்ட பெருமான் அன்றிரவே சிவனடியார்கள்முன் தோன்றிப் பரவையாரை நம்பியாரூருக்கு திருமணம் செய்து வைக்குமாறு பணித்தருளுகின்றார். அடுத்து நம்பியாரூரை அடைந்து "நங்கை பரவையை நினக்கு வாழ்க்கைத் துணைவியாகத் தந்தோம். நம் அடியார்கட்கும் இதனைத் தெரிவித்துள்ளோம்" என்று அருளிச் செய்தவர், பரவையார் முன்னிலையில் தோன்றி "நினக்கும் நம்பியாரூரனுக்கும் நாளை திருமணம் நிகழும்" எனக் கூறி மறைந்தருளுகின்றார்.

மறுநாள் வைகறையில் பூங்கோயிலமர்ந்த பெருமான் ஆணையிட்டபடி சிவனடியார்கள் அனைவரும் ஒருங்கு கூடி இறைவனது திருவருட்டிறத்தை வியந்து போற்றுகின்றனர். தம்பிரான் தோழர்க்கும் நங்கை பரவையார்க்கும் விதிப்படி திருமணத்தை நிகழ்விக்கின்றனர். இவ்வாறு இறையருளால் பரவையாரை வாழ்க்கைத் துணைவியாகப் பெற்ற தம்பிரான் தோழர் அம்மெல்லியலாருடன் அன்புடன் கலந்து மகிழும் நிலையிலேயே சிவனருட்கடலிலும் மூழ்கித் திளைக்கின்றார். இந்த இன்பப் பெருக்கில் செந்தமிழ்ப் பாமாலைகள் பாடிச் சிவபெருமானைப் போற்றுகின்றார். நங்கை பரவையாரை வாழ்க்கைத் துணைவியாகத் தந்தருளிய திருவருட் செயலை,

ஏழிசையாய் யிசைப்பயனாய்
இன்னமுதா யென்னுடைய
தோழனுமாய் யான்செய்யும்
துரிசுகளுக் குடனாகி
மாழையொண்கண் பரவையைத்தந்
தாண்டானை மதியில்லா
ஏழையேன் பிரிந்திருக்கேன்
என்ஆரூர் இறைவனையே (7.5:10)

என்று நாவலூர் அண்ணல் உளங்கசிந்து பரவிப் போற்றியுள்ளமையைக் கண்டு மகிழலாம்.

திருத்தொண்டத் தொகை: நம்பியாரூரர் பரவையாருடன் இல்லறம் நடத்தி இறைவனை வழிபட்டு வரும் நாட்களில் ஒரு நாள் தேவாசிரிய மண்டபத்தில் ஒருங்கு கூடியுள்ள சிவனடியார்களைக் கண்டு "இவர்கட்கு அடியனாகும் நாள் எந்நாளோ?" என்னும் நினைவுடையவராய்த் வழிபாட்டிற் காகத் திருக்கோயிலினுட் செல்லுகின்றார். இந்நிலையில் தேவாசிரிய மண்டபத்தில் வீற்றிருக்கும் சிவனடியார்களில் ஒருவராகிய விறன்மிண்டர்[4] வன்றொண்டர் அடியார் திருக் கூட்டத்தைப் பணியாது நேரே திருக்கோயிலுக்குச் செல்கின்றார் என்று கருதி "சிவனடியார் கூட்டம் தம்மைப் பேணாது செல்லும் நம்பியாரூரனுக்கும் புறம்பு; அவனுக்குப் பிரானாகிய சிவபெருமானுக்கும் புறம்பு"[5] என்று வெகுண்டுரைக்கின்றார்.

இந்நிலையில் "அடியவர்க்கு அடியனாவேன்" என்னும் ஆர்வத்துடன் திருக்கோயிலினுட் செல்லும் வன்றொண்டர் முன் ஆரூர் இறைவன் தோன்றிக் காட்சி நல்குகின்றார். வன்றொண்டரும் தமக்கு எளி வந்து அருளிய இறைவனின் பெருங்கருணைத் திறத்தை வியந்து போற்றுகின்றார்; தொண்டர்க்குத் தொண்டனாகும் நற்பேற்றினை ஆரூரருக்கு அளித்தருளத் திருவுளங் கொள்ளுகின்றார். அவருக்கு அடியார்களின் திருத்தொண்டின் திறத்தையும் சால்பினையும் அறிவுறுத்தருளுகின்றார். அவரை நோக்கி "நீதியால் அவர்கள் தம்மை பணிந்து நீ நிறைசொன்மாலை பாடிப் போற்றுவாயாக" என்று பணிக்கின்றார். அப்பணியினை

---

4. இவர் 63 நாயன்மார்களில் ஒருவர்.
5. பெ. பு : விறன் மிண்டர் -7,8

ஏற்றுக்கொண்ட வன்றொண்டர் இறைவனை இறைஞ்சி நின்று, "பிரானே, மெய்யடியார்களின் வரலாறு அறியேன்; அவர்தம் பெருந்தகைமையையும் உணரேன். இந்நிலையில் எங்ஙனம் பாடுவேன்?" என்று விண்ணப்பிக்க, அம்மையப்பரும்,

தில்லைவாழ் அந்தணர்தம்
அடியார்க்கும் அடியேன் (7.39)

என்று அடியெடுத்துக் கொடுத்து மறைந்தருளுகின்றார்.

நம்பியாரூரரும் தேவாசிரிய மண்டபத்தில் வீற்றிருக்கும் அடியார்களை நெடுந்தூரத்திலேயே கண்டு தாழ்ந்து இறைஞ்சுகின்றார்; அவர்தம் திருப்பெயரை முறையே எடுத்தோதுகின்றார். அவர்கள் எல்லார்க்கும் தனித்தனியே 'அடியேன்' எனப் பணிமொழி பகர்ந்து,

தில்லைவாழ் அந்தணர்தம் அடியார்க்கும் அடியேன்;
திருநீல கண்டத்துக் குயவனார்க் கடியேன்;
இல்லையே என்னாத இயற்பகைக்கும் அடியேன்;
இளையான்றன் குடிமாற னடியார்க்கும் அடியேன்;
வெல்லுமா மிகவல்ல மெய்ப்பொருளுக்கு அடியேன்;
விரிபொழில்சூழ் குன்றையார் விறன்மிண்டர்க்
கடியேன்;
அல்லிமென் முல்லையந்தார் அமர்நீதிக் கடியேன்;
ஆரூரன் ஆரூரில் அம்மானுக் காளே. (1)

என்று முதல் திருப்பாடலாக வரும் திருப்பதிகத்தினைப் (7.39) போற்றித் தேவாசிரிய மண்டபத்தில் வீற்றிருந்த சிவனடியார் உளம் மகிழ அவர்களின் நடுவே சென்று சேர்கின்றார். இதனைச் சற்று விரித்து நம்பியாண்டார் நம்பி திருத்தொண்டர் திருவந்தாதி அருளுகின்றார். இந்த

இரண்டினையும் மேலும் விரித்து திருத்தொண்டர்புராணம் என்ற பெரிய புராணத்தைச் சேக்கிழார் பெருமான் அருளி சைவ உலகத்தை வாழ வைக்கின்றார்.

குண்டையூர்க் கிழவர் : நம்பியாரூரரின் குடும்பத்திற்குத் தேவையான செந்நெல் பருப்பு முதலிய உணவுப் பொருள் களைக் குண்டையூர்க் கிழவர் என்னும் வேளாளர் அன்புடன் அனுப்பிக் கொண்டிருக்கின்றார். இப்பணி இடையறாது நடை பெற்றுக் கொண்டு வருகின்றது. ஒருசமயம் மழையின்மையால் நாட்டில் வற்கடம் உண்டாகின்றது. இப்பஞ்சம் குண்டையூர்க் கிழவரையும் தாக்குகின்றது. நாவலூராருக்கு நெல் அனுப்ப முடியவில்லையே என்று பெருங்கவலை கொள்ளுகின்றார். அன்று உண்ணாநோன்பினை மேற்கொண்டு அயர்ந்து துயில் கின்றார். சிவபெருமான் அவரது கனவில் தோன்றி "நம்பி யாரூரர்பொருட்டு நுமக்கு நெல்லைத் தந்தோம்" என்று உரைத்துக் குபேரனை ஏவுகின்றார். அவன் குண்டையூர் முழுவதும் நெல் மலையாகக் குவித்திடச் செய்கின்றான். வைகறையில் விழித்தெழுந்த குண்டையூர்க் கிழவர் மலை போலும் நெற்குவியலைக் கண்டு வியப்புற்று இறைவன் கருணைத் திறத்தைப் போற்றுகின்றார். இந்நெற் குவியலை வன்றொண்டரிடம் சேர்ப்பிக்கும் வழி காண்பான் வேண்டி திருவாரூரை நோக்கி நடக்கின்றார். தம் பொருட்டுக் குண்டையூர்க் கிழவருக்கு நெல் அளித்த செய்தியை இறைவ னால் அறிந்த நம்பியாரூரர் குண்டையூரை நோக்கி நடக் கின்றார். வழியில் இருவருக்கும் சந்திப்பு நேர்கின்றது. இரு வரும் குண்டையூர் வந்து சேர்கின்றனர்.

"விண்ணினை அளக்கும் நெல்லின் வெற்பினைக்" கண்ட தம்பிரான் தோழர் இறைவன் திருவருளை எண்ணி வியக் கின்றார். இதனைத் திருவாரூரில் சேர்ப்பிக்க சிவபெருமான் ஆட்களைத் தந்தாலன்றித் தம்மால் இயலாது என நினைத்து

அண்மையிலுள்ள இருக்கோவிலித்[6] திருக்கோயிலை அடைந்து இறைவன் திருமுன் நின்று, ''நீளநினைந்து'' (7.20) என்ற திருப்பதிகம் பாடிப் போற்றுகின்றார்.

நீளநினைந்து அடியேன்உமை
நித்தலும் கைதொழுவேன்
வாளன கண்மடவாள் அவள்
வாடி வருந்தாமே
கோவிலி எம் பெருமான்
குண்டையூர்ச்சில நெல்லுப்பெற்றேன்
ஆளிலை எம்பெருமான்
அவையட்டித் தரப்பணியே. (1)

என்பது முதல் பாடல். இதில் ஒரு முறைக்கு ஒன்பது முறை அவையட்டித் தரப்பணியே'' என்று கோவிலி எம்பெருமானை வேண்டிக் கொள்வதைக் காணலாம்.

சிவபெருமான் அருளால் ''இன்று பகற்பொழுது கழிந்ததும் நம்முடைய பூதகணங்கள் பரவையார் வீடு மாத்திரமன்றித் திருவாரூர் முழுவதிலும் நெல்லைக் கொண்டு வந்து குவித்து விடும்'' என்றதோர் அருள்வாக்கு வானிடையே எழுகின்றது. இச்செய்தி கேட்டு மகிழ்ந்த தம்பிரான் தோழர் திருவாரூர் திரும்பி நிகழ்ந்தவற்றைப்

---

6. கோவிலி: (திருக்குவளை) மயிலாடுதுறை-காரைக்குடி இருப்பூர்தி வழியில் திருநெல்விக்கா என்ற நிலையத்திலிருந்து 6 கல் தொலைவு. சப்தவிடங்கங்களுள் இங்குள்ளவர் அவனிவிடங்கர். நடனம், பிருங்க நடனம். குண்டையூரில் பெற்ற நெல்லைத் திருவாரூருக்கு எடுத்துச் செல்ல ஆள்வேண்டிப் பதிகம் பாடிச் சுந்தரர் பூதகணங்களால் ஆரூருக்குக் கொண்டு சேர்த்த அற்புதம் நிகழ்ந்த தலம். குண்டையூர் இங்கிருந்து $\frac{1}{2}$ கல் தொலைவிலுள்ளது. குண்டையூரிலிருந்து திருவாரூர் சற்றேறக் குறைய 16 கல் தொலைவு.

பரவையாருக்குத் தெரிவித்துச் சிவச்சிந்தனையோடு இருக்கின்றார். அன்றிரவே பூதகணங்கள் குண்டையூரிலிருந்த நெற்குவியலைப் பரவையார் இல்லத்திலும் திருவாரூர்த் தெருக்களிலும் நிரப்பிவிடுகின்றன. மறுநாள் துயில் உணர்ந்தெழுந்த பரவையார் நெற்குவியலைக் கண்டு வியப்புறுகின்றார். ஆரூர் மக்கள் அவரவர் மனை எல்லைக்குட்பட்டுக் கிடக்கும் நெல்குவியலை அவரவர்களே வாரிக் கொள்ளலாம் என்று வென்றி முரசறைவிக்கின்றார், பரவையார்.[7]

கோட்புலி நாயனார்[8]: இவர் நாட்டியத்தான் குடி என்னும் ஊரைச் சார்ந்தவர்; சோழ மன்னரின் தானைத் தலைவர். சிவபெருமான் வீற்றிருக்கும் திருக்கோயில்கட்கு அமுது படிக்குத் தேவையான செந்நெல்லைச் சேர்த்தளிக்கும் திருத்தொண்டினை இடையறாது மேற்கொண்டதாளாண்மை மிக்கவேளாளக் குடிமகன். இவர் நம்பியாரூரைத் தம் பதிக்கு எழுந்தருளுமாறு வேண்டிக் கொள்ளுகின்றார். தம்பிரான் தோழரும் அவரது அன்பு அழைப்பை ஏற்று நாட்டியத்தான் குடிக்கு ஏகுகின்றார். கோட்புலியார் அவரை எதிர்கொண்டு வரவேற்றுத் தமது திருமாளிகைக்கு அழைத்துச் சென்று முறைப்படி பூசனை முதலியவை புரிந்து திருவமுது செய்விக்கின்றார். தம் மக்களாகிய சிங்கடி, வனப்பகை என்னும் பெண்களை வன்றொண்டர் திருவடிகளில் வணங்கச் செய்கின்றார்; தாமும் வணங்கி நிற்கின்றார். ''பெருமானே, இப்பெண் பிள்ளைகள் இருவரையும் அடிமையாக ஏற்றருள வேண்டும்'' என்று வேண்டிக் கொள்ள, தம்பிரான் தோழரும் அவரது அன்பின் திறத்திற்கு மெச்சி, ''இப்பெண் பிள்ளைகள் இருவரும் என்அருமை மக்கள்'' என்று கூறி அவர்களை, அன்பினால் எடுத்தணைத்துத் தம் மடிமீது அமர்த்திக்

---

7. பெ. பு : ஏயர்கோன் -28
8. இவர் அறுபத்து மூவரில் ஒருவர்

கொள்ளுகின்றார். அவர்களைத் தம் நெஞ்சம் நெக்குருக உச்சி மோந்து அவர்கள் விரும்பி வேண்டும் பொருள்களைத் தந்து மகிழ்கின்றார்.

தம்பிரான் தோழர் கோட்புலியாருடன் நாட்டியத் தான் குடித்[9] திருக்கோயிலை அடைந்து 'பூணாணாவதோர் அரவம்' (7.15) என்ற திருப்பதிகம் பாடி மாணிக்க வண்ணனாகிய (3) இறைவனை வணங்கிப் போற்றுகின்றார்.

மட்டார் பூங்குழல் மலைமகள் கணவனைக்
கருதாதார் தம்மைக் கருதேன்
ஒட்டரா கிலும் ஒட்டுவென் அடியேனும்
மடியடைந் தவர்க் கடிமைப்
பட்டே னாகிலும் பாடுதல் ஒழியேன்
பாடியும் நாடியும் அறிய
நட்டே னாதலால் நான்மறக் கில்லேன்
நாட்டியத் தான்குடி நம்பி. (1)

என்பது இப்பதிகத்தின் ஐந்தாம் பாடல். இப்பதிகத் திருக் கடைக்காப்பில் "கூடாமன்னரைக் கூட்டத்து வென்ற கொடிறன் கோட்புலி"(10) என்று தம்மை உபசரித்துப் போற்றிய கோட்புலி நாயனாரைச் சிறப்பிக்கின்றார். அவருடைய புதல்வியாகிய சிங்கடியைத் தம் மகளாக ஏற்றுக் கொண்ட அன்பின் திறத்தைப் புலப்படுத்தும் முகத்தான்

---

9. நாட்டியத்தான் குடி : மயிலாடுதுறை - காரைக்குடி இருப்பூர்தி வழியில் மாவூர் ரோட்டிலிருந்து 3/4 கல் தொலைவில் உள்ளது. கோட்புலி நாயனார் திருத்தொண்டு புரிந்ததலம். சிங்கடி, வனப்பகை என்ற தம் புதல்வியரைச் சுந்தரருக்கு அளித்து அவர்களை வாழ்க்கைத் துணைவியராக ஏற்றுக் கொள்ளும்படி வேண்டிய கோட்புலியாருக்கு, அவர்களைத் தம் மக்களாக ஏற்று அருள்புரிகின்றார் தம்பிரான்தோழார்

"நாட்டியத்தான்குடி நம்பியை நாளும் மறவாச் சேடார் பூங்குழற் சிங்கடியப்பன் திருவாரூரன்" (10) எனத் தம்மைக் குறிப்பிட்டு மகிழ்கின்றார். கோட்புலியாருடைய மற்றொரு மகளாகிய வனப்பகையைத் தம் மகளாக ஏற்றுக் கொண்ட திறத்தைப் புலப்படுத்தும் கருத்துடன் தம்மை 'வனப்பகை யப்பன்' என்ற பெயரால் பல பதிகங்களிலும் குறிப்பிடு கின்றார். (எ-டு. 7·29:10; 7.57:12)

அருளாசிரியர்களைப் போற்றுதல் : நாட்டியத்தாங்குடி யினின்றும் புறப்பட்டு வலிவலம்[10] என்னும் திருத்தலம் வரு கின்றார் தம்பிரான் தோழர். 'ஊனங்கந்துயிர்' (7.67) என்ற திருப்பதிகத்தால் வலிவலத்திறைவனை வழிபடுகின்றார்.

நல்லிசை ஞான சம்பந்தனும் நாவினுக்
கரசரும் பாடிய நற்றமிழ் மாலை
சொல்லிய வேசொல்லி யேத்துகப் பானைத்
தொண்டனேன் அறியாமை அறிந்து
கல்லியன் மனத்தைக் கசிவித்துக் கழலடி
காட்டிஎன் களைகளை யறுக்கும்
வல்லியல் வானவர் வணங்குதின் றானை
வலிவலந் தனில்வந்து கண்டேனே. (5)

என்பது இப்பதிகத்தின் ஐந்தாவது பாடல். இதில் நாவலூரர் தமக்கு முற்பட்ட அருளாசிரியர்களாகிய சம்பந்தர், அப்பர் ஆகிய பெருமக்கள் அருளிய தேவாரத் திருப்பதிகங்களில் இறைவனுக்குள்ள ஈடுப்பாட்டினைக் குறிப்பிட்டுப் போற்று கின்றார். மீண்டும் திருவாரூருக்கு எழுந்தருளுகின்றார்.

புகலூர்ப் பெருமானிடம் பொன்பெறுதல் : திருவாரூரில் தங்கியிருக்கும்பொழுது திருவாரூர்ப் பங்குனி உத்திரத்

10. வலிவலம் : மயிலாடுதுறை-காரைக்குடி இருப்பூர்தி வழியில் மாவூர்ரோட் என்ற நிலையத்திலிருந்து 5½ கல் தொலைவு. கட்டு மலைக் கோயில். சுற்றிலும் அகழ்.

திருவிழா நெருங்குகின்றது. இதனை அறிந்த தம்பிரான் தோழர் திருவிழாவில் பரவையாரின் செலவுக்குப் பொன்னைக் கொண்டுவரும் பொருட்டுத் திருப்புகலூரை[11] அடைன்கிறார். திருக்கோவிலுள்ள இறைவனைப் பணிந்து போற்றுகின்றார். அண்மையிலுள்ள திருமடத்திற்குச் சென்று ஓய்வு கொள்ளத் திருவுள்ளங்கொண்டு கோயில்வாசலில் அடியார்களுடன் இளைப்பாறுகின்றார். இந்நிலையின் இறைவன் திருவருளால் இவருக்கு உறக்கம் வரத் தொடங்குகின்றது. அருகில் திருக்கோயில் திருப்பணிக்காக அடுக்கி வைக்கப் பெற்றிருக்கும் செங்கல்களில் சிலவற்றைக் கொணரச் செய்து அவற்றைத் தலைக்கு அணையாக வைத்துக்கொண்டு அவற்றின்மீது தமது மேலாடையை விரித்துத் துயில் கொள்ளுகின்றார். துயிலுணர்ந்தெழுந்தபோது தலையணையாக வைத்த செங்கல்கள் பொற்கட்டிகளாக மாறியிருக்கக் கண்டு வியப்பெய்துகின்றார். உடனே திருக்கோயிலினுட் சென்று புகலூர் இறைவனின் திருவருளை நினைந்து வணங்கி,

தம்மை யேபுகழ்ந் திச்சை பேசினும்
சார்வினும் தொண்டரைத்தருகிலாப்
பொய்ம்மை யாளரைப் பாடாதே எந்தை
புகலூர் பாடுமின் புலவீர்காள்;
இம்மை யேதரும் சோறும் கூறையும்
ஏத்த லாம்இடர் கெடலுமாம்
அம்மை யேசிவ லோகம் ஆள்வதற்
கியாது மையுற வில்லையே. (1)

என்ற முதற் பாடலையுடைய திருப்பதிகம் (7.34) பாடிப் போற்றுகின்றார். இது,

---

11. திருப்புகலூர் : அப்பர் சுவாமிகள் முத்திபெற்ற தலம். நன்னிலம் இருப்பூர்தி நிலையத்திலிருந்து நான்கு கல் தொலைவில்உள்ளது.

நாக்கொண்டு மானிடம்
பாடேன்[12]

என்ற திருமழிசையார் திருவாக்கையும்,

சொன்னால் விரோதம்இது ஆகிலும்
சொல்லுவன் கேண்மினோ
என்நாவில் இன்கவி யான்ஒரு
வர்க்கும் கொடுக்கிலேன்[13]

என்ற திருவாய்மொழியால் மானிடரைப் பாடாது மாதவனை ஏத்தும் என்ற நம்மாழ்வார் திருவாக்கினையும் நினைக்கச் செய்கின்றது. நம்பியாரூரன் கருத்தறிந்து அவர் வேண்டிய பொன்னை விரைந்தளித்தமையால் ''எதிரிலின்பம் இம்மையே தருவர்''[14] என்ற புகலூர் பெருமானைப் பாராட்டிப் போற்றுவர் சேக்கிழார் அடிகள்.

திருப்புகலூர் இறைவன் அளித்த பொற்கட்டிகளை எடுத்துக்கொண்டு அடியார்களுடன் அங்கிருந்து புறப்பட்ட தம்பிரான் தோழர் திருப்பனையூர்[15] புறத்தே வந்து கொண்டிருக்கும்பொழுது அப்பதி இறைவனை ஆடல்காட்டி அருள் புரிகின்றான். அந்த அழகிய காட்சியைக் கண்டு மகிழ்ந்த நம்பியாரூரர்,

அரங்கி லாட வல்லார்
அவரே அழகியரே. (7.87:7)

என்று பாடல்தோறும் புகழும் ''மாடமாளிகை'' (7:87) என்று தொடங்கும் திருப்பதிகத்தைப் பாடித் திருவாரூரை அடைகின்றார். அங்குக்கோயில் கொண்டிருக்கும் இறைவனை நாளும் பணிந்து பரவையாருடன் இனிது மகிழ்ந்து வாழ்க்கை நடத்துகின்றார்.

---

12. நான்முகன் திரு. - 75
13. திருவாய் 3.9:1
14. பெ.பு : ஏயர்கோன் - 52
15. பனையூர் (திருப்பனையூர்): நன்னிலத்திலிருந்து 1½ கல் தொலைவிலுள்ளது.

6. சோழநாட்டுத் திருத்தலப் பயணம்-(1)

சோழநாட்டுத் திருத்தலங்கள் 190. இவற்றுள் சம்பிரான் தோழர் வழிபட்டவை 47. அதிகமான எண்ணிக்கையில் திருத்தலங்களையுடைய இந்நாட்டுத் திருத்தலப் பயணம் பல நிலைகளில் நடைபெறுகின்றது. இதனை நிரலே எடுத்துக் காட்டுவோம்.

முதல்நிலை : இறைவனால் திருவெண்ணெய் நல்லூரில் தடுத்தாட்கொண்ட பிறகு நடுநாட்டுத் தலங்கள் சில வற்றைச் சேவித்துக் கொண்டு திருத்தில்லை[1] வருகின்றார்.

1. கோயில் (சிதம்பரம்). 'கோயில்' என்ற பெயரால் சைவர்கள் வழங்குவர் வைணவர்கள் திருவரங்கத்தைக் 'கோயில்' என்று வழங்குவது போல மிகப் பழையகாலத்தில் இது தில்லைவனமாயிருந்தது. இக்கோயிலில் ஐந்துசபைகள் உள்ளன. அவை : (1) நடராசப் பெருமான் திருநடம் புரிவும் சிற்றம்பலம் அல்லது சிற்சபை; (2)சிற்சபைக் கெதிரிலுள்ள கனக சபை (பொன்னம்பலம்); இங்கு நாடோறும் படிக லிங்கத்திற்கு ஆறு கால பூசை நடைபெறுகின்றது; (3) அடுத்தது நிருத்தசபை; இது நடராசருக்கெதிரிலுள்ள திருக்கொடிமரத்திற்குச் சிறிது தெற்கிலுள்ளது. இங்கு ஊர்த்துவ தாண்டவ மூர்த்தியைக் கற்சிலை வடிவில் சேவிக்கலாம்; (4) தேவசபை (பேரம்பலம்); யாகசாலைக்கருகில் ஈசான மூலையில் உள்ளது. இது பஞ்ச மூர்த்திகள் இருக்குமிடம்; (5) இராசசபை (ஆயிரக்கால் மண்டபம்); சிற்றம்பலத்தின் மேலுள்ள தூபி ஏனைய தலங்களில் உள்ளது போன்றதன்று. சாதாரண வீடுகளுக்குள்ள கூரை

இந்நகரின் புறத்தே அமைந்த தண்ணிழல் தரும் சோலை களையும் நறுமணம் மிக்க நந்தவனங்களையும் மதிலைச் சூழ்ந்து விளங்கும் கிடங்குகளையும் கடந்து வடதிசை வாயில் வழியாக தில்லை நகரினுள் புகுந்து சிவனடியார்கள் எதிர் கொண்டு போற்ற அழகிய திருவீதியினை வணங்கி வலம் வருகின்றார்.

தில்லைச் சிற்றம்பலவன் வழிபாடு : ஞான மயமான திருச்சிற்றம்பலத்தின் முன்னேயுள்ள திருவணுக்கன் திருவா யிலை நெருங்கி மன்றுள்ளே திருவருட் கூத்தியற்றும் கூத்தப் பெருமானைக் கண்டு அன்பு மீதூரத் தலைமீது கூப்பிய கையினராய்த் திருக்களிற்றுப்படியின் மருங்கே வீழ்ந்து வணங்குகின்றார். அவன் அருட்கூத்தில் மலர்ந்த பேரின்ப வெள்ளத்தில் மூழ்கிவிடுகின்றார். இதனைச் சேக்கிழார் பெருமான்,

ஐந்துபே ரறிவும் கண்களே கொள்ள
அளப்பரும் கரணங்கள் நான்கும்
சிந்தையே ஆகக் குணம்ஒரு மூன்றும்
திருந்துசாத் துவிகமே ஆக
இந்துவாழ் சடையான் ஆடும்ஆ னந்த
எல்லையில் தனிப்பெருங் கூத்தின்
வந்தபே ரின்ப வெள்ளத்துள் திளைத்து
மாறிலா மகிழ்ச்சியின் மலர்ந்தார்.[2]

என்று காட்டுவர். கூத்தப்பெருமானுக்கு முன்னால் நிற்கும் போது நம்பியாரூரரின் ஐந்து பொறிகளில் கண் ஒன்றே

போன்றது. 21600 தங்க ஓடுகளால் ஆகியது. ஒரு நிமிடத்திற்கு 15 மூச்சு வீதம் 24 மணிநேரம் கொண்ட ஒரு நாளுக்கு 21600 மூச்சு ஆகின்றது. இதுதான் தங்க ஓடுகளின் மொத்த எண்ணிக்கை. இன்னும் இவ்வாறு இக்கோயிலமைப்புக்குப் பல ஒத்துவங்கள் கூறப்பெறும்.

2. பெ.பு : இடுத்தாட்கொண்ட .. 106.

உணர்வுடையதாகி இருக்கின்றது; அஃது ஏனைய நான்கு பொறிகளின் ஆற்றலையும் பெற்று மூர்த்தியின்பால் பதிகின்றது. அங்கே பலவகை ஒலிகள் இருந்தும் அவர் காதில் விழவில்லை. மணம் இருந்தும் அவர் மூக்கு உணரவில்லை. வாயும் உணர்வுடைதாகத் தோன்றவில்லை. கண் ஒன்றே கூத்தன் அழகை விழுங்குகின்றது. அகக் கரணமாகிய மனம், அஃதாவது அந்தக்கரணம், எவ்வாறு இருந்தது ?அந்தக் கரணம் ஒன்றாயினும், செயல்களால் நான்கு பகுதியாகக் கூறப்பெறுகின்றது. அவை மனம், புத்தி, சித்தம், அகங்காரம் என்பவை. மனம் ஒன்றை நினைக்கும்; அதனால் சலிப்படையும்; பிறகு எங்கும் சென்று தாவும். புத்தியோ பொருளை 'இத்தகையது' 'அத்தகையது' என்று வேறு பிரித்தறியும். சித்தம் இது செய்யவேண்டும் என்ற உறுதி பூணும். அகங்காரம் என்பது எப்பொழுதும் தான் இன்னான் என்ற உணர்வுடன் இருப்பது. இந்த நான்கிலும் ஒருமைப்பாடாகிய உறுதியைப் பெறும் பகுதியே சித்தம் ஆகும். அதைச் சிந்தை எனவும் வழங்கலாம். திருக்கூத்தனுடைய காட்சியில் ஒன்றி நிற்கும் சுந்தரமூர்த்தியின் அந்தக்கரணத்தின் நான்கு கூறுகளில் மூன்று செயற்படவில்லை. மனம் வேறொன்றையும் நினைக்காமல் அடங்க, புத்தி ஆராயும் உணர்வில் ஒடுங்க, அகங்காரம் தான் இன்னான் என்று உணரும் ஆற்றலை இழக்க, சிந்தை மட்டிலும் கண்ணால் காணும் காட்சியில் தோய்ந்து நிற்கின்றது.

மனிதர்கள் மூக்குண வயத்தர்கள். அக்குணங்கள் சாத்துவிகம், இராசதம், தாமதம் என்பவையாகும். சாத்துவிகம் அன்போடமைந்திருப்பது; இராசதம் மிடுக்கும் படபடப்பும் உடையது; தாமதம் இழிந்த செயலைச் செய்வதற்கு மூல காரணமாக இருப்பது. மனத்தின் இம்முக்குணங்களும் விரவியே உள்ளன. சிலருக்குத் தாமத குணம் விஞ்சியும், மற்றும் சிலருக்கு இராசத குணம் மிகுந்தும், இன்னும் சிலருக்குச் சத்துவ குணம் அதிகப்பட்டும் இருக்கும். சத்துவ

இந்நகரின் புறத்தே அமைந்த தண்ணிழல் தரும் சோலை களையும் நறுமணம் மிக்க நந்தவனங்களையும் மதிலைச் சூழ்ந்து விளங்கும் கிடங்குகளையும் கடந்து வடதிசை வாயில் வழியாக தில்லை நகரினுள் புகுந்து சிவனடியார்கள் எதிர் கொண்டு போற்ற அழகிய திருவீதியினை வணங்கி வலம் வருகின்றார்.

தில்லைச் சிற்றம்பலவன் வழிபாடு: ஞான மயமான திருச்சிற்றம்பலத்தின் முன்னேயுள்ள திருவணுக்கன் திருவா யிலை நெருங்கி மன்றுள்ளே திருவருட் கூத்தியற்றும் கூத்தப் பெருமானைக் கண்டு அன்பு மீதூரத் தலைமீது கூப்பிய கையினராய்த் திருக்களிற்றுப்படியின் மருங்கே வீழ்ந்து வணங்குகின்றார். அவன் அருட்கூத்தில் மலர்ந்த பேரின்ப வெள்ளத்தில் மூழ்கிவிடுகின்றார். இதனைச் சேக்கிழார் பெருமான்,

ஐந்துபே ரறிவும் கண்களே கொள்ள
அளப்பரும் கரணங்கள் நான்கும்
சிந்தையே ஆகக் குணம்ஒரு மூன்றும்
திருந்துசாத் துவிகமே ஆக
இந்துவாழ் சடையான் ஆடும்ஆ னந்த
எல்லையில் தனிப்பெருங் கூத்தின்
வந்தபே ரின்ப வெள்ளத்துள் திளைத்து
மாறிலா மகிழ்ச்சியின் மலர்ந்தார்.[2]

என்று காட்டுவர். கூத்தப்பெருமானுக்கு முன்னால் நிற்கும் போது நம்பியாரூரரின் ஐந்து பொறிகளில் கண் ஒன்றே

போன்றது. 21600 தங்க ஓடுகளால் ஆகியது. ஒரு நிமிடத்திற்கு 15 மூச்சு வீதம் 24 மணிநேரம் கொண்ட ஒரு நாளுக்கு 21600 மூச்சு ஆகின்றது. இதுதான் தங்க ஓடுகளின் மொத்த எண்ணிக்கை. இன்னும் இவ்வாறு இக்கோயிலமைப்புக்குப் பல தத்துவங்கள் கூறப்பெறும்.
பெ.பு : தடுத்தாட்கொண்ட .. 106.

உணர்வுடையதாகி இருக்கின்றது; அஃது ஏனைய நான்கு பொறிகளின் ஆற்றலையும் பெற்று மூர்த்தியின்பால் பதிகின்றது. அங்கே பலவகை ஒலிகள் இருந்தும் அவர் காதில் விழவில்லை. மணம் இருந்தும் அவர் மூக்கு உணரவில்லை. வாயும் உணர்வுடைதாகத் தோன்றவில்லை. கண் ஒன்றே கூத்தன் அழகை விழுங்குகின்றது. அகக் கரணமாகிய மனம், அஃதாவது அந்தக்கரணம், எவ்வாறு இருந்தது ? அந்தக் கரணம் ஒன்றாயினும், செயல்களால் நான்கு பகுதியாகக் கூறப்பெறுகின்றது. அவை மனம், புத்தி, சித்தம், அகங்காரம் என்பவை. மனம் ஒன்றை நினைக்கும்; அதனால் சலிப்படையும்; பிறகு எங்கும் சென்று தாவும். புத்தியோ பொருளை 'இத்தகையது' 'அத்தகையது' என்று வேறு பிரித்தறியும். சித்தம் இது செய்யவேண்டும் என்ற உறுதி பூணும். அகங்காரம் என்பது எப்பொழுதும் தான் இன்னான் என்ற உணர்வுடன் இருப்பது. இந்த நான்கிலும் ஒருமைப்பாடாகிய உறுதியைப் பெறும் பகுதியே சித்தம் ஆகும். அதைச் சிந்தை எனவும் வழங்கலாம். திருக்கூத்தனுடைய காட்சியில் ஒன்றி நிற்கும் சுந்தரமூர்த்தியின் அந்தக்கரணத்தின் நான்கு கூறுகளில் மூன்று செயற்படவில்லை. மனம் வேறொன்றையும் நினைக்காமல் அடங்க, புத்தி ஆராயும் உணர்வில் ஒடுங்க, அகங்காரம் தான் இன்னான் என்று உணரும் ஆற்றலை இழக்க, சிந்தை மட்டிலும் கண்ணால் காணும் காட்சியில் தோய்ந்து நிற்கின்றது.

மனிதர்கள் மூக்குண வயத்தர்கள். அக்குணங்கள் சாத்துவிகம், இராசதம், தாமதம் என்பவையாகும். சாத்துவிகம் அன்போடமைந்திருப்பது; இராசதம் மிடுக்கும் படபடப்பும் உடையது; தாமதம் இழிந்த செயலைச் செய்வதற்கு மூல காரணமாக இருப்பது. மனத்தின் இம்மூக்குணங்களும் விரவியே உள்ளன. சிலருக்குத் தாமத குணம் விஞ்சியும், மற்றும் சிலருக்கு இராசத குணம் மிகுந்தும், இன்னும் சிலருக்குச் சத்துவ குணம் அதிகப்பட்டும் இருக்கும். சத்துவ

குணம் மிக்கவர்களே உலகிற்கும் தமக்கும் நன்மையைத் தேடுபவர்கள். இக்குணம் மிகுதி ஆக ஆக ஏனைய இரண்டும் மங்கி விடும். இறைவனுடைய நினைவாகவே இருக்கும் இயல் புடையவர்களிடம் சத்துவ குணமே மீதூர்ந்து நிற்கும். சுந்தரர் திருக்கூத்தன் திருக்காட்சியில் கண்ணையும் சிந்தை யையும் பறிகொடுத்து நிற்கையில் சிறிதளவு நின்ற தாமத இராசத குணங்களும் ஒடுங்கிப் போகச் சத்துவ குணம் மட்டிலும் ஒளிர்கின்றது. இறைவன் மயமாகக் கண்ணும் கருத்தும் அமைய அவர் உள்ளம் சத்துவ குணம் என்னும் மணத்தை வீசி மலர்கின்றது. ''தனிப் பெருங்கூத்தின், வந்த பேர் இன்ப வெள்ளத்துள் திளைத்து மாறிலா மகிழ்ச்சியின் மலர்ந்தார்.'' இந்த நிலையே சமாதி நிலைக்கு அழைத்துச் செல்வது.

நம்பியாரூரர் கண்ணைத் திறந்தபடியே சமாதி நிலையில் இருக்கின்றார். இந்துவாழ் சடையான் ஆனந்தக் கூத்தைக் கண்டு நிற்கும் ஆரூரரின் புறக்கண்ணாகிய வாயிலின் வழியாக ஆனந்தக் கூத்தன் உள் புகுகின்றான்; அகக்கண்ணிலும் புகுகின்றான். அங்குள்ள நான்கு வாயில் களிலும் சித்தம் என்னும் வாயிலே திறந்திருக்கின்றது. அதன் வழியாகக் கூத்தும் புகும்பொழுது அவ்வறையில் பிறமணங்க ளெல்லாம் அகன்றொழியச் சத்துவகுண மணமே நிரம்பி நிற்கின்றது. இந்நிலையில் நாவலூரர் கண் திறந்தபடி யிலிருந்தும் காண்கின்றார் இல்லை; சித்தமும் செயற்பட வில்லை; சத்துவ குணமும் தலைக்காட்டவில்லை. அவர் இறைவன் அருட்கூடத்தில் மலர்ந்த பேரின்ப வெள்ளத்தில் மூழ்கிவிடுகின்றார். இவ்வாறு ஆன்மா ஒருமுறை மலர்ந்து விட்டால் அஃது என்றும் வாடாது. இந்த அநுபவத்தை நம்பியாரூரர் பெறுகின்றார். இதைச் சேக்கிழார் பெருமான் கற்பனையில் கண்டு நமக்குத் தருகின்றார்.

கண்ணில்ஆ னந்த அருவிநீர் சொரியக்
கைம்மலர் உச்சிமேற் குவித்துப்
பண்ணினால் நீடி அறிவரும் பதிகம்
பாடினார் பரவினார் பணிந்தார்[3]

என்று காட்டுகின்றார்.

இந்நிலையில் சிற்றம்பலவன் திருவருளால் ''நீ ஆரூரில் நம்பால் வருக'' என்ற திருவருள் மொழி வானில் எழுகின்றது. இந்த அருளாணையைச் சிரமேற்கொண்டு அம்பல வனைத் தொழுது (பதிகம் இல்லை) விடைபெற்றுத் தென் திசை வாயிலாக திருவாரூர் நோக்கிப் புறப்படுகின்றார்.

கழுமலத்தில் கடவுளை போற்றுதல் : நம்பியாரூரர் கொள்ளிட நதியைக் கடந்து கழுமலம் என்னும் சீகாழிப்[4] பதியை அடைகின்றார் (முதல் முறை வருகை). உமையம்மை யின் முலைப் பாலுண்டு வளர்ந்து தமிழ்ப் பாடியருளிய ஞான சம்பந்தப் பெருமான் பிறந்தருளிய தனிச் சிறப்பும் தூய்மை யும் உடையது சீகாழிப்பதி. அத்திருத்தலத்தைத் தம் காலடி களால் மிதித்தல் கூடாது எனக் கருதிய நாவலூரர், அந்நகரத்தின் புற எல்லையை வணங்கி அத்திருப்பதியை வலம் வருகின்றார். அடியவர்கள்பால் ஆரூரர் கொண்ட அன்பின் திறத்தை உணர்ந்து மகிழ்கின்றார் காழிப் பெருமான். உடனே அவருக்கு எதிரே விடைமீது அம்மை யப்பராகத் தோன்றிக் காட்சி தருகின்றார். அத் தெய்வத் திருக்கோலத்தைக் கண்டுகளித்த நம்பியாரூரரின் திரு வுள்ளத்தில்,

சாதலும் பிறத்தலும் தவிர்த்தெனை வகுத்துத்
தன்னருள் தந்தவெந் தலைவனை மலையின்
மாதினை மதித்தங் கோர் பால்கொண்ட மணியை
வருபுனல் சடையிடை வைத்தவெம் மானை

---

3. பெ.பு: தடுத்தாட்கொண்ட - 107.
4. கழுமலம் (சீகாழி) — சிதம்பரத்திற்குத் தெற்கில் இருப்பூர்திப் பாதையில் ஒரு நிலையம். இது மூவர் தேவாரம் 71 பதிகங்களைப் பெற்றது.

குணம் மிக்கவர்களே உலகிற்கும் தமக்கும் நன்மையைத் தேடுபவர்கள். இக்குணம் மிகுதி ஆக ஆக ஏனைய இரண்டும் மங்கி விடும். இறைவனுடைய நினைவாகவே இருக்கும் இயல் புடையவர்களிடம் சத்துவ குணமே மீதூர்ந்து நிற்கும். சுந்தரர் திருக்கூத்தன் திருக்காட்சியில் கண்ணையும் சிந்தை யையும் பறிகொடுத்து நிற்கையில் சிறிதளவு நின்ற தாமத இராசத குணங்களும் ஒடுங்கிப் போகச் சத்துவ குணம் மட்டிலும் ஒளிர்கின்றது. இறைவன் மயமாகக் கண்ணும் கருத்தும் அமைய அவர் உள்ளம் சத்துவ குணம் என்னும் மணத்தை வீசி மலர்கின்றது. ''தனிப் பெருங்கூத்தின், வந்த பேர் இன்ப வெள்ளத்துள் திளைத்து மாறிலா மகிழ்ச்சியின் மலர்ந்தார்.'' இந்த நிலையே சமாதி நிலைக்கு அழைத்துச் செல்வது.

நம்பியாரூரர் கண்ணைத் திறந்தபடியே சமாதி நிலையில் இருக்கின்றார். இந்துவாழ் சடையான் ஆனந்தக் கூத்தைக் கண்டு நிற்கும் ஆரூரரின் புறக்கண்ணாகிய வாயிலின் வழியாக ஆனந்தக் கூத்தன் உள் புகுகின்றான்; அகக்கண்ணிலும் புகுகின்றான். அங்குள்ள நான்கு வாயில் களிலும் சித்தம் என்னும் வாயிலே திறந்திருக்கின்றது. அதன் வழியாகக் கூத்தும் புகும்பொழுது அவ்வறையில் பிறமணங்க ளெல்லாம் அகன்றொழியச் சத்துவகுண மணமே நிரம்பி நிற்கின்றது. இந்நிலையில் நாவலூரர் கண் திறந்தபடி யிலிருந்தும் காண்கின்றார் இல்லை; சித்தமும் செயற்பட வில்லை; சத்துவ குணமும் தலைக்காட்டவில்லை. அவர் இறைவன் அருட்கூடத்தில் மலர்ந்த பேரின்ப வெள்ளத்தில் மூழ்கிவிடுகின்றார். இவ்வாறு ஆன்மா ஒருமுறை மலர்ந்து விட்டால் அஃது என்றும் வாடாது. இந்த அநுபவத்தை நம்பியாரூரர் பெறுகின்றார். இதைச் சேக்கிழார் பெருமான் கற்பனையில் கண்டு நமக்குத் தருகின்றார்.

கண்ணில்ஆ னந்த அருவிநீர் சொரியக்
கைம்மலர் உச்சிமேற் குவித்துப்
பண்ணினால் நீடி அறிவரும் பதிகம்
பாடினார் பரவினார் பணிந்தார்[3]

என்று காட்டுகின்றார்.

இந்நிலையில் சிற்றம்பலவன் திருவருளால் ''நீ ஆரூரில் நம்பால் வருக'' என்ற திருவருள் மொழி வானில் எழுகின்றது. இந்த அருளாணையைச் சிரமேற்கொண்டு அம்பல வனைத் தொழுது (பதிகம் இல்லை) விடைபெற்றுத் தென் திசை வாயிலாக திருவாரூர் நோக்கிப் புறப்படுகின்றார்.

கழுமலத்தில் கடவுளை போற்றுதல் : நம்பியாரூரர் கொள்ளிட நதியைக் கடந்து கழுமலம் என்னும் சீகாழிப்[4] பதியை அடைகின்றார் (முதல் முறை வருகை). உமையம்மை யின் முலைப் பாலுண்டு வளர்ந்து தமிழ்ப் பாடியருளிய ஞான சம்பந்தப் பெருமான் பிறந்தருளிய தனிச் சிறப்பும் தூய்மை யும் உடையது சீகாழிப்பதி. அத்திருத்தலத்தைத் தம் காலடி களால் மிதித்தல் கூடாது எனக் கருதிய நாவலூரர், அந்நகரத்தின் புற எல்லையை வணங்கி அத்திருப்பதியை வலம் வருகின்றார். அடியவர்கள்பால் ஆரூரர் கொண்ட அன்பின் திறத்தை உணர்ந்து மகிழ்கின்றார் காழிப் பெருமான். உடனே அவருக்கு எதிரே விடைமீது அம்மை யப்பராகத் தோன்றிக் காட்சி தருகின்றார். அத் தெய்வத் திருக்கோலத்தைக் கண்டுகளித்த நம்பியாரூரரின் திரு வுள்ளத்தில்,

சாதலும் பிறத்தலும் தவிர்த்தெனை வகுத்துத்
தன்னருள் தந்தவெந் தலைவனை மலையின்
மாதினை மதித்தங்கோர் பால்கொண்ட மணியை
வருபுனல் சடையிடை வைத்தவெம் மானை

---

3. பெ.பு: தடுத்தாட்கொண்ட - 107.
4. கழுமலம் (சீகாழி) — சிதம்பரத்திற்குத் தெற்கில் இருப்பூர்திப் பாதையில் ஒரு நிலையம். இது மூவர் தேவாரம் 71 பதிகங்களைப் பெற்றது.

ஏதிலென் மனத்துக்கோர் இரும்புண்ட நீரை
எண்வகை ஒருவனை எங்கள் பிரானைக்
காதில்வெண் குழையனைக் கடல்கொள மிதந்த
கழுமல வளநகர் கண்டு கொண்டேனே. (1)

என்று முதற்பாடலாக வரும் திருப்பதிகம் (7.58) பிறந்து நம்மை உய்விக்கின்றது. காழிப்பெருமானின் காட்சியில் களித்த ஆரூரர் தம் களிப்பினை, 'கழுமல வளநகர்க் கண்டு கொண்டேனே' என்று பாடல்தோறும் ஒருமுறைக்கு ஒன்பது முறை கூறிப் புலப்படுத்துகின்றார். 'கயிலையில் வீற்றிருக்கும்' நிலையில் கண்ணுதலப்பன் காட்சி கொடுத்ததாக அறிகின்றோம்.

தம்பிரான் தோழர் : கழுமல நாதனைக் கண்டுகளித்த நம்பியாரூரர் திருக்கோலக்கா[5] (முதல்முறை வருகை) திருப்புன்கூர்[6] (முதல் முறை வருகை) முதலிய திருத்தலங்களை வழிபட்டுச் செந்தமிழ்ப் பாமாலைகளைப் பாடிப் போற்றுகின்றார். பின் காவிரி நதியில் நீராடி மயிலாடுதுறை[7]

---

5. கோலக்கா : சீகாழியருகில் உள்ளது. இத்தலத்து ஈசன் சம்பந்தருக்கு ஐந்தெழுத்து வரையப்பெற்ற பொற்றாளங்கள் இரண்டைத் தந்தான். அம்பிகை தாளங்கட்கு ஓசை தந்தாள் (7.62)

6. திருப்புன்கூர்: இத்தலம் வைத்தீசுவரன் கோயிலிலிருந்து 2 கல் தொலைவிலுள்ளது (7.55). திருநாளைப்போவாருக்குத் தேர்நிலையிலிருந்தே காட்சி தத்ததலம்.

7. மயிலாடுதுறை : மாயூரம் டவுன் இருப்பூர்தி நிலையத்திலிருந்து ¼கல்தொலைவு. மாயூரம் சந்திப்பிலிருந்தும் போகலாம். உமையம்மையார் மயில் உருவில் இறைவனை வழிபட்டதலம். காவிரியாற்றின் தென் கலையிலுள்ளது. ஐப்பசி முழுவதும் இங்குத் துலாமுழுக்குச் சிறப்புடையது. கடைசி நாளன்று திருமுழுக்கு மிகச்சிறப்புடையது. கார்த்திகை முதல் நாள் முடவன் முழுக்கு.

(முதல் முறை வருகை) அம்பர் மாகாளம்,[8] திருப்புகலூர் (முதல் முறை வருகை) ஆகிய தலங்களை வழிபட்டுத் திருவாரூரை அடைகின்றார் (அனைத்திலும் இம்முறைப் பயணத்தில் பதிகம் இல்லை). இவர் வருவதற்கு முன்னர் திருவாரூர் இறைவன் அவ்வூரில் வாழும் அடியார்கள்முன் தோன்றி "நம் வன்றொண்டன் நாம் அழைக்க இங்கு வருகின்றான். நீங்கள் அவனுக்கு நன்முறையில் வரவேற்பு நல்குவீர்களாக" என்று கூறி மறைந்தருள்கின்றார். அங்ஙனமே, அடியார்களும் நகர மாந்தரும் திருவாரூரை விழாக்கோலம் கொள்ளச் செய்து மங்கல வாத்தியங்கள் முழங்க ஆரூரரைத் திருமதில் வாயில் புறத்துச் சென்று எதிர் கொண்டு வணங்குகின்றனர். நம்பியாரூரரும் தம்மை எதிர் கொண்டழைத்த அடியார் களைக் கைகூப்பி வணங்கி, "எந்தை இருப்பதும் ஆரூர்; அவர் எம்மையும் ஆள்வரோ கேளீர்" என வினவி வேண்டும் குறிப்புடன்,

---

8. அம்பர் மாகாளம் :மயிலாடுதுறை-காரைக்குடி இருப் பூர்தி வழியில் பூந்தோட்டம் என்ற நிலையத்தி லிருந்து 1 கல்தொலைவு. அம்பர் மாகாளம், அம்பர் பெருந்திருக்கோயில் அடுத்தடுத்து 6 பர்லாங் தொலைவில் உள்ளன. அம்பர் என்ற திருத்தலம் சோமாசிமாற நாயனார் என்ற அந்தணர் வாழ்ந்து வந்த இடம். இங்கு வைகாசி ஆயிலியத்தன்று சோமயாசி யாக உற்சவம் சிறப்பாக நடைபெறும். அரனும் உமையும் புலையன் புலைச்சி உருவில் வேள்விச்சாலைக் கெழுந்தருளி அவிர்ப்பாகம் ஏற்கும் முறையில் உற்சவம் சிறப்பாக நடைபெறு கின்றது (பெரிய புராணத்தில் இது கூறப்பெற வில்லை). துருவாச முனிவர் ஆசியால் மதலோலா என்றதேவகன்னிகைக்குப் பிறந்தஅம்பரன், அம்பன் என்ற அசுரஅம்சம் உடையவர்கள் வாழ்ந்த இடம். திருமால் காளியைத் துணைகொண்டு இருவரை யும் கொன்று விடுகின்றார். வேங்கடம் முதல் குமரி வரையிலே — பொன்னியின் மடியிலே— 20வது கட்டுரையில் விவரம் காண்க.)

கரையும் கடலும் மலையும்
காலையும் மாலையும் எல்லாம்
உரையில் விரவி வருவான்
ஒருவன் உருத்திர லோகன்
வரையின் மடமகள் கேள்வன்
வானவர் தானவர்க் கெல்லாம்
அரையன் இருப்பதும் ஆரூர்அவர்
எம்மையும் ஆள்வரோகேளிர் (7.73:1)

என்ற திருப்பாடலை மூதற்பாடலாகக் கொண்ட சந்த இசைப் பதிகத்தைப் (7.73) பாடிக்கொண்டே திருக்கோயில் வாயிலை அணுகுகின்றார். முதலில் சிவனடியார் வீற்றிருக்கும் சிறப்புடைய திருவாசிரிய மண்டபத்தைக் கை கூப்பித் தொழுகின்றார். புற்றிடங் கொண்ட எம் பெருமான் எழுந்தருளியிருக்கும் திருமூலட்டானத்தைச் சூழ்ந்த திருமாளிகை வாயிலை இறைஞ்சி உள் புகுகின்றார். திருமகளார், மலர் தூவி வழிபடச் செய்யத் திருவருள் புரிந்த பூங்கோயில் அமர்ந்த பெருமான் திருவடிகளை உளங்குளிர இறைஞ்சுகின்றார். அந்த இன்ப வெள்ளத்தில் மூழ்கி நின்று இன்னிசைத் தமிழ் மாலையினைப் பாடிப் பரவுகின்றார்[9]

அப்பொழுது அனைவரும் கேட்கும்படி, "நம்பியாரூரனே, தோழமையாக உனக்கு நம்மைத் தந்தனம்: நீ

9. ஏழுதிருமுறைகளிலும் மிகுதியான பாடல்கள் இத்தலத்திற்கே உண்டு (ஆரூர், சச்சி ஏகம்பம், மறைக்காடு ஆகிய மூன்று தலங்கட்கே ஏழு திருமுறைகளிலும் பதிகங்கள் உண்டு. சீகாழிக்கு மிகுதியான பதிக எண்ணிக்கை 71 இருப்பினும், ஆறாம் திருமுறையுள் ஒருதிருப்பாடல் கூட சீகாழிக்கு இல்லை). சம்பந்தர்-6, அப்பர்-21, சுந்தரர்-8 என்று 35 பதிகங்களைப் பெற்றுள்ளது இத்திருத்தலம். சுந்தரர்: பாடியவை 7.8; 7.37; 7.39; 7.51; 7 59; 7.73; 7.83; 7.95.

எம்மால் தடுத்தாட் கொள்ளப்பெற்ற அன்று நீ பூண்டிருந்த திருமணக் கோலத்தையே எப்பொழுதும் மேற்கொண்டு இந் நிலவுலகில் இன்புற்று வாழ்வாயாக'' என்றதோர் அருள் வாக்கு வானிடையே எழுந்தது.[10] இந்த அருள் மொழியைக் கேட்ட ஆரூரர், ''அடியேனைத் தடுத்தாட்கொள்ள வந்த மறையவனே, ஆரூர் அமர்ந்த அருமணியே, நாயினும் கடை யேனாகிய எளியேனுக்கும் நின் திருவடித் தாமரையைத் தந்தருளியது நின் பெருங் கருணைத் திறமன்றோ?'' என்று கூறிப் புற்றிடங்கொண்ட பெருமானைப் பல முறை வணங்கிப் போற்றுகின்றார். வீதிவிடங்கப் பெருமானாகிய தியாகேசரையும் தொழுது திருமாளிகையை வலம் வருகின் றார். அன்றுமுதல் அடியார்கள் யாவரும் ஆரூரரைத் 'தம்பிரான் தோழர்' என்று அன்பினால் வழங்கிப் போற்று வாராயினர். நம்பியாரூரரும் இறைவன் பணித்த வண்ணம் திருமணக்கோலத்தையே தவக் கோலமாகக் கொண்டு வாழ்ந்து வருகின்றார்.

இரண்டாம் நிலை: பரவையாருடன் இல்வாழ்க்கை நடத்தும்போது குண்டையூரில் பெற்ற நெல்லைத் திருவா ரூரில் சேர்ப்பதற்கு[11] ''நீள நினைந்து'' (7.20) என்ற பதிகம் கோளிலியில் திருக்கோயில் கொண்டுள்ள சிவபெருமான்மீது பாடியதும், கோட்புலி நாயனாரால் உபசரிக்கப் பெற்ற போது நாட்டியத்தான் குடி சென்று ''பூணாணோர் அரவம்'' (7.15) என்ற திருப்பதிகம் பாடியதும், வலிவலம் சென்று ''ஊனங்கத் துயிர்' (7 67) என்ற பதிகத்தால் வழிபட்டதும், பரவையாருக்காகப் பங்குனி உத்திரத் திருவிழாச் செலவுக்குத்

10. பெ.பு: தடுத்தாட் கொண்ட - 127.

11. கோளிலி: 5-வது கட்டுரை 6-வது அடிக்குறிப்பு காண்க.

திருப்புகலூர்[12] பயணம் சென்று பொன்பெற்று "தம்மையே புகழ்ந்து" (7.34) என்ற திருப்பதிகம் பாடிப் போற்றியதும், திருப்பனையூர்ப் பெருமானை வழிபட்டதும் முன்னர்க் காட்டப் பெற்றன (5-ஆவது கட்டுரை).

மூன்றாம் நிலை: மேலும், ஒரு நாள் இறைவன் எழுந்தருவிய திருத்தலங்களைச் சேவிக்க வேண்டும் என்ற எண்ணம் நம்பியாரூரரின் மனத்தில் உதிக்கின்றது. திருவாரூரினின்றும் புறப்பட்டு நன்னிலம் வருகின்றார். நன்னிலம் பெரிய கோயில்[13] சந்நிதியை அடைந்து "தண்ணிழல் வெம்மை யினால்" (7.98) என்ற முதற் குறிப்பினையுடைய திருப் பதிகம்பாடி இறைவனைப் போற்றுகின்றார்.

தண்ணியல் வெம்மையினான்
தயிர்க்கடை தோறும்பலி
பண்ணியல் மென்மொழியார்
இடங்கொண்டுழல் பண்டரங்கன்
புண்ணிய நான்மறையோர்
முறையாலடி போற்றிசைப்ப
நண்ணிய நன்னிலத்துப்
பெருங்கோயில் நயந்தவனே.(1)

---

12. புகலூர் (திருப்புகலூர்): மயிலாடுதுறை-காரைக்குடி இருப்பூர்திப் பாதையில் நன்னிலம் நிலையத்திலிருந்து 4 கல்தொலைவு, பேருந்து யசதி உண்டு. அப்பர் பெருமான் முத்தி பெற்ற தலம். இறைவன் சிறிது சாய்ந்திருப்பதால் கோணப்பிரான் (அப்பர் 4: 104: 10) என்று பாடுவர் அப்பர் பெருமான் (இது வீரட்டம்). அப்பருக்குச் சித்திரை சதயத்தில் 10 நாள் விழா இங்கு நடைபெறுகின்றது.

13. நன்னிலத்துப் பெருங்கோயில்: நன்னிலத்திலிருந்து 3 கல்தொலைவிலுள்ளது. கோச் செங்கட் சோழன் எடுப்பித்த கட்டுமலைக் கோயில் (7,98; 11).

என்பது இத்திருப்பதிகத்தின் முதற் பாடல், அடுத்து திருவீழிமிழலை[14] என்னும் திருத்தலத்திற்கு எழுந்தருளுகின்றார். இறைவன்மீது ''நம்பினார்க்கருளும்'' (7.88) என்று தொடங்கும் செந்தமிழ்த் திருப்பதிகம் பாடிப் போற்றுகின்றார். இப்பதிகத்தின்,

நம்பி னார்க்கருள் செய்யும்அந்தணர்
நான்மறைக்கிட மாயவேள்வியுள்
செம்பொ னேர்மட வாரணி
பெற்ற திருமிழலை
உம்ப ரார்தொழு தேத்தமா மலை
யாளொடும் முடனேயுறைவிடம்
அம்பொன் வீழி கொண்டீர்
அடியேற்கும் அருளுதிரே.(1)

என்பது முதல் பாடல்.

வீழிமிழலையிலிருந்து திருவாஞ்சியம்[15] வருகின்றார். நம்பியாரூரர் வாஞ்சியத் துறையும் பெருமான்மீது ''பொருவனார் புரிநூலார்'' (7.76) என்று தொடங்கும் செந்தமிழ்த் திருப்பதிகம் பாடிப் போற்றுகின்றார்.

---

14. வீழிமிழலை-மயிலாடுதுறை-திருவாரூர்-திருத்துறைப் பூண்டி இருப்பூர்திப் பாதையில் பூந்தோட்டம் என்னும் நிலையத்திலிருந்து 7 கல் தொலைவு. சக்கராயுதம் பெறுவதற்காகத் திருமால் நாடோறும் இத்தலத்து இறைவனை அருச்சித்து வர, ஒருநாள் ஒருமலர் குறையத் தனது கண்ணையே எடுத்து, அருச்சனையை முடிக்கின்றார் (அப்பர்-4.64:8; சுந்த. 7.66:83). பஞ்சம் வந்தபோது அப்பருக்கும் சம்பந்தருக்கும் நாடோறும் காசுபடி தந்தமைப் பாடல் (7.88:8) கூறும்.

15. திருவாஞ்சியம் : நன்னிலத்திலிருந்து 6 கல்தொலைவிலுள்ளது. திருமால் ஸ்ரீ என்னும் இலக்குமியை வாஞ்சித்துச் சிவபுசை செய்து பெற்றமையால் ஸ்ரீவாஞ்சியம் ஆயிற்று. காசிக்கு நிகர் எனப்படும் தலங்களுள் இஃது ஒன்று.

பொருவனார் புரிநூலார்
புணர்முலை உமையவளோடு
மருவனார் மருவார்பால்
வருவதுமில்லை நம்மடிகள்
திருவனார் பணிந்தேத்தும்
திகழ்திருவாஞ் சியத்துறையும்
ஒருவனார் அடியாரை
யூழ்வினை நலிய வொட்டாரே.(1)

என்பது பதிகத்தின் முதற் பாடல். வாஞ்சியத்தைவிட்டு நறையூர்ச் சித்தீச்சரம்[16] என்னும் திருத்தலத்தை வந்தடைகின்றார். இங்கு எழுந்தருளியிருக்கும் பெருமான்மீது "நீரும் மலரும்" (7.93) என்ற முதற் குறிப்புடைய செந்தமிழ்ப் பதிகம் பாடிப் போற்றுகின்றார்.

நீரும் மலரும் நிலவும் சடைமேல்
ஊரும் அரவம் உடையான் இடமாம்
வாரும் அருவி மணிபொன் கொழித்துச்
சேரும் நறையூர்ச் சித்தீச் சரமே.(1)

என்பது திருப்பதிகத்தின் முதற் பாடல்.

சித்தீச்சரத்திலிருந்து அரிசிற்கரைப் புத்தூர்[17] என்னும் திருத்தலத்துக்கு வருகின்றார் நாவலூரர். "மலைக்கு மகளஞ்ச" (7.9) என்று தொடங்கும் திருப்பதிகம் பாடி வழுத்துகின்றார் புத்தூர்ப் பெருமானை.

---

16. நறையூர்ச் சித்தீச்சரம்: கும்பகோணத்திலிருந்து 5 கல்தொலைவு. நாச்சியார் கோயில் போகும் பேருந்து வழியில் உள்ளது.

17. அரிசிற்கரைப் புத்தூர் (அழகார் புத்தூர்): இது கும்பகோணத்திலிருந்து 4 கல் தொலைவிலுள்ளது. தளர் வெய்திய முதுமை நிலையிலும், தவிராது நாள் தோறும் மும்போதும் திருமேனி தீண்டிப் பூசனை புரிபவர் புகழ்த்துணை நாயனார் (அறுபத்து மூவருள் ஒருவர்) திருமுழுக்காட்டும்போது ஒரு நாள்

அகத்தடிமை செய்யும் அந்தணன்தான்
அரிசிற்புனல் கொண்டுவந் தாட்டுகின்றான்
மிகத்தளர் வெய்திக் குடத்ததும்
முடிமேல் விழுந்திட்டு நடுங்குதலும்
வகுத்தவனுக்கு நித்தற் படியும்
வருமென்றொரு காசினை நின்றநன்றிப்
புகழ்த்துணை கைபுகச் செய்துகந்தீர்
பொழிலார்திருப் புத்தூர் புனிதனீரே. (6)

என்பது பதிகத்தின் ஆறாவது பாடல். இதில் புகழ்த்துணை யார்பற்றிக் குறிப்பு உள்ளது.

புத்தூரிலிருந்து நம்பியாரூரர் திருவாவடுதுறையை[18] வந்து அடைகின்றனர் (இது முதல்முறை வருகை). ஆடு துறைப் பெருமான்மீது "மறையவனேர்" (7.66) என்று செந்தமிழ்ப் பதிகம் பாடி ஏத்துகின்றார். இப்பதிகத்தில்,

---

குடம் நழுவிச் சிவலிங்கத் திருமேனிமேல் விழுந்தது. இந்த அபராதத்திற்கு அஞ்சிய நாயனாருக்கு இறைவன் அபயம் அளித்து ஓய்வு கொடுத்து அவர் உணவுக்காக நாடோறும் ஒரு பொற்காசு கொடுத்து வந்தாக (சம்பந்தர் 2.63:7), (சுந்தரர் 7.9:6) என்ற திருப்பாடல்கள் குறிப்பிடும்.

18. திருவாவடுதுறை: விழுப்புரம் - மாயூரம் - தஞ்சை இருப்பூர்திப் பாதையில் உள்ள நாரசிங்கன் பேட்டையிலிருந்து ½ கல் தொலைவிலுள்ளது. திருமூலநாயனார் திருமந்திரம் அருளிச் செய்த தலம். சம்பந்தர் தமது தந்தையார் வேள்வி செய்தற் பொருட்டு இறைவனைப் பாடி 1000 பொன் பெற்று அதைக் கொடுத்ததைச் சம்பந்தர் தேவாரம் (4.56;1) கூறும், திருவிசைப்பாபாடிய திருமாளிகைத் தேவர் தொடர்பும் இத்தலத்துக்கு உண்டு. திருவாவடுதுறை ஆதீனத் தலைமைத் திருமடம் இங்கு உள்ளது.

தெருண்ட வாயிடை நூல்கொண்டு சிலந்தி
சித்திரப் பந்தர் சிக்கென இயற்ற
சுருண்ட கெஞ்சடை யாயது தன்னைச்
சோழ னாக்கிய தொடர்ச்சிகண் டடியேன்
புரண்டு வீழ்ந்துநின் பொன்மலர்ப் பாதம்
போற்றி போற்றிஎன் றன்பொடு புலம்பி
அருண்டென் மேல்வினைக் கஞ்சிவந் தடைந்தேன்
ஆவடுதுறை யாதிஎம் மானே.(2)

என்பது இப்பதிகத்தின் இரண்டாவது பாடல்.

காவிரியின் தென்கரையிலுள்ள சில தலங்களை வழிபட்டுக் கொண்டு திருவிடைமருதூர்[19] வந்து அடைகின்றார் முனைப்பாடித் தலைவர். ஆவடுதுறை அப்பன்மீது "கழுதை குங்குமம்" (7.60) என்று தொடங்கும் செந்தமிழ்த் திருப்பதிகம் அருளிப் போற்றுகின்றார்.

மூந்திச் செய்வினை இம்மைக்கண் நலிய
மூர்க்க னாகிக் கழிந்தன காலஞ்
சிந்தித் தேமனம் வைக்கவும் மாட்டேன்
சிறுச்சிறி தேவிரப் பார்கட் கொன்றீயேன்
அந்தி வெண்பிறை சூடும் எம்மானே
ஆரூர் மேவிய அமரர்கள் தலைவா!
எந்தை நீயெனக் குய்வகை அருளாய்
இடைமரு துறை எந்தை பிரானே. (4)

என்பது இப்பதிகத்தின் நான்காவது பாடல்.

---

19. திருவிடைமருதூர் (திருவிடமருதூர்): மயிலாடுதுறை -தஞ்சை இருப்பூர்திப் பாதையில் உள்ளது. வரகுண பாண்டியன் பெரும்புகழ் வரலாற்றுத் தொடர்பு உடையது. பட்டினத்தடிகள் வழிபட்ட தலம் அவர் அருளிய மும்மணிக் கோவை பெற்றது. இங்குத் தைப்பூசத்தில் காவிரியில் நீராடுதல் சிறந்தது (பெ பு; ஏயர்கோன்- 64 காண்க).

திருவிடைமருதூரினின்றும் புறப்பட்டுத் தொண்டர் குழாம் சூழ திருநாகேச்சரம்[20] என்ற தலத்திற்கு எழுந்தருள் கின்றார் நம்பியாரூரர். ‘பிறைணிவாள் நுதலாள்’’ (7.99) என்ற திருப்பதிகம் பாடி தேவர் பெருமான் கழல் வணங்கி உருகுஞ் சிந்தையராகின்றார்.

பிறையணி வாணுதலாள்
உமையாளவள் பேழ்கணிக்க
நிறையணி நெஞ்சனுங்க
நீலமால்விடம் உண்டதென்னே
குறையணி கொல்லை முல்லை
அளைந்துகுளிர் மாதவிமேல்
சிறையணி வண்டுகள்சேர்
திருநாகேச் சரத்தாரே. (1)

என்பது பதிகத்தின் முதற் பாடல். திரு நாகேச்சரத்திலிருந்து சிவபுரம்[21] வருகின்றார். இறைவனை வழி படுகின்றார் (பதிகம் இல்லை). அடுத்து நாவலூர்ப் பெருமான் அருகிலுள்ள சிவத் தலங்களையெல்லாம் வழிபட்டுக் கொண்டு கலயநல்லூர்[22] வந்தடைகின்றார். ‘குரும்பை மலர்க் குழலி’ (7.16) என்று தொடங்கும் திருப்பதிகம் பாடி இத்தலத்து இறைவனைப் போற்றுகின்றார்.

---

20 நாகேச்சரம் (திருநாகேஸ்வரம்). கும்பகோணத் திலிருந்து பேருந்து வசதி உண்டு. சேக்கிழார் அடிகள் பெரிதும் ஈடுபட்டதலம். தாம் குன்றத்தூரில் கட்டிய திருக்கோயிலுக்கும் திருநாகேஸ்வரம் என்றே பெயரிட்டனர். சந்திரன் சூரியன் ஐந்தலை நாகம் பூசித்ததை அப்பர் பெருமான் (அப்பர் தேவாரம் 5 52;1) குறிப்பிடுவர்.

21. சிவபுரம்: கும்பகோணத்திலிருந்து 1½கல் தொலை வில் உள்ளது. திருமால் வராக உருவில் இத்தலத்து இறைவனைப் பூசித்ததாகப் புராண வரலாறு உள்ளது.

22. கலயநல்லூர் (சாக்கோட்டை), கும்பகோணத்தி லிருந்து 2 கல் தொலைவிலுள்ளது.

குரும்பைமுலை மலர்க்குழலி கொண்டதவம் கண்டு
குறிப்பினொடும் சென்றவள்தன் குணத்
தினைநன் கறிந்து
விரும்புவரம் கொடுத்தவளை வேட்டருளிச் செய்த
விண்ணவர்கோன் கண்ணுதலோன் மேவியவூர்
வினவில்
அரும்பருகே சுரும்பருவ அறுபதம்பண் பாட
அணிமயில்கள் நடமாடும் அணிபொழில்சூ ழயலின்
கரும்பருகே கருங்குவளை கண்வளரும் கழனிக்
கமலங்கள் முகமலரும் கலய நல்லூர் காணே. (1)

என்பது பதிகத்தின் பாடல், பாடல்களின் இறுதிப் பகுதியில் இயற்கை வருணனை அடங்கியுள்ளது. இப்பதிகம் பல புராணக் கதைகளையும் கொண்டது. இதனைச் சேக்கிழார் பெருமான்,

மெய்ம்மைப் புராணம் பலவுமிகச்
சிறப்பித் திசையின் விளம்பினார்.[23]

என்று குறிப்பிடுவர்.

கலயநல்லூரிலிருந்து குடமூக்கிற்குத்[24] தம் தொண்டர்களுடன் எழுந்தருள்கின்றார். கும்பேசுரரை வணங்கிப்

23. பெ பு ஏயர்கோன்-67.

24. குடமூக்கு -கும்பகோணம் (கும்பேசுவரர் கோயில்): 12 ஆண்டுகட்கு ஒருமுறை நடைபெறும் மகாமகம் என்ற பெருவிழாவில் (மாமாங்கம் என்பது உலக வழக்கு). கும்பசுவரர் வெள்ளி இடப வாகனத்தில் பஞ்ச மூர்த்திகளுடன் எழுந்தருளிவந்து மகாமகக் குளக்கரையில் தீர்த்தம் கொடுப்பர். அப்போது பல இலட்சக்கணக்கான மக்கள் குளத்துள் முழுவதும் நின்று தீர்த்தமாடித் தரிசனம் செய்வார்கள், பழைய நீர் அகற்றப்பட்டு, ஆற்று மணல் பரப்பி, முழங்கால் அளவுக்கு புதியநீர் விட்டப்பெறும்; இக் குளத்துநீரில் மூழ்குவதால்இந்தியாவிலுள்ள கங்கை, யமுனை, கோதாவிரி, கிருஷ்ணை, பெண்ணை, தண் பொருநை, குமரி முதலிய எல்லாத் தீர்த்தங்களிலும் முழுகும் பலன் கிடைக்கும் என்பது புராணவரலாறு.

போற்றுகின்றார் (பதிகம் இல்லை). குடமூக்கினின்றும் வலஞ் சுழிக்கு[25] வருகின்றார்; வழிபடுகின்றார் (பதிகம் இல்லை). வலஞ்சுழியை விட்டு நல்லூர் வருகின்றார்; நல்லூர் இறை வனை வழிபடுகின்றார் (பதிகம் இல்லை). நல்லூரை நீங்கிச் சோற்றுத்துறை[26] வருகின்றார்; அழநீரொழுகியனைய (7.94) என்று தொடங்கும் பதிகம் பாடி இறைவனைப் போற்று கின்றார்.

அழனீ ரொழுகி யனைய சடையும்
உழையீ ருரியும் உடையான் இடமாம்
கழைநீர் முத்தும் கனகக் குவையும்
சுழநீர்ப் பொன்னிச் சோற்றுத் துறையே. (1)

என்பது இப்பதிகத்தின் முதற் பாடல்.

---

25. வலஞ்சுழி (திருவலஞ்சுழி): இது சுவாமி மலை. இருப்பூர்தி நிலையம், கும்பகோணத்திலிருந்து பேருந்தில் வருவதே சிறந்தது.
26. நல்லூர்-நல்லூர்ப் பெருமணம் (ஆச்சாபுரம்): விழுப் புரம் - மயிலாடுதுறை இருப்பூர்தி வழியிலுள்ள கொள்ளடம் என்ற நிலையத்திலிருந்து 3 கல் தொலைவிலுள்ளது. சம்பந்தர் திருமணம் நடை பெற்றதலம். திருமணத்திற்கு வந்தோர் அனை வருக்கும் வீடுபேறு அருளிய அற்புதத்தலம். திருநீல நக்கர், முருகநாயனார், நீலகண்ட யாழ்ப்பாணர், சிவபாத இருதயர், மூத்துச் சிவிகை தாங்குவோர் முதலிய பரிசனங்கள் திருமணம் காணவந்தோர் ஆண்-பெண் அனைவரும் சோதியுட் கலந்த பிறகு சம்பந்தர் தம் காதலியைக் கைப்பற்றிச் சோதியுட் புக்கு ஒன்றி உடனாய் முத்திபெற்ற தலம். இதைத் துறைமங்கலம் சிவப்பிரகாச அடிகள் முதலிய பல பெரியார்கள் பாராட்டியுள்ளனர் இத்திருநாள் வைகாசி மூலந்தோறும் நடைபெற்று வருகின்றது
27. சோற்றுத்துறை -தஞ்சையிலிருந்து 7½ கல் தொலை விலுள்ளது.

அடுத்து கண்டியூர்,[28] ஐயாறு[29] (முதல் முறை வருகை), பூந்துருத்தி[30] ஆகிய தலங்களை இறைஞ்சித் திருவாலம் பொழிலை[31] அடைந்து இறைவனை வணங்கி (பதிகம் இல்லை) அங்குத் தங்கியிருக்கின்றார். அன்றிரவு அவர் துயிலும்பொழுது சிவபெருமான் அவரது கனவில் தோன்றி "மழபாடியினில் வருவதற்கு நினைக்க மறந்தாயோ?" என வினவி மறைந்தருளுகின்றார். துயிலுணர்ந்த தம்பிரான் தோழர் காவிரியைக் கடந்து அதன்வடகரையை அடைந்து திருமழபாடிக்கு[32] வருகின்றார். வந்தவர்,

---

28. கண்டியூர்-தஞ்சையிலிருந்து திருவையாறு செல்லும் பேருந்து வழியில் 6 கல் தொலைவிலுள்ளது. ஐந்து சிரங்களையுடைய பிரமன் சிவனுடன் சமத்துவம் கொண்டாடித் தருக்குற்றிருந்த படியால் தேவர் களின் வேண்டுகோட் கிரங்கி, அவனுடைய ஐந்தா வது சிரசைச் சிவன் கண்டித்தெறிந்தமையால் கண்டியூர் வீரட்டம் ஆயிற்று. சப்தஸ்தான தலங் களுள் ஒன்று.

29. ஐயாறு- 12-வது கட்டுரை அடிக்குறிப்பு 34 காண்க.

30. பூந்துருத்தி (திருப்பூந்துருத்தி) : தஞ்சையிலிருந்து 8 கல் தொலைவிலுள்ளது. சப்தஸ்தான தலங்களுள் ஒன்று. அப்பர் அடிகள் இங்குத் திருமடம் அமைத்துப் பல பொதுப் பதிகங்கள் அருளினார். இத்திருமட ச் சிதைவினை இன்றும் காணலாம். பாண்டி நாட்டில் சைவம் பரப்பித் திரும்பும்வழியில் சம்பந்தர் அப்பரைக் காண இத்தலத்தருகில் வரும்போது, ஒருவரும் காணாதபடி முத்துச் சிவிகையைத் தாங்கும் தொண்டர்களோடு அப்பர் உள்நுழைந்து தாங்கி வந்தனர். இதையறிந்தவுடன் சம்பந்தர் கீழ் இழிந்து ஒருவரைவொருவர் வணங்கி அளவளா வினர் (பதிகம் இல்லை).

31. திருவாலம் பொழில் தஞ்சையிலிருந்து 7 கல் தொலைவிலுள்ளது; சப்தஸ்தான தலங்களில் ஒன்று. திருப்பூந்துருத்தியிலிருந்து 1 கல் தொலைவு.

32. மழபாடி (திருமழுவாடி) திருவையாற்றிலிருந்து 4 கல் தொலைவு. (கொள்ளிடந்தியைக் கடக்க வேண்டும்). திருமால் வழிபட்ட தலம் (சம்பந்தர்

"பொன்னார் மேனியனே" (7.24) என்னும் செந்தமிழ்ப் பதிகம் பாடி மழபாடி மாணிக்கத்தைப் போற்றுகின்றனர்.

பொன்னார் மேனியனே
புலித்தோலை யரைக்கசைத்து
மின்னார் செஞ்சடைமேல்
மிளிர்க்கொன்றை யணிந்தவனே
மன்னே மாமணியே
மழபாடியுள் மாணிக்கமே
அன்னே யுன்னையல்லால்
இனியாரை நினைக்கேனே. (1)

என்பது இப்பதிகத்தின் முதற் பாடல்| பாடல்தோறும் 'மழபாடி மாணிக்கம்' ஒளிவிட்டுக் காட்டுவதைக் கண்டு மகிழலாம்.

இத்தலத்தில் சில நாட்கள் தங்கியிருந்து காவிரியின் இருமருங்குமுள்ள தலங்களை வழிபடத் திருவுள்ளங் கொள்ளுகின்றார் நம்பியாரூரர். முதலில் சிலந்திக்கு அருள் செய்த திருவானைக்கா[33] வருகின்றார். வந்தவர், இத்

3.28:6). பங்குனி உத்திரத்தன்று திருநந்திதேவரின் திருமணத்தைத் திருவையாற்றிலிருந்து ஐயாறப்பர் எழுந்தருளி வந்து நடத்தி வைக்கின்றார்.

33. ஆனைக்கா (திருவானைக்கா—ஜம்புகேஸ்வரம்): திருச்சியிலிருந்து 2 கல் தொலைவு. பஞ்சபூதங்களுள் இது நீர் அல்லது அப்புதலம். இது காவிரிக்கும் கொள்ளிடத்திற்கு இடைப்பட்டு, மூலத்தானம் இவ்வாறுகளின் தரைமட்டத்திற்குக் கீழ் இருப்பதால் எப்போதும் நீர்க்கசிவு இருக்கும்; ஆறுகளின் வெள்ளக்காலத்தில் ஓயாமல் இறைத்துக் கொண்டே இருந்தாலன்றி சம்புகேசுரவமூர்த்தியைச் சேவிக்க முடியாது. இறைப்பதற்கே எண்ணெய்ப்பொறி தனியாகவுள்ளது. யானைக்கும் சிலந்திக்கும் முத்தி அளித்த தலம். அம்பிக்கை அகிலாண்டேசுவரியின் திருவுருவம் அழகும் அருளும் நிரம்பியது. கச்சியப்ப முனிவர் இத்தலத்திற்கு அருமையான புராணம் ஒன்று இயற்றியுள்ளார்.

தலத்துப் பெருமான்மீது "மறைகளாயின நான்கும்" (7.75) என்று தொடங்கும் செந்தமிழ்த் திருப்பதிகம் பாடிப் போற்றித் துதிக்கின்றார்.

தந்தையா யுலகுக்கோர் தத்துவன்
மெய்த்தவத் தோர்க்குப்
பந்தமாயின் பெருமான் பரிசுடை
யவர்திரு வடிகள்
அந்தண் பூம்புனல் ஆனைக்காவுடை
ஆதியை நாளும்
எந்தை என்றடி சேர்வார்
எம்மையும் ஆளுடையாரே. (4)

என்பது பதிகத்தின் நான்காவது பாடல், பாடல்தோறும் 'ஆனைக்கா அண்ணலைப் பணிவோர் எம்மையும் ஆளாக வுடையார்' எனப்போற்றி மகிழ்கின்றார்.

பின்னர் 'ஆனைக்காவுடை ஆதியிடம்' விடைபெற்றுக் கொண்டு பாச்சிலாச்சிராமத்தை[34] அடைகின்றார் அடைந்தவர் "வைத்தனன்றனக்கே" (7.14) என்ற முதற்குறிப்புடைய செந்தமிழ்ப் பதிகம் பாடித் துதிக்கின்றார். இவ்வூர் இறைவனை, தமக்குப் பொன் தந்தருளவேண்டும் என்னும் குறிப்புடன் வணங்க, இறைவனும் பொன்னைத் தந்தருளாமையால் அவர்பால் முறைப்பாடுடையவராய் மனம் புழுங்கி நின்று,

---

34. பாச்சிலாச்சிராமம் (திருவாசி): விழுப்புரம்-விருத்தாசலம்-திருச்சி இருப்பூர்தி வழியில் பிட்சாண்டார் கோயில் என்ற நிலையத்திலிருந்து 2½ கல் தொலைவிலுள்ளது. கொல்லிமழவன் புதல்வியின் முயலகன் நோயைச் சம்பந்தர் தீர்த்த அற்புதத் தலம், இத் தலத்து நடராசரின் ஊன்றிய திருவடியில் முயலகன் இல்லை.

வைத்தனன் றனக்கே தலையுமென்னாவும்
நெஞ்சமும் வஞ்சமொன் றின்றி
உய்ந்தனன் றனக்கே திருவடிக்கடிமை
யுரைத்தக்கால் உவமனே ஒக்கும்
பைத்தபாம் பார்த்தோர் கோவணத்தோடு
பாச்சிலாச் சிராமத்தெம் பரமர்
பித்தரே யொத்தோர் நச்சிலாராகில்
இவரலாது இல்லையே பிரானார்.(1)

என்று பாடுகின்றார். பாடல்தோறும் 'இவரலாது இல்லையோ பிரானார்' என்று இகழ்ந்து கூறுகின்றார். இப் பதிகத் திருக்கடைக்காப்பாக

ஏசின வல்ல இகழ்ந்தன வல்ல
எம்பெருமா னென்றெப் போதும்
பாயின புகழான் பாச்சிலாச் சிராமத்
தடிகளை அடிதொழப் பன்னாள்
வாயினாற் கூறி மனத்தினால் நினைவன்
வளவயல் நாவலா ரூரன்
பேசின பேச்சைப் பொறுத்தில ராகில்
இவரலா தில்லையோ பிரானார்.(10)

என வரும் பாடலில் இவ்வாறு இகழ்ந்துரைத்ததையும் பொறுத்து அருள் புரிதல் இறைவனது கடமை என்பதனை அன்பினால் வற்புறுத்திப் போற்றுகின்றார். நேசம் நிறைந்த நெஞ்சினராகிய அடியார்கள் ஏசினாலும் இகழ்ந்துரைத்தாலும் உவகை மிக்கு அருள்புரியும் கண்ணுதலப்பன், அன்புடைத் தோழராகிய நாவலூராரது பேரன்பின் பெற்றிக்கு உளமுவந்து அவர் வேண்டும் பொருட்குவையினை ஈந்தருள்கின்றார்.

இங்ஙனம் இகழ்ந்துரைத்தலாகிய புன்மையைச் செய்த நிலையிலும் பேரருளாளராகிய பெம்மான் அப்பெரும்

பிழையைப் பொறுத்துக் பொருட்குவையைத் தந்தருவிய அற்புத நிகழ்ச்சியை,

புன்மைகள் பேசவும் பொன்னைத்
தந்தென்னைப் போகம் புணர்த்த
நன்மையி னார்க்கிட மாவது
நந்திரு நாவ லூரே (7.17:12)

எனத் தம்பிரான் தோழர் நினைந்துருகிப் போற்றியுள்ளமை ஈண்டு நினைத்தல் தகும்.

இங்ஙனம் பாச்சிலாச்சிராமத்துப் பரமரிடமிருந்து பொன் பெற்ற பரவையார் கணவர் பாச்சிலாச்சிராமத்தினின்றும் புறப்பட்டுப் பைஞ்ஞீலி[35] என்னும் திருத்தலத்தை அடைகின்றார். இத்தலத்து இறைவனாகிய ஆரணீய விடங்கரைக் "காருலாவிய" (7.36) என்ற முதற்குறிப்புடைய செந்தமிழ்த் திருப்பதிகம் பாடிப் போற்றுகின்றார்.

காருலாவிய நஞ்சை யுண்டிருள்
கண்டர் வெண்டலை யோடுகொண்
டுரெலாந்திரிந் தென்செய் வீர்பலி
யோரிடத் திலேகொள் ளுநீர்
ஆரமாவது நாக மோசொலும்
ஆர ணீய வீடங்கரே. (1)

என்பது இப்பதிகத்தின் முதல் பாடல். அடுத்து ஈங்கோய் மலை[36] (பதிகம் இல்லை). விமலர்பதி பல வணங்கிக் கொங்கு

---

35 பைஞ்ஞீலி (திருப்பைஞ்ஞீலி): பிட்சாண்டார் கோயிலிலிருந்து 3 கல் தொலைவிலுள்ளது. மணச்ச நல்லூர் என்ற ஊரின் அருகில் உள்ளது. அப்பர் அடிகட்கு இறைவன் கட்டமுது கொடுத்த அற்புதத் தலம்.

36. ஈங்கோய்மலை (திருவிங்கநாதமலை): இதுமுசிறிக்கு மேற்கே உ கல் தொலைவில் திருச்சி-சேலம் பேருந்து வழியிலுள்ளது. அகத்திய முனிவர் ஈ உருவாய்

நாட்டை அடைகின்றார். இங்குள்ள சில திருப்பதிகளை[37] வணங்கி மீண்டும் சோழநாடு திரும்புகின்றார்.

முதலில் திருச்சியருகேயுள்ள கற்குடி[38] என்ற திருத்தலத்தை அடைகின்றார். ''விடையாருங் கொடியாய்'' (7.27) என்ற முதற்குறிப்புடைய செந்தமிழ்ப் பதிகம் பாடிக் கற்குடியில் எழுந்தருளியிருக்கும் இறைவனை இறைஞ்சுகின்றார்.

விடையாருங் கொடியாய்
வெறியார்மலர்க் கொன்றையினாய்
படையார் வெண்மழுவா
பரமாய பரம்பரனே
கடியார் பூம்பொழில்சூழ்
திருக்கற்குடி மன்னிநின்ற
அடிகேள் எம்பெருமான்
அடியேனையும் அஞ்சலென்னே. (1)

என்பது பதிகத்தின் முதற் பாடல்.

கொண்டு பூசித்த தலம். காலையில் கடம்பத்துறை (கடம்பர் கோயில் - குழித்தலையின் மேற்கே 1 கல் தொலைவு) கட்டுச்சியில் வாட்போக்கி (இரத்நகிரி - குழித்தலையிலிருந்து 5 கல் தொலைவு) மாலையில் இத்தலம் ஆகிய மூன்றையும் கார்த்திகை சோம வாரங்களில் சேவிப்பது இந்நாட்டு மக்களுடைய புண்ணியச் செயல்.

37. கொங்கு நாட்டுத் திருத்தலப் பயணம் — என்ற தலைப்பில் விவரிக்கப் பெற்றுள்ளன (13 வது கட்டுரை)

38. கற்குடி (உய்யக் கொண்டான் மலை); இது விழுப்புரம் - விருத்தாசலம் - திருச்சி இருப்பூர்தி வழியில் உள்ள திருச்சி டவுன் நிலையத்திலிருந்து 2 கல் தொலைவில் உள்ளது. சிறியமலைமேல் கோயில் உள்ளது.

அடுத்து ஆறைமேற்றளி[39], இன்னம்பர்,[40] இவற்றைச் சேவித்துக் கொண்டு (பதிகம் இல்லை) திருப்புறம்பயம்[41] வருகின்றார். இறைவன்மீது "அங்க மோதியோராறை மேற்றளி நின்றும்" (7.35) என்று தொடங்கும் செந்தமிழ்த் திருப்பதிகம் பாடிப் போற்றுகின்றார்.

முன்னைச் செய்வினை இம்மையில்
வந்து மூடுமாதலின் முன்னமே
என்னை நீதியக்காதெழு
மடநெஞ்சமே எந்தை தந்தையூர்
அன்னச் சேவலோ டுடிப் பேடைகள்
கூடிச் சேரும் அணிபொழில்
புன்னைக் கன்னிகழிக்கணாறும்
புறம்ப யந்தொழப் போதுமே. (7)

என்பது இப்பதிகத்தின் ஏழாம் பாடல். அடுத்து, நடுநாட்டை அணுகியவர் அங்குள்ள சிலதலங்களை[42] வழிப்பட்டுக்

---

39. ஆறைமேற்றளி – (வை.த.): சுவாமிமலை இருப்பூர்தி நிலையத்திலிருந்து தெற்கே ஒரு கல் தொலைவில் திருமேற்றளி என்ற பெயருடன் உளது. (சுந். 7.35:1)

40. இன்னம்பர் (இன்னம்பூர்): கும்பகோணத்திலிருந்து 4½ கல் தொலைவிலுள்ளது.

41. புறம்பயம் (திருப்புறம்பயம்): கும்பகோணத்திலிருந்து 6 கல் தொலைவிலுள்ளது. சங்க காலத்தில் இங்குப் பாண்டியனுக்கும் சோழனுக்கும் போர் நடந்தது. கோச் செங்கட்சோழன் வெற்றி பெற்றுத் தென்னவனாய் உலகாண்டான் (7.39:11). திருமருகல் வரலாற்றைப்போல் இங்கும் ஒரு வணிகப் பெண்ணின் திருமணத்தை மெய்ப்பிக்க இறைவன் சான்று பகர்ந்ததனால் தலத்து இறைவனுக்குச் சாட்சி நாதேசுவரர் என்ற பெயர் பெற்றுள்ளார்.

42. நடுநாட்டுத் திருத்தல வழிபாடு - என்ற தலைப்பில் விவரிக்கப் பெற்றுள்ளன (4 - வது கட்டுரை)

கொண்டுக் கடம்பூரை[43] அடைகின்றார். அவ்வூர் இறை வனை வழிபட்டுத் (பதிகம் இல்லை) திருத்தில்லையை அடை கின்றார். "மடித்தாடும் அடிமைக் கண் அன்றியே" (7.90) என்று திருப்பதிகம் பாடித் தில்லைச் சிற்றம்பலவரை வழுத்து கின்றார்.

மடித்தாடும் அடிமைக்கண் அன்றியே
மன்னேநீ வாழு நாளும்
தடுத்தாட்டித் தருமனார்தமர் செக்கி
லிடும்போது தடுதாட் கொள்வான்
கடுத்தாடும் கரதலத்தில் தமருகமும்
எரியகலும் கரிய பாம்பும்
பிடித்தாடி புலியூர்ச்சிற் றம்பலத்தெம்
பெருமானைப் பெற்றா மன்றே. (1)

என்பது இப்பதிகத்தின் முதற் பாடல். இப்பதிகத் திருக்கடைக் காப்பில் "மீகொங்கில் அணிகாஞ்சிவாய்ப் பெரூர்ப் பெரு மானைப் புலியூர்ச் சிற்றம்பலத்தே பெற்றாமன்றே" என்று தாம் தில்லையம்பலவன் திருக்கூத்தினைப் பேரூரில் கண்டு மகிழ்ந்த நிகழ்ச்சியைச் சிறப்பித்துப் போற்றுவதைக் கண்டு மகிழலாம்.

சிற்றம்பலவனிடம் விடை பெற்றுக்கொண்டு கருப் பறியலூர்[44] என்ற திருத்தலத்தை அடைகின்றார். இங்கு

43. கடம்பூர் : சிதம்பரத்திலிருந்து 15 கல் தொலைவு; காட்டுமன்னார் குடியிலிருந்து 3 கல் தொலைவு. ஆலயம் கரக்கோயில். இரதம், சக்கரம், குதிரை அமைந்துள்ள சிற்பமுறையில் கருவறை அமைந் துள்ளது.

44. கருப்பறியலூர் (தலைஞாயிறு) : இத்தலம் எழுப்பூர்-விழுப்புரம்-மயிலாடுதுறை இருப்பூர்த்திப் பாதையில் உள்ள வைத்தீஸ்வரன் கோயிலிலிருந்து 5 கல் தொலைவிலுள்ளது. கோயிற் பெயர் "கொகுடிக் கோயில்" (பெ. பு. ஏயர்கோன் - 117).

எழுந்தருளியுள்ள இறைவன்மீது ''சிம்மாந்து'' (7.30) என்ற முதற் குறிப்புடைய செந்தமிழ்ப் பதிகம் பாடிப் போற்று கின்றார்.

சிம்மாந்து சிம்புளித்துச் சிந்தையினில்
வைத்துகந்து திறம்பா வண்ணம்
கைம்மாவின் உரிவைபோர்த் துமைவெருவக்
சண்டானைக் கருப்ப றியலூர்க்
கொய்ம்மாவின் மலர்ச்சோலைக் குயில்பாட
மயிலாடும் கொகுடிக் கோயில்
எம்மானை மனத்தினால் நினைந்தபோ
தவர்நமக் கினிய வாறே. (1)

என்பது அப்பதிகத்தின் முதல் பாடலாகும். 'கொகுடிக் கோயில் இறைவனை மனத்தினால் நினைந்த போது அவர் நமக்கு இனியர்' என்ற தொடர் பாசுரந்தோறும் அமைந்து தேனாக இனிக்கின்றது.

அடுத்து மண்ணிப்படிக்கரை[45] என்ற தலத்து எம் பெருமான்மீது ''முன்னிய எங்கள்'' (7.22) என்று தொடங்கும் செந்தமிழ்ப் பதிகம் பாடிப் போற்றுகின்றார்.

ஆடுமின் அன்புடையீர் அடிக்காட்பட்ட
சூளி கொண்டு
சூடுமின் தொண்டருள்ளீர் உமரோடெமர்
சூழ வந்து
வாடுமிவ் வாழ்க்கைதன்னை வருந்தாமல்
திருந்தச் சென்று
பாடுமின் பத்தருள்ளீர் பழமண்ணிப்
படிக்க ரையே. (3)

என்பது இப்பதிகத்தின் மூன்றாவது பாடல்.

---

45. மண்ணிப்படிக்கரை (இலுப்பப் பட்டு: வைத் தீஸ்வரன் கோயிலிருந்து 9 கல் தொலைவிலுள்ளது.

மண்ணிப்படிக் கரையிலிருந்து புறப்பட்டு நம்பியாரூரர் 'வாய் கொளிப் புத்தூர்'[46] என்ற திருத்தலத்தை அடைகின்றார். இத்தலத்து எம்பெருமான்மீது "தலைக்கலன்" (7.57) என்ற முதற் குறிப்புடைய செந்தமிழ் மாலை தொடுத்துப் போற்றுகின்றார்.

வெந்த நீறுமெய் பூசவல் லானை
விடைஏற வல்லானை
அந்த மாதியறிதற்கு அரியானை ஆறலைத்த
சடையானை யம்மானைச்
சிந்தை யென்தடு மாற்றறுப் பானை
தேவதேவனென் சொல்முனியாதே
வந்தென்உள்ளம்புகும் வாழ்கொளிப் புத்தூர்
மாணிக்கத்தை
மறந்தென் னினைக்கேனே. (3)

என்பது இச்செந்தமிழ் மாலையில் ஒரு நறுமலர்.

புத்தூரை நீங்கிச் 'கானாட்டு முள்ளூர்'[47] என்ற திருத்தலத்திற்கு வருகின்றார். இத்தலத்து எம்பெருமான் எதிர் காட்சி தந்தளுகின்றார் 'தூ நாண் மென் மலர்க் கொன்றைச் சடையார் செய்ய துணைப் பாதமலர் கண்டு தொழுதேன்' என்று "வளவாய்" (7.40) என்று தொடங்கும் வண்டமிழ்த் தொடைமாலை சாத்துகின்றார்.

அருமணியை முத்தினை யானஞ்சு மாடும்
அமரர்கள் தம் பெருமானை அருமறையின் பொருளைத்
திருமணியைத் தீங்கரும்பின் ஊறலிருந் தேனைத்
தெரிவரிய மாமணியைத் திகழ்தரு செம்பொன்னை

---

46. வாழ்கொளிப்புத்தூர் (திருவாளப் புத்தூர்). இத் திருத்தலம் வைத்தீஸ்வரன் கோயிலிலிருந்து 5 கல் தொலைவிலுள்ளது.
47. கானாட்டு முள்ளூர் (கானாட்டாம் புலியூர்) இத் திருத்தலம் சிதமபரத்தினின்று 10 கல் தொலைவி லுள்ளது. கொள்ளிடத்தின் கரைமேலுள்ளது.

குருமணிகள் கொழிந்திழிந்து சுழிந்திழியும் திரைவாய்க்
கோல்வளையார் குடைந்தாடும் கொள்ளிடத்தின் கரை மேல்
கருமணிகள் போல்நீலம் மலர்கின்ற கழனிக்
கானாட்டு முள்ளூரிற் கண்டுதொழு தேனே. (7)

என்பது இந்த வண்டமிழ்த் தொடைமாலையுன் ஏழாவது வாடாமலர். பாடல்களின் இறுதிப் பகுதிகளில் இயற்கை வருணனை அமைந்து அவற்றிற்குப் பொலிவூட்டுகின்றது.

கானாட்டு முள்ளூரைவிட்டு 'எதிர்கொள் பாடி'[48] என்னும் திருத்தலத்தை அடைகின்றார். இத்தலத்து எம் பெருமான் மீது எத்திசையும் தொழுதேத்த ''மத்தயானை'' (7.7) என்னும் செந்தமிழ்த் திருப்பதிகம் புனைந்து தொழுது ஏத்துகின்றார்.

மத்த யானை ஏறி மன்னர்
சூழவரு வீர்காள்
செத்த போதி லாரு மில்லை
சிந்தையுள்ளை மின்கள்
வைத்த உள்ளம் மாற்ற வேண்டா
வம்மின்மனந் தீரே
அத்தர் கோயில் எதிர்கொள் பாடி
என்பதடை வோமே.(1)

என்பது திருப்பதிகத்தின் முதற் பாடல்

எதிர்கொள் பாடியினை நீங்கி கேள்விக்குடி[49]க்கு வருகின்றார் வன்றொண்டர். ''மூப்பதுமில்லை'' (7.18)

---

48. எதிர்கொள் பாடி (மேலைத் திருமணஞ்சேரி) என்ற தலம். மயிலாடுதுறை - தஞ்சை இருப்பூர்தி வழியில் குத்தாலம் என்ற நிலையத்திலிருந்து 3½ கல் தொலைவிலுள்ளது.

49. வேள்விக்குடி: குத்தாலத்திலிருந்து 3 கல் தொலைவிலுள்ளது.

என்ற செந்தமிழ் மாலை தொடுத்து. இத்தலத்து முத்திதரும் பெருமானைப் பணிந்து போற்றுகின்றார்.

மூப்பது மில்லை பிறப்பது மில்லை
இறப்ப தில்லை
சேர்ப்பது காட்டகத் தூரினு மாகச்
சிந்திக்கி னல்லால்
காப்பது வேள்விக் குடிதண் துருத்தி
எங்கோ னரைமேல்
ஆர்ப்பது நாகம் அறிந்தோ மேல்நாம்
இவர்காட் பட்டோமே. (1)

என்பது இத்திருமாலையின் முதற் நறுமலர்.

இங்ஙனம் பலதலங்களை வழிபட்ட தம்பிரான் தோழர் திருவாரூருக்குத் திரும்புகின்றார். திருக்கோயில் கோபுரத்தை வழிபட்டு, பூங்கோயில் அமர்ந்த பெருமானை இறைஞ்சிப் பரவையார் திருமாளிகை வந்து சேர்கின்றார். பரவையாரும் அவரை அன்புடன் வரவேற்கின்றார். இருவரும் மகிழ்ச்சியுடன் வாழ்கின்றனர்.

7. தொண்டைநாட்டுத் திருத்தலப் பயணம்.

தொண்டை நாட்டுத் திருத்தலங்கள் முப்பத்துஇரண்டு. இவற்றுள் சுந்தரரால் சேவிக்கப்பெற்றவை பதினான்கு. இந்த நாட்டுத் தலவழிபாடு இரண்டு நிலைகளில் நடைபெறுவ தாகக் கருதலாம். முதல்நிலை வழிபாடு சங்கிலியாரை மணப்பதற்கு முன்னரும் இரண்டாம் நிலை வழிபாடு அவரை மணந்த பின்னரும் நடைபெறுகின்றன.

முதல்நிலை: தாம் பிறந்த ஊராகிய திருநாவலூரினின்று புறப்படுகின்றார் நம்பியாரூரர். முதலில் திருக்கழுக்குன்றம்[1] சென்று சேர்ந்து அங்குள்ள பெருமான்மீது ''கொன்று செய்த'' (7.81) என்ற செந்தமிழ்ப் பதிகம் பாடுகின்றார். இதில் ஒரு திருப்பாடல்:

நீள நின்று தொழுமின்
நித்தலும் நீதியால்
ஆளும் நம்ம வினைகளால்
அல்கி யழிந்திடத்
தோளும் எட்டும் உடைய
மாமணிச் சோதியான்
காள கண்டன் உறையும்
தண்கழுக் குன்றமே. (3)

1. திருக்கழுக்குன்றம்: இத்தலம் செங்கல்பட்டிலிருந்து ஒன்பது கல் தொலைவு பேருந்துவழி. வடநாட்டார் இத்தலத்தைப் பட்சிதீர்த்தம என்பர்.

என்பது. அடுத்து வழிபாட்டுக்காக திருக்கச்சூர்[2] ஆலக் கோயிலை அடைகின்றார். கோயிலில் எழுந்தருளியிருக்கும் பெருமானைப் பணிந்து போற்றிக் கோயிலின் மதிற்புறத்தே சென்று ஓரிடத்தில் அமர்கின்றார். அப்பொழுது கோடைக் காலம். வெயில்வெம்மை மிக்க நண்பகற் பொழுதாகியும் அவருக்கு அமுது சமைத்தளிக்கும் பரிசனங்கள் அங்கு வந்து சேரவில்லை. அடியார் பசித்திருக்கப் பொறாத சிவபெருமான் வேதியர் வடிவுடன் அவண் போந்து வன்றொண்டரை நோக்கி, ''ஐயன்மீர், நீவிர் பசியால் வாடியுள்ளீர். யான் சிறிது நேரத்திற்குள் இங்குள்ள வீடுகளில் இரந்து உணவு கொண்டு வருமளவும் இவ்விடத்திலேயே இருப்பீராக'' என்று சொல்லிச் செல்லுகின்றார். அங்ஙனமே 'பிச்சாண்டி' அண்மை யிலுள்ள வீடுகளில் திருவமுதும் கறியும் இரந்து பெற்று நாவ லூரரை அணுகி, 'இதனை உண்டு பசிதீரும்' எனக் கொடுத் தருளுகின்றார். மறையவரின் பேரன்பைக் கண்ட தம்பிரான் தோழர், அவர் இரந்து பெற்ற உணவினை விருப்புடன் வாங்கி ஆர்வத்துடன் அடியார்களுடன் அமுது செய்கின்றார். இந் நிலையில் வேதியர் மறைந்து விடுகின்றார். அது கண்ட நம்பி யாரூரர் தமது பசி தீர்த்தருளியவர் பசுபதியே என உணர் கின்றார். ''வெம்மை மிக்க நண்பகலில் திருவடி வருந்த வீடுதோறும் சென்றிரந்து எமக்குச் சோறளித்த இப்பெரு மானின் பெருங்கருணைத் திறத்தை என்னென்பேன்?'' என்று நெஞ்சம் நெக்குருகி மெய்ம்மயிர் சிலிர்ப்பக் கண்ணீர் அரும்ப மலைமேல் மருந்தாகிய ஆலக்கோயில் பெருமான்மீது ''முதுவாய் ஓரி'' (7.41) என்று தொடங்கும் செந்தமிழ்ப் பதிகம் பாடிப் பணிகின்றார்.

---

2. திருக்கச்சூர்: இதுசென்னை - செங்கற்பட்டு இருப் பூர்தி வழியிலுள்ள சிங்கப்பெருமாள் கோயில் என்ற ஊரிலிருந்து ஒன்றரைக் கல் தொலைவில் உள்ளது.

முதுவா யோரி கதற முதுகாட்
டெரிகொண் டாடல் முயல்வானே
மதுவார் கொன்றைப் புதுவீ சூடும்
மலையான் மகள்தன் மணவாளா
கதுவாய் தலையிற் பலிநீ கொள்ளக்
கண்டால் அடியார் கவலாரே
அதுவே யாமா றிதுவோ கச்சூர்
ஆலக் கோயில் அம்மானே.(1)

என்பது இப்பதிகத்தின் முதற் பாடல்.

திருக்கச்சூரிலிருந்து புறப்பட்டுக் காஞ்சி நகரை அணுகுகின்றார் நம்பியாரூரர். நகரப் பெருமக்கள் அன்பினால் எதிர்கொண்டு மாபெரும் வரவேற்பு நல்குகின்றனர்; போற்றி மகிழ்கின்றனர். இந்த வரவேற்பைச் சேக்கிழார் பெருமான்,

மல்கு மகிழ்ச்சி மிகப்பெருக
மருகும் அணித்தோ ரணம்நாட்டி
அல்கு தீபம் நிறைகுடங்கள்
அகிலின் தூபம் கொடியெடுத்துச்
செல்வ மனைகள் அலங்கரித்துத்
தெற்றி ஆடல் முழவதிரப்
பல்கு தொண்ட ருடன்கூடிப்
பதியின் புறம்போய் எதிர்கொண்டார்.[3]

என்று பாடுவர். நகரினுள் நுழைந்தவுடன் திருவேகம்பத்தை (ஏகாம்பர நாதர் கோயில்) அடைகின்றார். மலை மகளாரது பூசனையை ஏற்றருளிய ஏகாம்பர நாதரைக் கண்டு நிலமிசை நீடு வீழ்ந்து இறைஞ்சுகின்றார். ஆரூத காதலுடன் செந் தமிழ்ப் பதிகம் பாடித் துதிக்கின்றார். தொண்டர்களுடன் சிலநாள் இந்நகரத்தில் தங்கியிருக்கின்றார்.

---

3. பெ.பு. ஏயர்கோன்- 185

காஞ்சியில் தங்கியிருந்த நாட்களில் காமக்கண்ணியார் எழுந்தருளியிருக்கும் காமக் கோட்டத்திற்குச் சென்று பணிகின்றார். திருமேற்றளித் திருக்கோயிலை[4] அடைந்து நொந்தா வொண்சுடரே (7.21) என்று தொடங்கும் திருப்பதிகம் பாடித் துதிக்கின்றார்.

நிலையாய் நின்னடியே
நினைந்தேன் நினைதலுமே
தலைவா நின்னினையப்
பணித்தாய் சலமொழிந்தேன்
சிலையார் மாமதில்சூழ்
திருமேற் றளியுறையும்
மலையே உன்னையல்லால்
மகிழ்ந்தேத்த மாட்டேனே.(9)

என்பது இப்பதிகத்தின் ஒன்பதாவது பாடல். அடுத்து, திருவோணகாந்தன் தளியை[5] இறைஞ்சி, ''நெய்யும் பாலும்'' (7.5) என்று தொடங்கும் திருப்பதிகம் பாடிப் போற்றுகின்றார்.

நெய்யும் பாலும் தயிரும் கொண்டு
நித்தல் பூசை செய்யலுற்றார்
கையி லொன்றும் காசும் இல்லைக்
கழலடி தொழுதுய்யி னல்லால்

---

4. கச்சித்திருமேற்றளி (பிள்ளைபாளையம்) இக்கோயிலில் இரண்டு சிவபெருமான் சந்நிதிகள் உள்ளன. ஒன்று திருமாலுருவம். சம்பந்தர் பதிகம் ஒத உருகிச் சிவலிங்கம் ஆகியதை உருகீசர் சந்நிதி. மற்றொன்று திருமேற்றளிநாதர் சந்நிதி. சந்நிதித் தெருவின் கோடியில் ஆளுடைய பிள்ளையார் (சம்பந்தர்) கோயில் உள்ளது. இவர் வருகையால் இப்பகுதி 'பிள்ளையார் பாளையம்' எனப் பெயர் பெற்றது (சம்பந்தர் பதிகம் கிடைத்திலது).

திருவோணகாந்தன் தளி; இது காஞ்சியில் சர்வதீர்த்தத்திற்கு அருகில் உள்ளது. சுந்தரர் பொன் பெற்ற தலங்களுள் ஒன்று.

ஐவர் கொண்டிங் காட்ட வாடி
யாழ்குழிப்பட் டழுந்து வேனுக்(கு)
உய்யு மாறொன் றருளிச் செய்யீர்
ஓணகாந்தன் தளியு ளீரே (1).

என்பது இப்பதிகத்தின் முதல் பாடல். இத் திருப்பதிகத்தைக் கேட்ட ஓணகாந்தன்தளியில் எழுந்தருளியிருக்கும் இறைவன் நம்பியாரூரருக்குப் பொன்தந்து மகிழ்விக்கின்றார்.

அடுத்து, கச்சி அநேகங்காவதம்[6] என்னும் திருக் கோயிலுக்கு வருகின்றார். 'தேனெய்புரிந்துழல்' (7.10) என்று தொடங்கும் செந்தமிழ்ப்பதிகம் பாடித்துதிக்கின்றார்.

தேனெய் புரிந்துழல் செஞ்சடை
எம்பெரு மானதிடந்திக ழெங்கணையக்
கோனை எரித்தெரி யாடியிடங்குல
வான திடங்குறை யாமறையாம்
மானை யிடத்ததோர் கையனிடம்மத
மாறுபடப் பொழியும் மலைபோல்
யானை யுரித்தபி ரானதிடங்கலிக்
கச்சி யநேகதங் காவதமே. (1)

என்பது பதிகத்தின் முதல் திருப்பாடல்.

அநேகங்காவதத்தை வழிபட்ட தம்பிரான் தோழர் பனங்காட்டூர்[7] என்ற தலத்திற்கு வருகின்றார். ''விடையின் மேல்'' (7.86) என்று தொடங்கும் திருப்பதிகத்தைப் பாடித் தலத்து இறைவனைத் துதிக்கின்றார்.

---

6. கச்சி அநேகங்காவதம் : இது காஞ்சியில் இருப்பூர்தி நிலையத்திலிருந்து 1½ கல் தொலைவிலுள்ளது. புத்தேரித் தெருவிற்கு அருகிலுள்ள திருத்தலம். காஞ்சியில் உள்ள திருகோயில்களில் அம்பிகையின் மூலத்தானம் இல்லை. காமாட்சியம்மன் சந்நிதி தனிக்கோயிலாக உள்ளது.

7. பனங்காட்டூர் :இது வன்பார்த்தான் பனங்காட்டூர், திருப்பனங்காடு என்றும் வழங்கப்பெறும். காஞ்சியிலிருந்து 9கல்தொலைவில் உள்ளது. பேருந்துவழி.

விடையின்மேல் வருவானை
வேதத்தின் பொருளானை
அடையிலன் புடையானை
யாவர்க்கும் அறியவொண்ணா
மடையில்வாளை கள்பாயும்
வன்பார்த்தான் பணிங்காட்டுச்
சடையில்கங்கை தரித்தானைச்
சாராதார் சார்வென்னே. (1)

என்பது இத்திருப்பதிகத்தின் முதற்பாடல்.

அடுத்து மாற்பேறு[8] (பதிகம் இல்லை), திருவல்லம்[9] (பதிகம் இல்லை) முதலிய தலங்களைப் பணிந்து வழிபட்டுக் கொண்டு திருக்காளத்தியை[10] அடைகின்றார். மலையை

---

8. மாற்பேறு: "திருமால்பூர்" என்பது இதன் மறு பெயர். செங்கல்பட்டு-காஞ்சி- அரக்கோணம் இருப்பூர்தி வழியில் உள்ளது. திருமால் சக்கராயுதம் வேண்டிச் சிவனை வழிபட்டுப் பெற்றதை அப்பர் தேவாரம் கூறும் (5.59:1).

9. திருவல்லம்-சென்னை-காட்பாடி இருப்பூர்தி வழியில் திருவல்லம் நிலையத்திலிருந்து ஒன்றரை கல் தொலைவில் உள்ளது. நிவா நதிக்கரையிலுள்ளது. இங்கிருந்து 9 கல் தொலைவில் 'வள்ளிமலை' என்ற முருகன் தலம் உள்ளது.

10. காளத்தி (ஸ்ரீகாளஹஸ்தி): சிலந்தி (ஸ்ரீ), பாம்பு (காளம்), யானை (ஹஸ்தி) ஆகிய மூன்றும் பூசித்து வழிபட்ட தலம். மலை உச்சியிலிருந்த குடுமித் தேவர் வழிபாடே கண்ணப்பர் செய்தது. ஆனால் இன்று நாம் பொன்முகலியாற்றங் கரையில் மலையடிவாரத்திலுள்ள திருக்கோயில் மூர்த்தியைத் தான் வணங்குகின்றோம். பஞ்சபூத தலங்களுள் இது வாயு தலம். கருவறையுள் இருக்கும் விளக்குகள் எப்போதும் காற்றில் அசைந்து கொண்டே இருக்கும். சிவலிங்க மூர்த்தியின் திருவுருவில் சிலந்தி, பாம்பு, யானை ஆகிய மூன்றும் உள்ளன. சுயம்புலிங்கம்.

வலம் வருகின்றார். மலையின் மீதேறிக் காளத்திநாதனைக் கைதொழுது இறைஞ்சி ''செண்டாடும்'' (7.26) என்னும் பதிகம் பாடி மலைமேல் மருந்தைப் போற்றுகின்றார்.

செண்டாடும் விடையாய்
சிவனேஎன் செழுஞ்சுடரே
வண்டாரும் குழலாள்
உமைபாக மகிழ்ந்தவனே
கண்டார் காதலிக்கும்
கணநாதன் எங்காளத்தியாய்
அண்டா உன்னையல்லால்
அறிந்தேத்த மாட்டேனே (1)

என்பது பதிகத்தின் முதல் பாடல், காளத்திநாதரின் அருகில் அன்புருவாய் நிற்கும் கண்ணப்பரையும் வணங்கி மகிழ்கின்றார். தொண்டர்களுடன் இத்தலத்தில் சில நாட்கள் தங்கியிருக்கின்றார்.

காளத்தி மலையிலிருந்த வண்ணமே வடநாட்டிலுள்ள திருப்பருப்பதம்,[11] நிருக்கேதாரம்[12] முதலிய திருத்தலங்

11. ஸ்ரீசைலம் : ஆந்திரத்திலுள்ளது. திருப்பதியிலிருந்து சிறப்புப் பேருந்து உண்டு. ''செல்லலுற வரிய சிவன்சீ பர்ப்பதமலை'' (7.79:10) என்றபடி மிகச் சிரமமான மலை. சிவராத்திரி சமயம் போவது வசதி. பெரிய கோயில். கிருட்டிணதேவராயர் பலதிருப்பணிகள் செய்த தலம். மக்கள் மலையேறிச் சென்றவுடன் நீராடாமல் கருவறையிலுள்ள சிவலிங்கத்தைத் தழுவி வழிபாடு செய்வதைத் 'தூளிதரிசம்' என்பர்; சிறப்பு மிக்கது. நந்திதேவரே பரமசிவனை மலையாக இருந்து தாங்குகின்றார் என்பது புராணச் செய்தி.

12. நிருக்கேதாரம் (பத்ரிகேதார்) இமயமலையிலுள்ளது. கடினமான பயணம். திரு தி. சு. அவினாசிலிங்கம் தல யாத்திரை செய்து 'திருக்கேதார யாத்திரை' என்று ஒரு பயணநூல் எழுதியுள்ளார் (சுமார் 40 ஆண்டுகட்கு முன்பு). பார்வதி தேவி இத்தலத்தில்

களையும் நினைந்து இறைஞ்சுகின்றார். பருப்பதத்தின்மீது ''மானும்வரையினமும்'' (7.79) என்று தொடங்கும் பதிகம் பாடிப் போற்றுகின்றார்.

மானும் வரையினமும்
மயிலினமும் கலந்தெங்கும்
தாமே மிகமேய்ந்து
தடஞ்சுனைநீர் களைப்பருகிப்
பூமா மரமுரிஞ்சிப்
பொழிலூடே சென்றுபுக்குத்
தேமாம் பொழில்நீழற்
றுயில்சீபர்ப் பதமலையே.(1)

என்பது முதற் பாடல். இந்தப் பாடல்களில் வரும் மலை வருணனை திருமங்கையாழ்வாரின் சிங்கவேள் குன்ற வருணனையை ஒத்துள்ளதாகக் கருதலாம். இரண்டும் வறட்சி மிக்க மலையாதலால் வருணனை கிட்டத்தட்ட ஒத்துள்ளது.

காளத்தியிலிருந்த வண்ணம் திருக்கேதாரத்தின்மீது வாழ்வாவது' (7.78) என்ற முதற்குறிப்புடைய திருப்பதிகம் பாடி கேதாரநாதனைச் சேவிக்கின்றார். இதில்,

வாழ்வாவது மாயம்இது
மண்ணாவது திண்ணம்.
பாழ்போவது பிறவிக்கடல்
பசிநோய் செய்தபறிதான்

நோன்பிருந்து கேதாரீஸ்வரரை வழிபட்டு அர்த்த நாரீஸ்வரப் (அம்மை-அப்பர், தையல்-பாகர்) பேறு பெற்றனர். பிருங்கி முனிவர் தம்மை வலம் வந்து வழிபாடு செய்யாமல் பிரித்துப் பரமசிவனை மட்டிலும் வணங்கியதால் பிரிக்க இயலாத தையல் பாகக் கோலத்துள் இடம் பெறுவதற்கே பார்வதி தேவி நோன்பு நோற்றனர் என்பது புராண வரலாறு. இந்நோன்பு தீபாவளியையொட்டித் தமிழ் நாடெங்கும் கொண்டாடப் பெறுகின்றது.

தாழாதறஞ் செய்மின்
தடங்கண்ணான் மலரோனும்
கீழ்மேலுற நின்றான்
திருக்கேதாரம் எனீரே. (1)

என்பது இப்பதிகத்தின் முதற் பாடல்.

பின்னர் காளத்தியிலிருந்து புறப்பட்டுப் பலதலங்களையும் வழிபட்டுச் செந்தமிப் பதிகங்களைப் பாடிச் சென்னைக் கருகிலுள்ள திருவொற்றியூர்[13] என்னும் கடற்கரைத் தலத்தை அடைகின்றார். தலத்திலுள்ள சிவனடியார்கள் தம்பிரான் தோழருக்குப் பெரிய வரவேற்பு நல்குகின்றனர். இந்த வரவேற்பைச் சேக்கிழார் பெருமானே கூறக் கேட்போம்.

.....

வண்ண வீதி வாயில்தொறும்
வாழை கமுகு தோரணங்கள்
சுண்ண நிறைபொற் குடந்தூப
தீபம் எடுத்துத் தொழுவார்கள்.

வரமங் கலநல் வியம்முழங்க
வாச மாலை அணியங்ரகில்

---

13. ஒற்றியூர்-சென்னை தங்கசாலை பேருந்து நிலையத்திலிருந்து பேருந்து வசதி உண்டு. வன்மீக நாதர், படம்பக்க நாதர் என்பன கருவறை மூர்த்தியின் திருநாமங்கள். கார்த்திகைப் பௌர்ணமி அடுத்த இரண்டு நாட்கள் புற்றின்மீதுள்ள கவசம் எடுத்து விடப்படும். புற்றாகவே உள்ள மூர்த்தியைத் தரிசிக்கலாம். கவசம் சாத்தியிருக்கும்போது புற்றின் ஒரு சிறுபகுதி மட்டிலும் தென்படும். பட்டினத்தடிகள், கலிய நாயனார் இவர்கள் முத்தி பெற்ற தலம். பட்டினத்தடிகள் கோயில் தேர் நிலையிலிருந்து அரை கல் தொலைவிலுள்ளது. ஒற்றியூர்க் கோயிலின் வடமேற்குப் பகுதியில் ஆதிபுரீசர் கோயில் திருப்பணி மிக அழகிய முறையில் செய்யப் பெற்றுள்ளது.

புரமங் கையர்கள் நடமாடப்
பொழியும் வெள்ளப் பூமாரி
அரமங் கையரும் அமரர்களும்
வீச அன்ப ருடன்புகுந்தார்[14]

.....

புகுந்தவர், வானை முட்டும் கோபுரத்தை வணங்குன்றார்; திருக்கோயிலை வலம்வருகின்றார். சிவபெருமான் சந்நிதியில் 'ஊனும் உயிரும் கரைந்துருக உச்சிகுவித்த கையினுடன்' வீழ்ந்து வணங்குகின்றார். ஒரு சமயம் நாட்டில் பஞ்சம் ஏற்பட்ட காலத்தில், சோழமன்னன் எல்லாத் தலங்களின் படித்தரத்தையும் குறைத்தனுப்பிய கட்டளை ஓலையில் இவ்வூர் இறைவன் ஒருவரும் அறியாதபடி "ஒற்றியூர் நீங்கலாக மற்றையூர்க்கு இக்கட்டளை" என்று எழுதிய படியால், இந்த ஊர்ப்பெருமான் எழுத்தறியும் பெருமான் எனப்படுகின்றான். இந்த எழுத்தறியும் பெருமான்மீது "பாட்டும்பாடிப்பரவி" (7.91) என்ற செந்தமிழ்ப் பதிகம் பாடிப் போற்றுகின்றார். இதன் முதற் பாடல்:

பாட்டும் பாடிப் பரவித் திரிவார்
ஈட்டும் வினைகள் தீர்ப்பார் கோயில்
காட்டும் கலமும் திமிலும் கரைக்கே
ஓட்டும் திரைவாய் ஒற்றி யூரே. (1)

என்பது. தம்பிரான் தோழர் திருவொற்றியூரில் தங்கியிருந்த காலத்தில் எழுத்தறியும் பெருமானை நாள்தோறும் மூன்று காலங்களிலும் ஆர்வமுடன் தொழும் வழக்கத்தை மேற் கொள்ளுகின்றார். இந்தக் காலத்தில் சங்கிலியாருடன் இறைவனருளால் திருமணம் நடைபெறுகின்றது. இஃது இத் நூலில் தனிக்கட்டுரையாக அமைகின்றது (எட்டாவது கட்டுரை).

14. பெ. பு: ஏயர்கோன்-200, 201

இரண்டாம் நிலை : நம்பியாரூரர் சங்கிலியாருடன் திருவொற்றியூரில் மகிழ்ந்து இல்வாழ்க்கை நடத்தி வரும் நாளில் இளவேனிற் பருவம் எய்துகின்றது. தமிழ்ப் பொதியத் தென்றல் சந்தன மணத்துடன் மெல்லென வீசும் இளவேனிற் காலத்தில் திருவாரூரில் வீதிவிடங்கப் பெருமானுக்கு நிகழும் வசந்த விழாவும் அவ்விழாவை யொட்டி, அப்பெருமானின் திருவோலக்கத்தில் நடைபெறும் பரவையாரின் ஆடல் பாடல்களையும் முன்பு கண்டு மகிழ்ந்த வன்தொண்டர் ஆரூரில் நிகழவிருக்கும் அந்த எழில் மிக்க தெய்வக் காட்சியைக் காணும் பெருவிருப்பத்தால் ஏசற்ற உள்ளத்தராகின்றார். "என் உயிருக்கு உயிரான எழிலாரூர்ப் பெருமானை மூர்க்கனேன் இத்தனை நாள் பிரிந்திருந்தேனே" என்ற சிந்தையராய் "பத்தியையும் அடிமையையும்" (7.51) என்ற திருப்பதிகம் பாடி ஆரூர் இறைவனைப் போற்றுகின்றார்.

பத்திமையும் அடிமைமையும்
கைவிடுவான் பாவியேன்
பொத்தினநோய் அதுவிதனைப்
பொருளறிந்தேன் போய்த்தொழுவேன்
முத்தினைமா மணிதன்னை
வயிரத்தை மூர்க்கனேன்
எத்தனைநாள் பிரிந்திருக்கேன்
என்ஆரூர் இறைவனையே. (1)

ஏழிசையாய் இசைப்பயனாய்
இன்னமுதாய் என்னுடைய
தோழனுமாய் யான்செய்யும்
துரிசுகளுக் கிடனாகி
மாழையொண்கண் பரவையைத்தந்
தாண்டானை மதியில்லா
ஏழையேன் பிரிந்திருக்கேன்
என்ஆரூர் இறைவனையே. (10)

வங்கமலி கடல்நஞ்சை
வானவர்கள் தாமுய்ய
நுங்கிய முதல்வர்க் கருளி
நொய்யேனைப் பொருட்படுத்துச்
சங்கிலியோ டெனைப்புணர்ந்த
தத்துவனைச் சழக்கனேன்
எங்குலக்கப் பிரிந்திருக்கேன்
என்ஆரூர் இறைவனையே. (11)

என்ற பாடல்கள் தம்பிரான் தோழரின் நெஞ்சுருகி வெளி வருகின்றன.

பிறிதொருநாள் திருவாரூர் நினைவு மூளப்பெறுகின்றது வன்றொண்டருக்கு. உன்னுந்தோறும் உவகையளிக்கும் உள்ளத்தில் ஊறும் தேனாகிய சிவபெருமானை ஒற்றியூர்த் திருக்கோயிலில் சென்று இறைஞ்சினார்; திருவாரூரை நோக்கிப் புறப்படுகின்றார். சங்கிலியார்க்குத் தான் செய்து கொடுத்த சூளுறவிற்கு மாறாக அவரைப் பிரிந்து ஒற்றியூர் எல்லையைக் கடந்து ஒரு காலடி வைக்கும்பொழுது ஆரூரரின் இரண்டு கண்களும் ஒளியிழக்கின்றன. வழி தெரிந்து நடக்கமுடியாத நிலையில் மூர்ச்சித்து விழுகின்றார்; செய்வ தறியாது திகைப்புறுகின்றார். ''மைவிரவு கண்ணார்பால் சூளுறவு மறுத்ததனால் இவ்வினை வந்தெய்தியது'' என உணர்ந்து தமது செயலற்ற நிலைக்கும், சொன்ன சொல் தவறினமைக்கும், தமக்குண்டான பழிக்கும் நாணுகின்றார், ''எம்பெருமானை அடைந்து இத்துயர் நீங்கப் பாடுவேன்'' என்று ''அழுக்குமெய்கொடு'' (7.54) என்ற முதற்குறிப் புடைய திருப்பதிகம் பாடிப் போற்றுகின்றார்.

அழுக்கு மெய்கொடுன் திருவடி யடைந்தேன்
அதுவு நான்படப் பாலதொன் றானால்
பிழுக்கை வாரியும் பால்கொள்வர் அடிகேள்
பிழைப்ப னாகிலும் திருவடிப் பிழையேன்

வழுக்கி வீழினும் திருப்பெய ரல்லால்
மற்று நானறி யேன்மறு மாற்றம்
ஒழுக்க என்கணுக் கொருமருந் துரையாய்
ஒற்றி யூரெனும் ஊருறை வானே. (1)

என்ற திருப்பாடலில் தமது பிழையினைப் பொறுத்தருளும் படி ஒற்றியூர்ப் பெருமானைப் பரவிப்போற்றுதலைக் காண லாம்.

மேற்காட்டிய திருப்பதிகத்தில்,

மூன்று கண்ணுடை யாய்அடி யேன்கண்
கொள்வதே கணக்கு வழக்காகில்
ஊன்று கோலெனக் காவதொன் றருளாய்(4)

கழித்தலைப் பட்ட நாயது போல
ஒருவன்கோல் பற்றிக் கறகறஇழுக்கை
ஒழித்துநீ அருளாயின செய்யாய் (5)

அகத்திற் பெண்டுகள் நானொன்று சொன்னால்
'அழையேல்போகுரு டா'எனத் தரியேன்
முகத்திற் கண்ணிழந் தெங்ஙனம் வாழ்கேன் (9)

என்றெல்லாம் தம்பிரான் தோழர் ஒற்றியூர் இறைவனை விளித்துப் பேசும் உரையாடல்கள் இரண்டு கண்களையும் இழந்துத் தாம் படும் பெருந்துயரத்தை நன்கு புலப்படுத்து வனவாக அமைகின்றன; நம் உள்ளத்தையும் உருக்கிக் கண்ணீர் பெருகச் செய்து விடுகின்றன.

இங்ஙனம் கண்ணிழந்து நெஞ்சம் கலங்கி வருந்திய நிலை யிலும் ஒற்றியூர் இறைவன் அவருக்கு விரைந்து அருள் புரிந்திலன். திருவாரூர் ஈசனை வழிபட விரும்பியவர் உடன் வரும் சிவனடியார்கள் வழிகாட்டிக் கொண்டு முன்னே

செல்ல வட திருமுல்லை வாயிலை[16] வந்து அடைகின்றார். சொல்லரும் புகழான் தொண்டைமான் யானையை முல்லைக் கொடியால் பிணித்து நிறுத்தி அவ்வேந்தனுக்கு எல்லையி லின்பம் வழங்கியருளிய திருமுல்லைவாயில் பெருமானை இறைஞ்சுகின்றார். கண்பார்வையின்றித் தாம் படுந் துயரத்தை களைத்தருளுமாறு 'திருவும் மெய்ப்பொருளும்" (7.69) எனத் தொடங்கும் திருப்பதிகத்தைப் பாடிப் போற்று கின்றார்.

இத்திருப்பதிகத்தில், "சங்கிலியின் பொருட்டு என் கண் களைக் கவர்ந்து கொண்ட பெருமானே, கண் இழந்து நிற்கும் அடியேனது பேரிடரைக் களைந்தருள்வாயாக" என வேண்டும் போக்கில் அமைந்த,

விண்பணிந் தேத்தும் வேதியர்மா தர்
வெருவிட வேழமன் றுரித்தாய்
செண்பகச் சோலைசூழ் திருமுல்லை
வாயிலாய்! தேவர்தம் அரசே!

---

15. திருமுல்லை வாயில் (வட): சென்னை-அரக்கோணம் இருப்பூர்தி வழியில் அம்பத்தூர் நிலையத்திலிருந்து 3 கல் தொலைவிலுள்ளது. தொண்டை நாட்டு மன்னன் ஒருவன் வேட்டையாடி வரும்போது அவனுண்ணும் யானையின் காலில் முல்லைக் கொடி சிக்கிக் கொள்ளவே, யானை நின்று விடுகின்றது. மன்னன் கீழே இறங்கி முல்லைக் கொடியை வெட்டு கின்றான்: இரத்தம் வெளிப்படுகின்றது. அகழ்ந்து பார்க்கும்போது ஒரு சிவலிங்கம் காட்சி அளிக் கின்றது; வெட்டுண்டஇடமும் தெரிகின்றது. உடனே மன்னன் காட்டை அழித்துக் கோயிலமைக் கின்றான். (1.69:10) இப்போதும் கருவறை மூர்த்தி யின் தலையில் வெட்டுக்குறி தென்படுகின்றது. தலத்து இறைவன் மாசிலாமணி இவருக்கு வெந்நீரில் திருமுழுக்கு நடைபெறுகின்றது.

தண்பொழில் ஒற்றி மாநகர்
உடையாய்! சங்கிலிக்காஎன் கண்கொண்ட
பண்ப!நின் அடியேன் படுதுயர்
களையாய் பாசுபதா பரஞ்சுடரே. (3)

என்ற திருப்பாடலில் திருமுல்லை வாயிலில் எழுந்தருளி யிருக்கும் மாசிலாமணியைப் பரவிப் போற்றுதல் ஈண்டு நினைத்தற்குரியது.

பின்னர் திருநாவலூரர் திருவெண்பாக்கத்[16] திருக் கோயிலை அடைகின்றார். சிவபெருமானின் பெருங் கருணைத் திறத்தைச் சிந்தித்து வணங்கி 'பிழையுளன பொறுத்திடுவர்'' (7.89) என்ற திருப்பதிகம் பாடிப் போற்று கின்றார். இப்பெருமானை விளித்து, ''பெருமானே, 'என்னை வலியவந்து ஆட்கொண்டருளிய இறைவன் யான் அறியாமையால் செய்த பிழைகளையும் பொறுத்தருள் புரிவான்' என்ற துணிவுடன் நின்னை வந்தடைந்தேன். அடியேன் ஏதேனும் பிழை புரிந்திருந்தால் அப்பிழையை நின் திருவருளால் பொறுத்து அருள் புரிதலே முறை. இறைவனாகிய நீ அடியேன் செய்த குற்றத்தை பொறுத் தருளாமையால் நினக்கு வரும் பழியையும் எண்ணிப்பாராது என் கண்களைப் படலத்தால் மறையச் செய்தாய். நீ இந்தத் திருக்கோயிலினுள் இருக்கின்றாயா'' என்று தன் மனவருத்தம் தோன்ற வினவுகின்றார். அப்பொழுது அவர் தோழராகிய

---

16. வெண்பாக்கம் (திருவுளம்புதூர்) : சென்னை - அரக்கோணம் இருப்பூர்திப் பாதையில் உள்ள திருவள்ளூரிலிருந்து 7 கல் தொலைவிலுள்ளது. சென்னைக் குடிநீர் சேமிக்கப் பட்டிருக்கும் பூண்டி நீர்த்தேக்கத்துள் (Poondi Reservoir) இத்தலமும் திருக்கோயிலும் மூழ்கிவிட்டன. கோயிலிலிருந்த மூர்த்திகள் இத்தேக்கத்தின் கரையில் ஓர் அறையில் புகலிடம் பெற்றுள்ளன. கண்ணிழந்த தம்பிரான் தோழர் இத்தலத்தில் ஊன்றுகோல் பெற்றனர்.

வெண்பாக்கத்திறைவன் கோயிலினுள் இருந்து கொண்டே இணக்கமில்லாத மொழியால், 'உளோம் போகீர்' என்று மற்று மொழி கூறி ஊன்று கோல் ஒன்றைக் கொடுத்தருளுகின்றார். இந்த வரலாறு,

பிழையுளன பொறுத்திடுவர்
என்றடியேன் பிழைத்தக்கால்
பழியதனைப் பாராதே
படலமென்கண் மறைப்பித்தாய்
குழைவிரவு வடிகாதா
கோயிலுளா யேயென்ன
உழையுடையான் உள்ளிருந்து
'உளோம் போகீர்' என்றானே. (1)

பொன்னவிலும் கொன்றையினாய்
'போய்மகிழ்கிழ் இரு' என்று
சொன்னனைக் காணாமே
குளுறவு மகிழ்க்கிழே
என்னவல்ல பெருமானே
இங்கிருந் தாயோவென்ன
ஒன்னலரைக் கண்டாற்போல்
'உளோம் போகீர்' என்றானே. (9)

மான்றிகழும் சங்கிலியைத்
தந்துவரு பயன்களெல்லாம்
தோன்றவருள் செய்தளித்தாய்
என்றுரைக்க உலகமெலாம்
ஈன்றவனே வெண்கோயில்
இங்குஇருந் தாயோவென்ன
ஊன்றுவதோர் கோலருளி
'உளோம்போகீர்' என்றானே. (10)

என்ற திருப்பாடல்களில் அகச் சான்றுகளாக அமைத்து இடக்கின்றன.

தம்பிரான் தோழராக இருந்தும் தம்பிரானின் திருவுள்ளக் குறிப்பினை அறிய முடியாத நிலையில் 'இறைவன் அருள் என்னளவில் இவ்வளவுதான் போலும்' என்று எண்ணி இரங்கி ஏங்கும் நிலையில் வெண்பாக்கத்தை நீங்கிப் பழையனூர்'' என்ற திருத்தலத்தை அடைகின்றார். அங்குக் காரைக்கால் அம்மையார் தலையாலே நடந்தெய்திய திருவாலங்காட்டெல்லையினை இறைஞ்சி நின்று, ''முத்தா முத்தி தரவல்ல'' (7.52) என்ற முதற் குறிப்புடைய செந்தமிழ்ப் பதிகத்தைப் பாடிப் பரவுகின்றார்.

முத்தா முத்தி தரவல்ல
முகிழ்மென் முலையாள் உமைபங்கா
சித்தா சித்தித் திறங்காட்டும்
சிவனே தேவர் சிங்கமே
பத்தா பத்தர்பலர் போற்றும்
பரமா பழையனூர் மேய
அத்தா ஆலங் காடா
உன்னடி யார்க்கடியே னாவேனே. (1)

என்பது இப்பதிகத்தின் முதற்பாடல்.

17. இஃது ஆலங்காடு (திருவாலங்காடு) சென்னை அரக்கோணம் இருப்பூர்திப் பாதையில்-திருவள்ளூரி லிருந்து 3 கல் தொலைவிலுள்ளது. 8¼ மணங்கு எடையுள்ள செப்பேடுகளில் முதல் இராஜேந்திர சோழன் (கங்கை கொண்ட சோழன்) பழையனூர் கிராமத்தைத் திருவாலங்காடுடைய மகாதேவர்க்குத் தானமாகக் கொடுத்த செய்தி விவரிக்கப் பெற்றுள்ளது. காளியோடு தாண்டவம் புரிந்த சிவபெருமான் அவள் சமமாக ஆடுவதைக் கண்டு, அவளைத் தோற்கடிக்கக் கருதி தனது இடது காலைத் தலையளவு தூக்கி ஊர்த்துவ தாண்டவம் புரிந்த அருமைத் தலம். காரைக்கால் அம்மையார் தலையாலே நடந்து வந்த தலம். பழையனூர் ஆலங்காட்டிற்கு முக்கால் கல் தொலைவிலுள்ளது. இங்குக் காரைக்கால் அம்மையாரின் திருக்கோயில் ஒன்றும் உள்ளது.

பின்னர் தம்பிரான் தோழர் திருவூறல்[18] என்ற தலத்தைப் பணிகின்றார் (பதிகம் இல்லை). அடுத்துக் காஞ்சி யம்பதியை வந்து எய்துகின்றார். உலகம் ஈன்றஉமையம்மை யார் எழுந்தருளியுள்ள திருக்காமக் கோட்டம் என்னும் திருக் கோயிலை அடைந்து அறம் வளர்த்த நாயகியாகிய அன்னை யின் திருவடிகளைத் துதித்து வணங்குகின்றார். பின்னர் திருவேகம்பம் என்னும் ஏகாம்பரநாதர் சந்நிதியை அடை கின்றார். கச்சி ஏகம்பப் பெருமான்முன் நின்று ''தேவர்கள் பொருட்டு நஞ்சுண்ட பெருமானே, கடையவனாகிய அடியேன் பின்விளைவதனை எண்ணாமல் செய்த பெரும் பிழையப் பொறுத்து அடியேற்கு மறைந்த கண்களைக் காட்டி அருள் புரிவாயாக'' என்று நில மிசை நீடு வீழ்ந்து வணங்குகின்றார்.

இடக்கண் பெறுதல் : ஏகாம்பரநாதர் பொங்கிய பேரன் பால் போற்றிய தம்பிரான் தோழர்க்கு மறைந்த இடக் கண்ணைக் கொடுத்தருளி மலைமகளார் வழிபட்ட தமது திருக்கோலத்தையும் காட்டியருளுகின்றார். இடக்கண்ணைப் பெற்றமையால் இறைவனது எழில் மேனியைக் கண்டு களிக் கின்றார். இந்த எக்களிப்பு ''ஆலந்தான் உகந்தவனை'' (7 61) என்ற முதற்குறிப்பையுடைய செந்தமிழ் பதிகமாக மலர்கின்றது.

---

18. ஊறல் (தக்கோலம்): செங்கல்பட்டு- அரக்கோணம் இருப்பூர்திப் பாதையில் தக்கோலம் 3 கல் தொலை வில் உள்ளது. கோயிலின் மேற்சாரியில் ஓர் இயற்கை ஊற்று (சுனை) உள்ளது. இதிலிருந்து தண்ணீர் கோயிலின் உட்பிராகாரத்தில் தரைமட்டத்தில் ஒரு நந்திவாயின் வழியாக வந்து, நாற்புறமும் ஓடி, கோயிலுக்கெதிரில் மற்றொரு நந்தி வாயின் வழி யாக விழுந்து ஒரு சிறு குளத்தை நிரப்பி வழிந் தோடுகின்றது. சோழமன்னனுக்கும் மேலைச் சாளுக்கிய மன்னனுக்கும போர் நிகழ்ந்த இடம் இங்கு மணற் பெருவெளியாகக் காணப்பெறுகின்றது.

ஆலந்தான் உகந்தமுது செய்தானை
ஆதியை அமரர்தொழு தேத்தும்
சிலந்தான் பெரிதும் உடையானைச்
சிந்திப்பாரவர் சிந்தை யுளானை
ஏலவார்குழ லாளுமை நங்கை
என்றும் ஏத்தி வழிபடப் பெற்ற
காலகாலனைக் கம்பன் எம்மானை
காணக்கண் அடியேன் பெற்றவாறே.(1)

என்பது முதற் பாடல். இந்தத் திருப்பதிகத்தைப் பாடிப் போற்றி உடன் வந்த சிவனடியார்களுடன் இறைவனைக் கும்பிட்டுக் கச்சி நகரிலேயே தங்குகின்றார்.

இந்நிலையில் "திருவாரூரையடைந்து என் உயிர்க் குயிராம் பெருமானை என்று காண்பேன்?" என்னும் ஏக்கம் தலைகாட்டத் தொடங்குகின்றது. உடனே திருவாரூர்மீது "அந்தியும் நண் பகலும்" (7.83) என்னும் திருப்பதிகத்தைப் பாடுகின்றார். இதன் முதற் பாடல்,

அந்தியும் நண்பகலும்
அஞ்சுபதம் சொல்லி
முந்தியெழும் பழைய
வல்வினை மூடாமுன்
சிந்தை பராமரியாத்
தென்திரு வாரூர்புக்(கு)
எந்தை பிரானாரை
என்றுகொல் எய்துவதே.(1)

என்பது. இந்தப் பதிகத்தைப்பாடியவண்ணம் காஞ்சியிலிருந்து புறப்பட்டுத் தொண்டை மண்டலத்தைக் கடந்து திருவாரூரை நோக்கி வருகின்றார். இத்துடன் தொண்டைநாட்டுத் திருத் தலவழிபாடு நிறைவு பெறுகின்றது. முப்பத்திரண்டு தலங் களில் பதினான்கு தலங்களைச் சேவிக்கின்றார். இவற்றுள் பதிகம் பெற்றவை பன்னிரண்டு; பதிகம் பெறாதவை இரண்டு; அவை திருவல்லம், திருவூறல் என்பவை.

8. சங்கிலியார் திருமணம்

திருக்கயிலாயத்தில் உமையம்மையாரின் சேடியருள் மற்றொருவராகிய அநிந்திதையார் தொண்டை நாட்டில் ஞாயிறு என்னும் ஊரில் வதியும் ஞாயிறு கிழவர் என்ற வேளாளருக்கு அருமைத் திருமகளாகத் தோன்றுகின்றார். பெற்றோர் இவருக்குச் சங்கிலியார் என்ற திருநாமம் இட்டு வளர்த்து வருகின்றனர். இவர் பெதும்பை பருவம் எய்தியதும் பெற்றோர் இவர்தம் திருமணம் பற்றிச் சிந்திக்கின்றனர்; உரக்கவும் பேசுகின்றனர்.

ஒருநாள் தம் திருமணங் குறித்துப் பெற்றோர் பேசுவதை அயலே நின்ற சங்கிலியார் செவி மடுத்து "இவர்கள் பேசுவது என் திறத்துச் சிறிதும் பொருந்தாது. ஈசன் திருவருள் பெற்றார் ஒருவர்க்கே நான் மனைவியாதற்குரியேன். என் கருத்துக்கு மாறாக யாது விளையுமோ?" என மனங் கலங்கி மூர்ச்சித்து நிலமிசை நீடு வீழ்கின்றார். இதனைக் கண்ணுற்ற தாய்தந்தையர் துணுக்குற்று பதை பதைத்தோடிச் சங்கிலியாரை கைகளால் தாங்கி எடுத்து முகத்திற் பனிநீர் தெளித்து மூர்ச்சை தெளிவிக்கின்றனர். மூர்ச்சை தெளிந்தெழுந்த தம் அருமைச்செல்வியை நோக்கி, "நினக்கு நேர்ந்த துன்பம் யாது?" என வினவ, அதற்கு அம்மகள், "நீங்கள் இப்பொழுது என் திருமணத்தைக் குறித்துப் பேசிய உரை எனக்குச் சிறிதும் ஏற்புடைத்தன்று. சிவபெருமான் திருவருள் பெற்ற ஒருவரைத்தான் யான் மணத்தற்குரியேன்,

இனிமேல் திருவொற்றியூரையடைந்து சிவனார் அருளிற் செல்வேன்'' என மறுமொழி பகர்கின்றார். தம் அருமை மகளின் மனக் கருத்தறிந்த தாயும் தந்தையும் மிகவும் சோர் வுற்று அச்சமும் வியப்பும் உடையவர்களாய்த் தம் மகள் சொன்ன கருத்தை உலகத்தார் அறியாமல் மறைத்து விடுகின்றனர்.

இந்நிலையில் ஞாயிறுக் கிழவரின் குலத்தால் ஒப்புடைய ஒருவன் சங்கிலியாரின் தகுதியை யுணராமல் அவரை மணம் செய்து கொள்ள விரும்புகின்றான். மகட்பேசி வருவதற்குச் சிலரை ஞாயிறு கிழவர்பால் அனுப்புகின்றான். ஞாயிறு கிழவர் தம் மகளது மனக்கருத்தினை வெளியிடுதல் தகுதி யன்றெனக் கருதி தீங்கு நேரிடாதவாறு வேறொருவகையால் சமாதானம் கூறிஅனுப்பி விடுகின்றார். இவ்வாறு பெண் கேட்க வந்தவர்கள் திரும்பிச் செல்வதற்கு முன்னமே அவர் களை அனுப்பியவன் அங்கு வந்து சால்பு மிக்க சங்கிலியாரை இகழ்ந்துரைக்கின்றான். இவனது அடாத செயலைக் கண்டு வெறுப்புற்ற பெரியோர் 'இவன் இறந்தவனை யொத்தான்' என எண்ணி அவனை அவ்விடத்தைவிட்டு அகற்றுகின்றனர். அங்ஙனம் சென்ற அவன் விரைவில் இறந்தொழிகின்றான். உய்ய வேண்டும் என்ற நினைவுடையவர்கள் சங்கிலியார் பற்றி இங்ஙனம் பேசத் தகாதவற்றைப் பேசுதல் கூடாது என்ற உண்மையை உலகத்தார் அறியும்படி செய்த விதி போல் இந்நிகழ்ச்சி நடை பெற்று விடுகின்றது.

மணம் பேச வந்து மனம் போனபடிப் பேசியவன் மரித்த செய்தி ஞாயிறு கிழவரை எட்டுகின்றது. உடனே அன்பிற் சிறந்த உறவினர்களைத் தருவித்துத் தம் மகள் சங்கிலி யாரின் திருவருள் நினைவினை உள்ளபடி எடுத்துரைக் கின்றார். மிகவும் அச்சமுடையவராய் 'இனி, சங்கிலியார் கருதிய வண்ணம் அவரைத் திருவொற்றியூரில் சிவத் தொண்டு புரிய ஏற்பாடு செய்ய வேண்டும்'' என்று துணி

கின்றார். சுற்றத்தாருடன் சங்கிலியாரைத் திருவொற்றி யூருக்கு அழைத்துச் சென்று திருவொற்றியூர் இறைவனை வழிபடுகின்றார். அவ்வூர் மக்கள் இசைவு பெற்றுத் திருக் கோயிலின் அருகே கன்னிமாடம் ஒன்றை அமைக்கின்றார். அதில் தம் அருமைத் திருமகள் சங்கிலியாரை இருக்கச் செய்து, ''நாங்கள் நினக்கு வேண்டிய பணிகளைச் செய்கின் றோம்; நீ கன்னிமாடத்தில் தங்கி சிவபெருமானுக்கு உரிய திருத்தொண்டுகளைச் செய்வாயாக'' என்று கூறித் தம்மூர்க்குத் திரும்புகின்றார் ஞாயிறு கிழவர்.

கன்னிமாடத்தில் உறையும் சங்கிலியார் நாள்தோறும் மூன்று காலங்களிலும் ஒற்றியூர் இறைவனைப் பணிந்து திருக் கோயிலில் திருமாலை தொடுக்கும் மண்டபத்தில் திரையிட் டிருக்கும் இடத்தில் அமர்ந்து அன்பு நாராக, அஞ்செழுத்தும் நெஞ்சு தொடுக்க, நறுமலர்மாலை தொடுத்து இறைவனுக்கு எழில் பெறச் சாத்தும்படி மலர்த் தொண்டு புரிந்து வரு கின்றார். இது பண்டு கயிலைத் திருமலையில் புரிந்து வந்த 'பூர்வ வாசனையினால்' ஏற்பட்டதென்று நாம் கருதலாம். இந்நிலையில் திருஆரூரர் சங்கிலியாரை மணந்து கொள்ள வேண்டிய ஊழ்செயற்படத் தொடங்குகின்றது.

ஒற்றியூர்ப் பெருமானை வழிபட்டு மகிழ்ந்திருக்கும் சுந்தரமூர்த்தி சுவாமிகள் - தம்பிரான் தோழர் - ஒருநாள் அடியார்கள் செய்யும் பலவகையான திருத்தொண்டுகளை யும் கண்டு வரும்போது மலர் மாலை தொடுக்கும் திருமண்டபத்தை அணுக நேரிடுகின்றது. அப்பொழுது இறைவனுக்குச் சாத்தும்படி தாம் தொடுத்த மலர் மாலை களைக் கொடுத்துவிட்டு மின்னற்கொடி போன்று திரை யினுள்ளே மறையும் சங்கிலியர்ரை இறைவனருள் கூட்டிய நல்விதியால் கண்ணுறுகின்றார்; காதல் அரும்பத் தொடங்கு கின்றது. மலர்தொடுக்கும் மண்டபத்தை நீங்கி ஒரு புறமாக ஒதுங்கி நின்று, ''கோவா முத்தும் சுரும்பு ஏறாக்கொழுமென்

முகையும் அனைய' இந்த மின்னுக் கொடியாள் யார் கொல்?'' என்று வினவுகின்றார். இதனைக் கேட்டு அருகே நின்றவர்கள், ''இவர்தாம் சங்கிலியார்; பெருகுந் தவத்தால் மூப்போதும் ஒற்றியூர் இறைவனுக்கு மலர்மாலைகள் தொடுத்துத் திருப்பணி புரியும் கன்னியார்'' என்று பகர் கின்றனர்.

இம்மொழி கேட்ட தம்பிரான் தோழரின் மனம் சிந்திக்கத் தொடங்குகின்றது. பூர்வ ஞானம் தட்டுப் படு கின்றது. ''மகளிர் இருவர் காரணமாக இப்பிறவினையக் கயிலைநாதர் எனக்கு எய்துவித்தருளினார். அவ்விருவருள் ஒருத்தி பரவையார் என்பது தெளிவாயிற்று. மற்றையவள் சங்கிலியாகிய இந்த நங்கையாக இருக்குமோ?'' என்று ஐயுறு கின்றார். ''இறைவனின் அடியானாக வாழ்ந்து வரும் என்னை வருத்தி, 'என்ஆர்உயிரும் எழில் மலரும் கூடப் பிணைக்கும் இவள் தன்னை'[1] ஒற்றியூர் இறைவன் பால் வேண்டிப் பெறுவேன்'' எனத் துணிகின்றார். ஒற்றியூர் இறைவன் சந்நிதியை அடைந்து,

''மங்கை யொருபால் மகிழ்ந்ததுவும்
அன்றி மணிநீள் முடியின்கண்,
கங்கை தன்னைக் கரந்தருளும்
காதல் உடையீர்! அடியேனுக்(கு)
இங்கு நுமக்குத் திருமாலை
தொடுத்துஎன் உள்ளத்தொடை அவிழ்த்த
திங்கள் வதனச் சங்கிலியைத்
தந்துஎன் வருத்தம் திரும்''எனை[2]

---

1. சேக்கிழாரின் இந்த வாக்கு (ஏயர்கோன் - 230)
கவிங்கத்துப் பரணியிலுள்ள,
முருகிற் சிவந்த கழுநீரும்
முதிரா இளைஞர் ஆருயிரும்
திருகிச் செருகும் குழல் மடவீர்
என்ற தாழிசையை (தாழிசை - 50) நினைக்கச் செய்கின்றது.

2. பெ.பு: ஏயர்கோன் - 232

முகையும் அனைய' இந்த மின்னுக் கொடியாள் யார் கொல்?'' என்று வினவுகின்றார். இதனைக் கேட்டு அருகே நின்றவர்கள், ''இவர்தாம் சங்கிலியார்; பெருகுந் தவத்தால் முப்போதும் ஒற்றியூர் இறைவனுக்கு மலர்மாலைகள் தொடுத்துத் திருப்பணி புரியும் கன்னியார்'' என்று பகர் கின்றனர்.

இம்மொழி கேட்ட தம்பிரான் தோழரின் மனம் சிந்திக்கத் தொடங்குகின்றது. பூர்வ ஞானம் தட்டுப் படு கின்றது. ''மகளிர் இருவர் காரணமாக இப்பிறவினையக் கயிலைநாதர் எனக்கு எய்துவித்தருளினார். அவ்விருவருள் ஒருத்தி பரவையார் என்பது தெளிவாயிற்று. மற்றையவள் சங்கிலியாகிய இந்த நங்கையாக இருக்குமோ?'' என்று ஐயுறு கின்றார். ''இறைவனின் அடியானாக வாழ்ந்து வரும் என்னை வருத்தி, 'என்ஆர்உயிரும் எழில் மலரும் கூடப் பிணைக்கும் இவள் தன்னை'[1] ஒற்றியூர் இறைவன் பால் வேண்டிப் பெறுவேன்'' எனத் துணிகின்றார். ஒற்றியூர் இறைவன் சந்நிதியை அடைந்து,

''மங்கை யொருபால் மகிழ்ந்ததுவும்
அன்றி மணிநீள் முடியின்கண்,
கங்கை தன்னைக் கரந்தருளும்
காதல் உடையீர்! அடியேனுக்(கு)
இங்கு நுமக்குத் திருமாலை
தொடுத்துஎன் உள்ளத்தொடை அவிழ்த்த
திங்கள் வதனச் சங்கிலியைத்
தந்துஎன் வருத்தம் தீரும்''எனை[2]

---

1. சேக்கிழாரின் இந்த வாக்கு (ஏயர்கோன் - 230) கலிங்கத்துப் பரணியிலுள்ள,
முருகிற் சிவந்த கழுநீரும்
முதிரா இளைஞர் ஆருயிரும்
திருகிச் செருகும் குழல் மடவீர்
என்ற தாழிசையை (தாழிசை - 50) நினைக்கச் செய்கின்றது.

2. பெ.பு: ஏயர்கோன் - 232

குறையிரந்து வேண்டுகின்றார். 'நீர் மட்டும் இருவரை மணந்து கொண்டுள்ளீர். நும் அடியனான நான் மட்டும் இருவரை மணந்து கொள்ளலாகாதா?" என்று இறைவனை வினவுவதுபோல் அமைந்த சேக்கிழார் வாக்கு நம்மை மகிழ வைக்கின்றது.

இந்நிலையில் கோயிலை விட்டு வெளியில் வருகின்றார். ஞாயிறு மறைந்து, இரவும் வருகின்றது. "உம்பர் உய்ய உலகுய்ய ஒலவேலை விடம் உண்ட" தம்பிரானாரும் தம் தோழருக்கு உதவ வேண்டும் என்று திருவுள்ளம் கொள்ளுகின்றார். நம்பியாரூர்பால் வந்து, "இவ்வுலகத்தவர் யாவராலும் அடைதற்கரிய இருந்தவத்துக் கொம்பை நினக்குத் தருகின்றோம்; நீ கொண்ட கவலையை ஒழிக" என்று அருளிச் செய்கின்றார். "எம்பிரானே, ஒன்றும் அறியா நாயேனை அன்று வலிய வந்து திருவெண்ணெய் நல்லூரில் ஆட்கொண்டருளினீர். இன்றும் என் உயிர் காக்க இவளை மணம் செய்து தர ஏன்று நின்றீர். நுமது பெருங்கருணைத் திறத்தை யார்தான் அறிய வல்லார்?" என்று தாம் இருந்த இடத்திலிருந்து கொண்டே ஒற்றியூர் இறைவனின் திருவடிகளை நினைந்து இறைஞ்சிப் போற்றுகின்றார்.

இவ்வாறு தம்பிரான் தோழருக்கு அருள் புரிந்த ஒற்றியூர் இறைவன் அன்று நள்ளிரவில் - முழுமதியம் கன்னி மாடத்தைத் தீண்டும் நிலைக்கு வரும்போது - 'தூண்டு சோதி விளக்கனைய' சங்கிலியாரின் கனவில் தோன்றுகின்றார். இவர் பேச்சைச் சேக்கிழார் திருவாக்கால் கேட்டு மகிழ்வோம்.

"சாரும் தவத்துச் சங்கிலி: கேள்;
சால என்பால் அன்புடையான்;
மேரு வரையின் மேம்பட்ட
தவத்தான்; வெண்ணெய் நல்லூரில்

யாரும் அறிய யான்ஆள
உரியான்; உன்னைஎனை இரந்தான்;
வார்கொள் முலையாய்! நீஅவனை
மணந்தால் அணைவாய் மகிழ்ந்து[3]

எனப் பணித்தருள்கின்றார். சங்கிலியார் அடைந்த மகிழ்ச்சியை எவ்வாறு அளந்து காட்டுவது? இறைவன் திருவருள் பெற்றவரையன்றோ மணப்பது என்பது இவர்தம் சங்கற்பம்?

[திருத்தொண்டர் புராணம் - ஏயர்கோன்கலிக்காம நாயனார் புராணத்தின் மூலம்தான் சங்கிலியாரின் திருமணம் பற்றிய செய்திகள் அறிய முடிகின்றது. சங்கிலியாரின் கனவில்தான் ஒற்றியூர் பிரான் தோன்றுகின்றான். ஆதலால் அவன் சங்கிலியாரிடம் உரையாடுவதெல்லாம் கனவு நிலையில்தான். ஆனால் தம்பிரான் தோழரிடம் பேசுவதெல்லாம் நனவுநிலையில் தான் என்று கொள்ள வேண்டியுள்ளது - கனவுநிலை என்று குறிப்பிடப் பெறாததால். இதனை மனத்தில் கொண்டுதான் ஒற்றியூர் இறைவன் - சங்கிலியார் உரையாடல், ஒற்றியூர் இறைவன் - தம்பிரான் தோழர் உரையாடல் நடை பெறும் நிலைகளைப் புரிந்து கொள்ள வேண்டும்].

சிவபெருமானின் அருள் மொழியைக் கேட்ட சங்கிலியார் (கனவு நிலையில்) இறைவன் திருவடிகளில் வீழ்ந்து இறைஞ்சுகின்றார். "எம்பிரானே, நும்மால் அருளிச் செய்யப்பெற்றார்க்கு அடியேன் உரியேன். தங்களது ஆணையைத் தலைமேல் கொள்ளுகின்றேன். அடியேனைத் தக்க விதிமணத்தால் தம்பியாரூரருக்கு அருளும் நிலையில் மலைமகளாரைப் பிரிவின்றி ஒரு பாகத்தில் கொண்டருளிய தங்கள்பால் விண்ணப்பித்துக் கொள்ள வேண்டியதொன்

3. திரு. தொ. - 239.

றுண்டு. தம்பிரான்தோழராகிய அவர் திருவாரூரில் மிக்க மகிழ்ச்சியுடன் நிலைபெறத் தங்கியிருக்கும் விருப்பமுடையவர் என்பதனையும் தாங்கள் அறிந்தருளல் வேண்டும்'' என்று பெருக நாணித் தொழுது உரைக்கின்றார். வன் றொண்டரின் இந்த நிலையை உணர்ந்து அருளிய ஒற்றியூர் இறைவன் சங்கிலியாரை நோக்கி, ''பொற்றொடியாய், அந்த வன்றொண்டன் 'நின்னைவிட்டுப் பிரியேன்' என்று உனக்குச் சூளுரை செய்து தருவான்'' என்று அருளிச் செய்கின்றார்.

பின்னர் இறைவன் தம்பிரான் தோழர்பால் செல்லுகின்றார்: ''நாம் சங்கிலியின்பாற் சென்று அவளை மணம் புணரும் நின் விருப்பத்தைத் தெரிவித்தோம். அதற்கு நின்னால் செய்யத் தக்கதொன்று உள்ளது'' என்கின்றாள். அது கேட்டு மகிழ்ச்சியடைந்த வன்றொண்டர், ''அடியேன் செய்ய வேண்டுவது யாது?'? என்று வினவுகின்றார். ஒற்றியூர்ப் பெருமானும், ''நீ இன்றிரவே அவள்பாற்சென்று, 'நின்னை விட்டுப் பிரியேன்' என்று சூளுரைத்துத் தருதல் வேண்டும். இனி, இந்த ஏற்பாட்டில் நாம் செய்யத் தக்கது உண்டாயின் அதனையும் தெரிவிக்க'' எனப் பணித்தருளுகின்றார். சங்கிலியாரின்பால் தம் மனத்தைப் பறிகொடுத்த வன்றொண்டர், ''இறைவன் எழுந்தருளியுள்ள திருத்தலங்கள் பலவற்றிற்கும் சென்று வழிபடும் விருப்புடைய அடியேனுக்கு இவ்வாறு சூளுரைத்துத் தருதல் பெருந்தவடையாக முடியுமே'' என்னும் நினைவுடையவராய் இறைவனைப் பணிந்து, ''எம்பெருமானே, அடியேன் சங்கிலிக்கு 'நின்னைப் பிரியேன்' என்று சூளுரைத்துத் தருவதற்காக அடியேன் அவளுடன் திருக்கோயிலில் நும் திருமுன்னர் வர நேருங்கால், தேவரீர் அவ்விடத்தை விட்டு ஆலயத்திலுள்ள மகிழ மரத்தடியின்கீழ் எழுந்தருளியிருத்தல் வேண்டும்'' என்று தாழ்ந்து இரக்கின்றார்.

இறைவனும் அவர்தம் வேண்டுகோளுக்கு இசைந்தருளுகின்றார். நம்பியாரூரரும், "அடியேனுக்கு அரியது இனி ஒன்றுமில்லை" என இறைவனை ஏத்தி மகிழ்கின்றார். திருக்கோயிலை விட்டு வெளிச்செல்லுகின்றார். சிவபிரானும் முன்போல் சங்கிலியாரின் கனவில் தோன்றி, "நங்காய்! வன் றொண்டன் நினக்குச் சூளுரைத்துத் தருதற்கு இசைந்து விட்டான். அவன் திருக்கோயிலில் நம் திருமுன்பு சூளுரைக்க வந்தால், நீ அதற்கு உடன்படாது, மகிழ மரத்தடியில் செய்து தருமாறு வற்புறுத்துக" என்று கூறி மறைத்தருளுகின்றார். இவற்றால் ஒற்றியூர் இறைவனின் திருவுள்ளக் குறிப்பை நம்மால் அறிந்து கொள்ள இயவில்லை.

இந்த நிலையில் சங்கிலியார் உறக்கத்தினின்றும் விழித் தெழுந்து இறைவனின் திருவுள்ளக் குறிப்பினை அறிய முடியாமல் வியப்புறுகின்றார். தம்முடைய சேடியர்களைத் துயிலெழச் செய்து தமக்குச் சிவபெருமான் கனவில் தோன்றி அருள்செய்த அனைத்தையும் ஒன்றுவிடாமல் அவர்கட்கு எடுத்துரைக்கின்றார். இவற்றைக் கேட்ட பாங்கியர் அச்சம், அதிசயம், பெருமகிழ்ச்சி இவை கலந்த உணர்ச்சியுடையவர்களாகிச் சங்கிலியாரை வணங்கி மகிழ்கின்றனர். இந்நிலையில் இறைவனுக்குத் திருப்பள்ளியெழுச்சியில் திருமாலை தொடுத்தற்குரிய வைகறைப் பொழுதும் வந்தெய்துகின்றது. சங்கிலியார் தம் தோழிமார்களுடன் ஒற்றியூர்த் திருக்கோயிலுக்குச் செல்லுகின்றார். சங்கிலியார் செல்வதற்கு முன்னதாகவே அவருக்குச் சூளுரைத்துத் தரும்பொருட்டு அவரது வருகையை எதிர்பார்த்திருக்கின்றார் நம்பியாரூரர். சேடியருடன் வரும் சங்கிலியாரருகில் சென்று தமக்கு இறைவன் அருளிச் செய்தவற்றை எடுத்துரைக்கின்றார்.

இதனைக் கேட்ட சங்கிலியார் பெருநாணமுற்று மறுமொழி கூறமாட்டாது ஒருபுறத்தே ஒதுங்கி திருக்கோயிலினுட் செல்லுகின்றார். 'ஆசை வெட்கமறியாது' என்பது

காதல் விஷயத்தில் ஆண்களுக்குப் பொதுவாகப் பொருந்து மாதலால், தம்பிரான் தோழர், அவரைப் பின்தொடர்ந்து "ஆயிழையீர், இங்கு நான் 'உம்மைப் பிரியேன்' என்று சூளுரைத்தற் பொருட்டு, திங்கள்முடி சடையார் திருமுன் போதுவீர்" என அழைக்கின்றார். சங்கிலியாரின் கனவில் நிகழ்ந்தவற்றைக் கேட்ட சேடியர்கள், "எம்பெருமானே, தேவரீர் இதற்காக இமையவர்தம் பெருமான் திருமுன்பு சாற்றுவது தகாது" எனச் செப்புகின்றனர். இந்நிலையில் தம்பிரான் தோழர் இறைவனது செய்கையை அறியாது, "கொம்பனையீர், யான் வேறு எவ்விடத்தில் சூளுரைத்துக் தருதல் வேண்டும்?" என்று வினவுகின்றார். சேடியர்களும் "இங்குள்ள மகிழ மரத்தடியின்கிழ் சூளுரைத்தால் போதும்" என அவர்கள் மறுமொழி பகர்கின்றனர்.

நம்பியாரூரர் இதனைக் கேட்டு மருட்சி அடைகின்றார். சேடியர் சொல்லுவதை மறுத்தால் திருமணம் நிகழாமல் தடைபடுதல் கூடும். உடன்படுதலே தக்கது எனக் கருதி, துணிந்து, "அவ்வாறே செய்யலாம் வாருங்கள்" என்று அவர்களை இட்டுக் கொண்டு மகிழ மரத்தடிக்கு வருகின்றார். மகிழ மரத்தை மூன்றுமுறை வலம் வந்து சங்கிலியாரை நோக்கி 'இங்கு நின்னைவிட்டு அகலேன்' எனச் சூளுரைத்துத் தருகின்றார். இவ்வாறு தம்பிரான் தோழர் தம்மை மணத்தற் பொருட்டுத் தெய்வத்தின் திருமுன்னர் சூளுறுதல் கண்ட சங்கியார், சூளுறவில் வழுவினால் அவருக்கு வரும் ஏதத்தை எண்ணியவராய் "தீ வினையாட்டியேன் தம்பிரான் பணியால் இச்செயலையும் காண தேர்ந்ததே"[4] எனப் பெரிதும் மனங் கலங்கி அங்கு ஒருமருங்கு மறைந்து நிற்கின்றார். தம்பிரான் தோழரும் சூளுறவு முடிந்த பின்னர் திருக் கோயிலினுட் புகுந்து தம்பிரானைப் பணிந்து, "நாளும்

4. குலமகளுக்கு இவ்வுணர்ச்சி ஏற்படுவது சங்க இலக்கியத்தின் நெறி என்பது சங்க இலக்கியப் பயிற்சியுடையார்க்கு நினைவிற்கு வாராமற் போகாது.

அருள் தரும் தாங்கள், இன்று செய்த இச்செயல் மிகவும் அழகுடையது!'' என்று கூறிப் போற்றி மகிழ்ந்த வண்ணம் திருக்கோயிலை விட்டு அகல்கின்றார். சங்கிலியாரும் நாளும் மலர் தொடுக்கும் மண்டபத்தை அடைந்து பூமாலை புனைந் தேத்தும் திருத்தொண்டினை இனிது நிறைவேற்றி எழுத்தறி யும் பெருமானை இறைஞ்சி ஏத்தித் தம்முடைய கன்னி மாடத்தைச் சார்கின்றார்.

இங்ஙனம் இது நடைபெற்றுக் கொண்டிருக்க, இதற்கு முன்னரே ஒற்றியூர் இறைவன் சிவனடியார்களின் கனவில் தோன்றி, ''நம்முடைய அடியவனாகிய வன்றொண்டருக்கு நங்கை சங்கிலியாரை உலகோர் அறியத் திருமணம் செய்து தருவீர்களாக'' என அருள்செய்து மறைந்தருள்கின்றார். இறைவனின் ஆணையைத் தம் தலைமீது கொண்டு,

மண்ணிறைந்த பெருஞ்செல்வத்
திருவொற்றி யூர்மன்னும்
எண்ணிறைந்த திருத்தொண்டர்
எழிற்பதியோ ருடன் ஈண்டி
உண்ணிறைந்த மகிழ்ச்சியுடன்
உம்பர்பூ மழை பொழியக்
கண்ணிறைந்த பெருஞ்சிறப்பிற்
கலியாணம் செய்தளித்தார்.[5]

திருக்கயிலாயத்தில் நடைபெற்ற பசுபதிதன் ஏற்பாட் டின்படி வன்றொண்டர் ஸண்டமர் பூங்குழலாரை மணம் புணர்ந்த பின்னர், 'புண்டரிகத் தவள்வனப்பைப் புறங்கண்ட தூதலத்தை' வள்ளுவர் காட்டிய வழியில், 'கண்டு கேட் டுண்டுயிர்த்து உற்று அறியும்' ஐம்புல இன்பத்தை ஒண் டொடியாகிய சங்கிலியாருடன் அநுபவித்து மகிழும் நிலையில், நாளும் ஒற்றியூர் இறைவனையும் தவறாது வழி

5. பெ. பு: ஏயர்கோன், 266

எனவும்,

நொய்யேனைப் பொருட்படுத்துச்
சங்கிலியோ டெனைப்புணர்த்த தத்துவனை(7.51:11)

எனவும்,

பண்மயத்த மொழிப்பரவை சங்கிலிக்கும் எனக்கும்
பற்றாய பெருமானே (7.46:11)

எனவும் நம்பியாரூரர் நெஞ்சம் நெக்குருகிப் போற்றியுள்ளதால் அறியலாம்.

சங்கிலியாரை மணந்து கொண்ட தம்பிரான் தோழர் வாழ்க்கைத் துணையாகிய அவருடன் கூடி ஐம்புல இன்பங்களை ஆரத் துய்க்கும் சிற்றின்ப நிலையிலும் சயிலைமலையப்பனின் திருவருளாகிய பேரின்பத்தையே நுகர்ந்து மகிழும் சிவயோகியராகத் திகழ்ந்தனர் என்ற செய்தி,

ஓர்ந்தனன் ஓர்ந்தனன்
உள்ளத்துள் ளேநின்றஒண்பொருள்
சேர்ந்தனன் சேர்ந்தனன்
சென்றுதிரு வொற்றியூர்ப் புக்குச்
சார்ந்தனன் சார்ந்தனன்
சங்கிலிமென்றோள் தடமுலை
ஆர்ந்தனன் ஆர்ந்தனன்
ஆமாத்தூரையன் அருளதே (7.45:4).

என வரும் சுந்தரரின் வாய்மொழியால் தெளியலாம்.

9. பரவையாரின் ஊடல் தீர்த்தல்

தொண்டை நாட்டுத் தலவழிபாட்டை முடித்துக் கொண்டு வழியில் சில நடுநாட்டுத் தலங்களையும் சேவித்துக் கொண்டு திருவாரூர் வருகின்றார் தம்பிரான் தோழர். இவர் பூங்கோயிலமர்ந்த பெருமானை வணங்கச் சென்றபொழுது அவருடைய பரிசனங்களில் சிலர் பரவையாரின் திருமாளிகையை அடைகின்றனர்.[1] தம்மைப் பிரிந்து சென்ற தம்பிரான் தோழர் திருவொற்றியூரில் சங்கிலியாரை மணந்து கொண்ட நிகழ்ச்சியைக் கேள்வியுற்ற பரவையார் மிகவும் சினமுற்றிருக்கின்றார். ஊடல் உச்ச கட்டத்தில் உள்ளது. இதனைச் சேக்கிழார் பெருமான்,

மென்பூஞ் சயனத் திடைத்துயிலும்
மேவார் விழித்தும் இனிதமரார்
பொன்பூந் தவிசின் மிசையினிரார்
நில்லார் செல்லார் புறம்பொழியார்
மன்பூ வாளி மழைகழியார்
மறவார் நினையார் வாய்விள்ளார்
என்பூ டுருக்கும் புலவியோ?
பிரிவோ? இரண்டின் இடைப்பட்டார்.[2]

---

1. ஊடல் நிகழ்ச்சியை ஏயர்கோன் கலிக்காம நாயனார் புராணம் (பாடல்-312 முதல் 382 வரை) விரிவாகத் தெரிவிக்கின்றது.
2. பெ. பு: ஏயர்கோன் -315

என்று காட்டுவார். தம்பிரான்தோழரின் பரிசனங்கள் பரவையாரின் மாளிகையினுள் புகுதப்பெறாது மீண்டு சுந்தரர் தங்கியிருக்கும் தேவாசிரிய மண்டபத்தை அடைந்து, அவரை இறைஞ்சி நின்று, ''பெரியீர், தாங்கள் திருவொற்றியூரில் சங்கிலியாரை மணந்த செய்தி முழுவதையும் பரவையார் முன்னமே கேள்வியுற்றுச் சினங்கொண்டிருந்தமையால், இப்பொழுது நாங்கள் பரவையாரின் திருமாளிகைப் புறத்திலும் அணுகவொண்ணாதபடித் தடுக்கப்பெற்றோம்:- ஆதலால் திரும்பி விட்டோம்'' என்று தெரிவிக்கின்றனர்.

மங்கையர் தம் கணவன்மார் பிற மாதர்களிடம் பேசவும் பொறார். ஊடல் அவர்தம் குருதியிலேயே உற்பத்தியாகும் ஓர் அற்புத உணர்ச்சி. வள்ளுவப் பெருமான் இந்த மெல்லிய நுட்பமான உணர்ச்சியை அற்புதமாகக் காட்டுவார். அதனைச் சிறிது அறிந்துகொண்டால் பரவையாரின் ஊடலை நன்கு அனுபவித்து மகிழலாம். திருவள்ளுவர் படைத்துக் காட்டும் காதலர்களிடையே ஊடல் எழுகின்றது. காதலி ஊடுகின்றாள்; இது விளையாட்டான ஊடல்தான்; கற்பனை ஊடல். காதலன் தவறு செய்ததாகக் கற்பனை செய்து கொண்டு ஊடுகின்றாள் காதலி.

காதலி காதலனை நோக்கி, ''எல்லாப் பெண்களும் கண்ணால் உன்னைக் கண்டு உன் அழகைப் 'பருகுகின்றார்கள்'. ஆதலால் நீ கற்பு இல்லாதவன். உன்னை நான் அணுகவொட்டேன்'' என்கின்றாள்.

> பெண்ணியலார் எல்லோரும் கண்ணில் பொதுஉண்பர்
> நண்ணேன் பரத்த! நின் மார்பு.[3]

இஃது ஒருவகை ஊடல். காதலன் ஒரு மாலையைச் சூடிச் செல்லுகின்றான். அது வேற்று நிலத்துக் கோட்டுப் பூக்களால்

---

3. குறள் - 1313

ஆனது. அதைக் காதலி கண்ணுற்றதும் அவள்பால் ஊடல் எழுகின்றது. 'உன் காதலி யாரோ ஒருத்திக்கு இந்த அழகைக் காட்ட வேண்டும் என்றுதான் சூடிக்கொண்டுள்ளாய்' என்று ஊடுகின்றாள்.

கோட்டுப்பூச் சூடினும் காயும் ஒருத்தியைக்
காட்டிய சூடினீர் என்று.[4]

ஒரு நாள் காதலன் ஒருவன் அன்பு மிகுதியால் ''காதலர் யாவரையும் விட நாம் காதல் மிகுந்தவர்களாக உள்ளோம்'' என்று சாதாரணமாகத்தான் சொல்லுகின்றான். காதலி உடனே ஊடல் கொண்டு ''நீ பல மகளிரைக் காதலிக்கின்றனையோ? அவருள் என்னிடம் அன்பு மிகுதியோ? என்னைப் போன்ற காதலர் பலர் உளரோ? அதனால்தான் யாவரையும் விடக் காதல் மிகுதி என்றாயோ? அவர்கள் யாவர்? யாரைவிட? யாரைவிட?'' என்று கேட்கின்றாள்.

யாரினும் காதலம் என்றேனா; ஊடினாள்
யாரினும் யாரினும் என்று.[5]

இன்னொரு காதலன் தன் காதலியை நோக்கி, ''இந்தப் பிறப்பில் நாம் ஒருவரை விட்டு ஒருவர் பிரிய மாட்டோம்'' என்கின்றான். உடனே காதலி, ''அப்படியா? இந்த ஒரு பிறப்பு தானா? மறுபிறப்பில் பிரியக் கருதிவிட்டாயா?'' என்று ஊடிக் கொண்டே கண்ணீர் உகுக்கின்றாள்; மனம் ஒடிந்து போகின்றாள்.

இம்மைப் பிறப்பில் பிரியலம் என்றேனாக்
கண்ணிறை நீர்கொண் டனள்.[6]

பிறிதொரு காதலன் சும்மா இராமல், ''நின்னைவிட்டுப் பிரிந்து சென்றிருந்தபோது அடிக்கடி உன்னை நினைந்தேன்''

4. குறள் 1313
5. குறள் - 1314
6. ஷை 1315

என்று சொல்லி வைக்கின்றான். உடனே காதலி, "பிரிந்த வுடன் என்னை மறந்தனையோ? மறந்ததனால்தானே மீட்டும் நினைக்க நேர்ந்தது? என்னை மறந்தே விட்டாய்" என்று சொல்லிய வண்ணம் முகத்தைத் திருப்பிக் கொள்ளு கின்றாள்.

உள்ளினேன் என்றேன்மற்று
என்மறந்தீர் என்றென்னைப்
புல்லாள் புலத்தக்
கனள்.[7]

மற்றொரு காதல் இணையிடம் ஊடல் நீடிக்கின்றது. காதலனுக்குத் தும்மல் வருகின்றது; தும்முகின்றான். வழக்கம் போல் காதலி "நூறாண்டு வாழ்க" என்று தும்மல் கேட்டு வாழ்த்துகின்றாள். ஆனால் இவ்வாறு தன் வாயால் வாழ்த்துப் பெறவேண்டும் என்றும், ஊடலை முடிக்க வேண்டும் என்றும் வேண்டுமென்றே காதலன் செயற்கை யாகத் தும்மியதாக எண்ணுகின்றாள். ஊடல் முடிவதுபோய் மிகுதியாகின்றது. அடுத்த நொடியில் அவள் மனத்தில் வேறோர் எண்ணம் உதிக்கின்றது. "யாராவது நினைத்தால் தான் ஒருவர்க்குத் தும்மல் வரும் என்பது நியதி. இப்போது இவரை யார் நினைத்திருப்பார்கள்? நினைக்கும் உரிமை உடையவள் நான் ஒருத்திதானே! இப்படி நினைத்தது தவறா? இன்னும் யாரோ ஒருத்தி இவருக்குக் காதலியாக இருக்கவேண்டும். அவள் நினைத்ததால்தான் இவருக்குத் தும்மல் வந்தது" என்று எண்ணுகின்றாள். காதலனை நோக்கி "யார் நினைக்கத் தும்மல் வந்தது?" என்று கேட்டே விடுகின்றாள்; ஊடலும் செய்கின்றாள்.

இதனை உணர்ந்தே காதலன் அடுத்த தும்மலை வெளிப் படுத்தாமல் அடக்கிவிட முயல்கின்றான். இதை யறிந்த காதலி, "தெரிந்து விட்டது; 'என் அப்பன் குதிருக்குள்

---

7. குறள்-1316

இல்லை' என்பதுபோல் உன் காதலி நினைக்கின்றாள் என்பது எனக்குப் புலப்படாதபடி மறைக்கின்றாய்; அதனால் தான் தும்மலை அடக்குகின்றாய்'' என்று சொல்லி அழத் தொடங்குகின்றாள்.

ஊடி இருந்தேமாத் தும்மினார் யார்தம்மை
நீடுவாழ் கென்பாக்கு அறிந்து.[8]

வழுத்தினாள் தும்மி னேனாக அழித்தழுதாள்
யாருள்ளித் தும்மினீர் என்று.[9]

தும்முச் செறுப்ப அழுதாள் நுமர் உள்ளல்
எம்மை மறைத்தீரோ என்று.[10]

இங்ஙனம் நுட்பமான ஊடல் உணர்வைத் தம் கற்பனைக் காதலர்கள்பால் இருப்பதைக் காட்டுகின்றார் வள்ளுவர் பெருமான்.

திருவள்ளுவர் படைத்துக் காட்டும் காதல் இணைகள் பல நுட்பமான ஊடல் உணர்வைக் காட்டக் கவிஞர் பெருமான் இந்த உத்தியைக் கையாளுகின்றார். ஆனால் தம்பிரான் தோழர் வாழ்க்கை உண்மையானது; உண்மையாகவே சங்கிலியாரை இரண்டாம் மனைவியாக்கிக் கொள்கின்றார். வெறும் வாயை மெல்லுவோர்க்கு அவல் கிடைத்தால் சொல்லவா வேண்டும்?

பரிசனங்களால் பரவையார் கொண்டுள்ள வெகுளியின் உறைப்பை அறிந்த நம்பியாரூரர் மிகவும் கலக்கமடைகின்றார். இனி இதற்கு என் செய்வோம்?' என்று நெடிது நினைக்கின்றார். உலகியல் நடைமுறைகளை நன்குணர்ந்த சில பெரியோர்களைத் தம்பால் பரவையார் கொண்டுள்ள வெகுளியைத் தணித்து வரும்படி அனுப்புகின்றார். அவர்

8. குறள்—1312
9. ஷெ—1317
10. ஷெ—1319

களும் பரவையார் மாளிகையை யடைந்து அம்பெருமாட்டி மனங் கொள்ளத்தக்க வகையில் வேண்டும் பல நியாயங் களை எடுத்துரைக்கின்றனர்; 'நீவிர் நம்பியாரூரருடன் முன் போல் கூடியிருத்தல் வேண்டும்' என வேண்டுகின்றனர். அமைதி கூற வந்த அறிஞர்களை நோக்கி, "ஏதம் மருவும் அவர் திறத்தில் இந்த மாற்றம் இயம்புதிரேல், என்னுயிரைத் துறப்பேன்" என வருந்திக் கூறுகின்றார். அம்மொழி கேட்டு அவர்தம் மனநிலையை நன்கறிந்து அச்சமுற்ற அறிஞர்கள் நாவலூராரின்பால் திரும்பி நிகழ்ந்ததைத் தெரிவித்து அமை கின்றனர்.

தூது சென்ற பெரியோர்களின் பறுமொழியைக் கேட்ட தம்பிரான் தோழர் மிகவும் வருந்துகின்றார். இந்த துயர்க் கடலினை நீந்திச் செல்வதற்கான புணையைக் காண முடியாமல் பிகவும் வேதனைப் படுகின்றார். பேய்களும் அயர்ந்து உறங்கும் நள்ளிரவில் தம் தோழராகிய வீதி விடங்கப் பெருமான் திருவடிகளை நினைந்து, போற்றி, "என்னை அடிமை கொண்ட பெருமானே, முன்னை வினையால் இத்துன்பத்திற்குக் காரணமாக இருப்பவள் பரவையார்; அவள்பால் நீரே இந்த இரவு நேரத்தில் சென்று அச்சீமாட்டி என்பால் கொண்ட ஊடலைத் தணித் தருள்வீராயின் நான் உயிர்தாங்கியிருத்தல் கூடும். இதுவன்றி என்னாற் செய்யத்தக்கது ஒன்றும் இல்லை" என்று வேண்டு கின்றார்.

இந்நிலையில் அடியார்களின் துன்பத்தினைக் காணப் பொறாத அருளாளராகிய சிவபெருமான், நெடியோனும் அறி யாத திரு அடிமலர்கள் நிலத்தில் தோய எழுந்தருளித் தம் தோழராகிய நம்பியாரூரரை அடைகின்றார். அடைந்தவர் "நீ உற்ற துயரம் யாது?" என வினவுகின்றார். அருளே

---

1. பெ.பு: ஏயர்கோன்-323

திருமேனியாகக் கொண்டு எளிவந்தருளிய இறைவனைக் காணப்பெற்ற தம்பிரான் தோழர், விரைந்தெழுந்து சென்று அவர் திருவடிகளில் வீழ்ந்து வணங்குகின்றார். வணங்கியவர், ''பெருமானே, நுமது திருவருளால் அடியேன் திருவொற்றி யூரிலே சங்கிலியைத் திருக்கரம் பற்றிய செய்தி முழுவதை யும் பரவையார் கேள்வியுற்றுத் தன்பால் யான் அடைந்தால் தன் உயிரையே விட்டு விடுவதென்னும் துணிவு கொண் டுள்ளாள். சிறியேன் உமக்கு அடியவனும் தேவரீர் ஆண்ட வனுமாக இருப்பது உண்மையானால், அறிவிழந்து வருந்தும் சிறியேனது அயர்வும் துயரமும் நீங்க இவ்விரவே பரவையின் பொருட்டு அவள் மாளிகைக்குத் தூது சென்று அவளது ஊடலைத் தீர்த்தருளுதல் வேண்டும்'' எனக் குறை இரந்து வேண்டுகின்றார்.

அடியார்களது அன்பினை வேண்டும் இறைவன் வன் றொண்டரது துன்பத்தை நீக்கத் திருவுள்ளங் கொள்ளு கின்றார். தம் தோழராகிய அவரை நோக்கி, ''நீ வருந்தற்க; யான் நின்னுடைய தூதனாகி இப்பொழுதே பரவை வீட்டிற்குச் செல்கின்றோம்'' எனத் திருவாய் மலர்ந்தருளித் தேவர் முதலியோர் புடைசூழ்ந்து வரப் பரவையாரின் திரு மாளிகையை நோக்கி வருகின்றார். வந்தவர் உடன்வந்த சிவகணங்கள் அனைவரும் புறத்தே நிற்க, தாம் மட்டிலும் தமக்குத் திருக்கோயிலில் வழிபாடு செய்யும் மறை முனிவர் வடிவுடன் தனித்து உள்ளே சென்று ''பரவையே; திருக்கடைக் காப்பினை நீக்குக'' எனக் கதவினைத் தட்டி அழைக்கின்றார். பூங்கோயிலமர்ந்த பெருமானுக்குப் பூசனை புரியும் மறையவரே இவ்வாறு அழைப்பதாக எண்ணிய பரவையார், ''இப்பெரியவர் நள்ளிரவிலே இங்கு வந்தது எச் காரணம் பற்றியோ?'' என ஐயுற்று நடுக்கம் எய்துகின்றார்; ஒருவாறு மனத்தைத் திடப்படுத்திக்கொண்டு கதவினைத் திறக்கின்றார். மறையவரை நோக்கி, ''செந்தண்மை பூண்ட

அந்தணரே, நீவிர் எம்மையாளும் சிவபெருமானைப் போன்று இங்கு எழுந்தருளியதன் காரணம் யாது?'' என வினவுகின்றார்.

இதனைக் கேட்ட மறையவரும், ''நங்கையே, நான் சொல்வதை நீ மறுக்காமல் செய்வாயாயின், சொல்லுவேன்'' என்கின்றார். பரவையாரும், ''நீவிர் சொல்லக் கருதியதனைச் சொல்வீராக; என்னால் செய்யத் தக்கதாயின் செய்வேன்'' என்கின்றார். ''நம்பியாரூர் இங்குப் போதற்கு நீ இசைந்தருளுதல் வேண்டும்'' என்று மறையவர் பணித்தருள அது கேட்ட பரவையார், ''நன்று, நன்று. பங்குனித் திருநாளுக்குப் பொன் முதலியன கொண்டு பண்டுபோல் வருபவராக இங்கு என்னைப் பிரிந்து சென்றார்; சென்றவர் திருவொற்றியூரெய்தி அங்கே சங்கிலியார்பால் பிணிப்புண்டார்; இத்தகையவருக்கு இங்கு எப்படிச் சார்புண்டாகும்? அவர் பொருட்டு நள்ளிரவில் தாங்கள் இங்கு வந்து சொன்ன காரியம் மிகவும் நன்றாயுள்ளது!'' என்று மறுத்துரைக்கின்றார்.

இது கேட்ட மறையவர், ''நங்காய், நீ நம்பியாரூரன் செய்த குற்றத்தினை உள்ளத்திற் கொள்ளாது வெகுளி நீங்கி அவனை அன்புடன் வரவேற்கும் பொருட்டன்றோ யான் உன்னை வேண்டிக் கொண்டது. இதனை மறுத்துரைப்பது முறையாகாது'' என்று மறையவர் வற்புறுத்திக் கூறுகின்றார். அவர் கூறியதைக் கேட்ட பரவையார், ''அருமறை முனிவராகி நீர் பொருத்தமற்ற இக்காரியத்தின் பொருட்டு நள்ளிரவில் ஈண்டு வருதல் நுமது பெருமைக்கு ஏற்றதன்று. ஒற்றியூரில் நிலைத்த உள்ளமுடைய அவர் இவண் போதருவதற்கு ஒரு சிறிதும் இசையேன். நீர் விரைவில் இவ்விடத்தை விட்டு அகல்வீராக'' எனச் சினந் தோன்றக் கூறுகின்றார்.[12] இந்நிலையில் மறைவராக வந்த இறைவன் தம்மூளே

12. பெ.பு: ஏயர்கோன்-342-345.

நகைத்துக் கொண்டு நமது உண்மை உருவம் பரவை யாருக்குப் புலப்படாமல் மறைத்துத் தம் தோழரது வருத்த நிலையைக் கண்டு மகிழும் வேட்கையினராய் பரவையார் முதலில் மறுத்துரைத்ததனையே முடிவாகக் கொண்டு நம்பி யாரூரர்பால் திரும்பி வருகின்றார். இதனைச் சேக்கிழார் பெருமான்,

நம்பர்தாம் அதனைக் கேட்டு
நகையும்உட் கொண்டு மெய்ம்மைத்
தம்பரி சறியக் காட்டார்
தனிப்பெரும் தோழ னார்தம்
வெம்புறு வேட்கை காணும்
திருவிளை யாட்டின் மேவி
வம்பலர் குழலி னார்தம்
மறுத்ததே கொண்டு மீண்டார்.[18]

என்று கூறுவர்.

நம்பியாரூரர் தம்பொருட்டுத் தூது சென்ற இறைவனை எதிர் பார்த்துக்கொண்டு வழியின் மேல் விழி வைத்துக் காத்துக் கொண்டிருக்கின்றார். சுந்தரரின் நிலையைச் சேக்கிழார் பெருமான் மிக அற்புதமாகக் காட்டுவர்.

தூதரைப் போக விட்டு
வரவுபார்த் திருந்த தொண்டர்,
'நாதரை அறிவி லாதே
நன்னுதல் புலவி நீக்கிப்
போதரத் தொழுதேன்' என்று
புலம்புவார்; பரவை யாரைக்
காதலின் இசைவு கொண்டு
வருவதே கருத்துட் கொள்வார்.

13. சே-சே. 346

'போயவள் மனையில் நண்ணும்
புண்ணியர் என்செய் தாரோ?
நாயனார் தம்மைக் கண்டால்
நன்னுதல் மறுக்கு மோ? தான்
ஆயஎன் அயர்வு தன்னை
அறிந்தெழுந் தருளி னார்தாம்
சேயிழை துனிதீர்த் தன்றி
மீள்வது செய்யார்' என்று.

வழிஎதிர் கொள்ளச் செல்வர்
வரவுகா ணாது மீள்வர்;
அறிவுற மயங்கி நிற்பர்;
அசைவுடன் இருப்பர்; 'நெற்றி
வீழியவர் தாழ்ந்தார்' என்று
மீளவும் எழுவர்; மாரன்,
பொழிமலர் மாரி வீழ
ஒதுங்குவார்; புன்கண் உற்றார்.[14]

இங்கு இறைவன்பால் பக்தியும் மனைவிபால் காதலும் மாறி மாறித் தம்பிரான் தோழரின் உள்ளத்தை வாட்டுவதைக் காண்கின்றோம்.

மறையவராய்ச் சென்ற இறைவன் நம்பியாரூரரை நோக்கி வருகின்றார். தம்முடைய குறையை இனிது நிறை வேற்றி வருகின்றார் எனப் பெரிதும் மகிழ்கின்றார் தம்பிரான் தோழர். ''அன்று அடியேனைத் தடுத்தாட் கொண்டதற்கு இசையவே இன்று பரவையின் வெகுளியைத் தணித்துவந்தீர்'' என மனங்கசிந்து இறைஞ்சிப் போற்றுகின்றார். அப்பொழுது இறைவன் வன்றொண்டரை நோக்கி ''யாம் நினது வேண்டு கோளின்படியே பரவையின் இல்லத்திற்குச் சென்று அவளிடம் சொல்லத்தக்க நியாயங்களை யெல்லாம்

14. திரு. திரு. 347 - 349.

எடுத்துரைத்தோம். எனினும், அவன் இசையவில்லை'' என்கின்றார். இம்மொழியினைச் செவிமடுத்த தம்பிரான் தோழர், துணுக்குறுகின்றார். தமக்கு எளிவந்து அருளிய இறைவனை வணங்கி, ''முழுமுதல் கடவுளான நுமது மணியினை நும் அடியவளாகிய பரவை மறுக்குந் துணிவுடையவளோ? நீவிர் எனது அடிமைத் திறத்தை விரும்பாவிட்டால், அன்று வலியவந்து எளியேனை ஆட்கொண்டது எதற்காக? அருளாளராகிய நீர் அடியேன் படுந்துன்பத்தைக் கண்டிரங்கி என்னை அவள்பால் சேர்த்திலீராயின் என் உயிர் நீங்குவது திண்மை'' என்று உரைத்துத் தளர்ந்து வீழ்கின்றார்.

இறைவன் அங்கு பரவையார் இல்லத்தில் ஊடலால் ஏற்படும் வெகுளியைக் காண்கின்றார்; இங்குத் தம்பிரா தோழரிடம் காதலால் படும் தளர்ச்சியைக் காண்கின்றார். தாம் உமையிடமும் கங்கையிடமும் படும் பாட்டை நினைத்துக் கொள்கின்றார்! மானிடர்க்கும் தேவர்க்கும் உணர்ச்சி பொதுவாக இருப்பது அவருக்குப் புலனாகின்றது. தம்பிரான் தோழரின் தளர்ந்த நிலையைக் கண்டு தரியாத சிவபெருமான் அவரைத் தம் அருட் கண்ணால் நோக்கி, ''நாம் மீண்டும் பரவைபாற் சென்று, இப்பொழுதே நீ அவளை அடையும்படிச் செய்வோம். வெம்புயர் துயர் துடைத்து நின்னை மகிழ்விப்போம்'' என்கின்றார். இங்கு இறைவனைச் சேக்கிழார் பெருமான் ''வினையெலாம் விளைக்க வல்லார்''[15] என்று குறிப்பிடுவது நம்மைச் சிந்திக்க வைக்கின்றது.

இதுகாறும் காதலால் உந்தப்பெற்ற தம்பிரான் தோழரின் நிலையைக் கண்டோம். இனி வெகுளியால் உந்தப்பட்ட பரவையாரின் மனநிலை எவ்வாறு இறங்கி வருகின்றது என்பதைக் காண்போம். பரவையார் வீட்டைவிட்டு

15. சே. 356.

மறையவர் நீங்கிய பிறகு, 'இங்ஙனம் முதிர் மறையவராக வந்தவர் சிவபெருமானே யாதல் வேண்டும்' எனத் தெளிகின்றார். தம் கணவர் பொருட்டுச் சிவபெருமான் ஆற்றிய பல அற்புத நிகழ்ச்சிகளை நேரில் கண்டவரல்லவா? "அந்தோ, எம்பெருமானது அருள் வாக்கினை அறியாது மறுத்துரைத்தேனே!" என்று வருந்திக் கலங்குகின்றார்.[16] அதன் பிறகு உறக்கம் வரவில்லை; "தம்முடைய தோழருக்காக அருச்சகர் கோலங்கொண்டு எளிவந்த எம்பெருமானைத் தீவினையாட்டியேன் போற்றாது இகழ்ந்தேனே!" என வருந்துகின்றார். தம்முடைய சேடியர்களை எழுப்பி மறையவர் வந்து சென்ற மனைவாயிலை நோக்கிய வண்ணம் துயிலின்றிக் கிடக்கின்றார்.

அருச்சகர் கோலத்துடன் எழுந்தருளிய ஆரூர் அண்ணல் பெருமான் இப்போது யாவரும் உணர்ந்து கொள்ளுதற்குரிய கோலத்துடன் வருகின்றார். இக்காட்சியைச் சேக்கிழார்,

வெறியுறு கொன்றை வேணி
விமலருந் தாமாந் தன்மை
அறிவுறு கோலத் தோடும்
அளவில்பல் பூத நாதர்
செறிவுறு தேவர் யோக
முனிவர்கள் சூழ்ந்து செல்ல
மறுவில்சீர் பரவை யார்தம்
மாளிகை புகுந்தார் வந்து.

பாரிடத் தலைவர் முன்னாம்
பல்கண நாதர் தேவர்
நேர்வுறு முனிவர் சித்தர்
இயக்கர்கள் நிறைத லாலே

16. தே. தே. 359.

பேரரு ளாளர் எய்தப்
பெற்றமா ளிகைதான் தென்பால்
சீர்வளர் கயிலை வெள்ளித்
திருமலை போன்ற தன்றே.[17]

என்று காட்டுவார். பரவையார் இக்காட்சியை நேரில் காணும் பேறு பெறுகின்றார்; நாம் மானசீகமாகக் கண்டு களிக்கின் றோம். கணவருக்குப் பலமுறை நேர்காட்சியில் தோழனாக நின்று உதவியவர் இப்பொழுது அவர் மனைவிக்கும் நேர் காட்சி தந்ததை நினைந்து போற்றி மகிழ்கின்றோம்.

தெய்வக்காட்சியைக் கண்ட பரவையார், விரைந்து எதிர் சென்று சிவபெருமான் திருவடிகளில் வீழ்ந்து வணங்கு கின்றார். சிவபெருமான், பரவையாரை நோக்கி, "நங்காய்! உரிமையால் ஊரன் ஏவ மீளவும் உன்பால் வந்தோம்; நீ முன்புபோல் மறுத்துரையாது நின்பிரிவால் வருத்தமுறும் சுந்தரன் நின்னை அடைதற்கு நீ இசைதல் வேண்டும்" எனப் பணித்தருளுகின்றார். இந்த அருள் மொழியைக் கேட்ட பரவையார், "இவ்வாறு முழுமுதற் கடவுளாகிய ஆரூர்ப் பெருமானை அலைக்கழித்தேனே" என மனங் கலங்கிக் கண்ணீர் மல்கி, "அடியேன் செய்த தவப்பயனால் அருமறை முனிவராக முன்பு வந்தவரும் நீர்தாமோ? இங்ஙனம் நள்ளிருளில் ஒளிவளர் செய்ய பாதம் தரையிற்பட்டு வருந்த அன்பர்க்காக இங்குமங்கும் உழல்வீராகி எளிவந்தருளினீ ராயின், சிறியேன் இதற்கு உடன்படாமல் என் செய்வேன்?" என்று தம் இசைவு தோன்றக் கூறி இறைஞ்சுகின்றார்.

---

17. பெ. பெ. 361, 362.

18. 'மீளவும்' என்ற சொல் முதல் முறை அருச்சகர் கோலத்துடன் வந்தவர் தானே என்பதனை உறுதிப் படுத்துகின்றது.

பரவையாரின் பணிந்த மொழியைக் கேட்டு மகிழ்ந்த மங்கையோர் பாகம் வைத்த வள்ளல் பெருமான், ''நங்கையே, நீ நின்பெருந்தன்மைக் கேற்ப நன்றே மொழிந்தனை'' எனக் கூறி நம்பியாரூரர்பால் நண்ணுகின்றார். தம்பிரான் தோழரும் சிவபெருமானை எதிர்கொண்டு போற்றி, ''எம் பெருமானே, என் உயிரைக் காவாது இடர் செய்யும் பரவை யிடத்திலிருந்து எத்தகைய மறுமொழியைக் கொண்டு வந்தீர்?'' எனக் கேட்கின்றார். இறைவனும் தம் தோழனை நோக்கி, ''நின்மீது பரவை கொண்டிருந்த வெகுளியைத் தணிவித்து வந்தோம். இனி நீ அவளிடத்தில் செல்லலாம்'' என்று மறுமொழி கூறுகின்றார். இறைவனது அருளுரை யினைக் கேட்டு மகிழ்கின்றார் தம்பிரான் தோழர். ''எந்தை பிரானே, பந்தமும் வீடும் என்ற இருமை இன்பத்தினையும் அடியேற்கு வழங்கியருளினீர். இனி எளியேனுக்கு இடர் ஒன்றும் இல்லை'' என்று கூறி இறைவன் திருவடிகளில் வீழ்ந்து இறைஞ்சுகின்றார். தொண்டர்களின் துயர் தீர்த் தருள் புரியும் வீதிவிடங்கப் பெருமான் எவ்வுயிரும் களிகூர விடைமீதெழுந்தருளித் திருவாரூர்ப் பூங்கோயிலிற் சென்று புகுந்து அமர்கின்றார்.

தம்பிரான் தோழர் தம் பரிசனங்கள் சூழ்ந்து போற்றி உடன் ஏக, பரவையார் மாளிகை சேர்வதைச் சேக்கிழார் பெருமான்,

முன்துயில் உணர்ந்து சூழ்ந்த
பரிசனம் மருங்கு மொய்ப்ப
மின்திகழ் பொலம்பூ மாரி
விண்ணவர் பொழிந்து வாழ்த்த
மன்றல்செய் மதுர சீர
சிகரங் கொண்டு மந்தத்
தென்றலும் எதிர்கொண் டெய்தும்
சேவகம் முன்பு காட்ட

மாலைதண் கலவைச் சேறு
மான்மதச் சாந்து பொங்கும்
கோலநற் பசுங்கர்ப் பூரம்
குங்குமம் முதலா யுள்ள
சாலுமெய்க் கலன்கள் கூடச்
சாந்தும்பூண் ஆடை வர்க்கம்
பாலன பிறவும் ஏந்தும்
பரிசனம் முன்பு செல்ல.[19]

என்று காட்டுவார். பரலையார் இவரை எதிர்நின்று வர வேற்றதையும்,

இவ்வகை இவர்வந் தெய்த
எய்திய விருப்பி னோடும்
மைவளர் நெடுங்கண் ணாரும்
மாவிகை அடைய மன்னும்
செய்வினை அலங்கா ரத்துச்
சிறப்பணி பலவும் செய்து
நெய்வளர் விளக்குத் தூபம்
நிறைகுடம் நிரைத்துப் பின்னும்

பூமலி நறும்பொற் றாமம்
புனைமணிக் கோவை நாற்றிக்
காமற்பொற் சுண்ணம் வீசிக்
கமழ்நறுஞ் சாந்து நீவித்
தூமலர் வீதி சூழ்ந்த
தோகையர் வாழ்த்தத் தாமும்
மாமணி வாயில் முன்பு
வந்தெதிர் ஏற்று நின்றார்.[20]

என்று புலப்படுத்துவார்.

---

19. பெ. பு: ஏயர்கோன்-376, 377
20. ஷை ஷை. 378, 379.

தம்பிரான் தோழர் பரவையாரின் செங்கையினைப் பற்றிக் கொண்டு திருமாளிகையில் சென்று சேர்கின்றார். உயிரோரன்ன செயிர்தீர் காதலராகிய அவ்விருவரும் வீதி விடங்கப் பெருமான் தம்பொருட்டுத் தூதராக எளிவந்தருளிய திருவருட் செயலை நினைந்துருகி மாறிலா மகிழ்ச்சியில் திளைத்து,

ஒருவருள் ஒருவர் மேவும்
நிலைமையில் உயிர்ஒன் றானார்.[21]

அடியார்கள் எங்கிருந்து நினைத்தாலும் அங்கே எளிவந்து அவர்களோடு உடனாகி நின்று அன்னோரது துன்பத்தைப் போக்கியருள வல்லவர் சிவபெருமான். இவர்தம் அன்புடைத் தோழர் நம்பியாரூரர் பொருட்டு எழுந்தருளி வந்து தாமரை மலரினும் மெல்லிய தம் திருவடிகள் திருவாரூர்ப் பெருவீதியின் புழுதியிலே அளைந்து வருந்த நள்ளிரவிலே இருமுறை தூது சென்றருளிய இத்திருவருள் செயல் நினைக்குந் தோறும் நம் நெஞ்சை உருக்குகின்றது.[22] இந்தச் செய்தியை நம்பியாரூரர்,

அடியேற் கெளிவந்த
தூதனைத் தன்னைத் தோழமை யருளித்
தொண்டனேன் செய்த துரிசுகள் பொறுக்கும்
நாதனை நள்ளா றனைய அமுதை (7.68:8),

என்று திருநள்ளாற்றுப் பதிகத்திலும்

'தூதனை என்றனைஆள் தோழனை'

என்று கானப்பேர் திருப்பதிகத்திலும் (7.84.9), நெஞ்சம் நெக்குருகிக் குறித்துப் போற்றியுள்ளார். அவருடைய தேவார வாய்மொழிகளாகிய இத்தொடர்களே இந்த அற்புத நிகழ்ச்சிக்கு அகச்சான்றுகளாக அமைந்து அரணாகவும் திகழ்வதைக் கண்டு மகிழலாம்.

---

21. பெ. பு. 381
22. இச்செயல் ஏயர்கோன் கலிக்காம நாயனாருக்கு மாறுபட்ட உணர்ச்சியை உண்டாக்கி விடுகின்றது.

10. ஏயர்கோன் கலிக்காமருடன் நட்பு

தம்பிரான் தோழர் தம் மனைவியாகிய பரவையாரின் ஊடல் தணித்தற் பொருட்டுத் தொண்டர் நாதனை நள்ளிரவில் இருமுறை தூது சென்று வரும்படி இருமுறை ஏவல் கொண்டார் என்ற செய்தி தமிழ்மெங்கும் காட்டுத் தீ போல் பரவுகின்றது. இச்செய்தி ஏயர்கோன் கலிக்காமரின் செவிக்குஎட்டி விடுகின்றது.

இந்தக் கலிக்காமர் யார்? சோழ நாட்டில் காவிரியின் வடகரைக்குக் கீழ்பால் திருப்பெருமங்கலம் என்ற பெரும்பதி ஒன்று உண்டு. செல்வச் சிறப்பு மிக்க அத் திருப்பதியைச் சேக்கிழார் பெருமான்,

> பாரின் மிக்கதோர் பெருமையால்
> பரமர் தாள் பரவும்
> சீரின் மிக்கது சிவபுரி
> எனத்தகும் சிறப்பால்.[1]

என்று வருணித்திடுவர். இத்திருப்பதியில் 'ஏயர்கோன் குடி' என்பது வளவர் சேனாபதிக் குடியாகும். வழிவழி வேளாண்மைத் தொழிலை மேற்கொண்டு வந்த தொன்மைக் குடியுமாகும். இந்த ஊரில் திருவருட் செல்வராகிய கலிக் காமர் தோன்றுகின்றார். இவர் கங்கைவாழ் முடியாராகிய சிவபெருமானுக்கு வழிவழித தொண்டர் என்பதுடன்

1. பெ.பு: ஏயர்கோன்-4

சிவனடியார்களிடமும் ஆராக்காதல் கொண்டு அவர் பணியையும் போற்றுபவர். 'நிதியமாவன நீறுகந்தார் கழல் என்று துதியினால் பரவித்தொழும் பேரன்பினர்' என்பர் சேக்கிழார் பெருமான்[2]. தம்மூருக்கருகிலுள்ள திருப்புன்கூர்[3] என்ற தலத்தில் இவர் செய்த திருப்பணிகளில் மிகச் சிறந்தது பன்னிரண்டு வேலி நிலந்தந்து மழை பெய்வித்தது.

பெய்யு மாமழைப் பெருவெள்ளம் தவிர்த்து
பெயர்த்தும் பன்னிரு வேலிகொண் டருளும்
செய்கை கண்டு (7.55:2)

என்ற சுந்தரர் தேவாரத்தால் இதனை அறியலாம். இத்தடவை இத்தலத்திற்கு வந்தது மூன்றாம் முறையாகும்.

இப் பெரிய சிவத்தொண்டர் தம்பிரான் தோழர் தொண்டர் நாதனை ஏவல் கொண்ட செய்தியினைக் கேட்டு உளம் வெதும்ப வருந்துகின்றார். ''நாயனை அடியான் ஏவும் காரியம் நன்று! இதனைச் செய்வான் திருத்தொண்டனாம்! இக்கொடுஞ் செய்தியைக் கேட்டிருந்தும் யான் உயிர் தாங்கியுள்ளேன். மங்கையொருத்தியின் பிணக்கத்தைத் தீர்த்து அவளுடன் மருவி மகிழவேண்டும் என்னும் ஆசை காரணமாக ஒருவன் இறைவனையே தூதனுப்ப, ஒப்பற்ற கடவுள் அவனுக்குத் தூதனாகி ஓரிரவு முழுவதும் தம் திருவடித் தாமரைகள் நோவ அலைந்து திரிந்தாராம். வானோராலும் அறிய முடியாத இறைவன் அடியார்களிடத்துக் கொண்ட அருள் காரணமாகத் தூது செல்ல இசைத்தாராயினும் அடியான் ஒருவன் அவரை அங்ஙனம் ஏவுதல் என்னமுறை?

---

2. பெ. பு. ஏயர்கோன்-7.
3. புன்கூர் : 6-வது கட்டுரை, அடிக்குறிப்பு 6 காண்க.

அரிவைகா ரணத்தி னாலே
ஆளுடைப் பரமர் தம்மை
இரவினில் தூது போக
ஏவிஅங் கிருந்தான் தன்னை
வரவெதிர் காண்பே னாகில்
வருவதென் னாங்கொல்?''[4]

என்று சொல்லி உள்ளம் வெதும்பி மிகவும் சினம்கொண்டு இருக்கின்றார்.

சிவனடியாராகிய ஏயர்கோன் கலிக்காமர் தம்மிடத்துச் சினம் கொண்டிருத்தலை அறிகின்றார் நம்பியாரூரர். தாம் செய்தது பெரும் பிழை என்றே உணர்கின்றார். கலிக்காமர் தம்மீது கொண்டிருக்கும் செற்றத்தைப் போக்கியருளும்படிச் சிவபெருமானைப்பலமுறையும் வேண்டுகின்றார். அன்பினால் அவ்விருவரையும் ஒற்றுமைப் படுத்தத் திருவுள்ளங் கொள்ளுகின்றார் அண்டர் நாயகன். கலிக்காமருக்குச் சூலை நோயை ஏவுகின்றார். அந்நோய் கலிக்காமரின் திருவயிற்றிற் புகுந்து பழுக்கக் காய்ச்சிய வேலைப்போன்று குடைந்து வருத்துகின்றது. அந்நோயின் கொடுமையைத் தாங்கமுடியாது தளர்ச்சியுற்று வாடும் கலிக்காமர், 'பூத நாயகனார்தம் பொற்றாள் பற்றியே போற்றுகின்றார்'[5]. அப்போது இறைவன் அவர் முன் தோன்றி, ''உன்னை வருத்தும் சூலை நோய் வன்றொண்டன் வந்து தீர்த்தாலன்றித் தீராது'' எனறு கூறியருள, கலிக்காமரும், ''என் தந்தை, தந்தைக்குத் தந்தை முதலாகவுள்ள எங்குல முன்னோர்க் கெல்லாம் தொழுகுலமாய் விளங்கும் முழுமுதற் கடவுள் நீரே என்னும் துணிவுடன் வழிமுறை வழிமுறையாக நும்மை வழிபட்டு வரும் குடியிற்பிறந்த எனது நோயினை நும்மால் வலிந்து ஆட்கொள்ளப் பெற்ற புதியவனாகிய வன்றொண்டனோ

4. பெ.பு ஏயர்கோன்- 87
5. ஷே. ஷே. 390

தீர்த்தற்குரியன்? இந்நோய் அவனால் தீர்க்கப் படுதலை விடத் தீராமல் நின்று என்னை வருத்துதலே நன்றாகும் நீவிர் அவ்வன்றொண்டனுக்கேற்ற உறுதியையே செய்தீர்'' என்று மறுமாற்றம் தருகின்றார். இந்நிலையில் 'கற்றைவார் சடையார்தாமும்' மறைந்தருளுகின்றார்.[6]

இந்நிலையில் கண்கைவார் சடையார் வன்றொண்டரை அணுகுகின்றார். ''நீர் நம் ஏவலால் ஏயர்கோன் கலிக்காமரை யடைந்து அவனை வருத்துகின்ற சூலை நோயினைத் தீர்ப்பாயாக'' எனப் பணித்தருளுகின்றார். இந்த அருளுரையைக் கேட்டு மகிழ்கின்றார் நாவலூரர்; தாம் சூலை நோயைத் தீர்க்க வரும் செய்தியை முன்னமே கலிக்காமருக்குத் தெரிவிக்கும்படி ஆள் அனுப்புகின்றார். வன்றொண்டர் தம்மை நோக்கிச் சூலை நோயைத் தீர்க்கும் எண்ணத்துடன் வருகின்றார் என்பதை உணர்ந்த கலிக்காமர் ''இறைவனைத் தூதனாக ஏவல் கொண்ட கொடியன் வன்றொண்டன் எனது நோய் தீர்க்க இங்கு வந்தால் யான் செய்வது என்னாகும்? அவன் போதருவதற்கு முன்னே என்னை வருத்தும் சூலைநோயினை வயிற்றொடும் கிழித்துப் போக்குவேன்'' எனத் துணிந்து உடை வாளினால் தம் வயிற்றை கிழித்துக் கொண்டு உயிரைப் போக்கிச் சூலை நோயையும் தீர்த்துக் கொள்ளுகின்றார்.

இத்துன்ப நிகழ்ச்சியைப் பொறுக்க லாற்றாது மனம் துளங்கிய கலிக்காமரின் தேவியார் தம் கணவரது பிரிவுக் காற்றாது உயிர்விடத் துணிகின்றார். இந்தச் சமயத்தில் ''நம்பியாரூரர் இங்கு எழுந்தருளினார்'' என்று சிலர் விரைந்து வந்து செப்புகின்றனர். இதனைக் கேட்ட அம்மையார் ''ஒருவரும் அழக்கூடாது'' என இல்லத் துள்ளாருக்குப் பணிக்கின்றார்; தம் கணவர் உயிர் துறந்த

---

6. பெ. பெ. 389 - 393.

செய்தியை ஒருவரும் அறியாதபடி மறைத்து விட்டு நாவலூரரை எதிர் கொண்டழைக்கும்படி உறவினர்களை அனுப்புகின்றார்.

எதிர் கொண்டழைக்க வந்தவர்களுடன் தம்பிரான் தோழர் ஏயர்கோன் திருமாளிகையை அடைகின்றார். கலிக்காமரின் தேவியாரும் தம்மை நன்கு அலங்கரித்துக் கொண்டு தீபம், பூர்ண கும்பம், நல்ல மலர் மாலை இவற்றைக் கொண்டு தொழுது எழச் செல்லுகின்றார்; உறவினர்களும் உடன் செல்லுகின்றனர். நம்பியாரூரரும் நகை முகம் அவர்க்கு நல்கி, மொய்ம்மலர்த் தலிசின்மீது முகம் மலர்ந்து இனிது வீற்றிருக்க, பான்மை அர்ச்சனைகள் எல்லாம் பண்பினில் வழுவாமல் செய்யப்பெறுகின்றன. நாவலூரர் அவற்றை விரைவினில் ஏற்றுக் கொண்டு ''யான் மிகவும் வருந்துகின்றேன்; கலிக்காமரின் சூலை நோயினை விரைவினில் போக்கி அவருடன் அளவளாவி இருத்தற்கு என் மனம் விரைகின்றது'' எனக் கூறுகின்றார்.

கலிக்காமரின் தேவியாரின் ஏவலால் பணியாட்கள் நம்பியாரூரை வணங்கிச் நின்று, ''பெரியீர், கலிகாமருக்குத் தீங்கு ஒன்றுமில்லை. உள்ளே அமைதியாகப் பள்ளி கொண்டுள்ளார்'' என்று விண்ணப்பம் செய்கின்றனர். தம்பிரான் தோழர், ''நீவிர் கலிக்காமருக்குத் தீங்கொன்றுமில்லை என்கின்றீர். ஆயினும், என் மனம் தெளிவு பெறவில்லை. ஆதலால் யான் அவரை விரைவிற் காணல் வேண்டும்'' என்கின்றார். அவர்தம் விருப்பத்தை மறுத்தற்கியலாது அவரைக் கலிக்காமர் இருந்த அறைக்கு அழைத்துச் செல்கின்றனர் பணியாட்கள்.

அந்தோ! அந்த அறையினுள் நுழைந்த தம்பிரான் தோழர் குருதி சோரக் குடர்சரிந்து உயிரற்றுக் கிடந்த கலிக்காமரது உடலைக் கண்டு மன நடுக்க முறுகின்றார். ''நானும் இவர் முன்பு என் ஆவியைத் துறப்பேன்'' என்று துணிந்து

கலிக்காமரது வயிற்றில் செருகப்பெற்றிருந்த குற்றுவாளைப் பற்றிக்கொண்டு அவ்வாளினாலேயே தம்உயிரைப் போக்கிக் கொள்ள முனைகின்றார். இந்நிலையில் ஏயர்கோன் சிவபிரான் அருளால் உயிர் பெற்றெழுகின்றார். வன் றொண்டர் கையிற் பற்றிய வாளினைப் பறித்து அவர் செயலைத் தடுக்கின்றார். கலிக்காமர் உயிர் பெற்றெழுந் தமை கண்டு மகிழ்ந்த வன்றொண்டர் கலிக்காமரின் திருவடி களில் வீழ்ந்து வணங்குகின்றார். கலிக்காமரும் தம் கையில் பற்றியிருந்த வாளினை நிலத்தில் எறிந்து விட்டுத் தம்பிரான் தோழரின் திருவடிகளில் வீழ்ந்து இறைஞ்சுகின்றார். இரு வரும் எழுந்து நின்று ஒருவரையொருவர் அன்பினால் அணைந்து கொண்டு கெழுதகை நண்பர்களாகின்றனர்; இறைவனது திருவருள் திறத்தை விரைந்து போற்று கின்றனர்.

இதன்பின்னர் தம்பிரான் தோழர் கலிக்காமருடன் திருப்புன்கூரை அடைந்து இறைவனது திருக்கோயிலை வலம் வந்து வணங்கி ''அந்தணாள னுன்னடைக்கலம் புகுத'' (7.55) என்னும் முதற் குறிப்புடைய திருப்பதிகத்தினைப் பாடிப் பரவுகின்றார். தம் அன்புடைத் தோழராகிய ஏயர் கோன் கலிக்காம நாயனாரைப் பற்றிய சூலை நோயாகிய கடும்பிணியைத் தீர்த்தருளிய புன்கூர்ப் பெருமானின் திருவருட் செயலை,

ஏத நன்னிலம் ஈரறுவேலி ஏயர்கோன்
உற்ற இரும்பிணி தவிர்த்து (7.55:3)

என்ற மூன்றாம் பாடலின் தொடரால் நம்பியாரூரர் குறிப் பிட்டுப் போற்றியுள்ளமை கண்டு மகிழத்தக்கது.[7]

---

7. இதன் விவரம் 'சோழ நாட்டுத் திருத்தலப் பயணம்' -(ஐ) (ஆறாம் நிலை) காண்க.

திருவாரூர் வருகை: ஏயர்கோன் கலிக்காம நாயனாரை அருமை நண்பராகக் கொண்ட தம்பிரான் தோழர் அவருடன் திருவாரூர் திரும்புகின்றார். இருவரும் பூங்கோயிலமர்ந்த பெருமானைக் கும்பிட்டு மகிழ்கின்றனர். சில நாட்கள் நம்பியாரூரருடன் அளவளாவி மகிழ்ந்த கலிக்காமர் அவரிட மிருந்து விடைபெற்றுத் தம்மூர் திரும்புகின்றார். பின்னர் இவர்தம் எதிர்கால வாழ்க்கை எங்ஙனம் இருந்தென் பதைச் சேக்கிழார் பெருமான்,

அங்கினி தமர்ந்து நம்பி
அருளினால் மீண்டும் போந்து
பொங்கிய திருவின் மிக்க
தம்பதி புகுந்து பொற்பில்
தங்குநாள் ஏயர் கோனார்
தமக்கேற்ற தொண்டு செய்தே
செங்கண்மால் விடையார் பாதம்
சேர்ந்தனர் சிறப்பி னோடும்.[8]

என்று நமக்குக் காட்டுகின்றார்.

8. பெ.பு. ஏயர்கோன் - 408.

11. பாண்டிநாட்டுத் திருத்தல வழிபாடு.

பாண்டிநாட்டுச் சிவத்தலங்கள் பதினான்கு. அவை திருவாடானை, திருவாப்பனூர், திருவாலவாய் இராமேச்சுரம், திருவேடகம், கானப்பேர், குறும்பலா (திருக்குற்றாலம்), கொடுங்குன்றம் (பிரான்மலை), திருச்சுழியல், திருநெல்வேலி திருப்பரங்குன்றம், திருப்பத்தூர், திருப்புனல் வாயில், பூவணம் என்பனவையாகும். இவற்றுள் திருவாடானை, பிரான்மலை என்ற இரண்டுதலங்களைத் தம்பிரான் தோழர் வந்து வழிபட்டதாகத் தெரியவில்லை. திருப்புத்தூர், திருவாப்பனூர், திருவாலவாய், இராமேச்சுரம், திருவேடகம், திருநெல்வேலி, குறும்பலா ஆகிய ஏழும் சுந்தரரால் வழி படப்பெற்றாலும் திருப்பதிகங்கள் பெற்றனவாகத் தெரிய வில்லை. எஞ்சிய திருச்சுழியல், திருப்பரங்குன்றம் திருப் புனல் வாயில், திருப்பூவணம், கானப்பேர் என்ற ஐந்து மட்டிலும் பதிகங்களைப் பெற்றுள்ளன. ஈழநாட்டுத் திருத் தலம் ஒன்றைப் பாண்டி நாட்டிலிருந்தபடியே வழிபடு கின்றார் தம்பிரான் தோழர்.

சேர நாட்டை அக்காலத்தில் பெருமாக் கோதை யாராகிய சேரமான் பெருமாள் நாயனார் ஆண்டுவரு கின்றார். அவர் தில்லைச் சிற்றம்பலவனை நாடோறும் அருச்சனை செய்து வழிபாடு நடத்துபவர். பூசையின் முடிவில் அவர் இறைவனின் ஆடற்சிலம்பின் ஒலி கேட்பது வழக்கம். ஒரு நாள் இந்த ஒலி கேட்கவில்லை. இதனால் மதிமயங்கிய

சேரமான் ''அடியேன் என்னோ பிழை செய்தது?'' எனப் பொருமுகின்றார். ''உடம்பின்மீது கொண்ட ஆசையால் அடையும் இன்பம்தான் யாது?'' என்று மனம் வெறுத்து உடைவாளை உருவித் தம் திருமார்பில் நாட்ட முயல்கின்றார்.[1] 'ஈசனும் விரைந்து சிலம்பின் ஒலியை யக் கேட்பிக்கின்றார். உடனே உடைவாளை அகற்றித் திருக்கைகளைத் தலைமேல் கூப்பியவராய் ''திருவருள் முன்செய்யா தொழிந்தது ஏன்?'' என்று வினவ ''நம்முடைய கூத்தாடலை வணங்கிய வன்றொண்டன், ஒன்றும் உணர்வால் நம்மைத் போற்றிப் பதிகம் பாடுதலால் அதனைக் கேட்டு மகிழ்ந்து இங்கு வரத் தாழ்த்தோம்'' என்கின்றார் அம்பலவாணர். இது வன்றொண்டர் என்ற அடியார் ஒருவரின் இருப்பை நினைப்பிப்பதாக இருந்தது.[2]

சேரமான் பெருமாளுக்கு வன்றொண்டரைக் காண வேண்டும் என்று ஆர்வம் மீதூர்ந்து நிற்கின்றது. திருவஞ்சைக் களத்து இறைவனை வலங்கொண்டு இறைஞ்சி அமைச்சர் களுடன் திருவாரூரை நோக்கி வருபவர், வழியில் தில்லைச் சிற்றம்பலவன்மீது பொன்வண்ணத் திருவந்தாதி பாடி வழி பட்டுத் திருவாரூர்ப் பயணத்தைத் தொடங்குகின்றார். சேரவேந்தரது வருகையை உணர்ந்த தம்பிரான் தோழர் சிவனடியார் கூட்டத்துடன் அவரை எதிர் கொண்டழைக்கின்றார். நம்பியாரூரரைக் காணப்பெற்ற கழறிற்றறிவார்[3] அவருடைய திருவடிகளில் வீழ்ந்து வணங்கி அவரை இருகைகளாலும் எடுத்துத் தழுவிக் கொள்ளுகின்றார், இதனைச் சேக்கிழார் பெருமான்,

---

1. பெ.பு: கழறிற்றறிவார்-42
2. பெ. பு: கழறிற்றறிவார்-44.
3. யாவும் யாரும் கழறினவும் அறியும் உணர்வுடையவர் (கழறிற்றறிவார்-14)

முன்பு பணிந்த பெருமானைத்
தாமும் பணிந்து முகந்தெடுத்தே
அன்பு பெருகத் தழுவவிரைந்
தவரும் ஆர்வத் தொடுதழுவ,
இன்ப வெள்ளத் திடைநீந்தி
ஏற மாட்டா தலைவார்போல்
என்பும் உருக உயிர் ஒன்றி
உடம்பும் ஒன்றாம் என இசைந்தார்.[4]

என எடுத்துக் காட்டுவர். இங்ஙனம் இவர்கள் அளவளாவி மகிழும் தோழமைத் திறத்தைக் கண்ட சிவனடியார்கள் நாவலூரரைச் சேரமான்தோழர் என அழைத்துப் போற்று கின்றனர்.

பின்னர் சேரமான் பெருமான் கையைப்பற்றிக் கொண்டு சேரமான்தோழர்திருவாசிரியனை முன்வணங்கித்திருவாரூர்க் கோயிலை வலம் வந்து வணங்கி உள் புகுகின்றார். சேரமான் பெருமான் தம் தோழரைத் தொடர்ந்து சென்று பூங்கோயில மர்ந்த இறைவன் திருமுன்பு வீழ்ந்திறைஞ்சிக் கண்ணருவி நிலத்தில் வீழத் 'திருமும்மணிக் கோவை' என்னும் சொல் மாலை புனைந்து போற்றுகின்றார். தாம்பாடிய செந்தமிழ்ப் பனுவலைத் தம் நண்பராகிய தம்பிரான் தோழர் முன்னிலை யில் கேட்பிக்கின்றார். திருமூலட்டானத்தில் வீற்றிருத் தருளும் சிவபிரானும் சேரமான் பெருமான் அருளிய தெய்வத்தமிழ்ப் பனுவலை விரும்பி ஏற்றுக் கொண்டருளு கின்றார்.

பின்னர் நம்பியாரூரர் தம் அரிய நண்பரை அழைத்துக் கொண்டு பரவையாரின் திருமாளிக்கைக்குச் செல்கின்றார். அப்பொழுது பரவையார் திருவிளக்கு, நிறைகுடம், பூமாலை, புகை அகில் முதலிய பூசனைப் பொருள்கள் மகளிர் ஏந்த சேரமான் பெருமானை வரவேற்று வணங்கு

4. பெ.பு: கழறிற்றறிவார்-65

கின்றார். சிவனடியார்கட்கும் உடன்வந்த பரிசனங்கட்கும் தக்கவகையால் அறுசுவைப் போனகம் அமைத்து அன்புடன் விருந்தளிக்கின்றார். அடியார்கள் மகிழ ஆளுடைய நம்பியும் சேரமான்பெருமாளும் உடனிருந்து திருவமுதுசெய்கின்றனர். செஞ்சொற்கவி புனையும் சொல் வித்தகர்களாகி அவ்விரு வரும் செல்வத் திருவாரூர் மேவும் புற்றிடங் கொண்ட பெருமானைப் போற்றுகின்றனர்; வீதிவிடங்கப் பெருமான் திருவுலாக்காட்சியைக் கண்டு களித்து இனிது மகிழ்ந்திருக் கின்றனர்.

சேரமான் பெருமாள் திருவாரூரில் தங்கியிருக்கும் பொழுது தம்பிரான் தோழருக்குப் பாண்டிநாட்டிலுள்ள ஆலவாய் முதலிய திருத்தலங்களை வழிபடவேண்டும் என்ற பெருவேட்கை உண்டாகின்றது. இதைச் சேரமான் பெருமாளுக்குத் தெரிவிக்க, அவரும் 'மதி மலிபுரிசைத்'[5] திருமுகம் அனுப்பியருளிய ஆலவாய்இறைவனைக் கண்டு வழிபடவேண்டும் என்னும் பேரார்வமுடையவராய்த் தம் நண்பர்களுடன் செல்லத் துணிகின்றார். ஒத்த உள்ளமுடை யார் இருவரும் அடியார்களும் பரிசனங்களும் புடைசூழ பாண்டிநாட்டுத் திருத்தலப்பயணம் தொடங்குகின்றனர்.

கீழ்வேளூர், நாகப்பட்டினம், அகத்தியான்பள்ளி, கோடிக் (குழகர்) முதலிய சோழ நாட்டுத் தலங்களை வழி பட்டுப் பாண்டிநாட்டுக்கு வருகின்றனர்; திருப்புத்தூரை (அப்பர் பாடியது) வழிபட்டு (பதிகம் இல்லை) மதுரை வந்தடைகின்றனர்.

பாண்டிய மன்னனும், அவன் மகளை மணந்து வேட்ட கத்தில் தங்கியிருந்த சோழ வேந்தனும் இவ்விரு பெரு அடி

5. இத்திருமுகம் பாணபத்திரனுக்கு உதவி புரிய வேண்டும் என்று சேரமான் பெருமாளுக்கு மதுரை சோமசுந்தரக் கடவுள் எழுதியது (பதினோராம் திருமுறையில் உள்ளது).

யார்களை எதிர் சென்று வர வேற்றுத் திருவாலவாய்த் திருக்கோயிலுக்கு அழைத்துச் செல்லுகின்றனர். நம்பியாரூரர் சேரமானுடன் ஆலவாய்ப் பெருமானை வணங்கிப் போற்றுகின்றார் (சுந்தரர் திருப்பதிகம் இல்லை). சேரர் பெருமானும் 'அடியேனைப் பொருளாக அளித்த திருமுகப் பாகரம் பாடிக் கொடுத்தருளிய பேரருளின் எல்லையை அடியேனால் அறியக் கூடுமோ?'' என்று ஆலவாய் அண்ணலைப் பரவித் துதிக்கின்றார். பாண்டிய மன்னன் இவ்விரு பெருமக்களையும் தன் அரண்மனைக்கு அழைத்துச் சென்று அன்புடன் உபசரித்துப் போற்றுகின்றான்; இரு பெரியார்களும் சில நாட்கள் அங்கேயே தங்கியிருந்து ஆலவாய் அண்ணலை வணங்கி மகிழ்கின்றனர்.

தம்பிரான் தோழர் சேர சோழ பாண்டியர்களாகிய மூவேந்தர்களுடன் திருப்பூவணம்[6] என்ற திருத்தலம் சென்று ''திருவுடையார்'' (7.11) என்னும் திருப்பதிகம் பாடித் துதிக்கின்றார்.

திருவுடை யார்திரு மாலய னாலும்
உருவுடை யாருமை யாளையோர் பாகம்
பரிவுடை யாரடை வார்வினை தீர்க்கும்
புரிவுடை யாருறை பூவணம் ஈதோ.(1)

என்பது பதிகத்தின் முதற் பாடல். அடுத்து திருவாப்பனூர்[7] (சம்பந்தர் பாடியது) திருவேடகம் (சம்பந்தர் பாடியது)

6. திருப்பூவணம் இது வைகைக் கரையிலுள்ளது. பாண்டிநாட்டுள்ள தேவாரம் பெற்றுள்ள சிவத் தலங்கள் பதினான்கனுள் இஃது ஒன்று, தமிழ் வேந்தர் மூவரும் வழிபட்ட தலம்.

7. திருவாப்பனூர் (திருவாப்புடையார் கோயில்) மதுரை இருப்பூர்திச் சந்திப்பிலிருந்து ஒரு கல் தொலைவு. வையையாற்றின் வடகரையிலுள்ளது ஆற்று வெள்ளத்தால் தடைப்பட்ட ஒரு பாண்டிய மன்னன் ஆப்பு ஒன்றை நிறுவிச் சிவபூசை செய்தமையால் தலம் இப்பெயரைப் பெற்றது.

முதலான தலங்களை வழிபட்டுத் திருப்பாங்குன்றத்தை[9] அடைகின்றனர். தம்பிரான் தோழர், ''கோத்திட்டையும், கோவலும்'' (7.2) எனத் தொடங்கும் திருப்பதிகத்தைப் பாடிப் பரவுகின்றார்.

கோத்திட்டையும் கோவலும் காயில் கொண்டீச்
சுரமக்கொண்
டுழல்கின்றதோர் கொல்லைச் சில்லைச்
சேத்திட்டுக் குத்தித் தெருவே திரியும்
சிவபூதமும் நீரும் திசைதிசையன
சோத்திட்டு விண்ணோர் பலரும் தொழுநும்
அரைக்கோவணத்தோ டொருதோல்புடைசூழ்ந்(து)
ஆர்த்திட்டதும் பாம்புகைக் கொண்டதும் பாம்படி.
கேள்உமக் காட்செய அஞ்சுதுமே.(1)

என்பது பதிகத்தின் முதற் பாடல். ''நின் திருவடிக்கீழ் நின்று ஆட்செய்யும் அருமையை நினைந்து அஞ்சுகின்றோம்''

திருவேடகம்: மதுரையருகில் உள்ளது. சோழ வந்தானிலிருந்து 3 கல் தொலைவிலுள்ளது. சம்பந்தர் ''வாழ்க அந்தணர்'' (3.54) என்ற முதற் குறிப்பையுடைய பதிகம் எழுதி, மதுரையில் வையை யாற்றிலிட்ட ஏடு 'மருவுறும் பிறவியாற்றில் மாதவர் மனம் சென்றாற்போல்', ஆற்றோட்டத்தை எதிர்த்துச் சென்று தங்கிய இடம். திருக்கோயில் ஆற்றோரத்தே உள்ளது.

9. திருப்பாங்குன்றம்: மதுரையிலிருந்து பேருந்து வசதி. கோயில் மலைச்சரிவில் உள்ளது; குகைக்கோயில். நக்கீரர் திருமுருகாற்றுப்படை விண்ணப்பித்துத் தம்மோடு 999 உயிர்களைக் காப்பாற்றிய அற்புதத் தலம். அவர் சிவபூசை செய்த சரவணப் பொய்கை கோயிலுக்கு அருகிலுள்ளது. முருகப்பிரான், சிவபெருமான், திருமால் முதலியோர் மூலத்தானங்கள் இருக்கும் பகுதி அருமையான நுட்பம் செறிந்த சிற்பம் நிறைந்தது.

என்னும் கருத்தமைய 'அடிகேள் உமக்கு ஆட்செய அஞ்சு தமே' என்று இப்பதிகப் பாடல் தோறும் குறித்துப் போற்று கின்றார்.

இறைவனுக்குத் தொண்டு செய்யும் அருமையை இப் பதிக வாயிலாகக் கேட்டுணர்ந்த அரசர் மூவரும் அன்பு நீங்கா அச்சமுடன் 'சேரமான் தோழரை' வணங்குகின்றனர், தமிழ் மூவேந்தர் முன்னிலையில் இத்திருப்பதிகம் திருப்பரங் குன்றத்தில் அருளிச் செய்யப்பெற்றதை,

அடிகேள்உமக் காட்செய வஞ்சுதுமென்
றமரர்பெருமானை ஆரூரன் அஞ்சி
முடியாலுலகாண்ட மூவேந்தர் முன்னே
மொழிந்தாறு மோர்நான்கு மோரொன்றினையும்
படியா லிவைகற்றுவல்ல அடியார்
பரங்குன்ற மேய பரமனடிக்கே
குடியாகி வானோர்க்குமோர் கோவுமாகிக்
குலவேந்தராய் விண்முழுதாள் பவரே. (11)

என வரும் பதிகத் திருக்கடைக் காப்புப் பாடலால் அறிகின் றோம்.

பாண்டிநாட்டுத் தலங்களை எல்லாம் வழிபட விரும்பு கின்றார் தம்பிரான் தோழர். சேரவேந்தருடன் திருப்பரங் குன்றத்திலிருந்து புறப்பட்டபொழுது, பாண்டிய மன்னன் அந்த இருபெருமக்களும் தென்னாட்டுத் திருக்கோயில்களை வழிபடுவதற்கு வேண்டி எல்லா வசதிகளையும் செய்து வைக்கும்படி ஏவலாளர்களை அனுப்புகின்றான். பாண்டி யனும் சோழனும் ஆகிய இருபெருவேந்தர்களும் சேரமான் தோழர், சேரமான் பெருமாள் ஆகிய இருவரிடமும் விடை பெற்று மதுரை நகரத்தை அடைகின்றனர்.

பின்னர், தம்பிரான் தோழர் சேரவேந்தருடன் குறும்பலா[10] (திருக்குற்றாலம்),(பதிகம் இல்லை), திருநெல்வேலி[11] முதலிய தலங்களை வழிபட்டு இராமேச்சரத்தை,[12] அடைகின்றார்; இராமபிரான் வழிபட்ட இராமநாதனை வழிபடு

---

10. குறும்பலா, குற்றாலம்; தென்காசி இருப்பூர்தி நிலையத்திலிருந்து 3½ கல்தொலைவு. இங்குள்ள சாரல் அருவி முதலியவற்றை அநுபவிக்கச் சூலை ஆகஸ்டு மாதங்களில் மக்கள் திரளுவர். ஒரே காலத்தில் கோயிலுக்கருகிலுள்ள நீருருவியில் 500 பேர் நீராடுவதற்குத்தக்க சீமைக்காரை (Cement) நிலை கட்டப் பெற்றுள்ளது. மலைமேலுள்ள சண்பகாடவியருவியும் தேனருவியும் 3 கல் தொலைவிலுள்ள ஐந்தருவியும் நெடுநேரம் அமைதியாக நீராடுவதற்கு வசதி. அகத்திய முனிவர் திருமால் உருவைக் குறுகச் செய்து சிவலிங்கமாக்கியதால் குற்றாலம் எனவும், பலா மரம் தலவிருட்சமாதல்பற்றிக் குறும்பலா எனவும் தலப் பெயர்கள் ஏற்பட்டன. நடராசர் ஐந்து சபைகளுள் இங்குள்ளது கல்லால் ஆகிய சித்திரசபை. சித்திரை விஷு புண்ணிய காலம் புகழ் பெற்றது. குற்றாலத் தலபுராணம், குற்றாலக் குறவஞ்சி முதலிய நூல்கள் இலக்கியச் சுவை நிரம்பியவை.

11. நெல்வேலி : திருநெல்வேலிடவுன் இருப்பூர்தி நிலையத்திலிருந்து ½ கல்தொலைவு. பொருநை யாற்றங்கரையிலுள்ளது. ஆற்று வெள்ளச் சேதமின்றிச் சிவபெருமான் நிவேதனத்துக்குச் சேமிக்கப் பெற்ற நெல்களஞ்சியத்தை வேலி கட்டிக் காத்தமையால் நெல்வேலியாயிற்று. நட்டராசரின் 5 சபைகளுள் இங்குள்ளது தாமிரசபை. சுவாமி சந்நிதிக் கெதிரில் ஏழிசை ஒலி எழுப்பும் கருங்கல் தூண்கள் உள்ளன. ஒரு சிறு கோலால் தட்டிக் கேட்கலாம். அம்மை காந்திமதியின் திருவுருவம் அழகும் அருளும் நிரம்பியது. ஆற்றின் நடுவில் குறுக்குத் துறை முருகன் கோயில் சிறப்புடையது.

12. இராமேச்சரம் : இராமேச்சரம் இருப்பூர்தி நிலையத்திலிருந்து 1 கல் தொலைவு. கடற்கரைத் தலம். ஒரு தீவிலுள்ளது. காசிக்குச் செல்பவர்கள் கங்கை தீர்த்தம் கொணர்த்து இராமலிங்க மூர்த்திக்கு திரு

கின்றார். இந்த மூன்று தலங்கட்கும் தம்பிரான் தோழரின் திருப்பதிகங்கள் தேவாரத் தொகுப்புகளில் இல்லை. இருவரும் சில நாட்கள் இராமேச்சரத்தில் தங்கியிருக்கின்றனர். அங்கிருந்தபடியே ஈழ நாட்டிலுள்ள (இலங்கை) மாதோட்டக் கேதீச்சரத்தை[13] ''நந்தார் புடை''(7.80) என்று தொடங்கும் திருப்பதிகம் பாடிவழிபடுகின்றார் நம்பியாரூரர்.

நத்தார் புடை ஞானன்
பசுவேறிந் நனைகவிழ்வாய்
மத்தம் மதயானை
யுரிபோர்த்த மணவாளன்

முழுக்காட்டுவித்துக் காசிப் பயணத்தை முடித்துக் கொள்வது மரபு. சத்திரங்கள் உள்ளன. தேவஸ்தானத்திற்குரிய விடுதிகளும் உள்ளன. உணவு விடுதிகள் வசதி உண்டு. காசியிலிருந்து ஓர் இலிங்கம் கொண்டு வரும்படி இராமர் ஆஞ்சனேயரைப் பணிக்க, அவர்காலந்தாழ்த்தும் திரும்பவில்லை. சீதாப்பிராட்டி மணலைப் பிடித்து இலிங்கமாக்க அதை இராமர் வழிபட்டனர். அதுவே இராமலிங்கம். அதுவே மூலத்தானத்திலிருப்பது. ஆஞ்சநேயர் தாமதித்துக் கொணர்ந்த காசி இலிங்கம் இராமலிங்கம் சந்நிதியின் வடக்கில் சில அடி தூரத்தில் உள்ளது. பயணிகள் இரு இலிங்கங்களையும் சேவிப்பது வழக்கத்தில் உள்ளது. நிரம்ப அழகிய தேசிகர் இயற்றிய சேதுப்புராணம் முதலியன இத்தலத்துக்கு உண்டு. அம்பிகை அழகும். அருளும் நிரம்பிய மலை வளர் காதலி (பர்வதவர்த்தனி). தாயுமான அடிகளின் திருப்பாடல்கள் அம்மையின் சிறப்பை நன்கு விளக்கும். ஆஞ்சநேயர், சேதுமாதவர், கால பைரவர் முதலியோரின் உட்கோயில்கள். சிறப்புடையவை.

13. திருக்கேதீச்சரம் ஈழநாட்டில் பாலாவியாற்றங் கரையிலுள்ள இத்தலம் தலைமன்னாரிலிருந்து 23 கல் தொலைவிலுள்ளது. சம்பந்தரும் தம்பிரான் தோழரும் இத்தலப் பதிகங்களை இராமேச்சரத்திலிருந்தே ஓதியதாக வரலாறு.

பத்தாகிய தொண்டர்தொழு
பாலாவி யின்கரைமேல்
செத்தார் எலும்பணிவான்
திருகேதீச் சரத்தானே. (1)

என்பது பதிகத்தின் முதற் பாடல். பின்னர் அங்கிருந்து கிளம்பித் திருச்சுழியல்[14] என்ற தலத்தையடைந்து "ஊனாயுயிர்" (7 82) என்ற திருப்பதிகம் பாடி இறைவனை வழிபடுகின்றனர்.

ஊனாய் உயிர்புகலாய
கலிடமாய் முகில்பொழியும்
வானாய் வருமதியாய்
விதிவருவான் இடம்பொழிலின்
தேனா தரித்திசை
வண்டினமிழற்றும் திருச்சுழியல்
நானாவித நினைவார்தமை
நலியார்நமன் தமரே. (1)

என்பது பதிகத்தின் முதற்பாடல். இப்பதிகத்தால் வழிப்பட்டு அப்பதியில் தங்கியிருக்கும்போது, சிவபெருமான் தம் திருக் கையில் செண்டும் திருமுடியிற் சுழியமும் உடையராகி நம்பியூராருக்குக் கனவிலே தோன்றி 'யான் இருப்பது காணப் பேர்' என்று கூறி மறைந்தருளுகின்றார். சிவபெருமானிடம் என்றுமிலாத் திருக்கோலத்தைக் கண்டு விழித்தெழுந்த சேரமான் தோழர் தம் கனவுக் காட்சியைச் சேரமான்

---

14. திருச்சுழியல்: இத்தலம் மதுரையிலிருந்து 24 கல் தொலைவிலுள்ளது. மதுரையிலிருந்து அருப்புக் கோட்டை 17 கல் தொலைவு; அங்கிருந்து பேருந்து மூலம் 7கல். விருதுநகரிலிருந்து 19 கல்(அருப்புக் கோட்டைக்கு விருதுநகரிலிருந்து பேருந்து மூலம் 12 கல்; அங்கிருந்து பேருந்து மூலம் 7கல்.)

பெருமானுக்குத் தெரிவித்து "தொண்டரடித்தொழலும்" (7.84) என்ற திருப்பதிகத்தைப் பாடிக்கொண்டு இருவருமாகக் காளப்பேர்[15] வருகின்றனர்.

தொண்டரடித் தொழலும் சோதியிளம் பிறையும்
சூதன மென்முலையாள் பாகமு மாகிவரும்
புண்டரி கப்பரிசாம் மேனியும் வானவர்கள்
பூசலிடக் கடல்நஞ் சுண்ட கருத்தமருங்
கொண்ட லெனத்திகழும் கண்டமும் மென்தோளும்
கோல நறுஞ்சடைமேல் வண்ணமும் கண்குளிரக்
கண்டு தொழப்பெறுவ தென்றுகொலோ அடியேன்
கார்வயல்சூழ் காளப் பேருறை காளையே.(1)

என்பது திருப்பதிகத்தின் முதற் பாடல். சில நாள் இத்திருத்தலத்தில் தங்கித் தம் தோழர் சேரவேந்தருடன் திருப்புனவாயிலுக்கு[16] வருகின்றார். திருப்புனல் வாயில் இறைவனைச் "சித்த நீநினை" (7.50) என்னும் திருப்பதிகம் பாடித் துதிக்கின்றார்.

---

15. காளப்பேர்: இது காளையார் கோயில். நாட்டரசன் கோட்டையிலிருந்து 6கல் தொலைவு. தேவகோட்டை செல்லும் வழியிலுள்ளளது. சுந்தரர் கனவில் காளையாகத் தோன்றித் தாம் இருப்பது 'காளப் பேர்' எனக் கூறி அவரை வணங்கச் செய்து பதிகம் பெற்ற படியால் 'காளையார் கோயில்' என்ற திருநாமம் பெறுகின்றது இத்தலம்.

16. திருப்புனவாசல்: அறந்தாங்கியிலிருந்து 29 கல் தொலைவு. அறத்தாங்கியிலிருந்து 22 கல் தொலைவிலுள்ள மீமிசல் போய் 7 கல் தொலைவு மாட்டு வண்டியில் சென்று இவ்வூரை அடையலாம். ஆடானை சென்று 12 கல் தொலைவு கடந்தாலும் இத்தலத்தை அடையலாம். இது கடற்கரைத்தலம். கருவறையிலுள்ள இலிங்கம் மிகப் பெரியது. ஆவுடையாரைச் சுற்றியுடுத்த 30 முழ நீளமுள்ள பாவட்டம் தேவை. தஞ்சைப் பெரியகோயில் பிருஹதீசுவரர் நினைவு வரும்.

வற்கென் றிருத்தி கண்டாய்
மனமென்னொடு சூளறும்லைகலும்
பொற்குன்றம் சேர்ந்த தோர் காக்கை
பொன்னா மதுவேபுகல்
கற்குன் றும்தூறும் கடுவெளி
யும்கடற் கானல்வாய்ப்
புற்கென்று தோன்றிடு மெம்பெரு
மான்புன வாயிலே.(4)

என்பது இச்செந்தமிழ் மாலையில் நான்காவது நறுமலர். பின்னர் சோழநாட்டை அடைகின்றார். பாம்பணிமா நகரி லுள்ள பாதாளீச்சரம்[17] (பதிகம் இல்லை) முதலாகப் பலதிருக் கோயில்களை வழிபட்டுச் சேரமான் பெருமாளுடன் திரு வாரூரை அடைந்து பரவையார் மாளிகையில் தங்குகின்றார் தம் தோழருடன்.

---

17. பாதாளீச்சரம் (பாம்பணி) : மன்னார்குடியிலிருந்து 1½ கல் தொலைவு.

12. சோழநாட்டுத் திருத்தலப் பயணம்—(2)

முதல் மூன்று நிலைகளில் சோழநாட்டுத் திருத்தலப் பயணத்தை முடித்துக் கொண்டு திருவாரூரில் பரவையாருடன் வைகும் நாளில், தம்பிரான் தோழர் திருமுதுகுன்றப் பெருமானிடம் பெற்ற பொன்னை மணிமுத்தாற்று நீரில் விட்டுவந்தது நினைவிற்கு வருகின்றது. திருக்கோயிலின் மேற்பாலுள்ள திருக்குளத்தில் அதனை எடுக்க நினைக்கின்றார். பரவையாரை இவ்வற்புதக் காட்சியைக் காண வருமாறு அழைக்கின்றார்.

பரவையாரை நோக்கி, "நங்காய், திருமுதுகுன்றப் பெருமான் நமக்குத் தந்தருளிய பொன்னை மணிமுத்தாற்று நீரினுள் புகவிட்டு வந்தேன். அப்பொன்திரளை இறைவன் அருளால் திருவாரூர்த் திருக்கோயிலின் மேற்புறத்திலுள்ள குளத்திலே தேடி எடுத்துவரப் போகிறேன். நீயும் என்னுடன் போதருக" என அழைக்கின்றார்.

இதனைக் கேட்ட பரவையார் சிறிது முறுவலித்து, "நாதா, இஃது என்ன அதிசயம்? ஆற்றிலிட்டதைக் குளத்தில் எடுப்பதாவது?" என்று கூறுகின்றார்.

இதனைக் கேட்ட தம்பிரான் தோழர், "நன்னுதலாய், நம் பெருமான் அருளால் அப்பொன் முழுவதையும் குளத்திலே எடுத்து உனக்குத் தருவது பொய்யாது" என உறுதி கூறுகின்றார்.

இருவரும் புற்றிடங் கொண்ட பூங்கோயில் பெருமானை வணங்கித் திருவாரூர்த் திருக்கோயிலை[1] வலம் வந்து அதன் மேல்பாலுள்ள திருக்குளத்தின் வடகரைக்கு வருகின்றனர். பரவையாரைக் குளக்கரையில் நிற்கும்படி பணித்துத் தாம் குளத்தில் இறங்கி முதுகுன்ற மணிமுத்தாற்றிலிட்ட பொன்னைத் தேடுகின்றார். தம் தோழர் வாயிலாகச் செந்தமிழ்ப் பாமாலையை அணிய விரும்பிய தம்பிரான் அக் குளத்தில் பொன் விரைவில் தோன்றாதபடி செய்தருளு கின்றார். இந்நிலையில் பரவையார் தம் காதலரை நோக்கி "ஆற்றினில் இட்டுக் குளத்தில் தேடுவீர்; இறைவன் திரு வருளைச் சோதிக்கும் முறை இதுவோ?" என நகைத்துரைக் கின்றார். இதனைக் கேட்ட பரவையார் காதலர், 'முது குன்றத் தமர்ந்த பெருமானே, பரவையவள் நகைத்துரை யாதபடி தேவரீர் அடியேற்கு முன் அருளிச் செய்த வண்ணம் பொன்னைத் தந்தருள்வீராக" என வேண்டுகின்றார்.

பொன்செய்த மேனியீர்,
புலித்தோலை அரைக்கசைத்தீர்
முன்செய்த மூவெயிலும்
எரித்தீர் முதுகுன்றமர்ந்தீர்

---

1. ஆரூர் (திருவாரூர்க்கோயில்): இது 5 வேலி பரப்புள்ளது. அப்பர்4.53:7). தலம்மூர்த்தியின்சிறப்புக்குஒத்த சிறப்புடையது. மூர்த்தி தலச்சிறப்புகள் போலவே, தீர்த்தச் சிறப்பும் அமைந்துள்ளது. கமலாலயம் என்ற திருக்குளம் திருக்கோயிலை ஒத்து 5 வேலி அளவுள்ளது. ஏழு திருமுறைகளிலும் மிகுதியான பாசுரங்கள் உண்டு. (ஆரூர் கச்சியேகம்பம், மறைக்காடு ஆகிய மூன்று தலங்கட்கே ஏழுதிரு முறைகளிலும் பதிகங்கள் ,உண்டு, சீகாழிக்கு, மிகுதியான பதிக எண்ணிக்கை 71 இருப்பினும், ஆறாம் திருமுறையில் ஒரு பாசுரம் கூட இல்லை).

மின்செய்த நுண்ணிடையாள்
பரவையிவள் தன்முகப்பே
என்செய்த வாறடிகேள்
அடியேனிட் டளங்கெடவே (7.25:1)

என்ற முதல் பாடலையுடைய திருப்பதிகத்தினைப் பாடிப் போற்றுகின்றார். ''உம்பரும் வானவரும் உடன்நின்று காண அடியேனுக்குத் திருமுதுகுன்றத்தில் நீவிர் அளித்த செம் பொன்னை விரைவிற் பெறாது போன தளர்ச்சியினால் உண்டாகிய துன்பத்தைப் பரவையாகிய இவளதுமுன்னிலை யில் போக்கியருளுதல் வேண்டும்'' என இறைஞ்சுவார்.

உம்பரும் வானவரும்
உடனேநிற்க வேஎனக்குச்
செம்பொனைத் தந்தருளித்
திகழும் முதுகுன்றத்தமர்ந்தீர்
வம்பமருங் குழலாள்
பரவையிவள் வாடுகின்றாள்
எம்பெருமான் அருளீர்
அடியேன்இட் டளங்கெடவே (7.25.2)

எனக் குறையிரந்து வேண்டுகின்றார். இங்ஙனம் இத்திருப் பதிகத்தின் எட்டாம் பாட்டளவும் வேண்டியும் முதுகுன்றத் திறைவன் பொன்னைத் தந்தருளவில்லை.

ஏத்தா திருந்தறியேன்
இமையோர் தனிநாயகனே
மூத்தாயுலகுக் கெல்லாம்
முதுகுன்றத் தமர்ந்தவனே
பூத்தாருங் குழலாள்
பரவையிவள் தன்முகப்பே
கூத்தா தந்தருளாய்
கொடியேன்இட் டளங்கெடவே (7.25:9)

என்ற ஒன்பதாந் திருப்பாடலைப் பாடி முடிந்ததும் இறைவன் அருளால் பொன்திரள் திருக்குளத்தில் அகப்படுகின்றது. இந்தப் பொன்னையும் மாற்றறியக் கொணர்ந்த மச்சத்தையும் உரைகல்லில் உரைத்து ஒப்புப் பார்த்தபொழுது குளத்தில் கிடைத்த பொன் மாற்றில் தாழ்ந்து காணப்படுகின்றது. அது கண்ட சுந்தரர் இறைவனை மீண்டும் மாலயனுக்கரிய சழல் பாடிப் பரவுகின்றார். திருவருளால் பொன் மாற்றுயர்ந்து திகழ்கின்றது. பொற்குவையை ஏவலாளர் மூலம் பரவையாரின் திருமாளிகைக்கு அனுப்பிவிட்டுப் பரவையாருடன் மாளிகைக்குத் திரும்பி இறைவனின் திருவருட்டிறத்தைச் சிந்தித்த வண்ணம் மகிழ்ந்து உறைகின்றனர்.

இந்நிலையில் ஒருநாள் 'மணிப்புற்றின் அமர்ந்தருளும் பரம் பொருளைப்' பாராட்டும் முறையில் ''பாறுதாங்கி'' (7.33) என்ற திருப்பதிகத்தைப் பாடி மகிழ்கின்றார்.

பாறு தாங்கிய காடரோ
படுதலைய ரோமலைப் பாவையோர்
கூறு தாங்கிய குழகரோ
குழைக்காத ரோகுறங் கோட்டிள
ஏறு தாங்கிய கொடியரோ
சுடுபொடி யரோவிளங் கும்பிறை
ஆறு தாங்கிய சடைய
ரோநமக் கடிகளாகிய அடிகளே. (1)

என்பது இத்திருப்பதிகத்தின் முதற்பாடல். இதனைச் சேக்கிழார் பெருமான்,

பண்ணிறையும் வகை ''பாறு
தாங்கி''என எடுத்தருளி
உண்ணிறையும் மனக்களிப்பால்
உறுபுளகம் மயிர் முகிழ்ப்பக்

கண்ணிறையும் புனல்பொழியக்
கரை இகந்த ஆனந்தம்
எண்ணிறைந்த படிதோன்ற
ஏந்திமகிழ்ந் தின்புற்றார்[2].

என்று காட்டுவார்.

நான்காம் நிலை: ஒருநாள் இறைவன் கோயில்கொண்டு எழுந்தருளியுள்ள ஏனைய திருத்தலங்களையும் வழிபட்டு மகிழத் திருவுள்ளங் கொள்ளுகின்றார். ஆரூரிறைவன்பால் விடைபெற்று முதலில் திருநள்ளாறு[3] எனற திருத்தலத்தை அடைகின்றார். "செம்பொன் மேனி" (7.68) என்ற திருப்பதிகம்பாடி நள்ளாற்றிறைவனை ஏத்துகின்றார்.

செம்பொன் மேனி வேண்ணீ றணிவானைக்
கரியகண்டனை மாலயன் காணாச்
சம்புவைத் தழலங் கையி னானைச்
சாமவேதனைத் தன்னொப்பி லானைக்
கும்பமா கரியின் உரியானைக் கோவின்
மேல்வருங் கோவினை எங்கள்
நம்பனை நள்ளாறனை அமுதை நாயி
னேன்மறந் தென்னினைக் கேனே. (1)

என்பது பதிகத்தின் முதற் பாடல்.

---

2. பெ பு: ஏயர்கோன் - 141
3. நள்ளாறு (திருநளார்) பேரளம் - காரைக்கால் இருப்பூர்திப் பாதையில் ஒருநிலையம். நிலையத்திலிருந்து அரைக்கல் தொலைவிலுள்ளது திருக்கோயில். சப்த விடங்கங்களுள் இங்கு நகவிடங்கன்; உன் மத்த நடனம். மதுரையில் சம்பந்தர் அனல் வாதம் செய்த போது, தமது தேவார ஏடுகளில் ஒன்றை எடுத்து அனலில் இடும்போது இத்தலப் பதிகம் பச் சென்றிருந்த படியால் இப்பதிகம் (சம்பந்தர் 1.49.) 'பச்சைப் பதிகம்' எனப்பெயர் பெற்றது. கோயிலின் வாயிலுக்கருகில் சனீஸ்வரன் கோயில் உள்ளது. 2½ ஆண்டுக்கொரு முறைவரும் 'சனிப்பெயர்ச்சி' உற்சவம் புகழ் பெற்றது சனிபகவான் தங்கக் காக்கை வாகனத்தில் எழுந்தருளுவார்.

நள்ளாற்றினின்று புறப்பட்டுக் கடவூர் வீரட்டத்திற்கு[4] வருகிறார் நம்பியாரூரர். "பொடியார் மேனி" (7.28) என்ற முதற்குறிப்பையுடைய திருப்பதிகம் பாடி இறைவனைப் போற்றுகின்றார்.

பொடியார் மேனியனே
புரிநூலொரு பாற்பொருந்த
வடியார் மூவிலைவேல்
வளர்கங்கையின் மங்கையொடும்
கடியார் கொன்றையனே
கடவூர்தனுள் வீரட்டத்தெம்
அடிகேள் என்னமுதே
எனக்கார்துணை நீயலதே. (1)

என்பது திருப்பதிகத்தின் முதல் திருப்பாடல்.

கடவூர் வீரட்டத்தை விட்டுக் கடவூர் மயானத்திற்கு[5] வருகின்றார் தம்பிரான் தோழர். "மறுவார் கொன்றை"

---

4. கடவூர் வீரட்டம் : மயிலாடுதுறை - தரங்கம்பாடி இருப்பூர்திப் பாதையில் திருக்கடையூர் நிலையத்திலிருந்து ¼ கல் தொலைவிலுள்ளது. மார்க்கண்டனுக்கு என்றும் பதினாறு வயது எனும் சிரஞ்ஜீவிப் பேறளித்த அருந்தலம். அமிர்தக் கடலே சிவலிங்கமாயிருத்தலின் அமிர்த கடேசுவரர் என்பது இறைவன் திருநாமம். இறைவி அபிராமி. 'திருக்களிற்றுப் படியார்" என்ற சித்தாந்த சாத்திரத்தை இயற்றிய உய்யவந்த தேவநாயனார் அவதரித்த தலம். குங்குலியக் கலய நாயனாரும் காரி நாயனாரும் தொண்டு செய்து முத்தி பெற்ற தலம். அபிராமிபட்டர் அபிராமியந்தாதி பாடி அபிராமி அம்மையின் அருளால் அமாவாசையன்று முழு மதியை ஆகாயத்திற் காட்டிய அற்புத நிகழ்ச்சி நடைபெற்ற தலம்.

5. கடவூர் மயானம் (திருமெய்ஞ்ஞானம்): திருக்கடையூரிலிருந்து 1½ கல் தொலைவிலுள்ளது. பிரமதேவனை நீறாக்கிய மயானம்.

(7.53) என்ற மூதற் குறிப்புடைய திருப்பதிகம் பாடி மயானத் திறைவனை வணங்கி மகிழ்கின்றனர். இத்திருப்பதிகத்தின் முதற் பாடல் இது.

மருவார் கொன்றை மதிசூடி
மாணிக் கத்தின் மலைபோல
வருவார் விடைமேல் மாதோடு
மகிழ்ந்து பூதப் படைசூழத்
திருமால் பிரமன் இந்திரற்குந்
தேவர் நாகர் தானவர்க்கும்
பெருமான் கடவூர் மயானத்துப்
பெரிய பெருமான் அடிகளே. (1)

கடவூர் மயானத் திறைவனிடம் விடைபெற்றுக் கொண்டு வலம்புரம்[6] என்ற திருத்தலநிற்கு வருகின்றார் வன்தொண்டர். "எனக்கினி" (7.72) என்ற முதற்குறிப் பினையுடைய திருப்பதிகம் பாடி வலம்புரத்து எம்மானை ஏத்தித் துதிக்கின்றார்.

எனக்கினித் தினைத்தனைப்
புகலிடம் அறிந்தேன்
பனைக்கணி பழம்படும்
பரவையின் கரைமேல்
எனக்கினி யவன்றமர்க்
கினியவன் எழுமையும்
மனக்கினி யவன்றன
திடம்வலம் புரமே. (1)

என்பது இத்திருப்பதிகத்தின் முதற் பாடல்.

---

6. வலம்புரம் (பெரும்பள்ளம்) : சீகாழியினின்று 8½ கல் தொலைவிலுள்ளது.

வலம்புரத்து இறைவனிடம் விடைபெற்றுக் கொண்டு சாய்க்காடு[7] என்ற திருத்தலத்திற்கு வருகின்றார் நம்பியாரூரர். சாய்க்காட்டு எம்பெருமானை வணங்கியபின் (பதிகம் இல்லை) திருவெண்காட்டிற்கு[8] வருகின்றார். ''படங்கொள் நாகம்'' (7.6) என்ற முதற் குறிப்புடைய திருப்பதிகம் பாடி வெண்காட்டிறைவனை வழிபடுகின்றார்.

---

7. சாய்க்காடு (சாயாவனம்). சீகாழியிலிருந்து 9 கல் தொலைவு. மயிலாடுதுறை - தரங்கம்பாடி இருப்பூர்தி வழியிலுள்ள ஆக்கூர் நிலையத்திலிருந்து 5கல் தொலைவு. திருவெண்காட்டிலிருந்து 1 கல் தொலைவு. பல்லவனீச் சரத்திற்கு அருகிலுள்ளது. இது மாடக்கோயில். யானை ஏறிக் கோயிலைச் சிதைக் காமலிருக்கக் கட்டப்பெற்ற பெரிய மேடையுள்ள கோயில்தான் மாடக்கோயில் என்பது (கோச் செங்கணான் தமிழகத்தில் 70 மாடக் கோயில்களைக் கட்டினான் என்பது வரலாறு).

சாய்க்காட்டுச் சுவாமியின் பெயர் சாயாவனேசுவரர். அம்பிகையின் பெயர் குயிலுமொழியம்மை. கோஷ்டாம்பாள் என்றும் சொல்வர். இந்தச் சாய்க்காட்டில்தான் இயற்பகை நாயனார் தமது மனைவியை அடியார் ஒருவருக்குக் கொடுத்துத் திரும்பியதாகக் கதை. இதற்கு வடக்கே மேலூர் என்ற மேலப் பள்ளத்திலுள்ள சுவர்மியின் பெயர் பிரியா வணங்கீசுவரர். இங்கேதான் இயற்பகையின் மனைவியைத் தனியேவிட்டு, அடியாராக வந்த இறைவன் பிரிந்தார், சாய்க்காட்டில் மார்கழியில் ஐந்து நாட்கள் விழா நடக்கும். இந்த விழாவில் இயற் பகையின் வரலாறு சம்பந்தமான காட்சிகள் காட்டப்பெறும்.

8. வெண்காடு (திருவெண்காடு): சீகாழியிலிருந்து 7 கல் தொலைவிலுள்ளது. பேருந்து வசதி உண்டு. திருக்கோயிலுக்குள் சூரிய தீர்த்தம், சந்திரதீர்த்தம், அக்கினி தீர்த்தம் என்ற மூன்று தீர்த்தங்கள் உள்ளன. இம்மூக்குள நீராடி இறைவனை வழிபடுவோர் மக்கட் பேறுடன் வரம் எல்லாம் பெறுவர் (சம்பந்தர் 2.48.2). இங்ஙனம் வழிபட்ட அச்சுதகளப்பாளர் மெய்கண்டார் என்ற சந்தான குர

குடமெடுத்து நீரும் பூவும்
கொண்டு தொண்டர் ஏவல் செய்ய
நடமெடுத் தொன்றாடிப் பாடி
நல்குவீர்நீர் புல்கும் வண்ணம்
வடமெடுத்த கொங்கை மாதோர்
பாக மாக வார்கடல்வாய்
விடமிடற்றில் வைத்த தென்னே
வேலைசூழ்வெண் காட னீரே(5).

என்பது இப்பதிகத்தின் ஐந்தாவது திருப்பாடல்.

வெண்காட்டு இறைவனிடம் விடை பெற்றுக் கொண்டு நனிபள்ளி[9] என்ற திருத்தலத்திற்கு வருகின்றார்.

நீதி யனாதரை யனையன
மாலறிதற் கரிய
சோதி யன்சொற் பொருளாய்ச்
சுருங்காமறை நான்கனையும்
ஓதி யனும்பர்தங் கோனுல
கத்தினுள் எவ்வுயிர்க்கும்
நாதி யன்நம்பெரு மானண்ணுமூர்
நனிபள் ளியதே.(1)

என்பது திருப்பதிகத்தின் முதற் பாடல்.

வரைப் பெற்றெடுத்தார். கையில் உள்ளது. போலவே அழியாத ஆலமரம் உள்ளது. இங்கு முக்குள நீராடிப் பலர் தென்புலத்தார் வழிபாடும் செய்கின்றனர். திருவெண்காடர் என்ற பெயருடைய பட்டினத்தடிகள் வரலாற்றுத் தொடர்பும் இத் தலத்திற்கு உண்டு.

9. நனிபள்ளி (புஞ்சை). மயிலாடுதுறை-தரங்கம்பாடி இருப்பூர்தி வழியிலுள்ள செம்பொனார் கோயிலிலிருந்து 2½ கல் தொலைவிலுள்ளது. சம்பந்தர், அண்ணையார் பிறந்த ஊர். சம்பந்தர் தமது தந்தையார் இடுப்பில் தாங்கப்பெற்றுத் தம்மேல் ஆணை வைத்துப் பாடிய தலப்பதிகம் சிறப்புடையது.

நனிபள்ளி நாயகரிடம் விடைபெற்றுக் கொண்டு நம்பியாரூரர் செம்பொன் பள்ளி[10] என்ற திருத்தலத்திற்கு வருகின்றார். அத்திருத்தலத்தில் எழுந்தருளியிருக்கும் இறைவனை வணங்கி (பதிகம் இல்லை) நின்றியூர் வருகின்றார். "அற்றவனாரடியார்" (7.16) என்ற பதிகம் பாடித் தலத்தில் எழுந்தருளியிருக்கும் பெருமானை வழிபடுகின்றார்.

அற்றவ னாரடியார்தமக்
காயிழை பங்கினராம்
பற்றவ னாரெம்
பராபரரென்று பலர்விரும்பும்
கொற்றவ னார்குறு
காதவரூர்நெடு வெஞ்சரத்தால்
செற்றவ னார்க்கிடமாவது
நந்திரு நின்றியூரே(1).

என்பது பதிகத்தின் முதல் திருப்பாடல். "திருவும் வண்மையும்" (7.65) என்று மற்றொரு பதிகமும் இத்தலத்து எம்பெருமானுக்கு உண்டு.

அணிகொள் ஆடையும் பூணணி மாலை
அழுதுசெய் தமுதம்பெறு சண்டி
இனைகொள் ஏழெழு நூறிரும் பனுவல்
ஈன்றவன்திரு நாவினுக் கரையன்

---

10. செம்பொன்பள்ளி (செம்பொனார் கோயில்): மயிலாடுதுறை-தரங்கம்பாடி இருப்பூர்தி வழியிலுள்ள நிலையம்.

11. நின்றியூர்(ஆனதாண்டவபுரம்):விழுப்புரம்-மயிலாடுதுறை-தஞ்சை இருப்பூர்தி வழியில் உள்ள ஆனதாண்டவபுரத்திலிருந்து 2கல் தொலைவிலுள்ளது. திருமகள் இத்தலத்து எம்பெருமானைப் பூசித்ததைப் பாசுரம் (சுந்தரர் 7.65:5) கூறும். இத்தலப் பெருமானுக்கு சுந்தரரின் இரண்டு பதிகங்கள் (7.19;7.65) உள்ளன.

கணைகொள் கண்ணப்ப னென்றிவர் பெற்ற
காத லின்னரு ளாதரித் தடைந்தேன்
திணைகொள் செந்தமிழ் பைங்கிளி தெரியும்
செல்வத்தென்றிரு நின்றியூ ரானே.(3)

என்பது இத்திருப்பதிகத்தின் மூன்றாவது திருப்பாடல். சேக்கிழார் பெருமான் குறிப்பிடுவது[12] இப்பதிகத்தையே.

நின்றியூரினின்றும் நீடூருக்கு[13] எழுந்தருளுகின்றார் நம்பியாரூரர். இத்தலத்து எம்பெருமானை "ஊர்வதோர் விடை" (7.56) என்ற முதற்குறிப்புடைய செந்தமிழ்ப் பதிகம் பாடிப் போற்றி வணங்குகின்றார்.

ஊர்வதோர்விடை யொன்றுடை யானை
யொண்ணுதற்றனிக் கண்ணுத லானைக்
காரதார்கறை மாமிடற் றானைக்
கருதலார்புர மூன்றெரித் தானை
நீரில் வாளை வரால்குதி கொள்ளு
நிறைபுனற்கழனிச் செல்வ நீடூர்ப்
பாருளார் பரவித் தொழநின்ற பரம
னைப்பணி யாவிட லாமே.(1)

என்பது திருப்பதிகத்தின் முதற் பாடல்.

நீடூர்ப் பெருமானிடம் விடை பெற்று திருப்புன் கூர்[14] வருகின்றார். (இஃது இரண்டாம் முறை வருகை). இத்திருத்

---

12. பெ. பு: ஏயர்கோன்- 150

13. நீடூர்: இத்தலம் எழுப்பூர் - விழுப்புரம் - மயிலாடு துறை இருப்பூர்தி வழியில் ஒரு நிலையம். நிலையத் திலிருந்து திருக்கோயில் ஒரு கல் தொலைவி லுள்ளது.

14. திருப்புன்கூர்-கட்டுரை-6 அடிக்குறிப்பு 7-6 காண்க. திருநாளைப் போவாருக்குத் (நந்தனாருக்குத்) தேர் நிலையிலிந்தே இறைவன் காட்சியளிக்கத் திரு நந்தி தேவரை விலகி இருக்கும்படிக் கட்டளையிட,

தலப் பெருமானை இறைஞ்சி (பதிகம் இல்லை) திருக்கோலக் காவை[15] நோக்கி வரும் நாவலூராருக்குத் அத்திருத்தலத்து எம்பெருமான் அவர் எதிரே தோன்றிக் காட்சி தந்தருளு கின்றார். உடனே தம்பிரான் தோழர் 'புற்றில் வாளரவார்', (7.62) என்ற முதற் குறிப்புடைய செந்தமிழ்ப் பாமாலை பாடிப் போற்றுகின்றார். இதில்,

நாளுமின்னிசை யாற்றமிழ் பரப்பும்
ஞானசம்பந்த னுக்குல கவர்முன்
தாளமீந்து அவன்பாடலுக் கிரங்கும்
தன்மையாளனை என்மனக் கருத்தை
ஆளும்பூதங்கள் பாடநின் றாடும்
அங்கணன்றனை யெண்கண மிறைஞ்சும்
கோளிலிப்பெருங் கோயிலுளானைக்
கோலக்காவினிற் கண்டு கொண்டேனே.(4)

என்பது நான்காவது திருப்பாடல். இத்திருப்பாடலில் திருக் கோலக்கா இறைவன் பிள்ளையாருக்குத் தாளம் சந்தருளிய செய்திகுறிக்கப் பெற்றிருப்பதைக் கண்டு தெழலாம்.

பொதி சோறளித்தருளல் : பின்னர் தம்பிரான் தோழர் சீகாழிப்பதியைப் புறத்தே வலம் செய்து வணங்கி (இரண்

நந்தி தேவரும் அவ்வாறே விலகியிருக்கும் தலம். திருநாளைப் போவார் திருப்பணியாகக் கோயிலின் மேற்கில் நந்தன் குளம் உள்ளது. ஏயர்கோன் கலிக் காமநாயனாரிடத்தில் 12 வேலி நிலம் கொண்டு மழை பெய்வித்ததைப் பாசுரம் (7.55:2) கூறும்

15. கோலக்கா-(திருத்தாளமுடையார் கோயில்) சீர்காழி யிலிருந்து ½கல் தொலைவிலுள்ளது. சம்பந்தர் கையினால் தாளம் போட்டுப் பாடும்போது இத் தலத்து ஈசன் ஐந்தெழுத்து வரையப்பெற்ற பொற் றாளங்கள் இரண்டை அவருக்குத் தந்தான். அம்பிகை தாளங்கட்கு ஓசை தந்தாள்.

டாம் முறை வருகை) நின்று (பதிகம் இல்லை) அத்திருப்பதி யில் திருவவதாரம் செய்தருளிய முத்தமிழ் விரகராகிய காழிப்பிள்ளையார் திருவடிகளைப் பரவிப் போற்றிக் குரு காவூர் என்ற திருப்பதியைத் நோக்கி வருகின்றார். இதனைச் சேக்கிழார் பெருமான்,

மூவாத முழுமுதலார்
முதற்கோலக் காஅகன்று
தாவாத புகழ்சண்பை
வலங்கொண்டு சென்றிறைஞ்சி
நாவார்முத் தமிழ்விரகர்
நற்பதங்கள் பரவிப்போய்
மேவார்தம் புரஞ்செற்றார்
குருகாவூர் மேவுவார்.[16]

என்று காட்டுவார். இங்ஙனம் குருகாவூருக்கு வரும் வன் றொண்டர் பசியாலும் நீர்வேட்கையாலும் வருந்துவதை அறிந்த சிவபெருமான் வழியிடையே ஓர் அந்தணர் வடிவங் கொண்டு தண்ணீரும் பொதிசோறும் கொண்டுவந்து வெயில் வெப்பம் நீங்க நிழல்தரும் பந்தரையும் உண்டாக்கி நம்பி யாரூரை எதிர்நோக்கி யிருக்கின்றார். அப்போது நாவலூர் வேந்தர் அடியார் திருக்கூட்டத்துடன் அவ்விடத்தே போந்து பந்தரின் கீழே போய் அங்குள்ள மறையவர் பக்கலிலே 'சிவாய நம' என்று ஐந்தெழுத்தை ஓதிக்கொண்டே அமர் கின்றார். வேதியராய் வந்து எழுந்தருளியுள்ள சிவபெரு மான் அவரை நோக்கி "நீவிர் பசிமிக்குள்ளவராகக் காணப் படுகின்றீர்; யான் கொணர்ந்துள்ள பொதி சோற்றையுண்டு தண்ணீர் பருகி பசியைத் தணித்துக் கொண்டு இளைப் பாறு வீர்களாக" என அன்புடன் வேண்டிக் கொள்ளுகின்றார். தம்பிரான் தோழரும் அதற்கிசைந்து அவர் அன்புடன் நல்கிய

16. பெ. பு: ஏயர்கோன் - 155

பொதி சோற்றை வாங்கி அடியார்களுடன் அமுது செய் கின்றார்; உடன் வந்த பரிசனங்களையும் உண்ணும்படி செய் கின்றார். பொதிசோறும் யாவருக்கும் போதுமான அளவுக்குப் பெருகி வளர்கின்றது. அறவாழி அந்தணர் அளிக்கும் சோறு அல்லவா? உரிய நேரத்தில் உணவளித்து உய்வித்த மறையவரைப் பாராட்டி அடியார்களுடன் துயி லமர்கின்றார் தம்பிரான் தோழர்.

இந்நிலையில் மறையவராய் வந்த இறைவன் பந்தருடன் மறைந்தருளுகின்றார். துயில் உணர்ந்தெழுந்த நாவலூரர் மறையவரைக் காணாமல் வியப்பெய்துகின்றார். இவ்வாறு வந்து அருள் புரிந்தவர் ஆழிநிழற் கீழிருக்கும் குருகாவூர்[17] பெருமானே என்று தெளிகின்றார். "இத்தனையாமாற்றை அறிந்திலேன்" (7.29) என்று தொடங்கும் செந்தமிழ்ப் பாமாலையைப் பாடிக் கொண்டே திருக்கோயிலை அடை கின்றார். இப்பதிகத்தின்,

பாடுவார் பசிதீர்ப்பாய்
பரவுவார் பிணிகளைவாய்
ஓடுநன் கலனாக
உண்பலிக் குழல்வானே
காடுநல் விடமாகக்
கடுவிருள் நடமாடும்
வேடனே குருகாவூர்
வெள்ளடை நீயன்றே. (3)

என்ற மூன்றாவது பாடல் பொதி சோறு நல்கிய வரலாற்றைக் குறிப்பிடுகின்றது. பாடல்களால் பரமனைத் தொழுது உளங்குளிர்கின்றார் தம்பிரான் தோழர்.

---

17. குருக்காவூர் (திருக்கடாவூர்). சீகாழியிலிருந்து 3½ கல் தொலைவிலுள்ளது. இறைவன் சுந்தரருக்குக் கட்டமுது தந்தைதப் பதிகப் பாசுரம் கூறுகின்றது.

குருக்காவூர் இன்னமுதத்தைக் கண்களால் பருகி வழி பட்ட தம்பிரான் தோழர் திருக்கழிப் பாலைக்கு[18] வரு கின்றார்[18]. 'செடியேன் தீவினையில்" (7.23) என்ற செந்தமிழ்ப்பதிகம் பாடித் தொழுது ஏத்துகின்றார். இதில்,

எங்கேனும் இருந்துன்
அடியேனுனை நினைந்தால்
அங்கேவந் தென்னோடும்
உடனாகி நின்றருளி
இங்கேஎன் வினையை
அறுத்திட் டெனையாளும்
கங்கா நாயகனே
கழிப்பாலை மேயானே. (2)

என்பது இரண்டாவது திருப்பாடல்.

பின்னர் நம்பியாரூரர் திருத்தில்லையை அடைந்து தில்லைச் சிற்றம்பலவன் திருக்கூத்தினைக் கண்ணாரக் கண்டு களித்துக் கும்பிட்டு எல்லையிலா இன்பத்தில் திளைத்து மகிழ்கின்றார் (பதிகம் இல்லை). பின்பு திருத்தினை நகரை அடைந்து அங்கு எழுந்தருளியிருக்கும் சிவக் கொழுந்தைப் பணிந்து போற்றித் (பதிகம் இல்லை)—இஃது இரண்டாம் முறை வருகை) திருநாவலூரை அடைகின்றார். அங்கு அடி யார்களுடன் அப்பதியில் இனிது அமர்கின்றார்: (இங்கிருந்து தான் தொண்டை நாட்டுத் திருத்தலம் பயணம் தொடங்கு கின்றது).

ஐந்தாம் நிலை (தொண்டை நாட்டுத் தலவழிபாட்டைக் முடித்து கொண்டு (ஒற்றியூரிலிருந்து திரும்பும்போது) சங்கிலி

18. திருக்கழிப்பாலை : சிதம்பரத்திலிருந்து 3 கல் தொலைவிலுள்ளது. பழைய தலம் கொள்ளிடநதி வெள்ளத்தில் போய் விட்டது. இப்போதுள்ள கோயில் நெல் வாயிலில் (சிவபுரி) ஒரு தனிக் கோயி லாக உள்ளது.

யாரைத் திருமணம் புரிந்து, சின்னாட்கள் ஒற்றியூரில் தங்கியிருந்த தம்பிரான் தோழர் திருவாரூர் நினைவால் ஊர் திரும்பும் போது சில தொண்டை நாட்டுத் தலங்களையும்[19] சில நடுநாட்டுத் தலங்களையும்[20] சேவித்துக் கொண்டு சோழ நாட்டை அடைகின்றார். முதலில் திருவாவடு துறையை[21] எய்துகின்றார். இஃது இரண்டாம் முறை வருகை. இந்நிலையில் அவர் திருமேனியில் புகர் (மேக) நோய் தோன்றிவருத்துகின்றது. அடியார்கள் வரவேற்கத் திருவாவடுதுறை நிருக்கோயிலை அடைகின்றார். "கங்கைவார் சடையாய்" (7.70) என்ற திருப்பதிகம் பாடி அங்குக் கோயில் கொண்டிருக்கும் மாசிலாமணியை வழுத்துகின்றார்.

கங்கைவார் சடையாய் கணநாதா
காலனே காமனுக்கு அனலே
பொங்குமாகடல் விடமிடற் றானே
பூதநாதனே புண்ணியா புனிதா
செங்கண்மால் விடையாய் தெளிதேனே
தீர்த்தனே திருவா வடுதுறையுள்
அங்கணாஎனை அஞ்சல்என் றருளாய்
ஆரெனக்குறவு அமரர்கள் ஏறே. (1)

என்பது இச்செந்தமிழ் மாலையின் முதல் வாடாமலர். இப் பதிகத்தின்,

கண்ணிலேன் உடம்பில் அடுநோயால்
கருத்தழிந்து உனக்கே பொறையானேன். (2)

மதியிலேன் உடம்பில் அடுநோயால்
மயங்கி னேன்மணி யேமணவாளா. (3)

---

19. தொண்டைநாட்டுத் திருத்தல வழிபாடு காண்க.
20. நடுநாட்டுத் திருத்தல வழிபாடு காண்க.
21. ஆவடுதுறை—6 - வது சட்டுரை 18 - வது அடிக் குறிப்பு காண்க.

என்ற இரண்டாவது, மூன்றாவது திருப்பாடற் பகுதியால் இவர் கண்ணோயுடன் உடற்பிணி யொன்றினாலும் வருந்தி யுழல்வது நன்கு தெளியப்படும்.

உடற்பிணி நீங்கல் : மாசிலாமணி யீசரை வழிபட்ட தம்பிரான் தோழர் திருத்துருத்தியை[22] அடைகின்றார். இத்தலத்து ஈசனைப் பணிந்து, 'அடியேனது உடம்பிற் பொருந்திய நோயை ஒழித்தருளல் வேண்டும்' என இறைஞ்சு கின்றார். அடியார்கள் அன்பினால் சொல்லிய குறைகளை யறிந்து முடித்தருளவல்ல திருத்துருத்தியில் கோயில் கொண்டுள்ள 'சொன்னவாறறிவார்' தம்பிரான் தோழரை நோக்கி, "நீ இத்திருக்கோயிலின் வடபாலுள்ள திருக் குளத்தில் தீர்த்தமாடுவாயாக' எனப் பணித்தருள்கின்றார். அந்த அருள் மொழியைச் செவிமடுத்த வன்றொண்டர் இறைவனைத்தொழுது சென்று அத்தீர்த்தத்துள் மூழ்கி நோய் நீங்கி எழுந்து ஒளிதிகழும் திருமேனியுடன் கண்டவர்கள் அதி சயிப்பக் கரையேறுகின்றார். இந்த அற்புத நிகழ்ச்சியைச் சேக்கிழார் பெருமான்,

திருப்பதிகம் கொடுபரவிப்
பணிந்துதிரு அருளாற்போய்
விருப்பினொடு திருத்துருத்தி
தனைமேவி விமலர்சழல்

---

22. துருத்தி (திருத்துருத்தி - குத்தாலம்): மயிலாடு துறை - தஞ்சை இருப்பூர்திப் பாதையில் உள்ள குத்தாலத்திலிருந்து இத்தலம் ½ கல் தொலைவு. இறைவன் கட்டளைப்படி இங்குள்ள குளத்தில் மூழ்கி தமது உடற்பிணி நீங்கி மணி ஒளி சேர் திரு மேனியை அடைகின்றார். திருத்துருத்தி, திரு வேள்விக்குடி இறைவர்களின்மீது இரண்டு பதிகங் கள் அருளியுளளார். அவை "மூப்பதுமில்லை' (7.18), "மின்னுமா மேகங்கள்" (7.74) என்பவை.

அருத்தியினாற் புக்கிறைஞ்சி
அடியேன்மேல் உற்றபிணி
வருத்தம்எலை ஒழித்தருள
வேண்டும்என வணங்குவார்.

பரவியே பணிந்தவர்க்குப்
பரமர்திரு அருள்புரிவார்
'விரவியஇப் பிணி அடையத்
தவிர்ப்பதற்கு வேறாக
வரமலர்வண் டறைதீர்த்த
வடகுளத்துக் குளி' என்னக்
கரவில்திருத் தொண்டர்தாங்
கைதொழுது புறப்பட்டார்

மிக்கபுனல் தீர்த்தத்தின்
முன்அணைந்து வேதமெலாம்
தொக்கவடி வாயிருந்த
துருத்தியார் தமைத்தொழுது
புக்கதனில் மூழ்குதலும்
புதியபிணி அதுநீங்கி
அக்கணமே மதியொளிசேர்
திருமேனி ஆயினார்.[23]

நம் மனம் மகிழக் காட்டுவார். தூய ஆடை உடுத்து மண்டு பெருங்காதலினால் திருக்கோயிலை வந்தடைகின்றார். திருக் கோயிலை வலம் வந்து ''மின்னுமா மேகங்கள்'' (7.74) என வரும் பண்ணிறைந்த செந்தமிழ்த் திருப்பதிகத்தினைப் பாடி திருத்துருத்தியிலும் அதற்கு அணித்தாயுள்ள திருவேள்விக் குடியிலும்[24] கோயில் கொண்டு எழுந்தருளியுள்ள இறைவர் களின் திருவருளைப் பரவிப் போற்றுகின்றார்.

---

23. பெ பு. ஏயர்கோன்—297-299.
24. வேள்விக்குடி : 6வது கட்டுரை 49வது அடிக் குறிப்பு காண்க.

மின்னுமா மேகங்கள் பொழிந்திழிந் தருவி
வெடிபடக் கரையொடுந் திரைகொணர்ந்தெற்றும்
அன்னமாங் காவிரி அகன்கரை யுறைவார்
அடியிணைத் தொழுதெழும் அன்பரார் அடியார்
கொன்ன வாறறிவரர் துருத்தியார் வேள்விக்
குடியுளார் அடிகளைச் செடியனேன் நாயேன்
என்னைநான் மறக்குமாறெம்பெரு மானை
என்னுடம் படுப்பிணி இடர்கெடுத்தானை. (1)

என்பது இச்செந்தமிழ் மாலையின்முதல் மலர். இப்பதிகத்தில்,

'என்னுடம் படும்பிணி
இடர்கெடுத் தானை (1)

தொடர்ந்தடுங் கடும்பிணி
தொடர்வறுத் தானை (3)

உற்றநோய் இற்றையே
யுறவொழித் தானை' (5)

எனவரும் திருப்பதிகத் தொடர்களால் 'சொன்னவாறறி வாரைப்' பாராட்டி மகிழ்தலால் திருத்துருத்தியில் உடற் பிணி நீங்கப்பெற்ற நிலையில் தம்பிரான் தோழர் இச்செந் தமிழ் மாலையைப் புனைந்தருளியிருத்தல் வேண்டும் என்பது தெள்ளிதின் புலனாகும்.

வலக்கண் பெறுதல்: திருத்துருத்திப் பெருமான் திரு வருளால் உடற்பிணி நீங்கி நலம் பெற்ற தம்பிரான் தோழர் அடியார்களுடன் திருத்துருத்தியினின்றும் புறப்பட்டு பல திருத்தலங்களையும் சேவித்துக் கொண்டு ஒருநாள் மாலைப் பொழுதில் சிவனடியார்களுடன் திருவாரூரை அணுகுகின் றார். அங்கு, ஆரூர்ப் பரவையுண்மண்டளி[25] என்னும்

25. ஆரூர்ப் பரவையுண் மண்டளி (துலாநாயனார் கோயில்); திருவாரூரில் கீழைரத வீதியில் திருத்தேர் நிலையின் அருகிலுள்ளது.

திருக்கோயிலை வந்தடைகின்றார். "தூவாயா" (7.96) என்னும் திருப்பதிகம் பாடிப் போற்றுகின்றார்.

விண்டானே மேலையார் மேலையார் மேலாய
எண்டானே எழுத்தோடு சொற்பொரு ளெல்லாமுன்
கண்டானே கண்தனைக் கொண்டிட்டுக் காட்டாயே
அண்டானே பரவையுண் மண்டளி அம்மானே, (7)

என்ற இப்பதிகத்தின் ஏழாம் பாடலில் தமக்குக் கண்ணைத் தந்தருளும்படி வேண்டுகின்றார். பின்னர்ப் புறம்போந்து ஓரிடத்தில் தங்கியிருக்கின்றார். அர்த்தயாமத்திலே அடியார்களுடன் திருமூலட்டானத்து இறைவனை வழிபடச் செல்லுகின்றார்.[26] எதிர்வந்த அன்பர்களை நோக்கி ஆரூர்ப் பெருமானோடு தமக்குள்ள அயன்மை விளங்க வருந்திக் கூறும் நிலையில் "குருகுபாய" (7.37) எனக் கைக்கிளைத் திணையமைந்த செந்தமிழ் மாலையைப் பாடுகின்றார்.

குருகுபா யக்கொழுங்
கரும்புகள் நெரிந்தசா(று)
அருகுபா யும்வயல்
அந்தண் ஆரூரைப்
பருகுமா றும்பணிந்
தேத்துமா றுந்நினைந்(து)
உருகுமா றும்மிலை
யுணர்த்தவல் லீர்களே. (1)

என்பது இத்திருப்பதிகத்தின் முதற் பாடல்.

அடுத்து, தேவாசிரிய மண்டபத்தை இறைஞ்சிக் கோபுரத்தைக் கைகூப்பித் தொழுது உள்ளே புகுந்து புற்றிடங் கொண்ட பெருமான் திருமுன்னர் வீழ்ந்தெழுகின்றார். பூங்கோயிலமர்ந்த பெருமானின் திருமேனியைக் காணத் தமக்கு ஒருகண் போதாமையால் மிக வருந்துகின்றார்.

---

26. பெ. பு. ஏயர்கோன்—304.

''மீளா அடிமை'' (7.95) என்ற செந்தமிழ்ப் பதிகம் பாடி 'அடியேனைத் துன்பக் கடலினின்றும் கரையேற்றி மற்றைக் கண்ணாகிய வலக்கண்ணையும் தந்தருள்வீராக' என வேண்டுகின்றார்.

மீளா வடிமை யுமக்கே
யாளாய்ப் பிறரை வேண்டாதே
மூளாத் தீப்போல் உள்ளே
கனன்று மூகத்தால் மிகவாடி
ஆளா யிருக்கும் அடியார்
தங்கள் அல்லல் சொன்னக்கால்
வாளாங் கிருப்பீர் திருவா
ரூரீர் வாழ்ந்து போதிரே. (1)

விற்றுக் கொள்வீர் ஒற்றி
யல்லேன் விரும்பி யாட்பட்டேன்
குற்ற மொன்றும் செய்த
தில்லை கொத்தை யாக்கினீர்
எற்றுக் கடிகேள் என்கண்
கொண்டீர் நீரே பழிபட்டீர்
மற்றைக் கண்தான் தாரா
தொழிந்தால் வாழ்ந்து போதிரே. (2)

என வரும் திருப்பாடல்களில் (ஒன்று, இரண்டு) இறைவனுடன் தமக்குள்ள தோழமைத் திறம் விளங்கும் படியும் கண்ணைத் தரும் படியும் போற்றி இறைஞ்சுதலைக் காணலாம்.

உள்ளத்தை உருக்கவல்ல இத்திருப்பதிகத்தைக் கேட்டருளிய திருவாரூர்ப் பெருமான் திருவுள்ளமிரங்கி தம்பிரான் தோழருக்கு வலக்கண்ணையும் கொடுத்தருள்கின்றார். இருகண்களையும் ஒருங்கேபெற்ற நம்பியாரூரர் பூங்கோயிலமர்ந்த பெருமானின் திருமேனியைப்—பருகா இன்னமுதத்

தைக்—கண்களால் பருகுகின்றார். ஆடிப் பாடித் துதித்துப் பேரின்ப வெள்ளத்தில் திளைத்து மகிழ்கின்றார். பின்னர் தேவாசிரிய மண்டபத்திற்குப் போந்து அடியார்களுடன் அங்குத் தங்கியிருக்கின்றார். 'மீளா அடிமை' என்ற இத் திருப்பதிகத்தில்,

எற்றுக் கடிகேள் என்கண்
கொண்டீர் நீரே பழிபட்டீர்
மற்றைக் கண்தான் தாரா
தொழிந்தால் வாழ்ந்து போதீரே. (2)

எனப் பூங்கோயிலமர்ந்த பெருமானை நோக்கி நம்பியாரூரர் முறையிடுதலை நோக்குங்கால் கச்சி ஏகம்பர் திருவருளால் இடக்கண் பெற்ற தம்பிரான் தோழர் திருவாரூர்ப் பெரு மானை யடைந்து மற்றைய வலக்கண்ணையும் தந்தருளும் படி இத்திருப்பதிகத்தைப் பாடிப் போற்றினார் என்பது நன்கு புலனாகின்றதன்றோ? மேலும், இவர் காணும் தன்மை இழந்த தமது இரண்டு கண்களையும் இறைவன்மீள வும் காணுமாறு தமக்குக் காட்டியருளிய அற்புதநிகழ்ச்சியை,

பேணா தொழிந்தேன் உன்னை
யல்லால் பிறதேவரைக்
காணா தொழிந்தேன் காட்டுதியேல்
இன்னங் காண்பன்நான்
பூணா ரரவா புக்கொளி
யூரவி நாசியே
காணாத கண்கள் காட்ட
வல்ல கரைகண்டேனே. (8)

என்ற அவிநாசித் திருப்பதிக (7.92)ப் பாடலின் ஈற்றடியில் தெளிவாகக் குறித்துள்ளமை ஈண்டு நினைக்கத் தக்கதாகும்.

ஆறாம் நிலை (ஏயர்கோன் நோய் தீர்த்த பிறகு) : ஏயர் கோன் கலிக்காம நாயனாரை நண்பராகக் கொண்ட பிறகு

இருவரும் திருப்புன்கூரை[27] அடைகின்றனர் (இது மூன்றாம் முறை வருகை). இறைவனது திருக்கோயிலை வலம்வந்து வணங்கிய சுந்தரர் "அந்தணாளன் உன் அடைக்கலம் புகுந்" (7.55) என்னும் செந்தமிழ்த் திருப்பதிகத்தைப் பாடிப் பரவுகின்றார்.

நற்றமிழ் வல்ல ஞானசம் பந்தன்
நாவினுக் கரையன் நாளைப் போவானுங்
கற்ற சூதன்நற் சாக்கியன் சிலந்திகண்
ணப்பன் கணம்புல்ல னென்றி வர்கள்
குற்றம் செய்யினும் குணம்எனக் கருதும்
கொள்கை கண்டுநின் குரைகழல் அடைந்தேன்
பொற்றி ரள்மணிக் கமலங்கள் மலரும்
பொய்கை சூழ்திருப் புன்கூ ருளானே. (4)

என்பது நான்காவது திருப்பாடல்.

ஏத நன்னிலம் ஈரறு வேலி
யேயர்கோன் உற்ற இரும்பினி தவிர்த்து. (3)

என்ற மூன்றாம் பாடலின் தொடரால் தம் அன்புடைத் தோழராகிய ஏயர்கோன் கலிக்காம நாயனாரைப் பற்றிய சூலை நோயாகிய கடும் பிணியைத் தீர்த்தருளிய இறைவனது திருவருட்செயலை குறிப்பிட்டுப் போற்றியுள்ளமை காணத் தக்கது.

ஏயர்கோன் கலிக்காமரைச் சிலநாட்கள் தம்முடன் தங்கியிருக்கச் செய்து வழியனுப்பிய பிறகு ஒருநாள் தம்பிரான் தோழர் நாகைக் காரோணத்திற்கு[28] (இரண்டாம் முறை

27. புன்கூர்-சட்டுரை-6, அடிக்குறிப்பு-6 காண்க.
28. நாகைக் காரோணம் (நாகப்பட்டினம்): நாகப் பட்டினம் இருப்பூர்தி நிலையத்திலிருந்து ½ கல் தொலைவிலுள்ளது. ஒரு முனிவரைக் காயத்துடன் வானுலகிற்கு ஆரோஹணம் செய்யும்படி இறைவன் அருளியதால் காயாரோஹணம் என்பது மருவிக் காரோணம் எனத் தலப் பெயருடன் சேர்ந்தது. அதிபத்த நாயனார் அவதரித்துப் பொன்மீனைச் சிவார்ப்பணம் செய்து முத்தி பெற்ற தலம்.

வருகை) இங்குக் கோயில் கொண்டிருக்கும் பெருமானை இறைஞ்சி நின்று தமக்கு விலையுயர்ந்த அணிகலன்களும் பிறவும் வேண்டும் என்ற குறிப்புடன் "புத்தூர் புக்கிரந் துண்டு" (7.46) என்ற முதற்குறிப்புடைய திருப்பதிகம் பாடு கின்றார்.

புத்தூர்ப் கிரந்துண்டு பலபதிகம் பாடிப்
பாவையரைக் கிறிபேசி படிறாடித் திரிவீர்
செத்தார்தம் எலும்பணிந்து சேவேறித் திரிவீர்
செல்வத்தை மறைத்து வைத்தீர் எனக்
கொருநாள் இரங்கீர்
முத்தாரம் இலங்கிமிளிர் மணிவயிரக் கோவை
யவைபூணத் தந்தருளீ மெய்க்கினிதா நாறும்
கத்தூரி கமழ்சாந்தும் பணித்தருள வேண்டும்
கடல்நாகைக் காரோணம் மேவியிருந்தீரே. (1)

என்பது இப்பதிகத்தின் முதல் பாடல். தம்பிரான் தோழ ருக்கு இசைந்தருளிய இறைவன் அவருக்குப் பொன்னும் நவ மணிகளும் நறுமணப் பொருள்களும் பட்டாடைகளும் கடுகிச் செல்லும் குதிரையும் ஆகியவற்றைப் பரிசாகக் கொடுத்தருள் கின்றார். விலைமதிக்க வொண்ணா அப்பொருள்களைப் பெற்று மகிழ்ந்த வன்றொண்டர் திருநாகையிலிருந்து புறப் பட்டு நடுவிலுள்ள தலங்களை யெல்லாம் சேவித்துக் கொண்டு திருவாரூருக்குத் திரும்புகின்றார். பூங்கோயி லமர்ந்த பெருமானைப் போற்றி மகிழ்ந்திருக்கின்றார்.

ஏழாம் நிலை (சேரவேந்தருடன்) : சேரவேந்தர் திருவா ரூரில் பரவையார் இல்லத்தில் விருந்துண்டு மகிழ்ச்சியுடனி ருக்கும்பொழுது ஒரு நாள் நம்பியாரூரர் சேரமான் பெரு மாளுடன் பாண்டி நாட்டுத் திருத்தலம் தொடங்குகின்றார். முதலில் 'சேரமான் தோழர்' சேரவேந்தருடன் சில சோழ

நாட்டுத் திருத்தலங்களைச் சேவிக்கின்றார். முதலில் கீழ் வேளூர்[29] என்ற தலத்திற்கு வருகின்றனர். இத்தலத்து எம் பெருமானை வழிபட்டு (பதிகம் இல்லை) திருநாகைக்கு[30] வருகின்றனர் (மூன்றாம் முறை வருகை). காரோணத்துச் சிவக் கொழுந்தைப் பணிகின்றனர். (பதிகம் இல்லை). அடுத்து திருமறைக்காட்டிற்கு[31] வருகின்றனர். நம்பியாரூரர் "யாழைப் பழித்தன்ன" (7.71) என்ற முதற் குறிப்புடைய செந்தமிழ்ப் பதிகம் பாடி 'மறைக்காட்டருமணியை' (புவனி விடங்கர்) வழுத்துகிறார். சேரமான் தோழர் இப்பதிகத்தின்,

யாழைப் பழித்தன்ன
மொழிமங்கை யொருபங்கன்
பேழைச் சடிமுடிமேற்
பிறைவைத்தா னிடம்பேணில்
தாழைப் பொழிலூடே
சென்றுபூழைத் தலைநுழைந்து
வாழைக் கனிகூழைக்
குரங்குண்ணும் மறைக்காடே. (1)

என்பது முதல் பாடல். சேரவேந்தர் பொன்வண்ணத்தந்தாதி வால் தலத்துப் பெருமானைச் சிறப்பிக்கின்றார்.

---

29. கீழ்வேளூர் (கிவலூர்): திருவாரூர் - நாகப் பட்டினம் இருப்பூர்தி வழியிலுள்ள நிலையத்திலிருந்து ½ கல் தொலைவிலுள்ளது திருக்கோயில். முருகன் பூசித்த தலங்களுள் ஒன்று.
நாகைக் காரோணம் (அடிகுறிப்பு 26 - காண்க.)
30. திருமறைக்காடு (வேதாரண்யம்). சப்த விடங்கங் களுள் ஒன்று. வேதங்கள் பூசித்து மூடிவிட்டுப் போயிருந்த கதவுகளைப் பாடி அப்பர் திறக்கவும் சம்பந்தர் மூடவும் செய்த அற்புதத் தலம். தமிழ் மொழியிலுள்ள தேவாரம் வடமொழி வேதத் திற்குத் தாழ்ந்ததல்ல என்பதைக் கட்புலனாக உலகுக்கு அறிவித்ததுதான் இந்த அற்புதம்.

இதனை அடுத்து அகத்தியான் பள்ளி [32] என்ற திருத்தலத்துக்கு வருகின்றனர் சேரவேந்தரும் சேரமான் தோழரும். இத்தலத்துப் பெருமானை வழிபட்டுக் (பதிகம் இல்லை) கோடிக்கு [33] வருகின்றார். சேரமான் தோழர் கோடிகுழகரை "கடிதாய்க்கடற்காற்று" (7 32) என்று தொடங்கும் செந்தமிழ்ப் பதிகம் பாடிப் பணிகின்றார்.

முன்றான் கடல்நஞ்சம்
உண்ட வதனாலோ
பின்றான் பரலைக்
குபகாரம் செய்தாயோ
குன்றாப் பொழில்சூழ்தரு
கோடிக் குழகா
என்றான் தனியே
இருந்தாய் எம்பிரானே (1)

என்பது முதற் பாடல். இங்கிருந்து புறப்பட்டு பல தலங்களை வழிபட்டுக் கொண்டு பாண்டி நாட்டுக்கு வருகின்றனர். [34]

பாண்டி நாட்டுத் திருத்தலப் பயணத்தைத் தலைக் கட்டிய பிறகு சோழ நாட்டைக் குறுகி (பாம்பணிமா) பா

---

32. அகத்தியான் பள்ளி (அகஸ்தியாம் பள்ளி): கடற் கரைத்தலம். பார்வதி தேவியாருக்கு இமயமலையில் நடந்த திருமணத்தை அகத்தியர் இத்தலத்திலிருந்தே வழிபட்டதாக வரலாறு.
33. கோடி (குழகர் கோயில், கோடிக்கரை). திருத்துறைப்பூண்டி - கோடிக்கரை இருப்பூர்திப் பாதையில் கோடிக்கரை நிலையத்திலிருந்து 3 கல் தொலைவிலுள்ளது.
34. பாண்டி நாட்டுத் திருத்தலப் பயணம் (கட்டுரை - 11) காண்க.

தாளிச்சுரம்[35] வருகின்றனர். இத்தலத்துப் பெருமானை வழி பட்டுக் கொண்டு (பதிகம் இல்லை) திருவாரூர் திரும்பு கின்றனர்.

சேரமானும் சேரமான் தோழரும் திருவாரூரில்[36] எழுந் தருளியிருக்கையில் திருக்கோயில் சென்று வழிபடும்போது சில பதிகங்களைப் பாடுவார் நம்பியாரூரர். இங்ஙனம் பாடிய பதிகங்களுள் ஒன்று 'ஏசறவாந்திருப்பதிகம்'; இஃது 'இறைகளோடிசைந்த' (7.8) என்ற முதற் குறிப்புடையது. இதில்,

மணமென மகிழ்வர் முன்னே
மக்கள்தாய் தந்தை சுற்றம்
பிணமெனச் சுடுவார் பேர்த்தே
பிறவியை வேண்டேன் நாயேன்
பணையிடைச் சோலை தோறும்
பைம்பொழில் விளாகத்தெங்கள்
அணைவினைக் கொடுக்கும் ஆரூர்
அப்பனே அஞ்சி னேனே. (6)

என்பது ஆறாவது பாடல். வாழ்க்கைக் கோலங்களை நினைந்து நினைந்து ஏசறும் பாடல்களைக் கொண்டது இப்பதிகம்.

இக்காலத்தில் பாடியருளிய பதிகம் 'திருநாட்டுத் தொகை' என்ற திருப்பெயரினையுடையது. 'வீழக்காலனை' (7.12) என்ற முதற்குறிப்பினையுடையது.

---

35. பாதாளீச்சரம் (பாமணி); தஞ்சை திருவாரூர் இருப் பூர்திப் பாதையருகிலுள்ள மன்னார் குடியிலிருந்து 1½ கல் தொலைவிலுள்ளது. சம்பந்தர் தேவாரம் பெற்றது.

36. திருவாரூர் : 12 - வது கட்டுரை அடிக்குறிப்பு 1- ஐக் காண்க.

தேங்கூருந் திருச்சிற்
றம்பலமுஞ் சிராப்பள்ளி
பாங்கூர் எங்கள்
பிரானுறையும் கடம்பந்துறை
பூங்கூரும் பரமன்
பரஞ்சோதி பயிலும்ஊர்
நாங்கூர்நாட்டு நாங்கூர்
நறையூர்நாட்டு நறையூரே. (4)

என்பது இப்பதிகத்தின் நான்காவது திருப்பாடல். ஒவ்வொரு பாடலும் இறைவன் கோயில் கொண்டருளிய நாடுகளையும், அந்நாட்டுத் தலையூர்களையும் தொகுத்துப் போற்றியுள்ளமை இப்பதிகப் பாடல்களில் அமைந்திருப்பதால் இப்பதிகம் 'திருநாட்டுத் தொகை' என்ற பெயர் பெறுகின்றது.

இக்காலத்தில் பாடியருளிய மற்றொரு பதிகம் 'கார்ட்டூர்க் கூடலே' (7.47) என்ற முதற் குறிப்பினையுடையது; 'ஊர்த் தொகை' என்ற திருப்பெயரினையுடையது. இதில்,

மருகல் உறைவாய் மாகா
ளத்தாய் மதியஞ் சடையானே
அருகற் பீணிநின் அடியார்
மேல அகல அருளாயே
கருகற் குரலாய் வெண்ணிக்
கரும்பே காளூர்க் கட்டியே
பருகப் பணியாய் அடியார்க்(கு)
உன்னைப் பவளப் படியானே. (5)

என்பது ஐந்தாவது திருப்பாடலாகும். இறைவன் கோயில் கொண்டருளிய ஊர்களைத் தொகுத்துப் பரவுவதால் 'ஊர்த் தொகை' என்ற திருப்பெயரினைப் பெறுகின்றது.

சில நாட்கட்குப் பிறகு இருபெரும் அடியார்களும் மலை நாட்டிற்குப் புறப்படுகின்றனர். அங்ஙனம் ஏகும் போது சிவ

சோழநாட்டுத் திருத்தலங்களையும் வழிபடுகின்றனர். முதலில் காவிரித் தென்கரை வழியாகத் திருக்கண்டியூர்[37] (இரண்டாம் முறை வருகை) வருகின்றனர். தலத்துப் பெருமானை வழிபடுகின்றனர் (பதிகம் இல்லை). பின்னர் காவிரியின் வடகரையிலுள்ள திருவையாறு[38] எதிரே தோன்றக் காண்கின்றனர். சேரமான் தோழர் ஐயாற்றிறைவனை வழிபடத் துடிக்கின்றார். கடல் போன்றுப் பெருகும் காவிரியாற்றின் வெள்ளத்தை எவ்வாறு கடப்பது? (அக்காலத்தில் பாலம் இல்லை). சேரமான் பெருமாளும் நம்பியாரூரை நோக்கி, "இறைவன் எழுந்தருளியுள்ள திருவையாற்றினை வழி பட நினைந்து என் உள்ளம் உருகுகின்றது. நாம் ஆற்றைக் கடந்து ஐயாற்றப்பனைப் பணிவோம்" எனக் கூறுகின்றார். சேரமான் தோழர் ஓடங்களும் செல்லாதபடி காவிரி நதியிற் கரைகடந்து வெள்ளம் பெருகி வருதலைக் கண்டு "பாவும் பரிசொன்று" (7.77) என்று தொடங்கும் செந்தமிழ்ப் பதிகம் பாடி 'ஐயாருடைய அடிகளோ' என்று ஐயாற்றப்பனை ஆராக் காதலால் அழைத்து நிற்கின்றார். "கன்று தடையுண் டெதிரழைக்கக், கதறிக்கனைக்கும் புனிற்றாபோல், ஒன்று உணர்வால் சாரசரங்கள் எல்லாம்

37. கண்டியூர் வீரட்டம் : 6-வது கட்டுரை 28-வது அடிக்குறிப்பு காண்க.

38. ஐயாறு (திருவையாறு) : தஞ்சாவூரிலிருந்து வட திசையில் 9 கல் தொலைவினுள்ளது. தஞ்சையிலிருந்து இத்தலத்திற்குப் பேருந்தில் செல்லும் போது ஐந்து ஆறுகளைப் பாலத்தின் மீது கடப்பதைக் காணலாம். திருக்கயிலை காணச் சென்ற அப்பர் பெருமான் இத்தலம் போகும் வழியில் ஒரு குளத்தில் மூழ்கி "யாதும் சுவடு படாமல் ஐயாறடைந்த போது (4.3:1) கயிலாயத்தின் காட்சியைக் காண்கின்றார். இதன் நினைவாகத் தென்கயிலாயம் என்ற உட்கோயிலில் ஆடி அமாவாசையன்று உற்சவம் நடைபெறுகின்றது. தெலுங்கு மொழியில் பல கீர்த்தனைகள் இயற்றிய தியாகராஜர் கோயில் ஆற்றங்கரையில் உள்ளது. தமிழ் வடமொழிக் கல்லூரி ஒன்று இங்கு உள்ளது.

கேட்க 'ஓலம்'[39] என்று உரக்கக் கூறியருளுகின்றார். உடனே காவிரி நதியின் வெள்ளம் விலகி நடுவே வழிகாட்டுகின்றது. நதியின் மேற்பக்கத்தில் வெள்ளம் பளிங்கு மலைபோல் விலகி நிற்கின்றது; கீழ்ப்பக்கத்து நீர் வழிந்தோடுகின்றது. மணற் பரப்பாயிருந்த நடுவழியைக் கண்டு இறைவனருளை வியந்து சேரமானும் சேரமான் தோழரும் அடியார் திருக்கூட்டத் துடன் அவ்வழியே இறங்கிச் சென்றுக் கரையேறி ஐயா றமர்ந்த பெருமானை அன்பினால் இறைஞ்சிப் போற்று கின்றனர். வழிபாடுமுடிந்த பிறகு ஆற்றின் நடுவில் அமைந்த மணல் வழியாகவே மீண்டும் தென்கரையில் ஏறுகின்றனர். இந்நிலையில் முன்விலகி நின்ற வெள்ளம் தொடர்ந்து செல்ல தாயிற்று. இங்ஙனம் வெள்ளத் தடையை நீக்குதற்பொருட்டு நம்பியாரூரர் இச்செந்தமிழ் மாலையைப் பாடியருளினர் என்பது இப்பதிகத்தின்,

கதிர்கொள் பசியை யொத்தேநான்
கண்டேன் உம்மைக் காணாதேன்
எதிர்த்து நீந்த மாட்டேன்நான்
எம்மான் றம்மான் றம்மானே
விதிர்த்து மேக மழைபொழிய
வெள்ளம் பரந்து நுரைசிதறி
அதிர்க்கும் திரைக்கா விரிக்கோட்டித்
தையா ருடைய அடிகளோ (9)

என்ற ஒன்பதாம் திருப்பாடலால் தெளியப்படும். அதன் பின்னர் அந்த இரு பெரு அடியார்களும் கொங்கு நாட்டைக்[40] கடந்து மலை நாட்டை[41] அடைகின்றனர். இத்துடன் சோழ நாட்டுத் திருத்தலப்பயணம் நிறைவு பெறுகின்றது.

---

39. பெ. பு : கழறிற்றறிவார்-135 ஐயாறப்பனின் திருச் செவியில் இந்த ஓலம் கேட்கின்றது. உடனே அவர் தம் மைந்தன் விநாயகரை அழைத்து எதிர் ஓலம் கொடுக்குமாறு பணிக்கின்றார். ஓலம் என்றார் விநாயகர். காவிரியின் ஓட்டத்தில் தடை ஏற்பட்டு விடுகின்றது (இது புராண வரலாறு)
40. கொங்கு நாட்டுத் திருத்தலப் பயணம் காண்க.
41. மலைநாட்டுத் திருத்தலப்பயணம் காண்க.

13. கொங்கு நாட்டுத் திருத்தலப் பயணம்

கொங்கு நாட்டில் உள்ள தலங்களுள் பாடல் பெற்ற தலங்கள் ஆறு. அவை திருப்புக் கொளியூர் அவிநாசி, திருமுருகன் பூண்டி, திருநணா, திருச்செங்குன்றூர், திருவெஞ்சமாக் கூடல், கறையூர், திருப்பாண்டிக் கொடுமுடி திருக்கருவூர் இவற்றுள்நான்கு தலங்கள்தாம் சுந்தரமூர்த்தியடிகளின் பாடல் பெற்றவை. அவை திருப்புக் கொளியூர், அவிநாசி, திருவெஞ்சமாக்கூடல், திருப்பாண்டிக் கொடி முடி என்ற நான்குமாகும். இந்தத் திருத்தலப் பயணம் மூன்று நிலைகளில் நடைபெறுகின்றது.

முதல் நிலை : பரவையாருடன் மகிழ்ச்சியுடன் வாழும் தம்பிரான் தோழர் இறைவன் எழுந்தருளியிருக்கும் திருத்தலங்கள் பலவற்றையும் வழிபட எண்ணுகின்றார். சோழ நாட்டிலுள்ள சில தலங்களை வழிபட்ட பின் திருப்பைஞ்ஞீலி ஈங்கோய்மலை என்ற திருத்தல வழிபாடுகளை முடித்த பின் கொங்குநாட்டிற்கு வருகின்றார், அகண்ட காவிரிக்குத் தென் கரையிலுள்ள கறையூர்த் திருப்பாண்டிக் கொடுமுடி[1] என்ற

1. பாண்டிக் கொடு முடி (கொடுமுடி): ஈரோடு-திருச்சி இருப்பூர்தி வழியில் கொடுமுடி என்ற நிலையத்திலிருந்து ½ கல்தொலைவு. அகண்டகாவிரிக் கரையிலுள்ளது.

திருக்கோயிலை அடைகின்றார். 'மற்றுப்பற்றெனக்' (7.48) என்ற முதற் குறிப்புடைய திருப்பதிகம் பாடி இறைவனைப் போற்றுகின்றார். இதில்,

மற்று பற்றெனக் கின்றி நின்திருப்
பாதமேமனம் பாவித்தேன்
பெற்ற லும்பிறந் தேனி னிப்பிற
வாததன்மை வந்தெய்தினேன்
கற்றவர்தொழு தேத்துஞ் சீர்க்கறை
யூரிற்பாண்டிக் கொடுமுடி
நற்ற வாஉனை நான்மறக் கினும்
சொல்லுநா நமச்சிவாயவே (1)

என்பதில்

பாவித்தல் - இடையறாது எண்ணுதல்) முதல் பாடல். இந்தப் பதிகத்தில் 'நான் மறக்கினும் சொல்லுநா நமச்சிவாயவே' என்பது பாடல் தோறும் ஒருமுறைக்கொன்பது முறை கூறுதல் பயிற்சியால் நாக்குத் தூண்டுதலின்றித் தானே ஒதும் என்பதைப் புலப்படுத்துவதற்கென்பதை அறிதல் வேண்டும். இது 'நமச்சிவாயப் பதிகம்' என்று வழங்குகின்றது. ஐந்தெழுத்தை 'அஞ்சுபதம்' என்பர். பிறிதோரிடத்தில்,

அந்தியும் நண்பகலும்
அஞ்சுபதம் சொல்லி (7.83.1)

என்று கூறுவதைக் காணலாம்.

'சிவயநம' என்னும் சொற்போக்கு முறையின்படி உய்த்துணரின் சிறப்பு, வனப்பு, யாப்பு, நடப்பு, மறைப்பு என்று ஐந்து பதமாக அமைவதைக் காணலாம். இவற்றின் பொருளையும் ஈண்டு அறிந்து கொள்வது பொருத்தமாகும்.

சிறப்பு என்பது சிவத்தைக் குறிக்கும். :சிறப்பீனும்' எனவும். (குறள்-311) சிறப்பு என்னும் செம்பொருள்'(குறள்-358)எனவும் திருவள்ளுவர்வாக்குகளால் இதனைஉணரலாம்

வனப்பு - அழகு; ஆருயிர்களைச் சிறப்பாகிய சிவத்துடன் கூட்டிப் பேரின்பம் உறச்செய்யும் பேரருள்.

யாப்பு - பிணிப்புடையது. புல்லுமலம் என்னும் ஆணவ அழுக்கு உயிர்களுடன் செம்பினிற் களிம்புபோல் தொன்மையே ஒட்டியுள்ளது. அப்பிணிப்பினை நீக்குவிக்க ஆண்டவன் நோய்க்கு மருந்துபோல இருவினையினையும், மருந்துக்கலம் போல் உடம்பினையும், மருந்துக் கூட்டுப் போல் ஊணினையும், மருத்து இல்லம் போல உலகினையும் கூட்டி யாப்புறுத்தினன். யாப்பு-கட்டு.

நடப்பு - நடத்துதல்; உயிர்களை மேற்கூறிய மலம், மாயை, கன்மங்களுடன் குழந்தைகளைக் கைப்பிடித்து நடத்துவது போன்று நடத்துதல், இதனையே 'ஆட்டுவித்தல்' என்பர். இத்திருவருள் ஆதி என்றும் சொல்லப்படும். ஆதி எனினும் அம்மை எனினும் ஒன்றே. இவ்வாதி தொழில் ஆற்றலாகும்.

மறைப்பு - பண்டே புல்லிய தொன்மை மலம் பல ஆற்றல்களையுடையது. அம்மல ஆற்றல் ஒவ்வோர் உயிரையும் பல்வேறு வகையாகப் பற்றியுள்ளது. அஃது இறைவனைக் காணவொட்டாது மறைக்கும் தன்மையது.

ஐந்தெழுத்தே ஆண்டவன் வடிவம் : அருவம், அருவுருவம், உருவம் என்னும் மூவகைப் பிழம்பினையும் கடந்த நிலையே விழுமிய முழுமுதல்வன் நிலையாகும். அருவம் கட்புலம் ஆகா உருவம், 'சிவன், சக்தி, நாதம், விந்து' என்ற நான்கும் அருவத்திருமேனிகள். சதாசிவன் அருவுருவத் திருமேனி. மகேசுவரன், உருத்திரன், மால், அயன் நான்கும் உருவத் திருமேனிகள். உருவம், கண்ணுக்குப் புலனாவது; அதாவது, நம்மனோர் கண்ணுக்குப் புலனாகாவிடினும் தவத்தோர் கண்ணுக்குப் புலனாவது.

'மொழிக்கு மொழி தித்திக்கும் மூவர் தமிழின்கண் காணப்படும் திரு ஐந்தெழுத்தின் திருப்பதிகங்கள் நான்கு

அவை முறையே ஆளுடைய பிள்ளையார் (சம்பந்தர்) அருளியது இரண்டு[2]; ஆளுடைய அரசர் அருளியது ஒன்று[3]; ஆளுடைய நம்பி அருளியது ஒன்று[4]. இதன் பெருமையை நினைந்து காழிப் பிள்ளையார் 'அம்மையினும் துணை அஞ்செழுத்துமே' (3.22:6) என்றும், 'வேதநான்கினும் மெய்ப் பொருளாவது, நாதன் நாமம் நமச்சிவாயவே' (3.49) என்றும் கூறினார். 'நாவினுக்கருங்கலம் நமச்சிவாயவே' (4.11:2) என்றார் ஆளுடைய அரசர்; 'நான்மறக்கினும் சொல்லு நா நமச்சிவாயவே' என்று ஆளுடைய நம்பி கூட்டியதை மேலே காட்டினேன்.

கொடு முடியை விட்டு நீங்கி காஞ்சிவாய்ப் பேரூர்[5] திருக்கோயிலுக்கு வருகின்றார். இத்தலத்துப் பெருமானை 'பேரூறைவாய் பட்டிப் பெருமான்' (7.47:4), 'பேரூரென உறைவான்' (7.82:10) 'பேரூரர் பெருமானைப்] புலியூர்ச் சிற்றம் பலத்தே பெற்றாமன்றே' (7.90:10) என்று பேசுவர் தம்பிரான் தோழர். பேரூர்ப் பெருமானை வழிபடும் போது, தில்லை மன்றுள் நின்றாடும் தமது திருக்கோலத்தோடு காட்சி கொடுத்தருளுகின்றார். 'தில்லையம்பலவன் திருக் கூத்தினைக் கண்டு கும்பிடப் பெற்றால இனிப் புறம் போய்

---

2. சம்பந். தேவா. 3.22; 3.49
3. திருநாவு தேவா 4.11
4. சுந்த. தேவா 7.48
5. பேரூர் - கோவைக்கு 3 கல்தொலைவிலுள்ளது. இது வைப்புத்தலம், அதாவது தனக்கெனத் தனித்திருப் பதிகத்தைப் பெறாமல் பிறதலப் பதிகங்களிலும் பொதுத் தலப்பதிகங்களிலும் பெயரளவில் குறித்துப் போற்றப் பெற்றதலம். இது 'காஞ்சிவாய்ப் பேரூர், குடகத்தில்லையம்பலம் (மேலைச் சிதம்பரம்) என்றும் பெயர்களைப் பெறும். இதனருகேயுள்ள காஞ்சியாறு இன்று நொய்யலாறுஎன வழங்குகிறது. 'மூன் ஆன்பட்டி' என்றதும் இது.

எய்துதற்குயாதுளது'[6] என்று பெருமகிழ்ச்சியுடன் பேரூரி லின்றும் (பதிகம் இல்லை) புறப்பட்டு வெஞ்சமாக்கூடலை[7] நோக்கிவருகின்றார். 'ஏறிக்குங்கதிர்' (7,42) என்று தொடங்கும் திருப்பதிகத்தில்,

தொழுவார்க் கெளியாய் துயர்தீர நின்றாய்
கரும்பார் மலர்க்கொன்றை துன்றுஞ் சடையாய்
உழுவார்க் கரிய விடையேறி ஒன்னார்புரம்
தீயெழ ஓடுவித்தாய் அழகார்
முழவா ரொலிபாட லோடா டலறா
முதுகாடரங்கா நடமாட வல்லாய்
விழவார் மறுகில் வெஞ்சமாக் கூடல்
விகிர்தா அடியேனையும் வேண்டுதியே. (6)

என்பது ஆறாவது திருப்பாடல். இத்தலத்தைத் துதித்த பின் சோழநாடு வந்து விடுகின்றார்.

இரண்டாம் நிலை : சேரமான் பெருமாள் கூத்தப் பெரு மானால் வன்றொண்டரின் பெருமையை அறிந்து திருவா ரூர்க்கு எழுந்தருளி, தலயாத்திரை செய்து, பின்னர் சிலநாள் திருவாரூரில் தங்கி, தம்பிரான் தோழரை இட்டுக் கொண்டு கொடுங் கோளூரை அடைகின்றார். சில நாட்கள் சுந்தரர் அங்குத் தங்கித் தம்மூர்க்குத் திரும்பும்போது சேரமான் பெருமாள் தம் தோழரை வணங்கித் தமது திருமாளிகையி லுள்ள பெரும் பொருள்களைப் பொதி செய்து ஆட்களின் மேல் ஏற்றுவித்து நெடுதூரம் சென்று வழி அனுப்புகின்றார். நம்பியாரூரரும் சேரவேந்தரிடம் பிரியா விடை பெற்று சேர நாட்டைக் கடந்து கொங்கு நாட்டுத் திருத்தலங்களுள்

6. பெ. பு : ஏயர்கோன்-91
7. வெஞ்சமாக்கூடல் : இத்திருத்தலம் கரூரிலிருந்து 15 கல்தொலைவிலுள்ளது.

ஒன்றாகிய திருமுருகன் பூண்டி[8] வழியாக வந்து கொண்டிருக்கின்றார்.

பூண்டிப் பெருமான் திருவிளையாடல் : இந்நிலையில் பூண்டிப் பெருமான் பூதகணங்களை வேடுவராகச் சென்று தம்பிரான் தோழரின் பொருள்களைக் கவர்ந்து கொள்ளுமாறு பணித்தருளுகின்றார். அங்ஙனமே, அவர்கள் வேடுவர்களாகச் சென்று நிதிக்குவியலைச் சுமந்து செல்லும் சுணைமயாட்களை வழிமறித்து அம்பினாலும் வேற்படைகளாலும் அச்சுறுத்தி அவர்களிடமிருந்த பொருள்களை எல்லாம் கவர்ந்து கொள்ளுகின்றனர். பொருள்களைச் சுமந்து சென்ற பணியாட்கள் நம்பியாரூர் அருகே சென்று சேர்கின்றனர். இதனைக் கண்ட வேடுவர் இறைவனருள் பெற்ற நம்பியாரூரை அணுகுதற்கு அஞ்சி அவ்விடத்தை விட்டு அகலுகின்றனர். இந்நிலையில் திருமுருகன் பூண்டியிலுள்ள திருக்கோயிலினுட் புகுந்து "கொடுகு வெஞ்சிலை" (7.49) என்னும் திருப்பதிகம் பாடி இறைவனை இறைஞ்சுகின்றார்.

கொடுகு வெஞ்சிலை வடுகவேடுவர்
விரலாமை சொல்லித்
திடுகு மொட்டெனைக் குத்திக்
கூறைகொண் டாறலைக்குமிடம்

---

8. முருகன் பூண்டி (திருமுருகன் பூண்டி) : ஈரோடு கோவை இருப்பூர்தி வழியில் திருப்பூர் நிலையத்திலிருந்து 5 கல் தொலைவு. பேருந்து வழி. முருகன் பூசித்த தலங்களுள் ஒன்று. சேரமான் பெருமாள் நாயனார் தம்பிரான் தோழருக்குக் கொடுத்த பெரும் பொருளைச் சிவபெருமான் வடுகவேடர் உருவில் பூதகணங்களை விட்டுக் கொள்ளையடிக்கச் செய்து, பிறகு அவர் பதிகத்தைப் பெற்று அப்பொருளைத் திரும்பக் கொடுத்த அற்புதம் நிகழ்ந்த தலம்.

முடுகு நாறிய வடுகர்வாழ்முருகன்
பூண்டிமா நகர்வாய்
இடுகு நுண்ணிடை மங்கைதன்னொடும்
எத்துக்கிங்கிருந்தீர் எம்பிரானிரே. (1)

என்பது முதற் பாடல். பதிகப்பாடலின் இறுதிதோறும் 'முருகன் பூண்டி மாநகர்வாய்..... எத்துக்கிங் கிருந்தீர் எம் பிரானிரே' என விளவிப் போற்றுகின்றார்.

இறைவனருளால் உடனே முன் வழி மறித்துப் பொருள் களைக் கவர்ந்த வேடுவர்கள் அனைவரும் தாம் பறித்துக் கொண்டு சென்ற பொருள்களையெல்லாம் அத்திருக் கோயிலின் வாயிலிலே கொண்டு வந்து குவிக்கின்றனர். அவ்வரும் பொருள்களைக் கண்ணுற்ற நம்பியாரூரர் இறைவன் திருவருளை வியந்து, அப்பொருள்களை முன் போற் பொதி செய்து முன்னே எடுத்துச் செல்லும்படி கூறி, அத்திருத்தலத்தினின்றும் புறப்பட்டு கொங்கு நாட்டைக் கடந்து திருவாரூரை அடைகின்றார். வந்தவுடன் பூங் கோயில் பெருமானைவழிபட்டுப் பரவையாரது மாளிகையில் இனிது வாழ்கின்றார்.

கொங்கு நாட்டில் இரக்கமில்லாத சிந்தையினராகிய வடுக வேடுவர்கள் பல்கி வழிப்பறி செய்து வாழ்ந்தனர் என்பதும், சுந்தரர் செந்தமிழால் திருமுருகன் பூண்டி எம் பெருமானைச் செந்தமிழ்ப் பதிகத்தாற் போற்றி வணங்கிய பிறகு வழி போவர்க்கு தீங்கு செய்து வாழும் வேடர்களும் தம் கொடுந்தொழிலை நீங்கிச் சுந்தரரின் திருவடிகளைப் பணிந்து அடங்கி வாழ்ந்தனர் என்பதும்,

எங்கேனும் போகினும்
எம்பெருமானை நினைந்தக்கால்
கொங்கே புகினும்
கூறைகொண் டாறலைப்பாரிலை (7.92:3)

என வரும் புக்கொளியூர் அவிநாசிப் பதிகத்தில் நம்பியாரூரரின் அநுபவ மொழியாலும் அறியப்படும்.

மூன்றாம் நிலை : புற்றிடங் கொண்ட பெருமானைப் போற்றி மகிழ்ந்திருந்த நாவலூரர் சில நாட்கள் கழிந்தபின் தம் நண்பராகிய சேரமான் பெருமாளை நினைக்கின்றார். மலை நாடு சென்று வரத் திருவுளங் கொள்ளுகின்றார். ஒரு நன்னாளில் சோழ நாட்டைக் கடந்து கொங்கு நாட்டை அடைகின்றார். திருப்புக் கொளியூர் அவிநாசி[9] என்னும் திருத்தலத்தை அணுகி வேதியர் தெரு வழியாகச் செல்லும் பொழுது ஓர் இல்லத்தில் மங்கல ஒலியும் அதற்கு எதிர்ப் புறமாக உள்ள மற்றொரு வீட்டில் அழுகையொலியும் எழுகின்றன. நம்பியாரூரர் மாறுபட்ட ஒலிகள் நிகழ்தற்குரிய காரணத்தை அங்குள்ளாரை நோக்கி வினவுகின்றார்.

அருகிருந்தவர் கூறியது : 'ஒரு வேதியருக்கு இரண்டு ஆண்மக்கள். ஒத்த பருவத்தினாய் ஐந்து வயது நிரம்பப் பெற்ற அச்சிறுவர்கள் ஒரு மடுவில் நீராடினபொழுது அவ்விருவருள் ஒருவனை முதலை விழுங்கிற்று; மற்றொருவன் பிழைத்துக் கொண்டான். பிழைத்த சிறுவனுக்கு இப்பொழுது உபநயனம் நடைபெறுகின்றது. இம்மங்கல ஒலிக்கு இது காரணம். இது மரித்த சிறுவனை நினைப்பித்தமையால் வருந்திய பெற்றோர்தம் அழுகையொலி எதிர் இல்லத்தில் கேட்கக் காரணமாயிற்று'. இத்துயரச் செய்தி கேட்ட தம் பிரான் தோழர் சிந்தை கலங்கி நிற்கின்றார்.

இந்நிலையில் மைந்தன் இறந்ததை நினைந்து வருந்தும் பெற்றோர்கள் சுந்தரர் போந்த செய்தியறிந்து அழுகையை

---

9. அவிநாசி : திருப்பூரிலிருந்து 8 கல் தொலைவு. பேருந்து வழி. சுவாமியின் பெயரே தலத்திற்கும் பெயராயிற்று. முதலையுண்ட பாலனை உயிர்ப்பித்துக் கொடுத்த அற்புதம்நிகழ்ந்த தலம். முதலை இருந்த மடு இப்போது 'தாமரைக்குளம்' எனப் படுகின்றது. சிறுவன் முதலை வாயினுட்புக்கு ஒளிந்த ஊர் புக்கொளியூர்.

நீக்கிக் கொண்டு முகமலர்ச்சியுடன் அங்கு விரைந்து வந்து அடிகளை வணங்குகின்றனர். அவர்களைக் கூர்ந்து நோக்கி 'நீவிரோ புதல்வனை இழந்தவர்கள்' என்று பரிவுடன் வினவுகின்றார். அவர்கள் மீண்டும் அடிகளை வணங்கி "பெரியீர், அது முன்னர் நடந்தது. அது கிடக்க தங்களை நெடுங்காலமாகக் கண்டு வணங்கக் கருதியிருந்த எங்கள் அன்பு வீணாகாமல் தாங்கள் எண்டு எழுந்தருளியது எமது தவப்பேறு" என்று மகிழ்ந்துரைக்கின்றனர். தம்மை அடைந்தார்களின் இடரைக் களைந்தருளவல்ல 'சேரமான் தோழர்' 'இந்த வேதியரும் அவர்தம் துணைவியாரும் மகனை இழந்த துன்பத்தையும் மறந்து யான் இங்கு வருகை புரிந்தமைக்கு மகிழ்கின்றனர். இவர்தம் அன்பு மகனை முதலை வாயினின்றும் அழைத்துக் கொடுத்த பின்னரே அவநாசி இறைவனை இறைஞ்சுதல் வேண்டும்" என்று அருளிச் செய்கின்றார்.

பெற்றோர்களுடன் தம்பிரான் தோழர் மடுவின் கரைக்கு வருகின்றார். அவிநாசியில் எழுந்தருளியிருக்கும் சிவபெருமானை நினைந்து "எற்றான் மறக்கேன்" (7.92) என்ற திருப்பதிகத்தைப் பாடத் தொடங்குகின்றார். இப்பதிகத்தின்,

உரைப்பார் உரையுகந்து
உள்கவல்லார் தங்கள்உச்சியாய்
அரைக்காடரவா ஆதியும்
அந்தமும் ஆயினாய்
புரைக்காடு சோலைப்
புக்கொளி யூர்அவிநாசியே
கரைக்கான் முதலையைப்
பிள்ளைதரச் சொல்லு காலனையே (4)

என்ற நான்காம் திருப்பாடலைப் பாடும்பொழுது அற்புத நிகழ்ச்சி நடைபெறுகின்றது. காலனாகிய இயமன், மடுவிலிருந்த முதலை வயிற்றில் முன் விழுங்கப் பெற்றிருந்த

வனது உடம்பைப் சென்ற ஆண்டுகளின் வளர்ச்சியை உடையதாகச் செய்கின்றான்; அவ்வுடம்பினுள்ளே மரித்த புதல்வனது உயிரைக் கொண்டுவந்து புகுத்துகின்றான். உடனே மடுவிலிருந்த முதலை வெளிப்பட்டு கரைக்கு வருகின்றது; முன்பு தான் விழுங்கிய புதல்வனை உமிழ்கின்றது. இந்நிகழ்ச்சியைச் சேக்கிழார் பெருமான்,

பெருவாய் முதலை கரையின்கண்
கொடுவந் துமிழ்ந்த பிள்ளை தனை
உருகா நின்ற தாய்ஓடி
எடுத்துக் கொடுவந் துயிரளித்த
திருவா ளன்தன் சேவடிக்கீழ்ச்
சிலமறையோ னோடு வீழ்ந்தாள்:
மருவார் தருவின் மலர் மாரி
பொழிந்தார் விசும்பில் வானோர்கள்.

மண்ணில் உள்ளார் அதிசயித்தார்:
மறையோ ரெல்லாம் உத்தரியம்
விண்ணில் ஏற விட்டார்த்தார்
வேத நாதம் மிக்கெழுந்தது;
அண்ண லாரும் அவினாசி
அரனார் தம்மை அருமறையோன்
கண்ணின் மணியாம் புதல்வனையும்
கொண்டு பணிந்தார் காசினிமேல்[9]

என்று மெய்மறந்து பாடி அநுபவிக்கின்றார்.

முதலை வாயினின்றும் வெளிப்பட்டு உய்ந்த மறைச் சிறுவனை நம்பியாரூரர் அவினாசிக் கோயிலுக்கு அழைத்துச் சென்று அருளாளனாகிய அவினாசிப் பெருமானைத் தொழுகின்றார். பின்னர் அவனைப் பிறந்த இல்லத்திற்கு அழைத்துச்

9. பெ. பு: வெள்ளானை-12 ,13

சென்று மங்கல வாத்தியம் முழங்க அச்சிறுவனுக்கு உபநயனமும் செய்வித் தருளுகின்றார். மறைச் சிறுவனை முதலை விழுங்கிய செய்தி அவ்வூருக்குச் சென்ற தம்பிரான் தோழரின் திருவுள்ளத்தில் அடங்காத கவலையை உண்டு பண்ணியது என்பதை,

வழிப்போவார் தம்மொடும்
வந்துடன் கூடியமாணிநீ
ஒழிவதழகோ சொல்லாய்
அருளோங்கு சடையானே
பொழிலாருஞ் சோலைப்
புக்கொளியூரிற் குளத்திடை
இழியாக் குளித்தமாணி
எனைக்கிறி செய்ததே.(2)

என்றும்,

புள்ளேறு சோலைப்
புக்கொளியூரிற் குளத்திடை
உள்ளிடப் புக்கமாணி
எனைக்கிறி செய்ததே.(9)

என்றும்,

கரைக்கான் முதலையைப்
பிள்ளைதரச்சொல்லு காலனையே.(4)

எனவும் நெஞ்சம் நெக்குருகி இறைவனையே சாடுதல் இரண்டு, ஒன்பது, நான்காம் பாடல்களால் அறிந்து மகிழலாம்.

இதன்பின்னர் தம்பிரான் தோழர் மலைநாட்டுக்கு எழுந்தருள்கின்றார். இந்த இரண்டாவது மலைநாட்டுப் பயணம் சுமூகமாக முடிந்து மீளா உலகை அடைகின்றார் தம் முயிர் அனைய நண்பர் சேரமானுடன்.

14. மலைநாட்டுத் திருத்தலப் பயணம்

சேரநாட்டை ஆண்டு வந்த சேரமான் பெருமாள் நாயனார் நம்பியாரூரரின் பெருமையினைத் தில்லையில் திரு நடனம் புரியும் கூத்தப் பெருமான் அறிவுறுத்தியருளக் கேட்டுணர்கின்றார். நாயனாருக்கு நம்பியாரூரரைக் காண வேண்டும் என்ற பேரார்வம் ஏற்படுகின்றது. தில்லை அம்பல வாணரை வழிபட்டுத் திருவாரூரை நோக்கி வருகின்றார். சேரமன்னரது வருகையை அறிந்த நம்பியாரூரர் சிவனடியார் குழாத்துடன் அவரை எதிர்கொண்டு அழைக்க வருகின்றார். நம்பியாரூரைக் கண்ணுற்ற கழறிற்றறிவார் (சேரமான் பெருமாள்) அவருடைய திருவடிகளில் வீழ்ந்து இறைஞ்சு கின்றார். நம்பியாரூரரும் சேரவேந்தரின் திருவடிகளில் வீழ்ந்து வணங்கி அவரை இருகைகளாலும் எடுத்துத் தழுவிக் கொள்ளுகின்றார். இந்நிகழ்ச்சியைச் சேக்கிழார் பெருமான்,

'சேரலனார்
சந்த விரைந்தார் வன்றொண்டர்
முன்பு விருப்பின் உடன்தாழ்ந்தார்

முன்பு பணிந்த பெருமானைத்
தாமும் பணிந்து முகந்தெடுத்தே
அன்பு பெருகத் தழுவவிரைந்
தவரும் ஆர்வத்தொடு தழுவ

இன்ப வெள்ளத் திடைநீந்தி
ஏற மாட்டா தலைவார் போல்
என்பும் உருக உயிர்ஒன்றி
உடம்பும் ஒன்றாம் என இசைந்தார்[1]

என்று காட்டுவர். இங்ஙனம் சேரமான் பெருமாளும் நாவலூர் மன்னரும் 'உயிர் ஒன்றி உடம்பும் ஒன்றாம்' என அன்பினால் அளவளாவி மகிழும் தோழமையின் பெருமையைக் கண்ட சிவனடியார்கள் தம்பிரான் தோழரைச் 'சேரமான் தோழர்' என்று வழங்கிச் சிறப்பிக்கின்றனர்.

நம்பியாரூரரின் மலைநாட்டுத் திருத்தலப் பயணம் இரண்டு நிலையில் நடைபெற்றது. மலை நாட்டில் உள்ளது அஞ்சைக் களம் (கொடுங்கோளூர்) என்ற ஒன்றேயாகும்.

முதல்நிலை : சேரமான் பெருமாள் முதல் முறை வந்த போது நம்பியாரூரரும் சேரவேந்தரும் பாண்டி நாட்டுத் தலங்கள் பலவற்றை வழிபட்ட பிறகு சேரமான் பெருமாள் சேரமான் தோழரைத் தம் நாட்டிற்குச் இட்டுச் செல்லுகின்றார். வழியிலுள்ள சோழ நாட்டுத் தலங்களை வழிபட்டுக் கொண்டு கொங்கு நாட்டு வழியாக கொடுங்கோளூரை அடைகின்றனர். மலை நாட்டு மக்கள் மகிழ்ந்து இவர்களை வரவேற்கின்றனர்.

ஒருநாள் சேரமான் பெருமாள் நம்பியாரூரரைத் திருவஞ்சைக்களம்[2] என்னும் திருக்கோயிலுக்கு அழைத்துச்

---

1. பெ. பு : கழறிற்றறிவார்-64, 65
2. அஞ்சைக் களம் (திருவஞ்சிக்குளம்) இது திருச்சூரிலிருந்து 30 கல் தொலைவிலுள்ளது. திருச்சூரிலிருந்து கொடுங்கோளூர் (Cranganore) செல்லும் பேருந்தில் கொடுங்கோளூருக்கு எதிர்க் கரையில் இறங்கி உப்பங்கழி வழியே (Back waters) வஞ்சி (சிறு படகு) அமர்த்திக் கொண்டு நேரே அம்பலம் (கோயில்) போகலாம். சேரநாட்டு முறைப்படி

செல்கின்றார். அஞ்சைக் களத்து அப்பனை வணங்கி மகிழ்ந்த சேரமான் தேர்ழர் 'முடிப்பது கங்கை' (7.44) என்னும் திருப் பதிகத்தைப் பாடித் துதித்துத் திருக்கோயிலினின்றும் வெளி வருகின்றார்-இப்பதிகத்தின் முதற் பாடல்.

முடிப்பது கங்கையும் திங்களும்
செற்றது மூவெயில்
நொடிப்ப துமாத்தி ரைநீறெ
ழக்கணை நூறினார்
கடிப்பது மேருமென் றஞ்சு
வன்திருக் கைகளால்
பிடிப்பது பாம்பன்றி இல்லையோ
எம்பி ரானுக்கே.(1)

என்பதாகும்.

சேரமான் பெருமாள் நம்பியாரூரரை பட்டத்து யானை மேல் அமரச் செய்து தாம் அவர் பின்னே அமர்ந்து இருகை களாலும் வெண் சாமரை வீசிக் கொண்டு தம் அரண்மனைக்கு அழைத்துச் செல்கின்றார். அங்ஙனம் செல்லும்பொழுது வழிநெடுகே இருமருங்கும் குழுமியிருந்த மக்கள் வாழ்த்து வதைச் சேக்கிழார் பெருமான்,

---

நீராடி ஈர ஆடையுடன் செல்லவேண்டும்; பட்டுடுத்தி யும் செல்லலாம். அஞ்சைக் களத்தப்பர் தரை மட்டத்திற்கு மேல் சில அங்குல உயரமே உள்ளார். 'தலைக்கு தலை மாலை' என்னும் பதிகத்தின் (7.4) இரண்டாவது திருப்பாடல் கூறுவதைத் திரு மேனியின் சிரசில் சேவிக்கலாம். முதல் சுற்றின் ஒரு சிறு அறையில் சேரமானும் தம்பிரான் தோழரும் செப்புத் திருமேனிகளாகக் காடசி தருகின்றனர். ஆடிசுவாதியன்று தமிழ் நாட்டு மக்கள் திரளாகச் சென்று வழிபடுகின்றனர்.

'நல்ல தோழர் நம்பெருமாள்
தமக்கு நம்பி' இவர் என்பார்;
'எல்லை இல்லாத் தவமுன்பென்
செய்தோம் இவரைத் தொழஎன்பார்;
'செல்வம் இனியென் பெறுவதுநம்
சிலம்பு நாட்டுக்' கென உரைப்பார்;
'சொல்லுந் தரமோ? பெருமாள்செய்
தொழிலைப் பாரீர்' எனத்தொழுவார்.[3]

என்று காட்டுவர். அரண்மனைக்குள் சென்றதும் ஆரூரரை அரியணையில் ஏமரச் செய்து தம் தேவிமார்கள் பொற் குடத்தில் நன்னீர் ஏந்திப் பணி செய்ய வன்றொண்டர் திருவடிகளை விளக்கி நறுமலர் தூவி அருச்சிக்கின்றார். அன்பின் பெருக்கால் இவையெல்லாம் செய்யப்பெறுதலின் இவற்றை மறுக்காமல் ஏற்றுக் கொள்கின்றார் நாவலூர் மன்னர். அடுத்து இவ்வைபவங்களை உடனிருந்து திருவமுது செய்விக்கின்றார். இங்ஙனம் ஆரூரரைத் தம்தலை நகரில் பலநாட்கள் அமர்த்திய சேர மன்னர் 'சென்டாடும் தொழில் மகிழ்வும் சிறு சோற்றுப் பெருஞ்சிறப்பும், ஆடல் பாடல் இன்னியங்கள்' முதலாகப் பலவகைக் கலியாட்டங்கள் நிகழச் செய்து தம் தோழரை மகிழ்விக்கின்றார். அவருடன் அளவளாவித் தாமும் மகிழ்கின்றார்.

இங்ஙனம் பொழுது போக்கும் நாட்களில் ஒருநாள் திருவாரூர்ப் பெருமானைக் கண்டு இறைஞ்சி இன்புற வேண்டும் என்ற எண்ணம் தலைதூக்குகின்றது.

பொன்னு மெய்ப்பொருளும் தருவானைப்
போகமும் திருவும் புணர்ப்பானைப்
பின்னை யென்பிழையைப் பொறுப்பானைப்
பிழையெ லாந்தவிரப் பணிப்பானை

---

3. பெ. பு : சழறிற்றறிவார்-148.

இன்ன தன்மையன் என்றறியொண்ணா
எம்மானை எளிவந்த பிரானை
அன்னம் வைகும் வயற்பழனத்தணி
யாரூரானை மறக்கலு மாமே* (7 59:1)

என்ற முதற் பாடலைக் கொண்ட திருப்பதிகத்தைப் பாடித் தமது ஆற்றாமையினைச் சேரர் பெருமானுக்கு உணர்த்தி விடை பெற முயல்கின்றார். சேரமான் பெருமாளும் வரிசைகள் பலசெய்து வழியனுப்பி வைக்கின்றார். நம்பியாரூரரும் திருவாரூர் வந்தடைகின்றார்.

இரண்டாம் நிலை :பல நாட்கள் கழிகின்றன. புற்றிடங் கொண்ட பெருமானை வழிபட்டு மகிழ்ந்திருக்கும் நம்பியாரூரருக்குத் தம் கெழுதகை நண்பர் சேரமான் பெருமாளைப் பார்க்க வேண்டும் என்ற எண்ணம் தோன்றுகின்றது. சோழ நாட்டைக் கடந்து கொங்கு நாட்டிற்கு வருகின்றார். இப் பொழுதுதான் முதலையுண்ட பாலகனின் உயிர் மீட்பு நடை பெறுகின்றது (முன் இயல் காண்க). இந்தச் செய்தி சேரமான் பெருமாளுக்கு எட்டுகின்றது. அவருக்கு வரவேற்பு நிகழ்த்துவதற்கு சேரர்கோன் செய்த ஏற்பாடுகளைப் பற்றியதுமான விவரங்களைப் சேக்கிழார் பெருமான்,

"முன்னாள் முதலை வாய்ப்புக்க
மைந்தன் முன்போல் வரமீட்டுத்
தென்னார் ஊரர் எழுந்தருளா
நின்றார்" என்று சேரர்பிரார்க்கு
அந்நாட் டரனார் அடியார்கள்
முன்னே ஓடி அறிவிப்பப்
பொன்னார் கிழியும் மணிப்பூணும்
காசும் தூசும் பொழிந்தளித்தார்.

செய்வ தொன்றும் அறியாது
சிந்தை மகிழ்ந்து களிகூர்ந்து
"என்ஐயன் அணைந்தான் ஏனை ஆளும்
அண்ணல் அணைந்தான் ஆரூரின்
சைவன் அணைந்தான் என் துணையர்
தலைவன் அணைந்தான் தரணி ஏலாம்
வய்ய அணைந்தான் அணைந்தான்"
என்றோகை முரசம் சாற்றுவித்தார்.

பெருகு மதிநூல் அமைச்சர்களை
அழைத்துப் பெரியோர் எழுந்தருளப்
பொருவில் நகரம் அலங்கரித்துப்
பண்ணிப் பயணம் புறப்படுவித்(து),
அருவி மதமால் யானையினை
அணைந்து மிசைகொண் டரசர்பெருந்
தெருவுங் கழிய எதிர்வந்தார்
சேரர் குலம்உய்ந் திடவந்தார்.[4]

என்று வருணித்து மகிழ்கின்றார்.

நம்பியாரூரர் வஞ்சி மாநகரை அடைந்த பிறகு சேரமான் பெருமாள் அவரை எதிர் கொண்டு வரவேற்று வண்ங்கி யானைமேல் அமர்த்தி நகரத்துக்கு அழைத்து வருகின்றார். அரியணையில் அமர்த்திப் பூசித்துப் போற்றுகின்றார். இந்தப் பயணத்தின்போது மலை நாட்டுத் தலங்களைச் சேவித்துத் தம் கெழுதகை நண்பருடன் அளவளாவி மகிழ்ச்சியுடன் பொழுது போக்குகின்றார்.

ஒரு நாள் சேரவேந்தர் திருமஞ்சன சாலையில் நீராடிக் கொண்டிருக்கும்பொழுது நம்பியாரூரர் திருவஞ்சைக் களத்தில் கோயில் கொண்டிருக்கும் இறைவனை வழிபடச்

4. பெ. பு : வெள்ளானை-16, 17, 18

செல்கின்றார். தாம் பூவுலகில் வாழவேண்டிய நாட்கள் முடிவெய்தும் நிலை வருகின்றது.

பாய கங்கைசூழ் நெடுஞ்சடைப்
பரமரைப் பண்டுதாம் பிரிந்தெய்தும்
சேய நன்னெறி குறுகிடக்
குறுகினார் திருவஞ்சைக் களந்தன்னில்.[5]

என்று இந்நிலையைக் குறிப்பிடுவர் சேக்கிழார் பெருமான். திருக்கோயிலில் புகுந்த சேரமான் தோழர் கோயிலை வலங் கொண்டு நெஞ்சம் நெக்குருகிக் கண்ணீர் சோர இறைவனின் பூங்கழலினைப் போற்றுகின்றார்; உலகப் பற்று கழலத் தொடங்குகின்றது. தமிழ்த்திருப்பதிகம் பிறக்கின்றது.

அரிய செய்கையில் அவனியில்
விழுந்தெழுந்து அலைப்புறும் மனைவாழ்க்கை
சரிய வே'தலைக் குத்தலை
மாலை'என் றெடுத்தனர் தமிழ்மாலை.[6]

என்று இந்நிலையைப் பாடுகின்றார் சேக்கிழார் அடிகள். இத் திருப்பதிகத்தின் உட்குறிப்பு 'அடியேன் இவ்வுலக வாழ்க்கையை வெறுத்து நீங்கினேன். அடியேனை நின் திருவடியில் சேர்த்தருளல் வேண்டும்' என்பது. இது 'தலைக் குத்தலை' (7.4) என்ற பதிகத்தின்,

வெறுத்தேன் மனைவாழ்க்கையை விட்டொழிந்தேன்
விளங்குங் குழைக்காதுடை வேதியனே
இறுத்தாய் இலங்கைக் கிறையாயவனைத்
தலைபத்தொடு தோள்பல இற்றுவிழக்

---

5. பெ. பு : வெள்ளானை-28
6. பெ. பு : ஷை-29

கறுத்தாய் கடல்நஞ் சமுதுண்டுகண்டம்
கடுகப்பிரமன் தலையைந் திலுமொன்
றறுத்தாய் கடலங்கரைமேல் மகோதை
அணியார்பொழில் அஞ்சைக் களத்தப்பனே.[8]

என்ற எட்டாவது திருப்பாடலால் புலனாகும். இது திருமங்கையாழ்வாரின்,

வேண்டேன் மனைவாழ்க்கையை
விண்ணகர் மேயவனே.[7]

என்று பாசுரந்தோறும் பல்லவிபோல் இறும் திருவிண்ணகர் பற்றிய திருமொழியை நினைக்கச் செய்கின்றது.

அடியார்களின் கருத்தறிந்து முடிக்கவல்ல கண்ணுதலப்பன், நம்பியாரூரரின் பாசத் தலையை அகற்றி ஈறிலாப் பேரின்ப வாழ்வைத் தந்தருளத் திருவுள்ளங் கொள்ளுகின்றான். நம்பியாரூரரைத் திருக்கயிலாயத்திற்கு அழைத்து வரும்படி வெள்ளை யானையுடன் அயன் முதலிய தேவர்களைத் திருவஞ்சைக் களத்திற்கு அனுப்பியருளுகின்றான். கயிலை நாதனின் அருளாணையினைச் சிரமேற்கொண்டு வெள்ளை யானையுடன் தேவர்கள் திருவஞ்சைக்களத் திருக்கோயிலை அடைகின்றனர். தேவர்கள் நம்பியாரூரரைக் காண்கின்றனர். அவரை வணங்கி நின்று, "ஐயனே தாங்கள் இவ்வெள்ளை யானையின்மீது அமர்ந்து திருக்கயிலைக்கு எழுந்தருளுதல் வேண்டும் என்பது சிவபெருமானின் அருளிப் பாடாகும். தாங்கள் ஏவியவற்றைச் செய்ய நாங்கள் காத்திருக்கின்றோம்" என்று விண்ணப்பிக்கின்றனர்.[8]

கயிலைப் பயணம்: கண்ணுதலப்பனின் திருவருளை எண்ணிச் செய்வதொன்றறியாது தம்மை மறந்த நிலையில் அந்த அருளாணையினை விரைந்து ஏற்றுக் கொள்ளுகின்றார்

7. பெரி. திரு. 6.1
8. பெ. பு : வெள்ளானை-33

சேரமான் தோழர். வானவர் பூமழை பொழிந்திட யானை யுடன் வந்ததேவர்கள் சேரமான் தோழரை வலம் வந்து வணங்கி வெள்ளை யானையின்மீது அமர்த்துகின்றனர். யானையின்மீது இவர்ந்த வன்றொண்டர் தம்முடைய உயிர்த் தோழரும் 'மன்னுயிர்கள் சாற்றும் மாற்றங்களை யெல்லாம் உள்ளவாறு உய்த்துணரவல்ல திருவருட் செல்வரு மான சேரமான் பெருமானைத் தம் மனத்திற் சிந்தித்துக் கொண்டு கயிலையை நோக்கிச் செல்கின்றார்.

சேரமான் பெருமாள் தன் உயிர்த் தோழராகிய நம்பி யாரூரரின் பேரன்பின் திறத்தைத் திருவருளாற்றலால் உணர்கின்றார். அருகே நின்ற குதிரை மீதேறி திருவஞ்சைக் கள ஆலயத்திற்கு வருகின்றார்; வெள்ளை யானையின்மீது விசும்பிற் செல்லும் தம் தோழரைக் காண்கின்றார். தமது குதிரையின் செவியில் திருவைந்தெழுத்தினை ஓதவே, அது வான்வழியே செல்லும் ஆற்றலைப் பெறுகின்றது. உடனே அது சேரமானுடன் வானில் சென்று தெய்வத் தன்மை வாய்ந்த வெள்ளை யானையை வலம் வந்து அதற்கு முன்னே செல்லத் தொடங்குகின்றது. அப்பொழுது சேரமான் பெரு மானைப் பின்தொடர்ந்து சென்ற படைவீரர்கள் குதிரை மீது செல்லும் மன்னரைத் தம் கண்ணுக்குப் புலப்படும் எல்லை வரைக் கண்டுப் பின்னர்க் காணப்பெறாது வருந்து கின்றனர். தம் தலைவரைப் பிரியாது உடன் செல்ல வேண்டும் என்னும் மனத்திட்பம் உடைய அவ்வீரர்கள் தம் உடம்பை வெட்டி வீழ்த்தி வீர உடலைப் பெற்று விசும்பின் மீது எழுந்து சேர வேந்தனைச் சேவித்துச் செல்லுகின்றனர். தேவர் குழாமும் சேரமான் பெருமானும் முன் செல்ல நம்பியாரூரர் பின் செல்லுகின்றார். செல்லும் போதே, ''தானெனை முன் படைத்தான்'' (7.100)என்று தொடங்கும் திருப்பதிகத்தைப் பாடிக் கொண்டு திருக்கயிலாய மலையின் தென் திசை வாயிலை அணுகுகின்றார். இதில் ஒரு திருப் பாடல்:

மந்திரம் ஒன்றறியேன்
மனைவாழ்க்கை மகிழ்ந்தடியேன்
சுந்தர வேடங்களால்
துரிசேசெயும் தொண்டனெனை
அந்தர மால்விசும்பில்
அழகானை அருள் புரிந்த(து)
உந்தரமோ நெஞ்சமே
நொடித்தான்[9] மலை உத்தமனே. (4)

இப்பதிகம் நம்பியாரூரர் இறைவனருளால் தாம் பெற்ற பெருஞ்சிறப்பினைக் குறித்துப் பாடப் பெற்றது.

கயிலைப் பெருமானது திருவருளாணையால் களிற்றுடன் வந்த அமரர்கள், வன்றொண்டரை வலம் வந்து அவரை வெள்ளை யானையின்மீது அமர்த்தினர் என்பது.

வானை மதித்தமரர்
வலஞ்செய்தெனை ஏறவைத்த
ஆனை அருள்புரிந்தான்
நொடித்தான்மலை உத்தமனே.(2)

எனவும்,

விண்ணுல கத்தவர்கள்
விரும்பவெள்ளை யானையின் மேல்
என்னுடல் காட்டுவித்தான்
நொடித்தான்மலை உத்தமனே. (5)

எனவும் வரும் அத்திருப்பதிகப் பாடற் பகுதிகளால் நன்கு புலனாகின்றது. இங்ஙனம் வெள்ளை யானையின்மீது செல்லும் நம்பியாரூரது யாக்கை ஊனுடம்பால் உளவாம் மாசு நீங்கி இறவா நிலைமைத்தாகிய தூயதிருமேனியாய் விளங்கிற்று என்பது.

---

9. நொடித்தான்-சிவபெருமான். நொடித்தல் = அழித்தல். இறைவன் எழுந்தருளிய மலை கைலை; அது நொடித்தான் மலை.

வானைனை வந்தெதிர்கொள்ள
மத்தயானை அருள்புரிந்து
ஊனுயிர் வேறு செய்தான்
நொடித்தான்மலை உத்தமனே. (1)

எனவும்,

துஞ்சுதல் மாற்றுவித்துத்
தொண்டனேன் பரமல்லதொடு
வெஞ்சின ஆனைதந்தான்
நொடித்தான்மலை உத்தமனே. (6)

எனவும் தம்பிரான் தோழர் தமக்கு இறைவன் செய்த பெரு நலத்தை எடுத்துரைத்தலால் நன்கு விளங்கும்.

நம்பியாரூரரை வெள்ளை யானை தன்மீது சுமந்து சென்றபொழுது நிலமெங்கும் அதிர்ந்து அசைந்தது என்பதும், விசும்பும் நிலைகெட்டு அதிர்ந்தது என்பதும், வழியிடையே எதிர்ப்பட்ட மலை முகட்டின்மேல் யானை அடி வைத்து ஏறியபொழுது கடலரசனாகிய வருணன் நம்பியாரூரரின் திருவடிகளால் மலர்தூவி வழிப்பட்டனன் என்பதும்,

நிலைகெட விண்ணதிர
நிலமெங்கும் அதிர்ந்தசைய
மலையிடை யானையேறி
வழியே வருவேன் எதிரே
அலைகட லால்அரையன்
அலர்கொண்டு முன்வந்திறைஞ்ச. (7)

என வரும் திருப்பாடற் பகுதியால் அறியலாகும். வேத ஆகமங்களைக் கற்றுவல்ல மெய்யடியார்கள் கூறும் அரன் நாமமும், தோத்திரங்களும், வேத் ஒலியும் எதிர்ந்திசைப்பச் சிவனடித் தொண்டு பூண்ட வானன் என்பான் தம்பிரான் தோழரை வரவேற்றனன் என்பதும், இந்திரன், திருமால் நான்முகன் முதலிய தேவர்கள் எல்லாம் நம்பியாரூரரை

பாசத்தளையை அகற்றுதற் பொருட்டு வன்றொண்டரது தோழமையைத் தந்தாய்' என்று மறுமொழி தருகின்றார். 'இன்னும் ஒரு விண்ணப்பம் உள்ளது' என்று கூறி, ''மறைகளாலும் முனிவர்களாலும் அளவிடுதற்குரிய பெருமானே, நின்னைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு 'திருஉலாப் புறம்' என்ற செந்தமிழ்ப் பனுவல் ஒன்றைப் பாடி வந்துள்ளேன். அதனைத் திருச்செவிசாத்தி ஏற்றருளவேண்டும்'' என்று வேண்டுகின்றார். வேண்டுவார்க்கு வேண்டுவதை அருளும் ஈசனும், ''சேரனே, அவ்வுலாவைச் சொல்லுக'' எனப் பணிக்க, சேரமானும் அதனைக் கயிலைப் பெருமான் திருமுன் எடுத்துரைத்து அரங்கேற்றுகின்றார். இதனை உடனிருந்து கேட்ட மாசாத்தனார் அத்தெய்வப் பனுவலை உளத்துக்கொண்டு சோழ நாட்டிலுள்ள திருப்பிடவூரிலே வெளிப்படச் சொல்லி தமிழகத்தில் வழங்கச் செய்கின்றார்' என்று சேக்கிழார் பெருமான் தமது திருத்தொண்டர் புராணத்தில் குறிப்பிடுகின்றார்.[11]

சேரமான் பெருமாள் அன்புடனும் பக்தியுடனும் கேட்பித்த திருவுலாப்புறத்தை ஏற்றுக் கொள்ளுகின்றான் கயிலை நாதன். பின்பு அவரை நோக்கி, 'பெருமானே, நீயும் ஆரூரனும் நம்பால் நிலைபெற்றிருப்பீர்களாக' எனத் திருவருள்புரிகின்றார். சிவபெருமான் ஆணையிட்டவண்ணம் நம்பியாரூரர் அணுக்கத் தொண்டுபுரியும் ஆலால சுந்தரராகவும், சேரமான் பெருமாள் சிவகணத்தலைவராகவும் திருக்கயிலையில் திருத்தொண்டுபுரியும் பேரின்ப வாழ்வை அடைந்து இன்புறுகின்றனர்.

நம்பியாரூரரை மணந்து வாழ்ந்த பரவையாரும் சங்கிலியாரும் உமையம்மையின் திருவருளாலே திருக்கயிலையை அடைந்து கமலினி, அநிந்திதை என்ற முன்னைய பேரில் உமையம்மைக்குத் தாங்கள் முன்பு புரிந்து வந்த அணுக்கத் தொண்டினை மேற்கொண்டு மகிழ்கின்றனர்.

---

11. பெ.பு: வெள்ளானை-52

15. நால்வருள் இவர்தம் சிறப்புநிலை

அப்பர், ஞானசம்பந்தர், சுந்தரர், மாணிக்கவாசகர் என்ற சமயகுரவர் நால்வருள் சுந்தரரின் சிறப்புநிலை தனியாகத் தென்படுகின்றது.

பிறப்பு: தனிச்சிறப்பு வாய்ந்தது. திருக்கயிலாய மலையிலே சிவபெருமானின் அடியார்களுள் ஒருவரான ஆலால சுந்தரரே இப்பூவுலகில் சுந்தரராகப் பிறந்தார் என்று சேக்கிழார் பெருமான் இவர்தம் முன்னைய நிலையைக் காட்டுகின்றார். அங்ஙனமே இவர்தம் துணைவியார்களாகிய பரவையார், சங்கிலியார் இவர்தம் முன்னைய நிலைகள் காட்டப்பெறுகின்றன. இருவரும் கமலினி, அனிந்திதை என்ற உமாதேவியின் சேடியர்களாகக் காட்டப்பெறுகின்றனர்.

சிவபெருமானின் திருமகனாகிய முருகப் பெருமானே திருஞான சம்பந்தராக அவதரித்தார் என்று கவிச்சக்கரவர்த்தியாகிய ஒட்டக்கூத்தரும், திருப்புகழ் ஆசிரியராகிய அருணகிரியாரும் கூறியிருப்பினும் சேக்கிழார் புராணத்திலும் இத்தகைய குறிப்பு இருப்பினும் திருநாரையூர்ப் பொல்லாப் பிள்ளையார் திருவருளால் திருத்தொண்டத் தொகையிற் போற்றப்பெற்ற சிவனடியார்களின் வரலாறுகளை வகைப்படுத்துணர்த்திய நம்பியாண்டார் நம்பி தாம் பாடியுள்ள

ஆளுடைய பிள்ளையார் பிரபந்தங்களில் முருகவேள் திருவவதாரமே என்று போற்றவில்லை; சேக்கிழாரடிகளும் அம்மையப்பர் அளித்த சிவஞானப் பாலுண்டு வளர்ந்தமை பற்றி ஆளுடைய பிள்ளையாராயினார் எனக் கூறினாரேயன்றி முருகனே ஆளுடைய பிள்ளையாராகப் பிறந்தருளினார் என்று யாண்டும் குறிப்பிடவில்லை.

இங்ஙனமே அப்பரடிகளின் முற்பிறப்பைப்பற்றி எவரும் குறிப்பிடவில்லை. மருள் நீக்கியார் என்ற பெயருடன் 'அலகில் கலைத்துறை தழைப்ப, அருந்தவத்தோர் நெறி வாழ, ஒளிவிளங்குகதிர் போல வந்து பிறந்தருளினார்' என்ற அளவில்தான் சேக்கிழாரடிகள் குறிப்பிட்டுள்ளார்; இவர் தம் மூன்னை நிலைபற்றி எந்தக் குறிப்பும் இல்லை.

சிவகணத் தலைவரொருவர் மணிவாசகராகப் பிறந்தருளினார் என்று திருவால வாயுடையார் திருவிளையாடற் புராணம் குறிப்பிடுகின்றது. பரஞ்சோதியாரின் திருவிளையாடற் புராணத்தில் இந்தக் குறிப்பு இல்லை. கடவுண் மாமுனிவர் இயற்றிய திருவாதவூர்ப் புராணத்திலும் பூர்வ பிறப்பைப்பற்றிய குறிப்பு காணப் பெறவில்லை. திருப்பெருந்துறைப் புராணத்தில் இவர்தம் பிறப்பு பற்றிய குறிப்பில் இவர் சிவகண நாதர் ஆயிரவர்களுள் ஒருவர் என்று அறியக் கிடக்கின்றது. இவர்கள் ஒருநாள் சிவபெருமானை வணங்கி நின்று ஆகமப் பொருளை அறிவுறுத்தியருளுமாறு வேண்ட, அவர்தம் விருப்பத்தை நிறைவேற்றத் திருவுளங் கொண்ட சிவபெருமான், திருவுத்தர கோசமங்கையில் அந்தணராகி அவர்கட்கு ஆகமப் பொருளை உபதேசித்துக் கொண்டிருக்கையில், வானோர் தலைவனாகிய இந்திரன் பலவகை அணிநலம் திகழ திருவுலாப் போதர, கணநாதர்களில் ஒருவர் அவ்வுலாக் காட்சியில் கருத்தைச் செலுத்த, இதனைக் கண்ட சிவபெருமான், கணநாதராகிய அவரை நோக்கி, "பிள்ளாய், நீ நாம் கூறிய உபதேசப்

பொருளை மறந்து இந்திரனது உலாக் காட்சியில் கருத்தினைச் செலுத்தினமையால், நீ இந்நிலவுலகிற் பிறந்து விரும்பிய செல்வமெல்லாம் எய்தப் பெற்றுப் பின் நம்மை அடைவாயாக'' எனப் பணிக்க, கணநாதரும் தமது இழி நிலைக்கு வருந்தி அழுதரற்ற, அருளாளனாகிய இறைவனும் ''பிள்ளாய் அஞ்சற்க; நாமே குருவாக வந்து நின்னை யாட் கொள்வோம்'' என ஆறுதல் கூறித் தேற்றியருள, இறைவன் பணித்த வண்ணம் சிவகணநாதராகிய அவ்வடியவர் திருவாதவூரராகப் பிறந்தார் என்ற வரலாறு காணப் பெறுகின்றது.

வாழ்க்கை : நால்வருள் சுந்தரரே இருவரை மணந்து கொண்டு இல்லறமாகிய நல்லறத்தை நடத்தியவர். அஃதாவது இவருக்கு மட்டிலுமே சிவபெருமான் இவ்வுலகில் போகமும் யோகமும் அருளினார்; இறையருளால் 'தம்பிரான் தோழர்' (இது வானிடைத் தோன்றிய வாக்குமூலம்) என்ற நிலையை அடைந்து நேருக்குநேர், அவர் இறைவனாக, இவர் அடியாராக நின்று சமஉரிமையுடன் பழகினவர்; இறைவன் ஆணையால் திருமணக் கோலத்தையே தவக் கோலமாகக் கொண்டு அற்புதமாக வாழ்ந்தவர்; நரசிங்க முனையரையன் என்னும் குறுநில மன்னனால் அரசிளங் குமரனாக வளர்க்கப் பெற்றவர், இவருக்கு இறைவன் காட்சி பலமுறை கிடைக்கின்றது.

அப்பர் பெருமான் சமண்சமயம் புகுந்து மீண்டும் சைவ சமயத்திற்கு வந்தவர்; துறவறத்தை மேற்கொண்டு கல்லாடை புனைந்து கொண்டு உழவாரப் படைதாங்கி திருக்கோயில் திருப்பணியை மேற்கொண்டு திருப்பணியின் தாரதம்மியத்தால் உயர்ந்தது தாழ்ந்தது என்று வேறுபாடு கருதாமல் பணியாற்றியவர். மணிவாசகர்போல் அமைச்சர் பொறுப்போ, சுந்தரர்போல் அரசுப் பொறுப்போ இவருக்கு

இல்லை. ஞானசம்பந்தப் பெருமான் குழவி நிலையிலேயே பாடல்பாடும் ஆற்றல் பெற்றவர். அம்மையப்பரிடம் ஞானப் பால் பெற்றபேறு இவருக்கு மட்டிலுமே உண்டு. பண்டைய பிறவியிலேயே சிவனடிக்குத் தொண்டுபட்டுப் பாசத்தொடர் பினை அறவே நீக்கியவராக இருந்ததனால்தான் நுகர்வினை அதிகமின்றி பதினாறு வயதிலேயே சிவப்பேறு (முத்தி) அடைந்தவராகின்றார்.

அற்புத நிகழ்ச்சிகள் : இந்த நால்வருடனேயும் இறைவன் அற்புத நிகழ்ச்சிகளை நடைபெறச் செய்தாலும் பால்மணம் மாறாத் தவர்நடைப் பருவத்திலேயே தாயும் தந்தையுமாகிய திருக்கோலத்துடன் வந்தருளி அக் குழந்தைக்குப் பாலமுதம் ஊட்டும் வாயிலாக சிவஞானத் தினையும் பெற்ற பெருமை சம்பந்தருக்கு உண்டு. கவுணியப் பிள்ளையார் இளம் பருவத்திலேயே அம்மையப்பரால் ஆட்கொள்ளப் பெற்றமையால் 'ஆளுடைய பிள்ளையார்' எனவும், தேவர்க்கும் முனிவர்க்கும் கிடைத்தற்கரிய சிவஞானம் பெற்றமையினால் 'திருஞான சம்பந்தர்' எனவும் போற்றப் பெற்றார். சுந்தரர் வாழ்க்கையில் திருமணத்தைத் தடுத்த காலத்தில் விசும்பில் விடைமீது உமையம்மை யாருடன் தோன்றிக் காட்சி தந்தருளிய சிறப்பினைக் காண முடிகின்றது. அக்கோலத்திலேயே சுந்தரருடன் உரையாடு கின்றார்; தன்னைப் "பித்தன்" என்றே பாடுமாறு பணிக் கின்றார். சமண்சமயத்திலிருந்து மீண்டும் சைவசமயத்திற்கு வந்த மருள்நீக்கியார் (அப்பர்) இறையருளால் திருவதிகைப் பெருமான்மீது பாமாலைகளாகிய திருப்பதிகங்கள் பாடும் உணர்வு பெறுகின்றார்; பாடுகின்றார். இந்நிலையில் "செந்தமிழ்ச் சொன்மலர்களால் இயன்ற திருப்பதிகமாகிய பாமாலையைநீ பாடியதன்மையினால் நின்பெயர் 'நாவுக்கரசு' என உலகேழினும் நிலைபெற்று வழங்குக' என இறைவனது திருவருள்வாக்கு யாவரும் கேட்கும் வண்ணம் வானின்கண்

எழுந்த சிறப்பு; இவர்தம் வாழ்க்கையில் நடைபெறுகின்றது. திருவாலவாயுடையார் திருவிளையாடற் புராணத்தின்படி திருப்பெருந்துறையில் குருவாக எழுந்தருளிய இறைவன் வாதவூரரை நோக்கி 'மாணிக்க வாசக' என அழைத்தருளிய தாகக் கூறப்பெற்றுள்ளது. ஆக ஞானசம்பந்தர், நாவுக் கரசர், தம்பிரான் தோழர் (வன்றொண்டர்), மாணிக்க வாசகர் என்ற பெயர்கள் நால்வருக்கும் இறைவன் தொடர்பால் ஏற்பட்ட பெயர்களாகும் என்பது நினைவு கூரத்தக்கது.

சுந்தரர் வாழ்க்கையில் பரவையாரது ஊடல் தீர்க்கும் பொருட்டு திருவாரூர் இறைவன் இருமுறை தூது சென்ற நிகழ்ச்சிகள் குறிப்பிடத் தக்கவை. இவர் பொருட்டு பரவை யாருக்கும் இறைவனாகவே காட்சியளிக்கின்றார்; சுந்தர ருக்கும் அக்காட்சி கிடைக்கின்றது. இங்ஙனம் ஏனைய மூவருடன் இவரை ஒப்பிட்டு நோக்கும்போது இவர்தம் தனிச்சிறப்பு நிலை ஒருவாறு புலனாகும்.

16. அருளிச் செயல்களால் அறிபவை

நம்பியாரூரர் திருவாய் மலர்ந்தருளிய திருப்பதிகங்கள் அனைத்தையும் ஏழாம் திருமுறையில் ஒரே தொகுதியாக வகைப்படுத்தித் திருமுறை வகுத்தார் நம்பியாண்டார்நம்பி. இத்திருமுறையில் 'பித்தா பிறைசூடி' என்னும் திருப்பதிகம் முதலாகத் 'தானெனை முன்படைத்தான்' என்னும் திருப்பதிகம் ஈறாக நூறு திருப்பதிகங்கள் உள்ளன. இப்பதிகங்களிலுள்ள திருப்பாடல்களின் தொகை 1026 ஆகும். நம்பியாரூரரின் திருமணத்தின்போது நிகழ்ந்த அற்புத நிகழ்ச்சியின்போது பாடிய 'பித்தாபிறைசூடி' என்னும் திருப்பதிகம் முதலாவதாக வைக்கப்பெற்றுள்ளது. கயிலை நாதனின் ஆணைப்படி தேவர் முனிவர்களுடன் அஞ்சைக்களம் வந்த வெள்ளை யானையின்மீது அமர்ந்து நம்பியாரூரர் கயிலை சென்றார் என்பது வரலாறு. அப்பொழுது பாடிய திருப்பதிகம் 'தானெனை முன்படைத்தான்' என்பதாகவின் அஃது இவ்வேழாந் திருமுறையின் இறுதியில் வைக்கப்பெற்றுள்ளது.

நூறு திருப்பதிகங்கள் அடங்கிய இத்திருமுறையில் 'தென்றமிழ்ப் பயனாய் வந்த திருத்தொண்டத் தொகை, 39-ஆம் திருப்பதிகமாகவும், திருவைந்தெழுத்தின் சிறப்பினை யுணர்த்தும் 'நமச்சிவாயத் திருப்பதிகம்' 48-ஆம் பதிகமாகவும் அமைந்துள்ளன. சிந்தையின் தெளிவினைப் புலப்படுத்தும் ஆற்றல் வாய்ந்தது 'பஞ்சமம்' என்ற பண்ணாதலின் சிந்தையில் தெளிவுடையோர் இப்பண்ணில் பரமனைப் பாடி மகிழ்வர்.

பஞ்சமம் பாடி யாடும்
தெள்ளியார் கள்ளந் தீர்ப்பார் (4.29:3)

என்பது திருநாவுக்கரசர் பெருமானின் திருமொழி. அஞ்சைக் களத்து அப்பனைப் போற்றும் நிலையில்,

'வெறுத்தேன் மனைவாழ்க்கையை விட்டொழித்தேன்
விளங்கும் குழைகாதுடை வேதியனே (7.4:8)

என்னும் தெளிவுடைய சிந்தையினராகிய தம்பிரான் தோழர் அஞ்சைக் களத்தப்பன்பால் விடை பெற்றுக் கயிலையை நோக்கிச் செல்லும்பொழுது 'சிந்தையும் தெளிவுமாகித் தெளிவினுட் சிவமுமாகிய' '(4.48:5) நிலையில்' சிவபரம் பொருளைச் சிந்தையில் இருத்தும் நிலையில் பாடியருளிய 'தானெனை முன்படைத்தான்' என்ற பதிகம் பஞ்சமம் என்ற பண்ணில் அமைந்திருத்தல் கண்டு மகிழத்தக்கதாகும்.

இயல் நலமும் இசை நலமும் ஒருங்கு வாய்ந்த இனிய பாடல்களை இசைப்பா எனவும், இசையளவுபா எனவும் இருவகைப் படுத்திக் கூறுதல் மரபு[1]. புலவர்களால் முதற் கண் இயற்றப்பெறும்பொழுதே இயல் வளமும் இசை நலமும் ஒருங்கு அமையப் பாடப்பெற்ற இனிய பாடல்களே 'இசைப்பா' என்று வழங்கப்பெறும். புலவர்களால் முதற் கண் இயல் அளவில் பாடப்பெற்றுப் பின்னர் இசை வல்லாரால் இசையமைத்துக் கொள்ளுதற்கேற்ற சீர் நலம் வாய்ந்த பாடல்களை 'இசையளவுபா' என்று வழங்குவர். தேவார ஆசிரியர்கள் மூவரும் அருளிய திருப்பதிகங்கள் அவர் தம் திருவாயிலிருந்து வெளிவரும் போதே 'பண்ணார் இன் தமிழாய்' வெளிப்பட்ட இன்னிசைப் பாடல்கள்; இவை

---

1. சிலம்பு-கடலாடு-35 அடியார்க்கு நல்லார் உரை காண்க.

மேற்குறிப்பிட்ட முதல் வகையில் அடங்கும். இப்பதிகங்களைப் 'பண் சுமந்தப் பாடல்'[2] எனச் சான்றோர்கள் போற்றும் மரபும் உண்டு.

தம்பிரான் தோழர் நல்லிசை ஞானசம்பந்தரும் நாவினுக்கரசரும் பாடிய நற்றமிழ் மாலைகளை இயல் இசை நலம் தோன்ற நாடொறும் இறைவன் திருமுன் ஓதி மகிழ்பவர். இதனை,

நல்லிசை ஞானசம்பந்தனும் நாவினுக் கரையனும்
பாடிய நற்றமிழ் மாலை
சொல்லியவே சொல்லி யேத்துகப்பானை (7 67:5)

என வரும் அவர்தம் திருவாக்காலேயே அறியலாம். தம்பிரான்தோழர் அருளிய திருப்பதிகங்களும் பண்ணார்ந்த பாடல்களாகும். இதனைப், 'பண்பயிலும் பத்துமிவை' (7.6:11), ஒலிகொள் இன்னிசைச் செந்தமிழ் பத்தும்' (7.29:10) 'ஏழிசை யின்றமிழால் இசைந்தேத்திய பத்து' (7.100:10) என வரும் இவர்தம் வாய்மொழிகளாலேயே அறியலாம்.

இயல் இசை நாடகம் என்னும் மூன்று துறைகளிலும் வளம் பெற்று வளர்ந்தது தமிழ் மொழி. இம்மொழி பழத்தினில் சுவையும், கண்ணிடை மணியும் போன்று இசை வளர்ச்சிக்கு இன்றியமையாததாய் பண்ணிடையே கலந்து நின்று இசைக்குச் சுவையும் ஒளியும் தரவல்லதாகும். தெலுங்கு மொழி பாட்டிற்கு இசைந்து வரும் மொழி என்பதை 'சுந்தரத் தெலுங்கில் பாட்டிசைத்து'[3] என்று கூறியுள்ளதை நாம் அறிவோம். தம்பிரான் தோழரும்,

---

2. 'பண் சுமந்த பாடற் பரிசு படைத்தரும்' என்பது மணவாசகர் திருவாக்கு (திருவா. திருவம்மானை-8)
3. பார. க ; தே. கீ. பாரததேசம்-5

பண்ணிடைத் தமிழொப்பாய்
பழத்தினில் சுவையொப்பாய்
கண்ணிடை மணியொப்பாய் (7.29:6)

என்று இசைக்கு இறைவனை உவமித்துப் போற்றுதலால் தமிழும் ஏற்ற மொழி என்பதனை அறியலாம். ஞானத் திரளாய் நிற்கும் இறைவன் பண்ணாகவும் பண்ணகத்தே இனிய ஓசையுடைய தமிழின் உருவாகவும் திகழ்கின்றான். இதனை 'ஏழிசையாய் இசைப்பயனாய்' (7.51:10), 'பாட்டகத்து இசையாகி நின்றானை' (7.62:3) என்பன போன்ற சுந்தரரின் வாய்மொழிகளாயே அறியலாம்.

சுந்தரர் தமிழின் பின்னணி : காழிப் பிள்ளையாரும் நாவுக்கரசரும் வாழ்ந்த காலத்தில் தமிழகம் அயலவர் ஆட்சியிலும், புறச்சமயச் சூழ்ச்சியிலும் அகப்பட்டுத் தன் ஆற்றல் குன்றியிருந்தது; ஆனால் இப்பெருமக்கள் இருவர் முயற்சியினால் தமிழ் மக்களின் அச்சம் நீங்கியது. அவர்கள் வீறு கொண்டு எழுந்தனர். தமிழ்நாடெங்கும் செந்தமிழும் சிவநெறியும் பண்டுபோல் தழைத்தோங்கின. பல்லவர் முதலிய அயல் வேந்தரும் தமிழராகவும் சைவராகவும் மாறினர். தமிழ் வேந்தர் மூவரும் ஆற்றல் பெற்றுத் திகழ்ந்தனர். தமிழ் மக்களும் உரிமையுடன் வாழும் சூழ்நிலை ஏற்பட்டது. இங்ஙனம் தமிழகம் அமைதியுற்றுச் சீரும் சிறப்பும் கொண்டு திகழ்ந்த காலத்தில் தோன்றியவர் நம்பியாரூரர். ஆதலால் இவருடைய திருப்பதிகங்களில் சமணம், பௌத்தம் முதலிய புறச்சமயக் கண்டனங்கள் ஏற்படுவதற்கு இடம் இல்லாது போயிற்று.

காவலூர்ப்பெருமான் அருளிய திருப்பதிகங்கள் காழி வேந்தர் அருளிய திருப்பதிகங்களைப் போன்று 'உளங் குளிர்ந்த போதெல்லாம் உகந்து பாடும்' உவகைத் திறம் அமைந்தவை. நாவுக்கரசரின் திருமொழிகளைப் போன்று

தன்பிழை நினைந்து ஏசறும் இரங்கலுணர்வையும் கொண்டவை. தம்பிரான் தோழரின் பாடல்கள் தம்முன் தோன்றிய சம்பந்தர், நாவரசர் இவர்தம் திருப்பாடல் கட்கு விளக்கவுரையாகவும் கருத்துரையாகவும் அமைந்து திகழ்வதைக் காணலாம்.

நம்பியாரூரர் இறைவனால் தடுத்தாட்கொள்ளப் பெற்றவர்; தம்பிரான் தோழராகவும் திகழ்ந்தவர். ஆகவே இவர் அருளிய திருப்பதிகங்களில் பெரும்பாலன, இறைவனை உயிர்த் தோழனாக எண்ணி அவனுடன் அன்பில் நயந்து விளையாடியும், வன்கண்மையுடன் ஊடி இடித்துக் கூறியும், தமக்கு இன்றியமையாது வேண்டப்படும் பொருள்களனைத் தையும் அப்பெருமான்பால் வேண்டிப்பெறும் உரிமை யுணர்வைப் புலப்படுத்துவனவாகவும் அமைந்திருப்பதைக் கண்டு மகிழலாம். ''நலியேன் ஒருவரை நான் உமையல் லால் நாட்டியத் தான்குடி நம்பீ!'' (7.15:8) என்ற தொடர் எவ்வுயிர்க்கும் உயிராக விளங்கும் இறைவன் ஒருவனையே நவிந்து வேண்டிப் பெற முயலும் தம்பிரான் தோழரின் தோழமைத் திறத்தை செவ்விதின் விளக்குவதை அறியலாம்.

நாவுக்கரசர் அருளிய திருப்பதிகங்களில் திருத்தாண்டக யாப்பு அவர்க்கே உரிய முறையில் சிறந்து விளங்குவதைப் போன்று, தம்பிரான் தோழர் அருளிய பதிகங்களில் தக்கேசி பண்ணில் அமைந்த திருப்பதிகங்கள் படிப்போருடைய உள்ளத்தை நெகிழ்விக்கும் தனிச்சிறப்புடையவையாகத் திகழ்கின்றன; இவை இவருக்கே உரிய சொல் நடையில் அமைந்துள்ளதையும் கண்டு மகிழலாம். இறைவனைக் கண்ணாரக் கண்டும், அவனருளால் பல நலன்களைப் பெற்றும் மகிழ்ந்த நாவலூரர் அம்மகிழ்ச்சியைப் பல்வேறு முறையில் புலப்படுத்தும் முறையில் அமைந்த திருப்பதிகங்கள் படிப் போரின் நெஞ்சத்தைக் கசிந்துருகச் செய்ய வல்லவை; தரம்

பெற்ற சிற்றின்பமே பேரின்பமாக முற்ற வரும் தன்மையில் வாழ்ந்த இவர்தம் வாழ்க்கையை வெளிப்படுத்தும் பதிகங்கள் உலக வாழ்வில் மண்டிக் கிடக்கும் நம்மை வியக்கவைப்பவை.

பலசெய்திகள்: தம்பிரான் தோழரின் திருப்பதிகங்களை ஆழ்ந்து கற்குங்கால் பல செய்திகள் நமக்குப் புலனாகின்றன. அவற்றைச் சிறிது காண்போம்.

நால்வகை நெறிகள்: இறைவன் திருவருளை உலக மக்கள் அனைவரும் பெறுவதற்குச் சரியை, கிரியை, யோகம், ஞானம் என்ற நால்வகை நன்னெறிகளைக் காட்டியுள்ளனர் சிவஞானச் செல்வர்கள். இந்த நால்வகை நெறிகளும் தேவாரப் பதிகங்களில் சுட்டப் பெற்றுள்ளன.

சரியையாவது, ஆகமங்களில் விதித்தவாறு திருக் கோயிலில் அமைந்துள்ள இறைவனது உருவத் திருமேனியைப் பொருள் என்று உணர்ந்து திருக்கோயிலில் அலகிடல், மெழுகல், பூக்கொய்து நறுமலர்மாலை தொகுத்தல், புகழ்ந்து பாடுதல் முதலிய உடம்பின் தொழில்களாக நிகழ்வது. இதனைத் தாத மார்க்கம் (தொண்டு நெறி) எனவும் வழங்குவர். இந்த இயல்பு நாவுக்கரசர் பெருமானிடத்து விளங்குதலை அன்னார் வரலாற்று நிகழ்ச்சிகளில் காணலாம். இதனால் அடையும்பலன், சாலோகம். சாலோகம், இறைவன் உலகினை அடைதல். இது பதமுத்தி[4] எனப்படும்.

---

4. பதமுத்தி: வித்தியா தத்துவங்கள் ஏழிலும் உள்ள சகலபுவனம் முதலிய உருத்திர உலகங்களை அடைதல் பதமுத்தி. குணருத்திரர் உலகத்தை அடைதலும் ஒரு வகைப் பதமுத்தியேயாகும், இவ்வுருத்திர உலகமும் ஓரோவழி 'சிவலோகம்' ஆகும். (முத்திபற்றிய விவரங்களை இவ்வாசிரியர் எழுதியுள்ள சைவ சமய விளக்கு' என்ற நூலில் '6-பயனியல்' என்ற பகுதியில் கண்டு தெளிக.)

இரிலையாவது, திருக்கோயிலில் எழுந்தருளிய சிவலிங்கத் திருவுருவாகிய அருவுருவத் திருமேனியே பொருள் என்று உணர்ந்து புறத்தேயும் அகத்தேயும் பூசனை புரிந்து வழி படுதல். இதனை நம்பியாரூரர்,

அகத்தடிமை செய்யும் அந்தணன்தான்
அரிசிற்புனல் கொண்டுவந் தாட்டுகின்றான் (7 9.6)

மும்போதும் திருமேனி
தீண்டுவார்க்கடியேன். (7.39:10)

என்று முறையே அழகார் திருப்புத்தூர் பதிகத்திலும், பொதுப்பதிகத்திலும் கூறியுள்ளதைக் காணலாம். இதனை சற்புத்ரி மார்க்கம் (மகன்மை நெறி) என வழங்குவர். இந்த இயல்பு ஞானசம்பந்தப்பெருமானிடத்து விளங்குதலை அவர்தம் வரலாற்று நிகழ்ச்சிகளால் அறியலாம். இதனால் அடையும் பலன் சாமீபம் என்னும் பதமுத்தி. சாமீபம்— இறைவன் அருகு இருத்தல்.

யோகமாவது, இறைவனுடைய உருவம், அருவம், அரு வுருவம் என்னும் மூவகைத் திருமேனிகளுள் மிக நுண்ணிய அருவுருவத் திருமேனியே பொருளெனவும், உருவமும் அரு வமும் இத்திருமேனியை வழிபடுவதற்கு முதலும் முடிவுமா யமைந்த திருமேனிகள் எனவும் உணர்ந்து இறைவனை வழி படுவது. இதனை நம்பியாரூரர்,

ஓர்ந்தனன் ஓர்ந்தனன் உள்ளத்துள்
ளேநின்ற ஒண்பொருள். (7.45:4)

தேடுவன் தேடுவன் செம்மலர்ப்
பாதங்கள் நாடொறும்
நாடுவன் நாடுவன் நாபிக்கு
மேலேயோர் நால்விரல்

மாடுவன் மாடுவன் வண்கை
பிடித்து மகிழ்ந்துள்ளே
ஆடுவன் ஆடுவன் ஆமாத்
தூரெம் அடிகட்கே. (7.45:9)

என்று திருவாமாத்தூர் பதிகத்தில் கூறுவதைக் காணலாம். இந்நெறியைச் சகமார்க்கம் (தோழமை நெறி) என்று வழங்குவர். இந்த இயல்பு நம்பியாரூரிடத்து விளங்குதலை அவர் தம் வரலாற்று நிகழ்ச்சிகளால் அறியலாம். இதனால் அடையும் பலன் சாரூபம் என்னும் பதமுத்தி சாரூபம்—இறைவன் உருவினைப் பெறுதல்

ஞானமாவது, மேற்குறித்த வண்ணம் உருவம், அருவுருவம், அருவம் ஆகிய மூன்று திருமேனிகளையும் முறையே வழிபட்டுவர ஆன்மாவின்கண் நிகழும் பக்குவ முதிர்ச்சியாலே உள்ளவாறு உணர்வு விளங்கி, உலகெலாம் கடந்தும் அணுத்தொறும் விரவியும் என்றும் உள்ள உண்மை அறிவின்பமே இறைவனது திருவுருவாம் என்றும், உருவம் அருவுருவம், அருவம் ஆகிய மூன்றும் பருமை வழியே நுண்மையினை உணர்தல் என்னும் முறைப்படி ஞானத்திரளாய் நின்ற இறைவனை உணர்தற்பொருட்டும் வழிபடுதற் பொருட்டும் கொண்ட திருமேனிகளே என்றும் இவ்வாறு உணர்ந்து முன்குறித்த உடம்பின் தொழில், மனத்தின் தொழில் இரண்டினையும் கைவிட்டுக் கேட்டல், சிந்தித்தல், தெளிதல், நிட்டை கூடுதல் ஆகிய அறிவுத்தொழில் மாத்திரையால் இறைவனை வழிபடுதல், இதனை நம்பியாரூரர்,

நந்தார் புடை ஞானன் (7.80:1)

ஞான மூர்த்தி நட்டமாடி (7.81:1)

என்று முறையே கேதீச்சரத்துப் பதிகத்திலும், திருக்கழுக்குன்றப் பதிகத்திலும் கூறியுள்ளதைக் காணலாம். இந்நெறியைச் சன்மார்க்க (இரண்டற்று ஒன்றும் நெறி)

என்று வழங்குவர். இந்த இயல்பு மணிவாசகரிடத்து விளங்குதலை அவர்தம் வரலாறுகொண்டு அறியலாம். இதனால் அடையும் பலன் சாயுச்சியம் என்னும் பாழுத்தி.[5] சாயுச்சியம்—இறைவனை அடைந்து அவனோடு இரண்டறக் கலத்தல்.

2. ஐந்தெழுத்தின் பெருமை: இறைவனது திருப் பெயராய்த் திகழும் திருவைந்தெழுத்தின் பெருமையினையும் மந்திரமாகிய அதனைக் காதலாகிக் கசிந்து ஓதுவார் எய்தும் நலங்களையும் உரைக்கும் நமச்சிவாயப் பதிகத்தைக் கூறும் போக்கில் தாம் இறைவனை ஒருகால் மறக்கினும் தமது நா என்றும் சொல்லிக் கொண்டேயிருக்கும் என்கின்றார் சுந்தரர்.

மற்றுப் பற்றெனக் கின்றிநின் றிருப்
பாதமேமனம் பாவித்தேன்
பெற்ற லும்பிறந் தேனினிப்பிற
வாத தன்மைவந் தெய்தினேன்
கற்ற வர்தொழு தேத்துஞ் சீர்க்கறை
யூரிற்பாண்டிக் கொடுமுடி
நற்ற வாவுனை நான்மறக்கினும் சொல்லுநா
நமச்சி வாயவே. (7.48:1)

இப்பதிகத்தின் ஒவ்வொரு பாடலிம் ''நான் (உன்னை) மறந் தாலும் என் நாக்கு 'நமச்சிவாய' என்ற தாரகமந்திரத்தை எப்பொழுதும் நவிற்றிக் கொண்டேயிருக்கும்'' என்று கூறு வார்.

3. தோழனாக உறவு: இறைவன் தனக்குத் தோழனாக அமைந்த நிகழ்ச்சியைப் பல இடங்களில் (7.68; 7.51; 7.84)

---

5. பாழுத்தி : பரமசிவனோடு இரண்டறக் கலக்கும் நிலை. 'அடிசேர்முத்தி' என்பதும் இதுவே. இதுவே உண்மை முத்தி. இதுவே இறைவனின் 'திருவடி நிழல்' என்றும் பேசப் பெறுகின்றது.

நெஞ்சம் நெக்குருகிப் பாடியுள்ளார். பொன் வேண்டியிருந்தாலும் பெண் வேண்டிருந்தாலும் இறைவனை உரிமையாகக் கேட்டுப்பெறும் பேறு பெற்றவர் இவர் என்பதை அறிகின்றோம். புகலூர்ப் பெருமானிடம் பொன் பெற்ற செய்தியைக் கண்டோம். இவ்வாறே பழமலை நாதரிடமும் பொன் பெறுகின்றார். பணத்தை வங்கியின் கிளையொன்றில் செலுத்தி அதே வங்கியின் பிறிதொரு கிளையில் பெறுவதை போலவே, முதுகுன்றத்திறைவனிடம் பெற்ற பொன்னை மணிமுத்தாற்றில் போட்டு திருவாரூர்த் திருக்குளத்தில் பெறுகின்றார்.

இங்ஙனமே சங்கப் பாடல்களில் வரும் தலைவன் தோழனைக் கொண்டு காரியம் சாதித்துக் கொள்ளல் போலவே, இவரும் இறைவனை வேண்டி இருபெண்களை மனைவியாகப் பெறுகின்றார். இறைவனும் இவர் செய்யும் துரிசுகளுக்கெல்லாம் உடனாகின்றார்;

மாழையொண்கண் பரவையைத்தந்
தாண்டானை மதியில்லா
ஏழையேன் பிரிந்திருக்கேன்
என்னாரூர் இறைவனையே. (7.51:10)

என்று இறைவன் தனக்கு உதவியதை உளங்கனிந்து போற்றுகின்றார். திருவாரூர் இறைவனை வேண்டிப் பரவையாரைப் பெற்றதுபோல், ஒற்றியூர் இறைவனை வேண்டி சங்கிலியாரைப் பெறுகின்றார்.

மான்றிகழும் சங்கிலியைத்
தந்துவரு பயன்களெல்லாம்
தோன்றவருள் செய்தளித்தாய். (7.89:10)

என்று போற்றுகின்றார். இரு பெண்களிடமும் ஐம்புலவின் பங்களை ஆரத் துய்க்கும் சிற்றின்ப நிலையிலும் சிவபெரு

மானது திருவருளாகிய பேரின்பத்தையே நுகர்ந்து மகிழும் சிவயோகியராகத் திகழ்வதைக் காண்கின்றோம்.

கண்களை இழந்த நிலையிலும், நோயால் துன்புற்ற நிலையிலும் இறைவனையே வேண்டி இழந்த கண்களைப் பெறுகின்றார்; பிணியும் நீங்கப் பெறுகின்றார். பரவையாரின் ஊடலை இறைவனைக் கொண்டே தீர்த்துக் கொள்ளல் பேறும் இவருக்குக் கிடைக்கின்றது.

தோழனாயமைந்த இறைவனைத் தெருட்டிதம் காரியத்தைச் சாதித்துக் கொள்ளும் இவர்தம் திறம் அருளிச் செயல்களில் காணமுடிகின்றது. சேர நாட்டினின்றும் திரும்பிய தம்பிரான் தோழருக்குச் சேரவேந்தர் வழியனுப்பும் போது தம்முடைய திருமாளிகையிலுள்ள பெரும் பொருளைப் பொதி செய்து ஆட்களின்மீது ஏற்றுவித்து அனுப்புகின்றார். திருமுருகன் பூண்டி எம்பெருமான் பூதகணங்களை வேடுவராகச்சென்று சுந்தரரின் நிதிக்குவியலை கவர்ந்து செல்லுமாறு பணிக்கின்றார். அங்ஙனமே அவர்கள் கவர்ந்து செல்ல,

கொடுகு வெஞ்சிலை வடுக வேடுவர்
விரவலாமை சொல்லித்
திடுகு மொட்டெனக் குத்திக் கூறைகொண்
டாற லைக்குமிடம்
மூடுகு நாறிய வடுகர்வாழ் முருகன்
பூண்டி மாநகர்வாய்
இடுகு நுண்ணிடை மங்கை தன்னெடும்
எத்துக்கிங் கிருந்தீர்எம் பிரானீரே. (7.49:1)

என்று தெருட்டுகின்றார். ஒவ்வொரு திருப்பாடலிலும் 'நீர் எத்துக் கிருந்தீர் எம்பிரானீரே' எனத் தெருட்டுகின்றார். உடனே இறைவனருளால் வேடுவர்கள் அனைவரும் தாம் கவர்ந்து சென்ற பொருள்களைத் திருக்கோயில் வாயிலில்

கொண்டு வந்துகுவிக்க, சேரமான் தோழரோடும் அப்பொருள்களை முன்புபோல் பொதி செய்து ஏவலாளர் மூலம் எடுத்துச் செல்லுகின்றார். சுந்தரரின் பாடலைப் பெறுவதற்காகவே முருகன் பூண்டிப் பெருமான் இத்திருவிளையாடலை நிகழ்த்தினான் போலும்.

இன்னனமே திருவாரூர்ப் பதிகமொன்றில் (7.95).

எற்றுக் கடிகேள் என்கண் கொண்டீர்
நீரே பழிபட்டீர்
மற்றைக் கண்தான் தாரா தொழிந்தால்
வாழ்ந்து போதிரே (2)

என்று பிணங்கியும் தெருட்டியும் இழந்த கண் ஒன்றினைத் திரும்பப் பெறுகின்றார்.

4. புலவர்கட்கு அறிவுரை: இக்காலத்தில் பணக்காரர்களையும் பதவியிலுள்ளவர்களையும் அற்ப சலுகைகளைப் பெறுவதற்குப் புகழும் வழக்கம் நம்பியாரூரர் காலத்தில் நிலவியிருந்தது. புலவர்கள் தம் புலமைத் திறத்தை சிறு சலுகைகட்கெல்லாம் அடகு வைக்கும் பழக்கத்தை வெறுத்தார் நம்பியாரூரர். இப்பழக்கத்தை அடியோடு ஒழித்துவிட்டு எல்லாம் தரவல்ல இறைவனைப் பாடித்துதித்து வேண்டுவனபெறுமாறு தெருட்டுகின்றார். புகலூர்ப் பதிகமொன்றில் (7.34) இக்கருத்தை வெளியிடுகின்றார்.

தம்மையே புகழ்ந்து திச்சை பேசினும்
சார்வினும் தொண்டர் தருகிலாப்
பொய்மை யாளரைப் பாடாதே எந்தை
புகலூர் பாடுமின் புலவீர்காள்!
இம்மை யேதரும் சோறும் கூறையும்
ஏத்த லாம்இடர் கெடலுமாம்
அம்மை யேசிவ லோக மாள்வதற்கு
யாதுமை யுறவில் லையே(1)

"பணக்காரர்களையும் பதவியிலிருப்போரையும் பாட வேண்டா என்பதை,

மிடுக்கிலா தானை வீம னேவிறல்
விசயனே வில்லுக் கிவனென்று
கொடுக்கிலா தானைப் பாரியே என்று
கூறி னும்கொடுப் பாரிலை (2)

என்றும்,

வஞ்ச நெஞ்சனை மாச ழக்கனைப்
பாவி யைவழக் கில்லையைப்
பஞ்ச துட்டனைச் சாது வேயென்று
பாடி னுங்கொடுப் பாரிலை (5)

என்றும்

நலமி லாதானை நல்ல னேஎன்று
நரைத்த மாந்தரை யிளையனே
குலமி லாதனைக் குலவனே என்று
கூறி னும்கொடுப் பாரிலை (6)

எனவும்,

எள்வி ழுந்திடம் பார்க்கு மாகிலும்
ஈக்கு மீகில னாகிலும்
வள்ளலே யெங்கள் மைந்த னேஎன்று
வாழ்த்தி னுங்கொடுப் பாரிலை (8)

எனவும் பாடாமல், புகலூர் இறைவனைப் பாடுங்கள்" என்கின்றார். அப்படிப் பாடினால் என்ன கிடைக்கும்? சிவலோகம் ஆளும் பேறு கிடைக்கும்' (1), 'அமரர் உலகாள்வழியமையும்' (2), என்றெல்லாம் கூறுகின்றார். இதற்கு யாதும் 'ஐயுறவு இல்லை' என்றும் வலியுறுத்துகின்றார்.

இங்ஙனம் இவர் புலவர்க்குக் கூறும் அறவுரையை நோக்குங்கால் நம்மாழ்வார் "சொன்னால் விரோதம் இது" (3.9)

என்ற திருவாய்மொழியில் புலவர்க்குக் கூறும் அறவுரைகள் நம் நினைவிற்கு வருகின்றன.

என்னாவ தெத்தனை நாளைக்குப்
போதும் புலவீர்காள்!
மன்னா மனிசரைப் பாடிப்
படைக்கும் பெரும்பொருள்?
மின்னார் மணிமுடி விண்ணவர்
தாதையைப் பாடினால்
தன்னாக வேகொண்டு சன்மம்செய்
யாமையும் கொள்ளுமே(4).

கொள்ளும் பயனில்லை குப்பை
கிளர்ந்தன்ன செல்வத்தை
வள்ளல் புகழ்ந்துநும் வாய்மை
இழக்கும் புலவீர்காள்!
கொள்ளக் குறைவிலன் வேண்டிற்றெல்
லாம்தரும் கோதில்என்
வள்ளல் மணிவண்ணன் தன்னைக்
கவிசொல்ல வம்மினோ(5).

என்பன போன்ற திருப்பாசுரங்களை நோக்கி இதனை அறியலாம்.

5. அடியார்களைப் போற்றுதல் : இறைவன் துணையால் 'அடியார்க்கு அடியனாகின்றார்.' இறைவனே இவருக்கு அடியார்களது திருத்தொண்டின் திறத்தை சால்பினையும் உணர்த்துகின்றார். திருத்தொண்டர்களை பாடுவதற்கும்

தில்லைவாழ் அந்தணர்தம்
அடியார்க்கும் அடியேன்

என்று அடியும் எடுத்துத் தருகின்றார். இதனால் தமிழ்ப் பயனாய் வந்த 'திருத்தொண்டத் தொகை

அற்புதத் திருப்பதிகம் நமக்குக் கிடைக்கின்றது. சேக்கிழாருக்கும் 'திருத்தொண்டர் புராணம்' பாடுவதற்கு விதையாக அமைகின்றது. இவ்வாறு தம்பிரான் தோழர் இறைவனுக்கு ஆட்பட்டு அவனருளால் அவனுடைய மெய்த் தொண்டர் கட்கும் ஆட்பட்டு உய்ந்ததனை,

பண்டே நின்னடியேன்
அடியார்அடியார்கட் கெல்லாம்
தொண்டே பூண்டொழிந்தேன் (6.24:4)

என்ற பாடல் பகுதியால் அறியமுடிகின்றது.

அடியார்க்கு அடியனாகும் தம் விருப்பத்தை வேறு திருப்பதிகங்களிலும் வெளியிடுகின்றார். திருவாலங்காட்டுத் திருப்பதிகத்தில் (7.52) பாடல் தோறும் 'ஆலங்காடா! உன் அடியார்க்கு அடியேன் ஆவேனே' என்று கூறியுள்ளமை கவனிக்கத் தக்கது.

6. பழமொழிகள் : பக்தியைப் போற்றி வளர்ந்த தம்பிரான் தோழரின் இசைப் பாடல்களில் மக்களிடையே வழங்கும் பழமொழிகளும் கலையுணர்ச்சியுடன் கையாளப்பெறுவதால் இவர்தம் கருத்துகள் மக்கள் உள்ளத்தில் வேர் விட்டு வளர்வதற்குக் காரணமாகின்றன. தம்பிரான் தோழரின் அருளிச் செயல்களில் பழமொழிகள் அமைந்து கருத்துகளைத் தெளிவாக்குவதைக் காண்போம். நெல்வாயில் அரத்துறைப் பதிகப் பாடலொன்றில்,

ஓடுபுனற் கரையாம் இளமை;
உறங்கிவிழித் தாலொக்கும் இப்பிறவி (7.3:4)

என்று கூறுவார். இளமைப் பருவம் ஓடும் ஆற்றின் கரை போல் கரைந்து இல்லாதொழியும் என்றும், உறங்கி விழிப்பது போலும் பிறப்பு என்றும் விளக்குவார். இதே பதிகத்தின் ஏழாம் பாடலில் 'மணக்கோலமதே பிணக்கோலமதாம் பிறவி' என்பதால் பிறவி மணக்கோலம் பிணக்கோலம் ஆகிய இரண்டிற்கு உட்படுவதாக விளக்குவார்.

எதிர்கொள் பாடிப் பதிகப் பாடல் ஒன்றில் 'தோற்ற முண்டேல் மரணம் உண்டு' (7.7:2) என்பதால் பிறப்பும் இறப்பும் வட்டம்போல் சுழன்று வருவதை விளக்குவார். இதே பதிகம் எட்டாம் பாடலில் 'இன்பமுண்டேல் துன்ப முண்டு' என்பதால் வாழ்க்கை இன்பமும் துன்பமும் கலந்து வரும் இயல்புடையது என்று காட்டுவார். திருவாரூர் பதிகப் பாடலொன்றில்,

'மணமென மகிழ்வர் முன்னே

....

பிணமெனச் சுடுவர் பேர்த்தே' (7.8:6)

என்பதால் இந்த உயிர்தாங்கிய உடலுக்கு மணம் புரியுங் கால் 'மக்கள் தாய் தந்தை சுற்றம்' மகிழ்ச்சியடைவர் என்றும், உயிர் உடலை விட்டு நீங்கும்போது அதைப் பிண மென்று கருதி நெருப்பிலிடுவர் என்ற கருத்தை விளக்கி, 'ஆதலால் பிறவி வேண்டேன்' என்பார்.

திருக்கேதாரப் பதிகத்தின் முதற் பாடலில் (7.78;1) 'வாழ்வாவது மாயம்; இது மண்ணாவது திண்ணம்' என்ப தால் நிலையாமையை உணர்த்தித் தாழாது அறஞ்செய்யு மாறு பணிக்கின்றார். மற்றொரு திருவாரூர்ப் பதிகத்தின் (7.5) ஒன்பதாம் பாடலில் ''பேயோடேனும் பிறிவு ஒன்று இன்னாது என்பர் பிறர்'; ஆனால் நாய்போல் திரிந்து உமக்கு ஆட்பட்டோர் உம்மை வந்தடைந்தால் நீர் வாய் திறக்க மாட்டீர்'' என்று ஆரூர்ப் பெருமானை நோக்கிக் கூறுவார்.

இங்ஙனம் எத்தனையோ செய்திகளையும் தம்பிரான் தோழர் வாழ்வில் நிகழ்ந்த பல வரலாற்றுக் குறிப்புகளையும் இவர் அருளியுள்ள திருப்பதிகங்களை ஓதி உணர்வதால் அறியலாம்; சிவானுபவத்தையும் பெற்று மகிழலாம்.

17. தேவாரத் திருத்தலங்கள்

தனக்குவமை இல்லாதான் தாள்சேர்ந்தார்க் கல்லால்
மனக்கவலை மாற்றல் அரிது—(குறள்-7)

என்பது பொய்யாமொழி. இதனை நன்குணர்ந்த தமிழ்ப் பெருமக்கள் திருக்கோயில்களை ஊர்தோறும் நிறுவிப் போற்றுகின்றனர். இது தமிழ்ப் பண்பாடு என்று சொல்லினும் அது மிகையன்று. புதிய குடியிருப்பு தோன்றும் இடங்களிலெல்லாம் ஏதாவது ஒரு சிறு கோயிலையாவது எழுப்புதல் வழக்கமாக இருந்து வருகின்றது. சில ஆண்டுகட்கு முன்னர்த் தில்லி மாநகரில் வாழும் தமிழ்மக்கள் முருகன் கோயில் எடுத்தனர். அமெரிக்காவில் திருவேங்கடவன் திருக்கோயில் எழுப்பப் பெற்றிருப்பதை நாம் அறிவோம். இவையெல்லாம் 'கடவுள் உண்டு' என்னும் கருத்தை வலியுறுத்துவதாக அமைகின்றன. இக்கருத்து தெளிவு பெற்ற தொன்மைகாலந் தொட்டே தமிழகத்தில் திருக்கோயில்கள் பல தோன்றி நிலை பெற்றுள்ளன. இன்றைய தமிழகத்தில் எல்லாச் சமயத்தார்கட்குமே கோயில்கள் உள்ளன.

தேசமுமை அறிவதற்கு முன்னோ பின்னோ
திருவாருர்க் கோயிலாக் கொண்டே நாளே
(6.34:10)

என வரும் அப்பர் பெருமானின் திருவாரூர்த் திருத்தாண்டகத் தொடர் திருவாரூர், தில்லை, சீகாழி முதலிய தமிழகத் திருக்கோயில்களின் தொன்மையை உணர்த்துகின்றது.

பண்டைக்காலத்தில் ஊர்தோறும் அமைந்த 'பொது-இல்' எனப்படும் அம்பலத்திலே நடப்பெற்றிருந்த தெய்வம் உறையும் தறியாகிய 'கந்து' என்பதே தேவார ஆசிரியர் காலத்தில் சிவபெருமானது அருவுருவத் திருமேனியை வழி படுவதற்குரிய பெரிய திருக்கோயில்களாக வளர்ந்து திகழ்வதாயிற்று. பட்டினப் பாலை குறிக்கும் 'கந்து' எனப் படும் தெய்வம் உறையும் தறியும்[1] சைவர்கள் வழிபடும் அருவுருவத் திருமேனியாகிய சிவலிங்கத் திருவுருவமும் ஒன் றெனக் கருதி வழிபட்ட வழக்கம்,

காதன்மையால் தொழும்அடியார் நெஞ்சி னுள்ளே கன்றாப்பூர் நடுதறியைக் காணலாமே. (6.61:1) என வரும் அப்பர் திருவாக்கால் உணரப்படும். கன்றுக்குட்டியைக் கட்டி வைக்கும் தறியிலிருந்து இறைவன் வழிபாடு ஏற்றனன் என்பது வரலாறு.

கோயிலின் இன்றியமையாமை : உலக மக்கள் பசியும் பிணியும் பகையும் நீங்கி நல்வாழ்வு பெற்று உய்வதற்கு ஊர் தோறும் அமைந்த திருக்கோயில் வழிபாட்டு முறையே பெருந்துணை புரிகின்றது. திருவருள் நிலையமாகிய இத் தகைய திருக்கோயிலைப் பெறாத ஊர்கள் நீர்வளம் நிலவளம் செல்வப் பெருக்கு ஆகிய இவற்றால் எவ்வளவு சிறப்புற்றிருந்தாலும், அங்கு வாழும் மக்கள் உள்ளத்தில் அன்பும் அருளுமாகிய நற்பண்புகளை வளர்க்கும் சிறப்

1. பட்டினப் பாலை—அடி (246-49). இத்தறியை நீராடித் தூய்மையுடைய மகளிர் பலரும் அம்பலத்தை மெழுகித் தூய்மை செய்து அந்தியில் நந்தா விளக்கேற்றி இறைவனை வழிபட்டனர். மக்கள் பலரும் அவ்வம்பலத்திலே நறுமலர் தூவி இறைவனை வழிபட்டுப் போற்றினர். ஊருக்குப் புதியராயினார் அவ்வம்பலத்தில் தங்கியும் இருந் தனர்.

பினைப் பெறாமையால் அவை மக்கள் வாழும் திருவுடைய ஊர்கள் ஆகமாட்டா; அவை கொடிய விலங்குகள் வாழும் அடவிகளே என்பது சான்றோர் கருத்து.

திருக்கோயி லில்லாத திருவி லூரும்
திருவெண்ணீ றணியாத திருவி லூரும்
பருக்கோடிப் பத்திமையால் பாடா வூரும்
பாங்கினொடு பலதளிகள் இல்லா வூரும்
விருப்போடு வெண்சங்கம் ஊதா வூரும்
விதானமும் வெண்கொடியும் இல்லா வூரும்
அருப்போடு மலர்பறித்திட் டுண்ணா வூரும்
அவையெல்லாம் ஊரல்ல அடவி காடே. (6.95:5)

என்ற அப்பர் பெருமானின் திருத்தாண்டகம் இக்கருத்தை அரண் செய்கின்றது. 'கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்'—என்ற உலநீதியாலும் இக்கருத்து மேலும் வலியுறுத்தப்பெறுகின்றது.

கோச்செங்கட் சோழன் : இவன் கடைச்சங்க காலத்தில் தமிழகத்தை ஆண்ட முடியரசன். இவன் சிவபெருமானிடத்துப் பேரன்பு கொண்டவன். சிவபெருமானை அடியார் பலரும் ஒருங்கு கூடிப் போற்றுவதற்கு ஏற்ற முறையில் மலை போன்று மாடக் கோயில்கள்[2] பலவற்றை எழுப்பினான். இவன் கட்டிய மாடக் கோயில்கள் 70 என்று சொல்லப் பெறுகின்றது. இங்ஙனம் செயற்கரிய செயத இவனை நம்பியாரூரர் தமது திருத்தொண்டத் தொகையில் சிவனடியார்களுள் ஒருவராகக் கொண்டு,

---

2. மாடக் கோயில் : யானை போக முடியாதபடி இதன் அமைப்பு இருக்கும். மாடக்கோயில்களில் முன் பார்வைக்கு ஓர் உயர்ந்த மேடை மாத்திரம் தெரியும். பக்கத்திலே சென்று படிக்கட்டுகளின் மேல் ஏறித்தான் இறைவன் சந்நிதியை அடைய வேண்டும்.

தென்னவனா யுலகாண்ட
செங்கணார்க் கடியேன் (7.39:11)

என்று போற்றி நிலையான புகழுக்கு இடம் தந்துள்ளார். சோழநாட்டில் அம்பர், நன்னிலம், வைகல் முதலிய தலங்களில் காணப்படும் மாடக் கோயில்கள் கோச்செங்கட் சோழ நாயனார் கட்டியவையே. இவன் 70 கோயில்கள் நிறுவிய செய்தியை,

இருக்கிலங்கு திருமொழிவா யெண்டோ ளீசற்கு
எழில்மாடம் எழுபதுசெய்(து) உலகம் ஆண்ட
திருக்குலத்து வளச்சோழன் சேர்ந்த கோயில்
திருநறையூர் மணிமாடம் சேர்மின்களே.
(பெரி திரு. 6.6:8)

என்ற திருநறையூர்ப் பதிகத்தில் திருமங்கை மன்னன் தெளிவாகக் குறிப்பிட்டிருத்தல் காணலாம். இவன் கட்டிய கோயில்கள் இவனுக்கு முன்பு கட்டப்பெற்ற திருக்கோயில்களை விட அளவில் பெரியனவாக இருந்தமையால் 'பெருங் கோயில்' என்ற பெயராலும் வழங்கப்பெற்றன. 'நன்னிலத்துப் பெருங்கோயில்' (7.98) என்று நம்பியாரூர் போற்றுதலால், மாடக்கோயில் 'பெருங்கோயில்' என்ற பெயராலும் வழங்கப்பெறும் என்பது நன்கு புலனாகின்றது.

நாவுக்கரசர் தமிழகமெங்கும் சென்று சமய எழுச்சி உண்டு பண்ணிய காலத்தில் தமிழகத்தில் 'மாடக்கோயில்' அமைப்புடைய பெருங் கோயில்கள் 78 இருந்தன என்பது வரலாறு. இப்பெருங் கோயில்களேயன்றி வேறு வகைக் கோயில்களும் இருந்தனவாக அறியக்கிடக்கின்றன. நாவுக்கரசர் பெருமான் திருப்பாடலொன்றால் கரக்கோயில், ஞாழற் கோயில், கொகுடிக் கோயில், இளங்கோயில், மணிக் கோயில், ஆலக் கோயில் என வழங்கும் திருக்கோயில்களும் ஆங்காங்கே நிறுவப் பெற்று வழிபடப்பெற்றன என்பதை அறிய முடிகின்றது.

பெருக்காறு சடைக்கணிந்த பெருமான் சேரும்
பெருங்கோயில் எழுபதினோ டெட்டும் மற்றும்
கரக்கோயில் கடிபொழில்சூழ் ஞாழற் கோயில்
கருப்பறியல் பொருப்பனைய கொகுடிக் கோயில்
இருக்கோதி மறையவர்கள் வழிபட் டேத்தும்
இளங்கோயில் மணிக்கோயில் ஆலக் கோயில்
திருக்கோயில் கிவனுறையும் கோயில் சூழ்ந்து
தாழ்ந்நிறைஞ்சத் தீவினைகள் தீரு மன்றே.

(6.71:5)

என்பது அப்பெருமானது திருத்தாண்டகம். இவண் குறிப்பிடப் பெற்ற 78 பெருங்கோயில்களுள் 70 பெருங் கோயில்கள் கோட்செங்கட் சோழன் நிறுவியவை. எஞ்சிய எட்டும் சோழனுக்குப் பின்வந்த தமிழ் மன்னர்களால் எழுப்பப் பெற்றவை. சங்க காலத்திலிருந்து இக்கோயில்கள் சுடுமண்ணும் (செங்கல்) சாந்தும்கொண்டு அமைக்கப்பெற்று வந்தன. சோழருக்குப்பின் காஞ்சியைத் தலைநகராகக் கொண்டு தொண்டை மண்டலத்தை ஆண்ட மகேந்திரவர்மன், நரசிங்கவர்மன், இராசசிம்மன் முதலிய பல்லவ மன்னர்கள் மலைகளைக் குடைந்தும் பாறைகளைப் பிளந்து அடுக்கியும் கற்கோயில்களை எழுப்பினர்.

கோச்செங்கணானுக்கு முன்னும் பின்னும் ஆட்சி புரிந்த முடிமன்னர்களாலும் குறுநில மன்னர்களாலும் சிறியனவும் பெரியனவுமான எத்தனையோ திருக்கோயில்கள் அமைக்கப் பெற்றிருத்தல் வேண்டும். தேவார ஆசிரியர்கள் காலத்திற்கு (கி.பி ஏழாம் நூற்றாண்டு) முன்னரே தமிழகத்தில் நிலை பெற்றிருந்த பழங்கோயில்களையும், பிற்காலத்தில் களப்பிரர் படையெடுப்பாலும் சமணம், பௌத்தம் முதலிய சமயங்களைத் தழுவினோரால் சிதைக்கப் பெற்றுப் பின்னர் காழிப் பிள்ளையார், நாவுக்கரசர் காலத்தில் சிதைவு நீங்கி மீண்டும் பழைய நிலை எய்திய திருக்கோயில்களையும் (எ-டு பழை

யாறை வடதளி)] தேவார ஆசிரியர்கள் பாடிப் போற்றியுள்ளனர்.[3] மேலும் அவர்கள் காலத்தில் எழுந்த சிராப் பள்ளி, மயேந்திரப் பள்ளி, குணதர வீச்சரம் முதலியன போன்று புதியனவாக எழுப்பப்பெற்ற சிலகோயில்களும் அவர்களது திருப்பதிகங்கள் பெற்றுள்ளன.

திருக்கோயில்களின் அமைப்பு: மூவர்முதலிகள் காலத்துக் கோயில்கள் பலவகைப் பட்டிருந்தன. மாடக்கோயில்கள் யானைகள் புகாவண்ணம் உயரமாக அமைக்கப்பெற்றிருந்தன. சக்கரக் கோயில்கள் என்பன குதிரைப் பூட்டிய தேர்போன்று சக்கரங்களுடன் அமைந்திருந்தன.[3] ஞாழல் (புலிநகக் கொன்றை), கொகுடி (முல்லை) முதலிய தாவரங்களின் சார்பினால் அமைந்த கோயில்களும், நல்ல மணி முதலியவற்றால் அழகுறப் புனைந்த மணிக்கோயில்களும், தூய செம்பொன்னினால் எழுதி வேய்ந்த தில்லைச் சிற்றம்பலம் திருவாலங்காடு முதலாகக் கூத்தப்பெருமான் திருநடம் புரியும் அம்பலங்களும், வானத்திலிருந்து இறங்கும் விமானத்தின் அமைப்பினையொத்து அமைந்த வீழி மிழலை விண்ணிழி விமானம் போன்ற கோயில்களும் அக்காலத்தில் இருந்தன. கோயில் திருப்பணி நடைபெறுங்கால் அத்திருப்பணி நிறைவுபெறும் வரையிலும் இறைவனுடைய நாள் வழிபாடும் திருவிழாக்களும் தவறாமல் நடைபெறும்பொருட்டு இடைக்காலத்தில் அமைத்துக் கொண்ட இளங்கோயில்களும் (பாலாலயம்) இருந்தன. இவற்றின் அமைப்பு பழைய கோயிலின் அமைப்பை யொட்டியே இருக்கும். எ-டு. மீயச்சூர் இளங்கோயில், கடம்பூர் இளங்கோயில் இவையும் பாடல் பெற்றுள்ளன.

---

3. கும்பகோணம்—சார்ங்கபாணி கோயிலின் அமைப்பு இவ்வாறு உள்ளது. இதைக் கண்ட திருமங்கையாழ்வார் இரதபந்த அமைப்பில் திருஎழு கூற்றிருக்கை என்ற சித்திரகவியால் தலத்துப் பெருமானைப் போற்றியுள்ளமை ஈண்டுக் கருதத் தக்கது.

தமிழகப் பகுதிகள் : தமிழகத்தினை 'வண்புகழ் மூவர் தண்பொழில் வரைப்பு' என்று குறிப்பிடும் தொல்காப்பியம், ஆகவே, அவர் காலத்தில் தமிழகம் சேரநாடு, பாண்டிநாடு, சோழநாடு என்று மூன்று மண்டலங்களாகத் திகழ்ந்தன. கடைச்சங்க காலத்தின் பிற்பகுதியில் சேரநாட்டின் கிழக்குப் பகுதி 'கொங்கு மண்டலம்' எனத் தனி மண்டலமாகப் பிரிந்தது. சோழ நாட்டின் வடக்குப் பகுதி தொண்டை மண்டலம் எனத் தனி மண்டலமாகப் பிரிந்தது. ஆகவே தமிழ்நாடு ஐந்து மண்டலமாகப் பிரிந்து திகழ்ந்தது; திருமூலரும் இதனை,

தமிழ்மண் டலம் ஐந்துந்
தாவிய ஞானம்[4]

என்று குறிப்பிட்டார். இக்குறிப்பிட்ட ஒவ்வொரு மண்டலமும் சிறுசிறு தனி நாடுகளாகவும் பகுக்கப்பெற்றுத் திகழ்ந்தன; இந்நாடுகள் யாவும் அவ்வவற்றின் தலையூர்களின் பெயர்களால் குறிக்கப்பெற்றன. இச்செய்தி,

மூல்லையும் பூத்தியோ
ஒல்லையூர் நாட்டே[5]

என வரும் புறப்பாட்டாலும், தம்பிரான் தோழர் பாடியுள்ள நாட்டுத் தொகை (7.12), ஊர்த்தொகை (7.47) போன்ற திருப்பதிகங்களாலும் தெளியலாம்.

---

4. திருமந்திரம்-1646

5. புறம்-242. ஒல்லையூர் என்பது, புதுக்கோட்டைப் பகுதியிலுள்ள ஊர்களுள் ஒன்று. இப்போது 'ஒலிய மங்கலம்' எனற பெயரால் வழங்குகின்றது. இதனைச் சூழ்ந்துள்ள பகுதி ஒல்லையூர் நாடு என வழங்கிற்று. சோழ நாட்டிற்கும் பாண்டி நாட்டிற்கும் எல்லையாக ஓடும் தென் வெள்ளாற்றின் தென்கரை தென்கோனாடு என்றும், வடகரை வடகோனாடு என்றும் வழங்கின. தென்கோனாட்டின் மேலைப் பகுதியே ஒல்லையூர் நாடு.

தேவார ஆசிரியர் காலத்தில் சோழ மண்டலத்திற்கும் தொண்டை மண்டலத்திற்கும் நடுவே வடவெள்ளாற்றிற்கும் சேயாற்றிற்கும் இடையே யமைந்த நிலப்பரப்பு 'திருமுனைப் பாடி நாடு' என ஒரு தனிநாடாகக் கொள்ளப்பட்டிருந்தது. இந்நிலப் பகுதியை ஆண்ட குறுநில மன்னர்கள் 'முனை யரையர்' என்ற பெயரால் வழங்கப்பெற்றனர். நம்பி யாரூரர் காலத்தில் திருமுனைப் பாடி நாட்டை ஆண்ட குறு நிலமன்னர் நரசிங்க முனையரையர் என்பதையும், அவர் நாவலூரைத் தலைநகராகக் கொண்டு ஆண்டார் என்பதை யும், இவர்தான் நம்பியாரூரரை வளர்த்தார் என்பதையும் நாம் அறிவோம். முனைப்பாடி நாட்டின் மேற்றிசை எல்லை யில் உள்ள பகுதி சேதி நாடு என்பது. இந்நாட்டின் தலைநகர் திருக்கோவலூர். பின் வந்தவர்கள் முனைப்பாடி நாட்டை யும் சேதி நாட்டையும் சேர்த்து 'நடுநாடு' என்று வழங்கினர்.

தமிழகத்தை யொட்டிய வடமேற்கில் உள்ள புறநாடு துளுவநாடு' என்பது. இந்நாட்டில் உள்ள பாடல் பெற்ற தலம் 'திருக்கோகரணம்' ஆகும். தமிழகத்தின் தென்னெல் லையையொட்டிக் கடலின் நடுவே அமைந்த இலங்கைத் தீவின் வடக்கு கிழக்குப் பகுதிகள் ஈழநாடு என வழங்கப் பெற்றன. இந்நாட்டிலுள்ள மாதோட்டக் கேதீச்சரம் திருக்கோண மலை என்னும் இரு தலங்களும் தேவார ஆசிரி யர்களின் பாடல் பெற்றவை. தமிழகத்தின் வடஎல்லை யாய்த் திகழும் வேங்கடத்தின் வடக்கே இமயம் வரை, உள்ள திருத்தலங்கள் 'வடநாட்டுத் தலங்கள்' என்று வழங்குதல் மரபாக அமைந்தது.

தல வகைகள் : தேவார ஆசிரியர்களால் போற்றப் பெற்ற திருத்தலங்களைப் 'பாடல் பெற்ற தலம்' எனவும், 'வைப்புத் தலம்' எனவும் இருவகையாகப் பிரித்துரைத்தல மரபாகக் கொண்டுள்ளனர். ஒவ்வொரு தலத்தினையும் தனித்தனியே பரவிப் போற்றும் முறையில் தமக்கெனச்

சம்பந்தர், அப்பர், நம்பியாரூரர் ஆகியோர் ஒருவரின் தனித் திருப்பதிகத்தினைப் பெற்ற தலங்கள் முதல் வகையைச் சேர்ந்தவை. இங்ஙனம் தமக்கெனத் தனிப் பதிகத்தினைப் பெறாது பிறதலத்திற்குரிய பதிகப் பாடல்களிலோ அன்றிப் பொதுப் பதிகங்களிலோ[6] பெயரளவில் குறிக்கப் பெற்றுள்ள திருத்தலங்கள் இரண்டாவது வகையில் அடங்கும். இப்பொழுது நமக்குக் கிடைத்துள்ள தேவாரப் பதிகங்களில் தனிப்பதிகம் பெற்றுள்ள பாடல் பெற்ற தலங்கள் 274 உள்ளன. இவற்றுள் சோழநாட்டுத் திருத்தலங்கள் 190; ஈழநாட்டுத் தலங்கள் 2; பாண்டிநாட்டுத் தலங்கள் 14, மலை நாட்டு (சேரநாட்டு)த் தலம் 1; கொங்குநாட்டுத் தலங்கள் 7; நடுநாட்டுத் தலங்கள் 22; தொண்டைநாட்டுத் தலங்கள் 32; துளுநாட்டுத் தலம் 1; வடநாட்டுத் தலங்கள் 5—ஆகப் பாடப் பெற்றவை 274 ஆகின்றன.[7] இங்கே குறித்த 274 தலங்களையும் உமாபதி சிவாச்சாரியர் தமது திருப்பதிக் கோவை என்ற நூலில் தொகுத்துக் கூறியுள்ளார். இந் நூலின் ஆசிரியர் சோழ நாட்டுத் தலங்களை காவிரியாற்றுக்கு வடகரையிலுள்ள தலங்கள் எனவும், தென்கரையிலுள்ள தலங்கள் எனவும் இருவகையாகப் பகுத்து வடகரைத் தலங் கள் 63 எனவும், தென்கரைத் தலங்கள் 127 எனவும் காட்டி.

---

6. பொதுப் பதிகங்கள்—தலத்தின்மீது பாடாமல் பொதுவாகப் பாடப்பெற்றவை. எ-டு. சம்பந்தரின் கோளறுபதிகம், நமச்சிவாயப் பதிகம் போன்றவை; அப்பர் பெருமானின் திருஅங்கமாலை, நமச்சிவாயப் பதிகம் போன்றவை; சுந்தரரின் திருநாட்டுத் தொகை, திருத்தொண்டத் தொகை போன்றவை. இங்ஙனம் சம்பந்தர் பாடியவை 7; அப்பர் பாடி யவை, 36; சுந்தரர் பாடியவை, 4. (பன்னிரு திரு முறை வரலாறு—பகுதி 1 பிற்சேர்க்கை பக் (732—737) காண்க.)

7. வெள்ளை வாரணன், க: பன்னிரு திருமுறை வரலாறு—பகுதி 1. பிற்சேர்க்கை. பக் (732-737) காண்க.

யுள்ளார். இந்த நூலில் நம்பியாரூரர் வழிபட்ட தலங்களை மட்டிலும் பின்னிணைப்பில் தொகுத்துக் காட்டியுள்ளேன்; பாடிய பதிகங்களையும் குறிப்பிட்டுள்ளேன். தேவார வைப்புத் தலங்கள் 237 எனக் கணக்கிட்டுள்ளனர். இவற்றுள் பலவற்றின் நாடு முதலியன நன்கு புலப்படவில்லை. தெரிந்த வற்றுக்குரிய குறிப்புகளுடன் ஆய்வாளர்கள் வெளியிட்டுள்ளனர்.[8]

திருத்தலப் பெயர்கள் வழங்கும் முறை : தேவாரத் திருப்பதிகங்களில் குறிக்கப்பெற்றுள்ள தலங்களின் பெயர்கள் ஒருவித அறிவியல் அடிப்படையில் அமைந்துள்ளமை சிந்தனைக்கு நல்விருந்து. ஆதித் தமிழர்கள் நில அமைப்பு முறையை நோக்கிக் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் எனப் பெயரிட்டதை நாம் அறிவோம். இப்பெயர்களை யொட்டியும், இவற்றில் மிகுந்துள்ள கருப்பொருளை யொட்டியும், இங்கு வழிபட்டோர் பெயரோடு அமைந்த திருக்கோயிலை யொட்டியும் திருத்தலங்கள் பெயரிடப் பெற்று வழங்குகின்றன. இங்ஙனம் அமைந்த பெயர்களைப்பற்றி நம் கருத்தினைச் செலுத்துவோம்.

நானிலம்பற்றிய பெயர்கள் : (1) குறிஞ்சி நிலத்தில் அமைந்த தலங்கள் மலை, குன்றம், பருப்பதம் என்ற பெயர்களால் வழங்குகின்றன. (எ-டு) திருஈங்கோய் மலை, திருஅண்ணாமலை, திருக்கோண மாமலை, நொடித்தான் மலை; திருப்பரங்குன்றம், திருக்கொடுங்குன்றம், முதுகுன்றம், திருக்கழுக்குன்றம்; திருப்பருப்பதம், இந்திர நீலப் பருப்பதம் ஆகியவை.

(2) முல்லை நிலத்தலங்கட்குக் காடு, வனம், பாடி என்ற பெயர்கள் சூட்டப் பெற்றுள்ளன. (எ-டு) சாய்க்காடு, வெண்

---

8. தி. பக். (694-721) காண்க.

காடு, தலைச்சங்காடு, கொள்ளிக்காடு, திருமறைக்காடு, திருவேற்காடு; சாயாவனம், இடும்பாவனம்; திருவாப்பாடி, திருமழபாடி, எதிர்கொள் பாடி ஆகியவை.

(3) மருதநிலத் தலங்கள் : ஊர், ஆறு, துறை என்ற பெயர்களால் வழங்குகின்றன. எ-டு. கலிக்காமூர், குருகாவூர், நின்றியூர், நீடூர், ஓமாம்புலியூர், கடம்பூர், ஆப்பனூர், கருவூர் ஆநிலை முதலியன; ஐயாறு, பழையாறு, நள்ளாறு, கோட்டாறு; மாந்துறை, பாற்றுறை, ஆவடு துறை, பாலைத்துறை, குரங்காடு துறை, வெண்துறை, மயிலாடுதுறை, சோற்றுத்துறை, தவத்துறை, பராய்த்துறை ஆகியவை.

(4) நெய்தல்நிலத் தலங்கள் : பட்டினம், வாயில் முதலிய பெயர்களால் வழங்கப்பெறுகின்றன. (எ-டு) காவிரிப்பூம் பட்டினம்—சாய்க்காடு, காவிரிப்பூம்பட்டினம்—பல்லவனீச்சரம்; நெல்வாயில், முல்லைவாயில், புனவாயில் ஆகியவை.

(5) பாலைநிலத் தலங்கள் : (குறிஞ்சியும் முல்லையும் திரிந்த) சுரம் என்ற பெயரால் குறிக்கப் பெறுகின்றன (எ-டு) இடைச்சுரம்.

(6) மாறி வரும் பெயர்கள் : பாக்கம் (நெய்தலுக்கு உரியது), ஊர் (மருதநிலத்துக் குரியது), காடு, வனம் (முல்லை நிலத்துக்குரியவை) என்ற பெயர்கள் ஏனைய தலங்களுக்கும் வழங்கப் பெறுகின்றன. (எ-டு) அச்சிறுபாக்கம்; திருப்புக்கொளியூர் (அவிநாசி), திருச்செங்குன்றூர்; இடும்பாவனம் முதலியவை.

(7) பிற பெயர்கள் : கா, பொழில், குளம் என்ற பெயர்கள் முல்லை நிலத் தலங்களுக்கும் மருதநிலத் தலங்களுக்கும் ஒப்ப ஆளப்பெற்றுள்ளன. (எ-டு) ஆனைக் கா, கோடிக் கா,

ஆலம்பொழில், கடிக்குளம், வளைகுளம் (வை. த) பாற்குளம் (வை.த.)-இவை மருத நிலத்தலங்கள்; இவற்றிற்குப் இப் பெயர்கள் ஆளப்பெற்றிருத்தல் காண்க. 'களம்' என்ற பெயர் நானிலத் தலங்கட்கும் உரிய நிலையில் வழங்கப் பெறுகின்றது. (எ-டு) திருவேட்களம் நெடுங்களம், இவை மருதநிலத் தலங்கள்; உப்பங்கழிகளுடன் கூடிய நெய்தல் நிலத்தலம் கழிப்பாலை எனப்பெயர் பெற்றுள்ளது. 'பாலைத் துறை' என்ற பெயரில் உள்ள 'பாலை' என்ற சொல் ஒருவகை மரத்தைக் குறித்த பெயர் என்பது அறியத் தக்கது. 'திருக்களர்' என்ற பெயர் அத்தலத்தின் மண்ணின் இயல்பு குறித்து வழங்கியதாகக் கொள்ளலாம். நிலம், பழனம், தானம் (இடம் என்ற பொருளையுடையது), மங்கை (மங்கலம் என்பதன் மரூஉ), குடி (குடியிருப்பு என்ற பொருளையுடையது), திட்டை (புனல் பரப்பின் நடுவே யமைந்த திட்டு என்று பொருள்படுவது), ஈச்சரம் (இன்னின்னார் வழிபட்டு ஈசன் அருள்பெற்ற கோயில் என்ற பொருளில் வழங்குவது), துருத்தி (ஆற்றிடைக்குறை என்று பொருள்படுவது) என்ற சொற்கள் தலங்களின் ஈற்றுப் பெயர்களாக அமைந்துள்ளன. எ-டு.

நிலம்—நன்னிலம்,

பழனம்—திருப்பழனம்,

மங்கை—புள்ளமங்கை, சூலமங்கை (வை. த). சாத்த மங்கை.

தானம்—நெய்த்தானம், உசாத்தானம்,

குடி—வேள்விக்குடி, மங்கலக்குடி, திருந்து தேவன்குடி, வேட்டக்குடி, சிறுகுடி, கருக்குடி, விற்குடி, கற்குடி, நீலக் குடி, நாட்டியத்தான்குடி.

திட்டை—தென்குடித் திட்டை; திருக்கருவிலிக் கொட்டிட்டை

ஈச்சரம்—நாகேச்சரம், இராமனதீச்சரம், ஆலூர் பசுபதீச் சரம். இராமேச்சரம், தாடகையீச்சரம் (திருப்பனந் தாள்), துருத்தி-திருப்பூந்துருத்தி,

இவைதவிர கடல், ஆறு முதலிய நீர் நிலைகளை நோக்கியோ, அன்றி மலை முதலியவற்றின் நெறிகளை நோக்கியோ எதிர் முகமாக அமைந்த தலங்கள் 'வாயில்' என்று வழக்கப் பெறுகின்றன. (எ.டு) முல்லை வாயில், நெல்வாயில், குட வாயில் என்பன. நதி முதலியன கூடும் இடம் 'கூடல்' என வழங்கப்பெறுகின்றது. எ.டு: வெஞ்சமாக் கூடல், நான் மாடக் கூடல், திருப்பள்ளியின் முக்கூடல் என்பன.

இடைக்காலத்தில் சமணர்கள் தங்கிய தவப்பள்ளிகளாக இருந்து பின்னர்ச் சிவத்தலங்களாக மாறிய இடங்கள் 'பள்ளி' எனவும், 'பாழி' எனவும் வழங்கப் பெறுகின்றன. (எ-டு): திருச்சிராப்பள்ளி, சக்கரப் பள்ளி, நனிபள்ளி, அகத்தியான் பள்ளி, மயேந்திரப் பள்ளி என்பன; வரதைப் பெருப்பாழி காண்க.

ஊர்ப்பெயர்களுடன் நகர், நன்னகர் என்ற சொற்களை ஈற்றில் சேர்த்து 'வேட்கள நன்னகர்', 'பாம்புர நன்னகர்' எனச் சிறப்பித்துப் போற்றும் முறையைப் பதிகங்களில் காணலாம். ஒருரில் வாழும் சிறப்புடையார் ஒருவர் பெயரால் அவ்வூர் வழங்கப்பெறுதலும் உண்டு. இது நிறை யினால் நீலநக்கன் நெடுமாநகர் என்று தொண்டர் அறையுமூர் சாத்தமங்கை' (3. 58:11) என்ற சம்பந்தர் திரு வாக்கால் அறியப்படும்.

'இல்' என்பது குடியிருப்பு என்னும் பொருளுடையது. இதனை ஈற்றாகக் கொண்டு வழங்கும் தலங்களும் உள்ளன. எ-டு: அன்பில், பாச்சில், கீழையில் (வை. த.), பிரம்பில் (வை. த.), செந்தில் (வை. த.) கள்ளில், என்பன. 'அகம்' என்ற ஈற்றால் 'ஏடகம்' என வழங்கும் ஊர்ப்பெயரும் ஈண்டு நோக்கத் தக்கது. குடிகள் பலரும் சேர்ந்து வாழும் சிற்றூர் 'சேரி' என வழங்கப்படும். இச்சொல்லால் இறும் தலங்களும் உள்ளன. (எ-டு): தெளிச்சேரி, இறையான் சேரி (வை. த.).

ஊர்களின் தொன்மை நோக்கிப் பழையாறை, பழையனூர் என்றும், புதியனவாக அமைக்கப் பெற்றமை கருதி அரிசிற் கரைப்புத்தூர், கடுவாய்க்கரைப் புத்தூர், திருப்புத்தூர் கோவந்த புத்தூர் (விசயமங்கை) என்றும் வழங்கப்பெறு தலையும் தலப் பெயர்களில் காணலாம்.

ஒரு தலத்தில் பல கோயில்கள் : ஒரே தலத்தில் பல திருக்கோயில் அமைந்திருப்பின் அவற்றின் திசையைச் சுட்டி, வழங்கும் முறையும் உண்டு. (எ-டு): பழையாறை வடதளி, ஆறை மேற்றளி எனவும்; காஞ்சி மேற்றளி, கச்சித் திருவே கம்பம் ஓணகாந்தன் தளி, கச்சிமயானம், கச்சிநெறிக் காரைக் காடு, கச்சி அநேகங்காவதம் எனவும்; கடவூர் வீரட்டம், கட வூர் மயானம் எனவும்; திருவாரூர்த் திருமூலட்டானம், திருவாரூர் அரனெறி, திருவாரூர்ப் பரவையுண்மண்டளி எனவும் வருதல் காண்க.

ஒரு நாட்டில் ஒரே பெயருடைய பல தலங்கள் இருக்கும் நிலையில் : இங்ஙனம் அமைந்திருப்பின் அவை அமைந் துள்ள திசைபற்றியும், அவற்றின் அருகேயுள்ள ஆறு முதலிய வற்றின் எல்லை பற்றியும், அங்குள்ள தாவர அமைப்பு, வழி பட்டோர், அத்தலத்தின் பெருமை, பரப்பு முதலியவற்றைக் குறித்த அடை மொழிகளுடன் சேர்த்து வழங்கும் முறையும் உள்ளது. இம்முறையில் அவை இன்னதலங்கள் எனத் தெளி வாக அறிந்து கொள்ள முடிகின்றது. எ-டு:

திசை : மேலைத்திருக்காட்டுப்பள்ளி, கீழைத் திருக் காட்டுப் பள்ளி தென்திருமுல்லைவாயில், வடதிரு முல்லை வாயில் என்பன திசைபற்றி வந்த பெயர்கள்

எல்லை, வழிபட்டோர் : வடகுரங்காடுதுறை, தென் குரங்காடுதுறை என்பன காவிரியாற்றின் வடகரை, தென்கரையாகிய எல்லைபற்றியும் அத்தலங்களில் முறையே வழிபட்ட வாலி, சுக்கிரீவன் பெயர்களையும்

கொண்ட புராண வரலாறு பற்றியும் பெயர் பெற்றனவை.

பிறதொடர்புகள் : பெரும்பற்றப் புலியூர், திருப்பாதிரிப்புலியூர், எருக்கத்தம்புலியூர் என்பன வியாக்கிரபாதர் (புலிக்கால் முனிவர்) முதலாக அத்தலங்களில் வழிபட்டோர் தொடர்பாலும், அத்தலங்களுக்கும் புலிக்கும் உள்ள தொடர்பாலும் பெயர் எய்தியவை.

அடைமொழியால் : வெண்ணெய் நல்லூர், அறையணிநல்லூர், பந்தணை நல்லூர், கலயநல்லூர், ஓமநல்லூர்(வை. த.), பொய்கை நல்லூர் (வை. த.) என்பன நல்லூர் என்னும் பெயரால் வழங்கும் தலங்களிடையே வேற்றுமை தெரிய அடைமொழியுடன் பெயர் பெற்று வழங்குகின்றன. புள்ளிருக்கு வேளூர், கீழ்வேளூர், பெருவேளூர் என்பனவும் வேளூர் என்னும் பெயரால் வழங்கும் தலங்களிடையே வேறுபாடு தெரிய அடைமொழி பெற்றனவே.

தலையாலங்காடு, தலைச்சங்காடு; இடையாறு, இடைச்சுரம், இடைக்குளம் (வை. த.), இடைத்தானம் (வை. த.), இடைப்பள்ளி (வை. த.); கடைமுடி, கடையக்குடி (வை. த.) எனவழங்கும் தலங்கள் தலை, இடை, கடை என்ற அடைமொழி பெற்றவையாகும்.

வேறு முறைகள்: நிழலமைந்த சோலைகளும், அடர்ந்த காடுகளும், இனிய நறும்பொழில்களும் அமைந்த தலங்கள் 'கா' எனவும், 'காடு' எனவும் 'பொழில்' எனவும், பெயர் பெற்று வழங்குகின்றன. (எ.டு): கோலக்கா, குரக்குக்கா, கோடிக்கா, ஆனைக்கா; வெண்காடு, தலையாலங்காடு, தலைச்சங்காடு, கொள்ளிக்காடு, மறைக்காடு; ஆலம் பொழில், (பரம்பைக்குடி), ஆற்றுடன் தொடர்புடைய தலங்களும், இறைவனை அடைதற்குரிய 'அழகிய நெறி' எனப் போற்றப்பெறும்தலங்களுந்தற் 'ஆறு' என்னும் ஈற்றால்

குறிக்கப் பெற்றுள்ளன. (எ-டு) ஐயாறு, கோட்டாறு, இடையாறு. சிறப்புடைய தீர்த்தத்துடன் இயைந்த தலங்கள் 'குளம்' என்ற பெயரால் வழங்குகின்றன. (எ டு): கடிக்குளம், தஞ்சைத்தளிக்குளம் (வை.த.), திருக்குளம் (வை.த). ஊர்மக்கள் பலரும் கூடி இறைவனை வழிபடற்கேற்ற பொது இடங்களாய்த் திகழ்ந்த தலங்கள் 'களம்' என்ற பெயராலும் வழங்கப்பெறுகின்றன. (எ-டு): திருவேட்களம், நெடுங்களம்.

ஆற்றையடுத்து அமைந்துள்ள தலங்கள் 'துறை' என்ற பெயரைப் பெறுகின்றன. இத்தலங்கள் அங்குச் சிறப்பாக வளர்ந்துள்ள மரம் முதலிய கருப்பொருள்களின் அமைப்பாலும் அவ்வந்நில அமைப்பாலும், பல்வேறு அடைமொழிகளால் வழங்கப் பெறுகின்றன. (எ-டு): திருப்பராய்த்துறை, திருப்பாலைத்துறை, கடம்பந்துறை, திருமாந்துறை, திருஆலந்துறை, குரங்காடு துறை, மயிலாடுதுறை எனவும்; வெண்டுறை, பேணுபெருந்துறை, சோற்றுத்துறை, பாற்றுறை எனவும் வரும் தலங்களைக் காண்க.

இறைவனது திருவருளில் உயிர்கள் திளைத்து இன்புறுவதற்கு நிலைக்களமாய்த் திகழும் திருக்கோயில்களையும் 'நெறி' என்னும் பொருளில் 'துறை' என்ற திருப்பெயராலே வழங்கும் மரபும் உண்டு. திருவெண்ணெய் நல்லூர்த் திருக்கோயிலைத் 'திருவருட்டுறை' எனவும், திருநெல்வாயில் திருக்கோயிலை 'அரத்துறை' எனவும், மூவர் முதலிகள் குறித்துள்ளனர். இவ்வாறே திருச்சேறையிலுள்ள திருக்கோயிலைச் 'செந்நெறி' எனவும், திருவாரூரிலுள்ள கோயிலை 'அரநெறி' எனவும் அப்பர் பெருமானும்; தண்டலை என்னும் ஊரிலுள்ள திருக்கோயிலை 'நீள் நெறி' என்று காழிப் பிள்ளையாரும் குறித்துள்ளமை ஈண்டு ஒப்பு நோக்கி உணரத் தக்கதாகும்.

சிவாலயங்களில் இறைவன் அருவுருவத் திருமேனியாகிய[9] சிவலிங்கத் திருமேனியுடன் எழுந்தருளியிருக்கும் கருவறையினை (மூலஸ்தானம்) என்று வழங்குவது மரபு. எல்லாத் திருக்கோயில்களிலும் சிவலிங்கத் திருமேனியுடன் இறைவன் வீற்றிருந்தருளும் சிறப்புடைய அருள் நிலையத்தினை 'மூலட்டானம்' எனப் பொதுவாக வழங்கினாலும், திருவாரூர்த் திருக்கோயிலுள் புற்றிடங் கொண்ட பெருமான் எழுந்தருளிய இடத்தையே 'திருமூலட்டானம்' என நாவுக்கரசர் தம் பதிகங்களில் சிறப்பாகக் குறித்துள்ளார். இங்ஙனமே தில்லைப் பெருங்கோயிலில் சிவலிங்கத் திருமேனி அமைந்த நிலையத்தைத் 'திருமூலட்டானம்' எனச் சிறப்பாக வழங்கும் மரபும் உண்டு.

பெரும்பற்றப் புலியூர்
மூலட் டானத்தார் (6. 51: 6)

என்ற அப்பர் பெருமானின் திருமொழியால் இஃது அறியப்படும்.

பாடல் பெற்ற சில தலங்களில் ஊர்ப்பெயரும், அவ்வூரில் அமைந்த கோயிற் பெயரும் வேறு வேறு குறிக்கப்பெற்றுள்ளன. (எ.டு) காவிரிப்பூம்பட்டினம்—திருச்சாய்க்காடு, காவிரிப்பூம்பட்டினம்-திருப்பல்லவனீச்சரம், திருப்பனந்தாள் தாடகையீச்சரம், கொட்டையூர் - கோடீச்சரம்—கோவந்த புத்தூர் - விசயமங்கை, திரு அம்பர் - பெருந்திருக்கோயில்,

9. இறைவன் தடத்த நிலையில் மூவகைத் திருமேனிகளை மேற்கொள்வான். 'சிவன், சக்தி, நாதம், விந்து இவை நான்கும் அருவத் திருமேனிகள், 'மகேசுவரன், உருத்திரன், மால்அயன்' இவை உருவத் திருமேனிகள். சதாசிவன் அருவுருவத் திருமேனி. இஃது இலிங்க வடியாய் இருப்பது. இந்த ஒன்பது திருமேனிகளையும் 'நவந்தருபேதம்' எனறு வழங்குவர் சித்தாந்திகள். ஒருவனாகிய இறைவனே உலகத்தைச் செயற்படுத்த வேண்டி நவந்தருபேதமாம் நிற்பன் என்பது தத்துவம்.

திருநறையூர்-சித்தீச்சரம், நன்னிலத்துப் பெருங்கோயில், திருப்புகலூர் வர்த்தமானீச்சரம், திருநாகைக் காரோணம், திருவாரூர்-அரனெறி, தண்டலை-நீள்நெறி, பெண்ணாகடம். தூங்கானை மாடம், திருவெண்ணெய் நல்லூர்-திருவருட்டுறை, திருச்சுழியல்-திருவேகம்பம், திருக்கச்சூர்-ஆலக்கோயில், அன்பில் - ஆலந்துறை, திருப்புள்ளமங்கை - ஆலந்துறை முதலியன காண்க.

இறைவனுடைய வீரச்செயல்கள் காரணமாக : இறைவனுடைய வீரச் செயல்கள் வெளிப்படுவதற்கு நிலைக்களமாக அமைந்த திருக்கோயில்கள் 'வீரஸ்தானம்' என்று வழங்கப்பெறுகின்றன. தமிழில் 'வீரட்டானம்' எனத்திரிந்தது என்பர். ஆளுடைய பிள்ளையார் ''அட்டானம் என்றோதிய நாலிரண்டும்' (2.39:3) என்ற தொடரால் இறைவனுடைய வீரச்செயல்கள் வெளிப்பட்ட திருத்தலங்கள் எட்டு என்று குறிப்பிடுவர். இவற்றுள் திரிபுரத்தை எரித்தழித்த தலம் திருவதிகை (1); மார்க்கண்டனுக்காகக் கூற்றுவனை உதைத்ததலம் திருக்கடலூர் (2); பிரமனது தருக்கினை அடக்குவதற்காக அவன் கொண்டிருந்த ஐந்து தலைகளில் ஒன்றைக்கிள்ளி எறிந்ததலம் திருக்கண்டியூர் (3); மன்மதனை எரித்ததலம் திருச்சுறுக்கை (4); அந்தகாசுரனைக் கொன்ற தலம் திருக்கோவலூர் (5); தக்கனது தலையைத் தடிந்ததலம் திருப்பறியலூர் (6); சலந்தராசுரனைத் தம் கால் பெருவிரலால் கீறியமைத்தலம் திருவிற்குடி (7); கயமுகாசுரனாகிய யானையினைக் கொன்று அதன்தோலை உரித்துப்போர்த்துக் கொண்ட தலம் வழுவூர் (8)[10] இவை எட்டும் 'அட்ட வீரட்டங்கள்' எனப் போற்றப்பெறுகின்றன. இவற்றுள் 'விற்குடி' நீங்கலாக ஏனைய ஏழு வீரட்டானங்களுடன்

10. வழுவூர் (வைப்புத் தலம்). மாயூரத்தருகே உள்ளது. வழுவூர் வீரட்டம்' என்பது அப்பர் திருவாக்கு (9.70:8).

'கோத்திட்டைக் குடி வீரட்டானம்' என மற்றொரு வீரட்டானத்தையும் இணைத்து 'அட்டவீரட்டம்' எனக்குறிப்பிடும் வழக்கமும் உண்டு.[11]

காவிரியின் கரைக்கண்டி வீரட் டானம்,
கடலூர்வீ ரட்டானம், காமருசீர் அதிகை
மேவியவீ ரட்டானம், வழுவை வீரட்டம்
வியன்பறியல் வீரட்டம், விடையூர்திக் கிடமாம்
கோவல்நகர் வீரட்டம், குறுக்கைவீ ரட்டம்
கோத்திட்டைக் குறுவீரட் டானம் இவைகூறி
நாவில் நவின் றுரைப்பார்க்கு நணுகச் சென்றால்
நமன்தமரும் சிவன்தம்பிரான் றகல்வர் நன்கே.
(6.31.2)

என வரும் திருத்தாண்டகத்தாலும், இங்கே குறித்த வீரட்டானத்தின் வேறாக, 'குடி" என்ற பெயருடைய அடுத்த பாடலில் (6 71:3) 'விற்குடி'யைக் குறிப்பிடுவதாலும், விற்குடியில் நிகழ்ந்ததாகக் கூறப்பெறும் சலந்தராசுரனையழித்த வீரச்செயல் கோத்திடைக் குடியில் நிகழ்ந்ததாகக் கொண்டு கூறும் மற்றொரு புராணமுறையும் நாவுக்கரசர் காலத்தில் வழங்கியதாகக் கருத இடம் உண்டு. இனி, அப்பர் பெருமானின் காலத்தவராகிய காழிப்பிள்ளையார் 'விற்குடி' என்ற தலத்தையே 'வீரட்டம்' (2.108:1-11) எனக் குறித்திருத்தலால் விற்குடி வீரட்டமும் கோத்திட்டைக் குடிவீரட்டமும் ஒரு தலமே எனக் கொள்ளற்கும் இடம் உண்டு.

---

11. கோத்திட்டை (வைப்புத்தலம்). 'கோத்திட்டை குடி வீரட்டானம்' என்பது நாவுக்கரசர் பெருமானின் நல்வாக்கு (6,71:2)

பின்னிணைப்பு-1

பயன்பட்ட நூல்கள்

அதிவீரராம பாண்டியர் : வெற்றிவேற்கை (எஸ். ராஜம், 5, தம்புச் செட்டித் தெரு, சென்னை-600 001)-1959

ஆழ்வார்கள் : நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம். கி. வேங்கட சாது ரெட்டியார் 2ஆம் பதிப்பு. (1981) திருவேங்கட தான் திருநெறி மன்றம், 32, பெருமாள் முதலித் தெரு, இராயப்பேட்டை, சென்னை-600 014)

இவஞான முனிவர் : காஞ்சிபுராணம் (கழகவெளியீடு)

சேக்கிழார் ; பெரிய புராணம் (திருப்பனந்தாள் மடத்து வெளியீடு, 1978)

சுப்புரெட்டியார் ந : சைவசமய விளக்கு (பாரிநிலையம் 184, பிரகாசம் சாலை, சென்னை-600 108) 1984.

தாயுமான அடிகள் : தாயுமானசுவாமிகள் பாடல், (தருமை யாதீனம், மயிலாடுதுறை. 1965)

பரஞ்சோதியார் : திருவிளையாடல் புராணம் (வேங்கடசாமி நாட்டார் உரை-கழக வெளியீடு)

வெள்ளைவாரணன் க, : பன்னிருதிருமுறை வரலாறு - I (அண்ணாமலைப் பல்கலைக் கழகம், அண்ணாமலை நகர்-1962)

வெள்ளைவாரணன், க : பன்னிருதிருமுறை வரலாறு - II (ஷை. ஷை, 1969)

பின்னிணைப்பு–II

(தம்பிரான் தோழர் வழிபட்ட திருத்தலங்கள்)

தலம்	பதிகம்	பக்கம்
அகத்தியான் பள்ளி	பதிகம் இல்லை	163
அஞ்சைக்களம்	7.44;7.4.	180, 275
அதிகை வீரட்டானம்	7.38	22
அம்பர் மாகாளம்	பதிகம் இல்லை	49
அரிசிற்கரைப் புத்தூர்	7.9	54
அவிநாசி	7.92	175
அனேகங்காவதம் (கச்சி)	7.10	76
ஆப்பனூர்	பதிகம் இல்லை	130
ஆமாத்தூர்	7.45	27
ஆரூர்	7.8; 7.12; 7.25; 7.33; 7.37; 7.39; 7.47; 7.54; 7.59; 7.73; 7.83; 7.95.	50, 83, 90, 139, 141, 164
ஆரூர்ப்பரவை மண்டலி	7.96	157
ஆலங்காடு	7.52	88
ஆலம்பொழில்	பதிகம் இல்லை	60
ஆவடுதுறை	7.66; 7.70;	55, 153,
ஆறைமேற்றளி(வை.த.)	7.35.1	66
ஆனைக்கா	7.75	61
இடைமருதூர்	7.60	56
இடையாறு	7.31	20
இராமேச்சுரம்	பதிகம் இல்லை	131
இன்னம்பர்	பதிகம் இல்லை	66
ஈங்கோய்மலை	பதிகம் இல்லை	64

தலம்	பதிகம்	பக்கம்
ஊறல்	பதிகம் இல்லை	89
எதிர்கொள்-பாடி	7.7	70
ஏடகம்	பதிகம் இல்லை	136
ஐயாறு	7.77	60, 166
ஒற்றியூர்	7.54; 7 91.	80, 83, 97
ஓணகாந்தன்தளி(கச்சி)	7.5	75
கச்சி அநேகங்காவ தல்	7.10	76
கச்சிஏகம்பம்	7 61	74
கச்சிதிருமேற்றளி	7.21	75
கச்சூர்	7 41	73
கடம்பூர்	பதிகம் இல்லை	67
கடலூர் மயானம்	7.73	144
கடலூர் வீரட்டம்	7.28	143
கண்டியூர் வீரட்டம்	பதிகம் இல்லை	60, 166
கயிலாயம்	7.100	280
கருப்பறியலூர்	7.30	67
கலய நல்லூர்	7.16	57
கழிப்பாலை	7.23	152
கழுக்குன்றம்	7.81	72
கழுமலம்	7 58	48
கற்குடி	7 27	65
காரிக்கரை(வை)		
காளத்தி	7.26	77
கானப்பேர்	7.84	136
கானாட்டு முள்ளூர்	7.43	69
கீழ்வேளூர்	பதிகம் இல்லை	162
குடமூக்கு	பதிகம் இல்லை	58
குருகாவூர்	7 29	151
குறும்பலா, குற்றாலம்	பதிகம் இல்லை	133

தலம்	பதிகம்	பக்கம்
கூடலையாற்றூர்	7.85	24
கேதாரம்	7.78	78
கேதிச்சுரம்	7.80	134
கோடி	7.32	163
கோயில்	7.90	43, 67
கோலக்கா	7.62	48, 149
கோளிலி	7.20	37,51
சாய்க்காடு	பதிகம் இல்லை	145
சிவபுரம்	பதிகம் இல்லை	54
சுழியல்	7.82	135
செம்பொன்பள்ளி	பதிகம் இல்லை	147
சோற்றுத்துறை	7 94	59
தினைநகர்	7.64	24, 227
திருத்தி	7.74	154
துறையூர்	7.13	20
நல்லூர்	பதிகம் இல்லை	59
நள்ளாறு	7.68	142
நறையூர்சித்தீச்சுரம்	7.93	54
நனிபள்ளி	7.97	146
நன்னிலத்துப் பெருங் கோயில்	7.98	52
நாகேக்சுரம்	7.99	57
நாகைக்காரோணம்	7.46	160, 162
நாட்டியத் தான்குடி	7.15	39, 76
நார்வலூர்	7.17	18
நின்றியூர்	7.16;7.65	147
நீடூர்	7,56	148
நெல்வாயில் அரத்துறை	7.3	29
நெல்வேலி	பதிகம் இல்லை	133

பரங்குன்றம்	7.2	131
பருப்பதம் (ஸ்ரீசைலம்)	7.79	78
பனங்காட்டூர்	7. 6	76
பனையூர்	7.87	72, 52
பாச்சிலாச்சிராமம்	7.14	62
பாண்டிக் கொடுமுடி	7.43	168
பாதாளீச்சரம்	பதிகம் இல்லை	137, 163
புகலூர்	7.34	41, 49, 52
புறம்பயம்	7.35	66
புனவாயில்	7.50	136
புன்கூர்	7.55	48, 120, 148, 160
பூந்துருத்தி	பதிகம் இல்லை	60
பூவணம்	7.11	130
பேரூர் (வை)	2.39:1; 6.70:1; 7.47:4; 7.82:1e; 7.90:10	171
பைஞ்ஞீலி	7.36	64
மண்ணிப்படிக்கரை	7.22	68
மயிலாடுதுறை	பதிகம் இல்லை	48
மழபாடி	7.24	60
மறைக்காடு	7.71	162
மாணிகுழி	பதிகம் இல்லை	23
மாற்பேறு	பதிகம் இல்லை	77
முது குன்றம்	7.25; 7.43; 7.63	38
முருகன் பூண்டி	7.49	173
முல்லைவாயில் (வட)	7.69	85
வலஞ்சுழி	பதிகம் இல்லை	59
வலம்புரம்	7.67; 7.72	144
வலிவலம்	7.67	40
வல்லம்	பதிகம் இல்லை	77
வாஞ்சியம்	7.76	53
வாழ்கொளிப் புத்தூர்	7.57	69

விடைவாய் (திருவிடைவாசல்) கொரடாச் சேரியிலிருந்து 3கல்தொலைவு. திருமுறை கண்டகாலத்தில் கிடைக்காமல் 1915-ஆம் ஆண்டு அரசு கல்வெட்டுத்துறையினரால் கண்டு பிடிக்கப்பெற்ற பதிகம். 'மறியார் கரந்தெந்தை' என்ற முதற் பதிப்புடையது. AR. No. 8 of 1918 என்று பதிவு செய்யப் பெற்றுள்ளது. மூன்றாம் திருமுறையின் இறுதியில் தனியாகக் காட்டப்பெற்றுள்ளது.

வீழிமிழலை	7.88	53
வெஞ்சமாக்கூடல்	7.42	172
வெண்காடு	7.6	145
வெண்ணெய் நல்லூர்	7.1	12
வெண்பாக்கம்	7.89	86
வேள்விக்குடி	7.18; 7.74	70
வைகாவூர்		

பின்னிணைப்பு - III

சிறப்புத் தலங்கள்

(அ) அட்டவீரட்டத்தலங்கள்: (சிவபெருமானின் வீரச்செயல் களைக் காட்டுபவை)

1. திரு அதிகை வீரட்டானம் (திரிபுரத்தை எரித்தது)
2. திருகடவூர் வீரட்டம் (காலனைக் காலால் உதைத்தது)
3. திருக்கண்டியூர் வீரட்டம் (பிரமனின் சிரசைக் கிள்ளியது)
4. திருக்குறுக்கை வீரட்டம் (மன்மதனை எரித்தது)
5. திருக்கோவலூர் வீரட்டம் (அந்த காசுரனைச் சங்க ரித்தது)
6. திருபறியலூர் வீரட்டம் (தக்கன் வேள்வி தகர்த்தது)
7. திருவிற்குடிவீரட்டம்(சலந்தராசுரனைச்சங்கரித்தது)
8. திருவழுவை வீரட்டம் (வைப்புத்தலம்)

(ஆ) சப்த ஸ்தான தலங்கள் : (ஐயாற்று ஏழூர் வலம் வரும் விழாத்தலங்கள்)

1. திருஐயாறு
2. திருக்கண்டியூர் வீரட்டம்
3. திருச்சோற்றுத்துறை
4. திரு நெய்த்தானம் (தில்லை ஸ்தானம்)
5. திருப்பழனம்
6. திருப்பூந்துருத்தி
7. திருவேதிக்குடி.

(இ) முசுகுந்த சக்கரவர்த்தி வழிபட்ட ஏழு விடங்க மூர்த்திகள்.

1. திருவாரூர் வீதி விடங்கர், அஜபா நடனம்.
2. திருக்காறாயில் ஆதிவிடங்கர். குக்குட நடனம்.
3. திருக்கோளிலி அவனிவிடங்கர், பிருங்க நடனம்
4. திருநள்ளாறு நகரவிடங்கர், உன்மத்த நடனம்.
5. திருநாகை சுந்தரவிடங்கர், பாளவாரதரங்க நடனம்
6. திருமறைக்காட்டுப் புவனவிடங்கர், ஹம்ஸ பாத நடனம்
7. திருவாய்மூர் நீலவிடங்கர், கமல நடனம்.

பேராசிரியர் ரெட்டியாரின் நூல்கள்

ஆசிரியம் :

1. தமிழ் பயிற்றும் முறை
2. கவிதை பயிற்றும் முறை
3. அறிவியல் பயிற்றும் முறை
4. கல்வி உளவியல் கோட்பாடுகள்
5. யுனஸ்கோ: அறிவியல் பயிற்றும் மூலமுதல் நூல்

இலக்கியம் :

6. கவிஞன் உள்ளம்
7. காலமும் கவிஞர்களும்
8. காதல் ஓவியங்கள்
9. அறிவுக்கு விருந்து
10. முத்தொள்ளாயிர விளக்கம் (பதிப்பு)
11. பரணிப் பொழிவுகள்
12. அறிவியல் தமிழ்
13. திருக்குறள் கருத்தரங்கு மலர்—1974 (பதிப்பு)
14. கம்பனில் மக்கள் குரல்
15. காந்தியடிகள் நெஞ்சுவிடு தூது (பதிப்பு)
16. திருவேங்கடமும் தமிழ் இலக்கியமும்

சமயம், தத்துவம்

(அ) விளக்க நூல்கள் :

17. முத்திநெறி (தமிழக அரசு பரிசு பெற்றது)
18. சிலநோக்கில் நாலாயிரம்
19. வைணவமும் தமிழும்
20. சைவசமய விளக்கு
21. ஆன்மிகமும் அறிவியலும்
22. வைணவ உரைவளம் (ஐதிகம், இதிகாசம், சம்வாதம்)
23. கலியன் குரல்

(ஆ) திருத்தலப் பயண நூல்கள்

24. மலைநாட்டுத் திருப்பதிகள்
25. தொண்டை நாட்டுத் திருப்பதிகள்
26. பாண்டிநாட்டுத் திருப்பதிகள்
27. வடநாட்டுத் திருப்பதிகள்
28. சோழநாட்டுத் திருப்பதிகள்-முதற்பகுதி (த.அ.ப. பெற்றது)
29. சோழ நாட்டுத் திருப்பதிகள்-இரண்டாம் பகுதி (ஷை)
30. தம்பிரான் தோழர்
31. நாவுக்கரசர்
32. ஞானசம்பந்தர்
33. மாணிக்கவாசகர்

இறனாய்வு :

34. பாட்டுத் திறன்
35. கம்பன் படைத்த சிறு பாத்திரங்கள்
36. அகத்திணைக் கொள்கைகள்
37. புதுக்கவிதை-போக்கும் நோக்கும்
38. கண்ணன்பாட்டுத் திறன்

பேராசிரியர் ரெட்டியார் நூல்கள்

39. பாஞ்சாலி சபதம்-ஒரு நோக்கு
40. பாரதியம் (த.அ.ப. பெற்றது)
41. குயில்பாட்டு-ஒரு மதிப்பீடு
42. உயிர்தந்த உத்தமன் (பதிப்பு)
43. ஆழ்வார் அமுது
44. கீதைக் குரல் (பதிப்பு)

வரலாறு, தன் வரலாறு :

45. நினைவுக்குமிழிகள்-முதற்பகுதி
46. நினைவுக் குமிழிகள்-இரண்டாம் பகுதி
47. நினைவுக்குமிழிகள்-மூன்றாம் பகுதி
48. வேமனர்
49. குரஜ்ஜாட
50. மேகாணி
51. சி.ஆர். ரெட்டி
52. தாயுமான அடிகள்
53. பட்டினத்தடிகள்
54. வடலூர் வள்ளல்
55. பிரதிவாதி பயங்கரம்

அறிவியல் :

56. மானிட உடல்
57. அணுவின் ஆக்கம்
58. இளைஞர் வானொலி
59. இளைஞர் தொலைக்காட்சி
60. அதிசய மின்னணு
61. நமது உடல் (த.அ.ப.பெற்றது)
62. இராக்கெட்டுகள் (த.அ.ப. பெற்றது)
63. அம்புலிப் பயணம்

64. தொலை உலகச் செலவு
65. அணுக்கரு பௌதிகம் (செ. பல்கலைக் கழகப் பரிசு பெற்றது)
66. இல்லறநெறி
67. வாழையடி வாழை
68. அறிவியல் விருந்து (தமிழ்வளர்ச்சிக் கழகப்பரிசுபெற்றது)
69. வானமண்டலக் காட்சி

ஆராய்ச்சி :

70. கலிங்கத்துப் பரணி ஆராய்ச்சி
71. Religion and Philosophy of Nalayiram with Special Reference to Nammalvar
72. Studies in Arts and Sciences (61 st Birth Day Commemoration Volume)
73. Collected Papers

பிழை-திருத்தம்

பக்கம்	வரி	பிழை	திருத்தம்
7	20	இருவர்.	இருவர்
10	17	அதிர்ச்சியடைகின்றனர்	அதிர்ச்சியடைகின்றனர்;
18	14	ஆட்கொண்டு	ஆட்கொண்ட
22	7	நம்பியாரூர்	நம்பியாரூரர்
27	1	நம்நாட்டுத்	நடுநாட்டுத்
29	22	அறத்துறை	அரத்துறை
39	10	ஒட்வென்	ஒட்டுவென
43	2	வழிப்பட்டவை	வழிபட்டவை
49	2	முதல்முறை	இரண்டாம்முறை
55	19	வந்தாக	வந்ததாக
57	28	கும்கோணத்தி	கும்பகோணத்தி
69	2	வாங்கொளிப்	வாழ்கொளிப்
71	11	இத்தலத்திற்கு 'மின்னுமா மேகங்கள்'(7.74)	

என்ற இன்னொரு பதிகமும் உண்டு.

பொழிந்திழி மும்மதக் களிற்றின் மருப்பும்
பொன்மலர் வேங்கையின் நன்மலருந்தி
இழிந்திழிந் தருவிகள் கடும்புனல் ஈண்டி
எண்டிசை யோர்களும் ஆடவந்திங்கே
சுழிந்திழி காவிரித் துருத்தியார் வேள்விக்
குடியுளார் அடிகளைச் செடியனேனாயேன்
ஒழிந்திலேன் பிதற்றுமா றெம்பெரு மானை
யுற்றநோய் இற்றையே யறவொழிந்தானை (5)

என்பது இப்பதிகத்தின் ஐந்தாவது பாடல் (சேர்க்க)

74. 25 ..... ஆராதகாதலுடன் 'ஆலந்தானுகந்தமுது' (7,61) என்ற முதற்குறிப்புடைய செந்தமிழ்த் திருப்பதிகம்

பாடித் துதிக்கின்றார். மங்கை தழுவக் குழைந்த பிரானாகிய கச்சி ஏகம்பர் பொங்கிய பேரன்பால் போற்றிய வன்றொண்டருக்கு மறைந்த இடக் கண்ணைக் கொடுத்தருளுகின்றார். அன்றியும், மலை மகளார் வழிபட்ட தமது திருக்கோலத்தையும் காட்டியருளுகின்றார். இடக்கண்ணைப் பெற்ற நம்பியூரர் மேற்குறிப்பிட்ட பதிகத்தைப் பாடிப் போற்றுகின்றார்.

ஆலந்தான் உகந்தமுது செய்தானை
ஆதியை அமரர் தொழுதேத்தும்
சீலந்தான் பெரிதும் உடையானைச்
சிந்திப் பாரவர் சிந்தையுளானை
ஏலவார் குழலுமை நங்கை
என்றும் ஏத்தி வழிபடப்பெற்ற
காலகாலனைக் கம்பனெம் மானைக்
காணக்கண் அடியேன் பெற்றவாறே (1)

என்பது இப்பதிகத்தின் முதற்பாடல்.

பக்கம்	வரி	பிழை	திருத்தம்
78	18	ஸ்ரீசைலம்	பருப்பதம்
115	13	உண்பால்	உன்பால்
119	6	செவிக்கு	செவிக்கும்
128	22	சேரமான	சேரமான்
137	அ.கு.	பாதாச்சரம்	பாதாளீச்சரம்
143	1	நள்ளாறறினின்று	நள்ளாற்றினின்று
,,	14	மாயானத்திற்கு	மயானத்திற்கு
146	11	'ஆதியனாதிரையனை' (7.97) என்ற முதற் குறிப்பினையுடைய திருப்பதிகம் பாடி இறைவனைப் போற்றுகின்றார். (சேர்க்க)	
147	29	எம்பொருமானை	எம்பெருமானை
151	3	திருவடிகையைப்	திருவடிகளைப்
,,	4	திருப்பதிறை	திருப்பதியை

151	11	குருகாலூர்ப்	குருகாவூர்ப்
,,	16	பசிதீர்பாய்	பசிதீர்ப்பாய்
,,	22	குருகலூர்	குருகாவூர்
,,	27	குருக்காவூர்	குருகாவூர்
154	5	இஃது இரண்டாம் முறை வருகை (சேர்க்க)	
155	9	தீர்தத	தீர்த்த
156	5	கொன்ன	சொன்ன
166	4	இஃது இரண்டாம் முறை வருகை (சேர்க்க)	
169	11	பாடலிற்குக்கீழ்	'பாவித்தல்-இடையறாது எண்ணுதல்' என்று போடுக. இப்போது என்பது முதற்பாடல். என்று சரிப்பட்டுவிடும்.
180	11	நடைபெற்றது	நடைபெறுகின்றது
187	18	ஏற்பாடுகளும்	ஏற்பாடுகள்
183	6	செலவருமான	செல்வருமான
189	29	வேத்ஒலியும்	வேத ஒலியும்
,,	29	நாபியாரூரரை	நம்பியாரூரரை
192	19	பெருமாளே	பெருமானே
199	21	கொள்ளுதற்கேற்ற	கொள்ளுதற்கேற்ற
205	27	கேசித்தரத்துப்	கேதீச்சரத்துப்
207	26	செல்தளித்தாய்	செய்தளித்தாய்
208	8	தெருட்டி தம்	தெருட்டுத் தம்
,,	9	திறம் அருளி	திறம் அருளிச்
232	12	தூண்டகத்தாலும்	தாண்டகத்தாலும்
233	18	நகர்-1662	நகர்-1962

இந்நூலாசிரியரைப் பற்றி...



பிறப்பு : 7-9-1917

69-அகவையை நிறைவு செய்யப் போகும் இந்த நூலாசிரியர் பி.எஸ்சி., எல்.டி. வித்துவான், பி.ஏ., எம்.ஏ., பிஎச்.டி., பட்டங்கள் பெற்றவர். **ஒன்பதாண்டு** துறையூர் உயர்நிலைப் பள்ளியில் தலைமையாசிரியராகவும் (1941-1950), **பத்து ஆண்டுகள்** காரைக்குடி அழகப்பர் ஆசிரியர்ப் பயிற்சிக் கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியராகவும், **பதினேழு ஆண்டுகள்** திருவேங்கடவன் பல்கலைக் கழகத்தில் தமிழ்த்துறைத் தலைவராகவும் பேராசிரியராகவும் (1960-77) பணியாற்றி ஓய்வு பெற்றவர். 1978-சனவரியில் சென்னையில் குடியேறி **பதினைந்து மாதங்கள்** (1978 பிப்பிரவரி-1979 ஜூன்) கலைக் களஞ்சியத் தலைமைப் பதிப்பாசிரியராகப் பணியாற்றியவர். நாலாயிரத் திவ்வியப் பிரபந்தத்தில் நம்மாழ்வார் தத்துவத்தை ஆய்ந்து டாக்டர் (பிஎச்.டி.) பட்டம் பெற்றவர். தமிழிலும் ஆங்கிலத்திலும் பல ஆய்வுக் கட்டுரைகள் எழுதி வெளியிட்டவர். பெரும்பாலும் இவை நூல் வடிவும் பெற்றன; பெற்றும் வருகின்றன. தவிர, ஆசிரியம் (5), இலக்கியம் (11), சமயம் (14), திறனாய்வு (10), வாழ்க்கை வரலாறு, தன் வரலாறு (15), அறிவியல் (14), ஆராய்ச்சி (4)-என்று 73 நூல்களின் ஆசிரியர். இவர்தம் அறிவியல் நூல்களில் இரண்டும், சமய நூல்களில் ஒன்றும், பயண நூல்களில் இரண்டும், திறனாய்வு நூல்களில் ஒன்றும் தமிழக அரசின் பரிசுகளும், அறிவியல் நூல்களில் ஒன்று சென்னைப் பல்கலைக் கழகப் பரிசும், ஒன்று தமிழ் வளர்ச்சிக் கழகப் பரிசும்—ஆக எட்டு நூல்கள் பரிசுகள் பெற்றவை. இனிமை, எளிமை, தெளிவு இவர்தம் நூல்களின் தனிச் சிறப்புகளாகும்.

Wrapper Printed at : Eskay Art Printers, Madras-5.
Design by Thiru P. N. Anandan